



கலைஞர் எல். சி. லெம்பேட்டின்

# கலைப் புத்தாக்கம்

வளர்கலை மன்றம் - வங்காலை


கலைப்புத்தகம் ( நாட்டுக்கூத்து )
நினைவுடன்
அமரர் திரு. L.C. லெம்பேட்
ஓய்வு பெற்ற நிர்வாக உத்தியோகத்தர்
பிரதேச செயலகம் - செட்டிகுளம்
14.05.2020
கலைஞர்
திரு எல்.சி. லெம்பேட்

# கலை, இலக்கிய படைப்பாளுமை
# எல் சி லெம்பேட்

எழுபதுகளில், எம் வங்காலையின் ஆன்மாவை, ஏன், மன்னாரின் ஆன்மாவையே கழுவித் தூய்மை செய்த கலை,இலக்கிய பேராளுமை. நமது, எல் சி லெம்பேட்.

கலை, அற்புத கலைப் படைப்பு என்ன செய்துவிடும், இலக்கியம் என்ன தந்து விடும். அது உயிர் மூச்சிற்கு நிகரானது. அந்த அதிசயமிக்க பூங்காவிற்கு நம் ஒட்டுமொத்த சமூகத்தையும் அழைத்துச் சென்றவர். இன்று நம்மை விட்டுச்செல்கின்றார்.

மக்களை நேசித்தார், புலம்பெயர்ந்த மக்களோடு வாழ்ந்தார், அரிய தொண்டாற்றும் மனதைப்பெற்றார் அவரது இலக்கிய ஆர்வம், இலக்கியப் புரிதல் அவரது அளுமையைச் செதுக்கித் தயார்படுத்தியது. நிறையவே வாசித்தார், அன்பு, மனிதநேயம் ஊற்றெடுக்க கலை இலக்கியம் அவருக்கு வழிகாட்டியது.

ஓர் இனத்தின் ஆன்மாவின் உயிர்த்துடிப்பானது தாய் மொழியின், அந்த மொழியைச் செழுமைப்படுத்தும் கலை, பண்பாட்டில் ஊன்றி நிமிர்வதில் தங்கிநிற்கிறது, ஆன்மாவை வருடிவிடும் அத்தகைய மாமருந்தை படைத்தவர், தன் படைப்புக்கள் மூலம் சமூக ஆன்மாவை வருடிக்கொடுத்தவர் அமரர் எல் சி லெம்பேட்

வாழ்க்கை, வெந்ததைத் தின்றுவிட்டு செத்துப் போவதற்கல்லவே! தாய்மொழியின் சிறப்பை அள்ளிப் பருகியவர். இரசனைமிகுந்தவர், கலை நுட்பங்களைப் ரசிக்கக் கற்றுத்தந்தவர் எங்கள் ஆலைய மேடைதனில் தாவீதையும், கோலியாத்தையும் மோதவிட்டவர்.

நம் ஊர் மேடைகளில் மகாபாரத போரை நடாத்தி குருஷேஸ்த்திரத்தை



கண்முன் நிறுத்தியவர் நம்மைவிட்டுச் செல்கிறார். முள்ளிவாய்க்காலை நம்மிடம் தந்துவிட்டுச் செல்கிறார். இந்த மா கலைஞன்

பிறக்கும் போது தாலாட்டுப் பாடி, சாகும்போது அம்மானை பாடி கரைவலை இழுக்கையில் ஏலேலோ ஏல ஏலோ அம்பா பாடி, அரிவி வெட்டும் போது கும்மிப் பாட்டுப்பாடி மகிழ்ந்து கொண்டாடிய மரபு நமது மரபு. தமிழருக்கன்றி யாருக்கு வாய்க்கும் இந்த மங்காத பண்பாட்டு மரபு .

தன் படைப்பு ஆளுமையோடு நம் மத்தியில் வாழ்ந்தார் அசல் தமிழ் கமகமக்க நம்மூர் பேச்சில் தமிழ் நடைபயில கைபிடித்து அழைத்து வந்தவர். இலக்கிய பேராளுமைகளின் பெயர்களைச் சூட்டி தம் குழந்தைச் செல்வங்களை மின்னி ஒளிவீசும் சமூக நட்சத்திரங்களாக மின்னச் செய்தார்,

நவரெத்தினமாய் மங்காச் சுடரொன்றும் ஏற்றிவைத்தார். இன்று நம்மை விட்டுச் செல்கிறார். உயர்தர வகுப்பில், பாடத்திட்டத்தினுள், பரீட்சைக்காக

பதுங்கியிருந்த இராமயணத்தையும், மகா பாரதத்தையும் பாமர மக்களுக்காக இலகுவாக்கினார், நவீன எழுத்துருவாக்கி, நவீன கூத்து வடிவமாக்கி, நெறிப்படுத்தி பாஞ்சாலி சபதம் எனும் முதல்தர15.05.2025 கலைப் பொக்கிசமாக்கினார்

யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற பண்பாட்டின் உயர் தத்துவத்தை அறியவும், ஏற்கவும் செய்து, பண்பாட்டுச் சமநிலை உணர்வினை அன்றைக்கே விதைத்து வளர்த்த, தீர்க்கதரிசனக் கலைஞன் நம் எல் சி லெம்பேட். நம்மை விட்டுச் செல்கிறார். கலைப் பொக்கிசமாகி விடைபெறுகிறார்.

இவரது நாட்டுக்கூத்தை ஊரே திரண்டு பார்க்கவும் கதைக்கருவை புரியவும் ஆழ்ந்து ரசிக்கவும் நவீன கூத்து வடிவை தந்தார் மக்களின் ரசனை மனநிலை தளத்தினையே புரட்டி வடிவமைத்தவர், நமது பார்வை மரபிற்குள் புதுமை புகுத்தினார், இவ்வாறு நம்மை நமக்கே புரியவைக்கும் வகையில் கலைப் புரட்சி செய்தவர் எல் சி லெம்பேட்.

தலைசிறந்த கலைஞர்களைக் கண்டுபிடித்தார், உருவாக்கினார், அறிமுகம் செய்துவைத்தார். வங்காலை வளர்கலை மன்றம் எனுமோர் அதி அற்புத கலைக் கோபுரத்தைக் கட்டி, உருவாக்கினார் கலைத்தாயின் பெருமகனாகி, கலை ஆசானாகி பெருமை தேடித்தந்தவர் இன்று எம்மைப் பிரிந்தார்.

தமிழ்வாழ்க தமிழ்க் கலைகள் வாழ்க இவர் வரிசைவழி கலைஞர்கள் வாழிய,வாழியவே. ஆத்மா சாந்தியடைவதாக. பிரிவுத் துயரில் ஆழ்ந்திருக்கும் குடும்பத்தினர், மற்றும் யாவருடனும் மனம் ஒற்றி நிற்கிறோம்.

அகஸ்ரின் பிராங்கோ சோசை
15.05.2025.






















All PDF Reader



# இறை வணக்கம்

***"வல்ல சிலுவை மரத்தைப் புயத் தேத்தி***
***சொல்லரிய வாதைத் துயரோடு – கல்வாரி***
***மேட்டுக்கு மேல் நடந்த வேதபரனே***
***எமது பாட்டுக்கு முன் நடந்து வா"***

**- காப்பு -**

காப்பிலங்கிய கன்னி மரி சுதன் கர்த்தன் யேசுவை
நித்தமும் வேண்டியே
தார்க்கிலங்கிய *(நாடகத் தலைப்பு)* காதையை
தரணியில் எடுத்தோதிட நாளுமே
ஊர்க்கிலங்கிய வங்கந் தங்காலை வாழ்
உன்னத வளர் கலை மன்றமுமே
நேர்க்கிலங்கிய நேய மகளாராம்
ஆனாள் அம்மையார் தன் துணை நாடுமே.

# கலைகள் வாழ்கவே

கலைகள் வாழ்கவே
இயல் இசை நாடக இயல்போடே
தமிழ்க் கலைகள் வாழ்கவே

நெற்பொலிந்த நாடு – பாடல்
பெற்றுயர்ந்த பீடு – செந்
நெற்பொலிந்த நாடு
உற்ற பாவலர் மிக்க மாதோட்ட
கலைகள் வாழ்கவே

சங்கம் முழங்கும்
தரளங்கள் சிந்தும்
தரங்கம் முருங்கில்
சங்கீதம் கொஞ்சும்
வங்காலை நகர்
வளர்கலை மன்றம்
பாரெங்கும் புகழ்கொண்டு
தொல்முறை நல்மரபோடு
வரும்பல்கலை வகை கையாண்டு
அன்னம்மாள் அன்னையார் துணையில்
கலைகள் வாழ்கவே

# பாஞ்சாலி சபதம்

**(நாட்டுக்கூத்து)**

துரியோதனன் தருமன்
விதுரன் வீமன்
சகுனி அர்ச்சுனன்
துச்சாதனன் நகுலன்
கர்ணன் சகாதேவன்
திருதராட்டினன் பாஞ்சாலி
சாம்புவான் (கட்டியகாரன்)



## காட்சி - 01

***சாம்புவான் வரவு***

வரவுக்கவி - மாலைகள் புரண்டசையும் வரையெனத் தோளுடைய
ஏழிசை புகழும் மன்னன் வரவினை அறிக்கை செய்ய
மேளமும் தாளம் போட மேடையும் ஆட்டம் காண
சீழ் ஒலி எழுப்பச் சாம்பன் சபையினில் குதித்திட்டானே

கலரி தாளம் - தனத்ததானா தனதன தானின............. தீர்மானம்

**பாட்டு**

*சிறக்க மன்னன் சபைதனில் வருகிறார்*
*பணிந்து நானும் வணங்கிடும் நாளிது*
*துணிந்து வீரன் தயவினை நாடியே - வாருங்கோ (தரு.....)*

*அத்தின புரிமன்னன் அறமிகு தளைத்திட*
*இத்தரை மீதினில் அழகுடன் வருகிறார்*
*சுற்றிய மன்னர் தயவினை நாடியே - வாருங்கோ (தரு.....)*

*பாண்டவர் தமையே படையொடு அழித்திட*
*பூண்ட நல்அன்பொடு புவியினை ஆண்டிட*
*துரியோதன மன்னன் சபைதனில் வருகிறார் - பாருங்கோ (தரு.....)*

(மின்குமிழ் அணைத்தல்)
(தீர்மானத்துடன் நடை தாளம்)

## காட்சி - 02

***(துரியோதன மன்னன், விதுரன், சகுனி, துச்சாதனன் வருதல்)***

வரவுக்கவி - பாம்பினைக் கொடியாய்க் கொண்ட பார்புகழ் துரியோதனன்
மெய்நெறி விதுரனோடும் வஞ்சகச் சகுனியோடும்
புத்தியே சிறிதுமில்லா புவியிசைக் கொடுமை கொண்ட
துச்சாதனனும் கூட சபையினில் தோன்றினானே.

கலரிதாளம் - துரியோதன ராஜனும் வந்தான் சபைதனிலே
துரியோதன ராஜனும் வந்தான்
துரியோதன ராஜன் வந்தான் ராஜசபைதனை நாடி
பூவுலகோர் நாடக மேடையில் தாம் திமிதிமி ததிங்குதோமென

துரியோதனன் - **பாட்டு**

*எழிலுற்ற மைந்த சிவன் பதமே துதிபுரிந்து*
*வாழ்வோம் மதிவல்லோர்களே - அமைதியாக*
*வாழ்வோம் மதி வல்லோர்களே*
*எங்கும் என்புகழ் அணி அணி சிறக்க*
*பாண்டவர் படைகள் அதுகேட்டு திகைக்க*
*பொங்கும் என் செங்கோல் புவியினில் நிலைக்க*
*தங்க மாமணிகள் தரையினில் ஒலிக்க*
*இன்பம் நீட துன்பம் ஓட*
*அன்பும் பண்பும் அவைதனில் நாட*

விதுரன் - கைத்தாள மோடுடுக்கை மத்தாளமே ஒலிக்க
நித்தம் புகழ இசை எத்திசையும் சிறக்க
வித்தாரக் கன்னியர்கள் சுற்றி நடனமாட
நத்தியல்போடு மக்கள் எக்காலமுமே வாழ

பரிகரி படையினர் விரிவுடன் சீற
நரிதரி பகையினர் நலிந்தெங்கும் ஓட
துரிமன்னர் அரியணை புகழினைக் கூற
புவியினில் நின் செங்கோல் புகழினிதாக
விண்ணின் மீதே வண்ணமாக
திண்ணமுடனே எம்புகழ் வாழ

சகுனி - மண்ணாளும் மன்னவனே எந்நாளும் இனி நீயும்
பாரத நாட்டினிலே பாங்குடன் ஆண்டிடுவாய்
ஆரிய வேல்மறவர் சீரியமாக வாழ
பாரினில் எங்கள் புகழ் சேரும் இடமெல்லாமே

எண்ணரு கனிவகை இன்பங்கள் கூட
தண்ணறு மலர்விழி தாதையர் ஆட
நல்லிசை முழக்கங்கள் நாற்றிசை பாட
மெய்மறை வேதங்கள் மெய்யின்பம் காண
புண்யம் நீட கண்யமாக
ஜெகமேல் பயமே இனிமேல் இல்லையே
(தரு - எழிலுற்றமைந்தன்.....)

துரியோதனன் - ஆங்காரப் பாண்டவர்கள் ஓங்கும் புகழினாலே
தாங்காது என்மனமே வேங்கையைப்போல சீறி
நீங்காத துன்பமாக வீங்கியெழும் வலிமை
பாங்காகவே திரண்டால் தாங்குமோ இப்புவியும்

என்னை யவனொரு எளிதாக நினைத்து
முன்னைப் பெருமையில் முழுதாகத்திளைத்து
அட்ட திசையிலும் அவன் புகழ் பரப்ப
துட்டன் நான் என துயரினில் சலிக்க
துயரதாலே அயராதுழைப்பேன்
புவிமேல் இனிமேல் ஜெயமே காண்போம்

துச்சாதனன் - தந்தை சொல் மிக்க ஒரு மந்திரமில்லை என
எந்தை திருதன் துணை சிந்தையில் கொண்டு நாளும்
முந்தைப் பகையறுப்போம் விந்தையில்லை மன்னவனே
கந்தன் கதிர்காமனை வந்தனை செய்து நாளும்

அம்புவி மன்னர்கள் நின் ஆணை தலைமேல்
மாபெரும் திறையுடன் வணங்கியே மீள
அத்தின புரியினில் அரசினிதாக
மெத்தவே சிறந்தினி மெய்யருள் கூட
கலைகள் நீட கவிகள் பாட
புலையும் கொலையும் பயந்தே ஓட
(தரு - எழிலுற்ற................)
(தீர்மானம்)

துரியோதனன் - தாரணி தந்தையே கேள் பாரினில் பாண்டவர்கள்
அகவல் - ஏறிடும் புகழினாலே - வாடிடும் நிலையடைந்தேன்
அர்ச்சுனன் வீரத்தோடு தருமனின் வேள்வி சேர்ந்து
மெத்தவே வதைக்குதையா - மெய்யிதை உணரும் மன்னா

திருதராட் - என்னருமை மைந்தனே நீ இயம்பு கதை நானறிவேன்
இன்னிசை - நன்நெறியில் வாழும் தம்பி மைந்தராலே என்ன கேடு

சகுனி - கேடெனக் கூறிட்டாய் நீ - நாடாளும் மன்னனே கேள்
அகவல் - பீடுயர் பெற்று எல்லாம் பாண்டவர் பெறுதல் சரியோ
நாடிதை தாங்குமோ சொல் - நமக்கிது அழகோ கூறும்
ஏறுயர் அழகுடையாய் என்ன நீர் சொல்லுவீரே
(தீர்மானம்)

***துரியோதனன் சகுனியை கட்டித் தழுவல்***

உன்னையே நான் நம்பினேனே - எந்தன் குறை தீர்த்து வைப்பாய்
கந்தன் மீது ஆணையாக சொந்தமுள்ள மாமனே நீ
(தீர்மானம்)

துரியோதனன் - **பாட்டு**
*என்னரும் மாமனே - உன்னையே நம்பினேன்*
*இதற்கோர் வழி யொன்று கூறும்*
*இந்தப் பொல்லாத பாண்டவர்*
*என்நாளும் வாடிட - வகையொன்று செய்து தாரும்*

சகுனி - மன்னவர் மன்னவா இதற்கா அஞ்சினாய்
மதிநுட்பம் எமக்குண்டு இந்தச் சகுனி மாமாவின்
சதியின் வேலையால் - விதியை மாற்றுவோம் வாரீர்
(தரு - தாந்தனந் தாந்தன............)

திருதராட்டினன் - விதியின் வலிமையால் மாற்ற எண்ணினாய்
சதிகள் செய்திட வைத்தாய் - இது
முறையோ கூறுவாய் சகுனியே நீயும்
குடிகேடா இது கேளாய்

துரியோதனன் - நகுலன் சகாதேவன் வீமன் அர்ச்சுனன்
பலம் நிறைந்தவர் பாரில் - இவர் கீர்த்தி மங்கிட
ஆட்சி ஓங்கிட வழிசெய்தல் நன்றோ கேளும்

சகுனி - வெஞ்சமர் செய்திட்டால் வெற்றியும் நமக்கில்லை
பஞ்சவர் அண்ணலே கேளும் - வஞ்ச சூழ்ச்சியின் திறத்தாலே
வீழ்ச்சியடைவதுண்மை - ஆட்சி யெமக்கினி பாரும்

துரியோ - எங்கும் புவியினில் உனக் கீடிணையில்லை
தங்கச் சங்கிலி மாலை பாரும் - இதை அணிந்து ஜெயம்பெற
துணிந்து இறங்குவோம் சூதாட்டம் எமக்கினி நன்மை
(தரு - தாந்தனந் தாந்தன.............)

***துரியோதனன் மாலையை கழற்றி சகுனிக்கு பரிசளித்தல்***

துரியோதனன் - சரியான திட்டம் இதே அறிவுநிறை மாமனேநீ
இன்னிசை - ஆரம் ஒன்று பரிசளித்தேன் வீரமுடன் ஏற்றுக்கொள்ளும்

சகுனி - விதுரன் தன்னை தூதனுப்பி மதுரமான வார்த்தையாலே
இன்னிசை - பாண்டவரை அழைக்கவேண்டும் மணிமண்டபம்அமைக் வேண்டும்

தருமனோடு சூதைநானே மர்மமாக ஆடிடுவேன்
கர்மமிது ஜெயமானால் வெற்றி எமக்கே நிட்சயம்
(தீர்மானம்)

## காட்சி - 03

### *பாண்டவர் வருகை*

வரவு கவி - நல்மனம் நிறையுடைய நாட்டினில் புகழுடைய
பார்புகழ் நிறைந்து வாழும் பஞ்சவ பாண்டவர்கள்
தொல் வளம் நிறைந்து சூழ தோகையர் நடனமாட
வில்லினைத் தாங்கியிங்கு வளமுடன் வந்திட்டாரே

பாண்டவர் சபை வணக்கம் -
ஓம் எனப் பெரியோர் நாளும் உணர்ந்திடும் சிவனே போற்றி
நாமமும் உருவமற்ற நல்மனச் சிவனே போற்றி
தீமைகள் மாய்த்து நாளும் திடமுடன் வாழ்வாய் போற்றி
ஆமெனும் பொருளுடையாய் அண்ணலே போற்றி போற்றி

தருமன் - **பாட்டு**
*ஓமென சிவன் புகழ் உணர்ந்திங்கு வாழ்வோமே நலமதாக*
*(ஓமெனச் சிவன்...........)*
*தீமைகள் தனை நாமே எந்நாளும் மாய்ப்போம்*
*சேமமுறவே வாழ திருமகள் துணையே*
*நாமகள் துணையினி எமக்கென்றும் உண்டு*
*பூவினில் எம்செங்கோல் புகழுமே கண்டு*

வீமன் - கௌரவர் படையெல்லாம் நிலை கேட்டு ஓடிடவே செய்வோமே இனி
எந்நாளும் எமக்கினி பகைவரும் உளரோ
பொல்லாத துரிமன்னன் பகையினைத் தவிர
வல்லாளன் சிவன்துணை தலையினில் கொண்டு
கல்லாதார் செயலையே கடிவோமே இன்று

அர்ச்சுனன் - அண்ணரின் ஆணை தன்னை நம் சிரம் கொண்டிடுவோம் - இனிமையாக
திண்ணமுறவே சேவை செய்திங்கு வாழ்ந்து
வண்ணமாகவே நகர் பலவளம் கூடி
கண்ணன் துணையினை களிப்புடன் நாடி
எண்ணரும் கலைதன்னை எந்நாளும் தேடி
(தரு - ஓமென சிவன்புகழ்......)

நகுலன் - செந்நெல் விளைந்திங்கு செழிப்புறச் சாடிடவும்
எம் நகர்தனில்
கன்னல் மொழிமாதர் களிப்பினை நாடி

இன்னல் எதுவுமின்றி இயைந்தொன்றுகூடி
மன்னவர் மன்னவன் மொழிதன்னைத் தேடி
இன்னமுதென நாமும் ஏற்போமே கூடி

சகாதேவன் - மாதமும் மாரியும் மழைபொழிந்தருள் சேர நம் நகர் தன்னில்
சேதமுறாமலே அறிவினைப் போற்றி
நாதன் சிவன் தன்னை நயந்துரை யேற்றி
பாதகர் பகைதன்னை துணிவுடன் சாற்றி
வேதம் நல் நாளினை வியப்புடன் போற்றி
(தரு - ஓமென சிவன் புகழ்..........)

## காட்சி - 04

***விதுரன் பாண்டவரை சூதுக்கு அழைக்க வருதல்***

வரவுகவி - பாண்டவர் தனையே இங்கு பாங்குடன் அழைக்க எண்ணி
பூண்டநல் தூதுகொண்டு புரவலன் ஆணைதன்னை
கண்ணியமாகச் செய்து கடமையில் ஜெயமே கொள்ள
திண்ணிய மார்புடைய விதுரனும் வந்திட்டானே

கலரிதாளம் - நன்னன்னா நன நானன்னா........
பொன்னில் மாமுடி கைதனில் சூடியே
பொற்புறும் மன்னர் முன்னிலை நாடியே
வண்ணமாகவே விதுரனும் வந்திட்டான் - நன்னன்னா
நன நானன்னா நானா - (தத்தித்தா தக தாம் திமி தோமென)
(தீர்மானம்)

விதுரன் - **பாட்டு**
*அத்தின புரத்தினிலே அமைந்துள்ள ரத்தின மணிமண்டபம்*
*அழகினைக்கான உம்மை அன்புடன் அழைக்கின்றோம்*
*அறிவீரே தம்பிமாரே*

*பாஞ்சாலி கூடவே நீர் எங்கள் நகர் பாங்குடன்*
*வரவேண்டும் தருவிருந்தருந்தியே மகிழ்வுடன் திரும்பவே*
*மாமன்னன் சித்தமீதே*
*வந்தனை முடிந்தபின்னே உமது சிந்தை சந்தோஷமடைந்திடவே*
*சூதொன்று ஆடிட நாயகன் விருப்பினான்*
*நலமீது எடுத்துரைத்தேன்*
(தரு - தந்தனோம் தனத்தானா)

விதுரன்
அகவல் - என்னரும் தர்மனேகேள் எளிதாக நாம் உம்மோடு
பண்ணரும் பகடையாட்டம் ஆடிடச்சித்தம் கொண்டு
மன்னரின் ஆணைதன்னை மறுப்பதுமுறையோ கூறும்
மன்னவர் மன்னனே நீ மகிழ்ந்துரை கூறுமையா

தருமன்
பதில் அகவல் - விதுரனின் வார்த்தை கேட்டோம்
வேண்டாம் இச் சூதெமக்கு சதிபல
செய்து எம்மை தவித்திட வைத்தவர்கள்

பதியினைநாட எந்தன் மனதினில் சித்தமில்லை
சூழ்ச்சியோ இதுவோ என்று
சொல்லுவாய் விதுரா நீயும்

விதுரன்
இன்னிசை - சூழ்ச்சியில்லை தருமனே கேள் எங்கள் மன்னர் எண்ணமிது
கடிதினிலே எங்கள் நகர் அடைந்திடவே வேண்டுகிறேன்

விதுரன் போகும்
சிந்து - மனதில் மகிழ்ச்சியுடன் செல்வேனே - மன்னர்
நிலையை மகிழ்வுடனே சொல்வேனே
எனதரும் மன்னர் சொல்லால் - அழைத்தேன் பாண்டவர் தன்னை
திண்ணமுறவே அண்ணல் எண்ணமதையே இங்கு
வண்ணமுடனே புவிதன்னிலே செய்து

மாதமும் மாரிபெய்து அருள்சேர - இந்த
மாதோட்டம் தன்னில் செந்நெல் விளைவாக
காதற்கனி மொழிகள்போதை நிறைந்தொளிர
வேதத்திரு விழியார் பாதந்தனைத் தொழுது
நானும் மகிழ்வுடன் பூவினில் வாழ - (மனதில்.......)

பாதகர் பாவம் எங்கும் மறைந்தோட - இங்கு
மாதர் கற்பு நெறிகள் நிறைந்தோங்க
தீது செய்வார்கள் நாளும் வேதனை கொண்டு மாள
கங்கு கடலிருந்து பொங்கு கரைதனிலே
தங்கம் போன்ற மீன்கள் சிந்தியே மீழ - (மனதில்.......)

தருமன்
இன்னிசை - அன்புடனே விதுரன் மொழி அமைவாய் ஏற்று நாமெல்லோரும்
பண்புடன் அத்தினபுரம் சென்றிடுவோம் வாருமிப்போ.

வீமன்
இன்னிசை - என்னருமை அண்ணலே நீர் என்ன செயல் செய்திட்டீரே
வீரமற்ற செய்கையான சூதாட்டமே நன்றோ சொல்வீர்

வீமன் - **பாட்டு**
*கொற்றவன் உரைத்த கதை தானோ - இனி*
*எப்படி நான் ஏற்றுக்கொள்வேனே*
*மாமனும் மருகனுமாய் தீமை செய்யும் நோக்கமாக*
*பூவில் எமையே அழைத்தார் நாவினிலே வஞ்சமாக*
(தரு - கொற்றவன்.........)

*பாதகர்கள் செய்கையினை நீரே - என்றும்*
*ஆவலுடன் ஏற்றுக்கொள்ளுவீரோ*
*காதகன் துரியோதனனின் நீதியற்ற செய்கையினால்*
*காடு சென்றுவாழ எம்மைத் தீயதனில் வைத்திட்டானே*
(தரு - கொற்றவன்........)

தருமன் - தோன்றியே அழிவதுதான் வாழ்க்கை - இங்கு
துன்பத்தோடு இன்பம் வெறும் பொய்மை
மூன்றில் எது வந்தாலுமே ஊன்றியே நடந்திடுவோம்
ஆண்டவன் அடிமையுமே மீண்டதுண்டோ விதிதன்னை
(தரு - கொற்றவன்..........)

*(பாண்டவர் அத்தினபுரம் செல்லுதல்)*

பைம் பொழிர் நகர் செல்லுவோமே - மகிழ்வுடனே
பைம் பொழிர் நகர் செல்லுவோமே
தந்தையும் வரப்பணித்தார் சிந்தையதில் இன்பமாக
எங்கள் மனவேதனையை இன்பமுடன் நீக்கிடவே

வீமன் - என்னதான் நடந்திட்டாலுமே அஞ்சிடமாட்டோம்
கண்ணன் எமக்கென்றுமே துணை
வண்ண வண்ணக் காட்சி பார்க்க திண்ணமுடன் ஏகிடுவோம்
அண்ணர் ஆணை சிரம் கொண்டு பண்புடன் நடந்திடுவோம்

அர்ச்சுனன் - மாமனும் மருகனுமாக எமையழத்தார்
தீமையது செய்திடத்தானோ
கோமகன் உரைப்படியே தாமதம் செய்வோமோஇனி
வீறு கொண்டே சென்றிடுவோம் நாளும் இன்பம் பெற்றிடவே
(தரு - பைம் பொழில்........)

நகுலன் - தானந்தவம் என்றும் நிலைக்கும் அத்தினபுரம்
வானம் வளம் எங்கும் சிறக்கும்
கானமயில் ஆட்டம் போடும் வீணையின்ப நாதம் கேட்கும்
சேனைப்படைக் கீடேயில்லை காண இன்று ஏகுவோமே

சகாதேவன் - அன்பும் பண்பும் எங்கும் சிறக்க - அருள்நிலைக்க
இன்பமான வாழ்க்கை அமைய
வென்பு திறல் மன்னவர்கள் துன்பமதையே கலைக்க
தண் ணொளி சேர் எங்கள் நகர் பொன்னிறைந்து மகிழ்வாக
(தரு - பைம் பொழில்....)
*(வடமோடி அடி - பாண்டவர் போதல்)*

## காட்சி - 05

***துரியோதனன் கொலுமண்டபம் - சூதாட்டம்***
***பாண்டவர் வருகை - சகுனி எழுந்து வரவேற்றல்***

சகுனி இன்னிசை - அன்புடன் அழைத்தோம் உம்மை அண்ணலே நீர் வர வேண்டும்
போரில் நிகர்வீரர்களே - பாரில் உமக்கீடே யாரோ
சூது என்னும் போரினிலே மோத நாங்கள் சித்தம் கொண்டோம்
ஏது குறையொன்றுமில்லை என்னவரே இயம்புவீரே

தருமன் இன்னிசை - வஞ்சகத்தில் வெற்றிகொள்ள தஞ்சமெனச் சூதை நீயும்
நெஞ்சத்தினில் கொண்டுவிட்டாய் நீசனே உன் எண்ணம் என்ன
கோத்திரம் குலமழிந்து கொண்ட கொள்கையை மறந்து
மூடனே உம்முடன் யாமும் சூதாடவே ஒப்புக் கொண்டோம்

சகுனி அகவல் - அன்புடைய தர்மனே நீ அஞ்சுவதும் சரியோ
வெஞ்சமர் வீரனே நீ வீண்பயம் ஏன் கொள்கின்றாய்
நிட்சயம் நீ வெல்குவாய் வெற்றியும் உனக்கியல்பாமே
உற்சாகமாகச் சூது ஆடுவோம் ஒப்புக் கொள்வாய்

சகுனி - **பாட்டு**
*எனதரும் தருமனே எளிதாகவே நீயும் மன்னர் முன்னிலே*
*உங்கள் நாட்டினை ஈடுவை நயமுடன் வெல்லுவாய் போட்டியில் நீயே*
*வண்ணக் களிப்புடன் துடிப்பாக விறைப்புடன்*
*ஜெயம் பெறுவீரனே (நீ) உனக்கிது நன்மை*

*தருமன்* - *சொன்னவாறே நானும் நம்பியே வைத்திட்டேன் திண்ணமுறவே*
*எங்கள் நாடுநகர்யாவும் பீடுயர் செல்வமும் ஈடுவைத் திட்டேன்*
*இந்தச் சதியினில் யாவுமே இழந்தாலும் ஒரு நாளும்*
*புவியினில் நாம் இனி அஞ்சிட மாட்டோம்*
(தரு - தனதன தனதன............)
*(தரு முடிவில் எறிதல் - சிரிப்பு)*

சகுனி - செல்வம் தேசம் நகர் யாவும் இழந்திட்டாய் எனதரும் தர்மா
நீயும் பள்ளத்தில் வீழ்ந்திட்டாய் மெள்ளவே எழுந்திரு நண்ணியே தர்மா
உங்கள் குலம் யாவும் அழிந்தாலும் ஒரு போதும்
இனி நீயே ஜெயம் தனை அடையவே முடியாது கேளும்
(தரு - தனதன தனதன ...........)

தருமன் இன்னிசை - இனிதாகத் தம்பிமார்கள் யாவரையும் பணயம் வைத்தேன்
வெல்லுவது இனி உண்மை வீரன் சிவன் ஆணையாக

தருமன் - **பாட்டு**
*வீரமுள்ள நகுலன் வீமனையும் பார்த்தனையும் வைத்தேன்*
*ஈரமில்லா வஞ்சகச் சகுனியே என்ன செய்வாய் நீயும்*
*(எறிதல் - சிரிப்பு)*

சகுனி - ஐவரையும் இழந்திட்ட பின்னே நீ என்ன செய்வாய் தர்மா
இன்னும் ஆடினால் சூதினில் நீயுமே வெற்றி பெறுவாயா
(தரு - தன்ன நானன்ன......)

தருமன் - பஞ்சபாண்டவர் தமையே வென்றிட கஞ்சனே நீ மாட்டாய்
வஞ்சனை செய்தே வெற்றியடைந்திடல் நன்றிதோ நீ சொல்வாய்

சகுனி - அரக்குமாளிகை தன்னிலே உங்களை முடிக்கவே நாங்கள் பாரத்தோம்
இரக்கமேயினி எங்களுக் கில்லையே தர்மனே நீகேளாய்

தீர்மானம் - தரு - தன்னன்னா.....

சகுனி இன்னிசை - வீரமுள்ள பாண்டவரின் நேர்மைமிக்க தர்மனே நீ
நாடுநகர் தம்பிமாரை நயமுடன் இழந்துவிட்டாய்
மீள வழியொன்றுமில்லை தேனினு மினிமையான
ஓவியம் நிகர்த்த உங்கள் பாஞ்சாலியை ஈடு வைப்பாய்

தருமன் இன்னிசை - எந்தன் உயிர்பாஞ்சாலியே உன்னை நானும் ஈடுவைத்தேன்
கண்ணின் கருமணியே கற்பகமே என்ன செய்வாய்
புண்ணிய பாவமில்லாத அண்ணல்மாரின் சூழ்ச்சியாலே
எல்லாமே இழந்திடினும் இறுதிவரை ஜெயம் எமக்கே

*(எறிதல் - துரியோதன் சிரித்துக்கொண்டு)*
**பாட்டு**
*கந்தனே கருணை எம்மேல் வீரமுள்ள மாமனேநீ - உந்தன்*
*வஞ்சகத் திறத்தினாலே பஞ்சபாண்டவரை யெல்லாம்*
*தஞ்சமென நீ செய்து விட்டாய்*

சகுனி - பேசவும் வழியுமில்லை பெற்றறம் அளித்த மன்னா இந்த
நாசமுள்ள பாண்டவர்கள் வசமாகவே மாட்டிட்டார்
காசினி அறியும் இதை
(தரு - தந்தனோம் தனந்ததானா......)

துரியோதனன்
இன்னிசை - பாண்டவர்கள் பாஞ்சாலியை பகடையிலே தோற்று விட்டர்
என்னருமை துச்சாதனா அழைப்பாய் நீயும் பாஞ்சாலியை

துச்சாதனன் - அண்ணர் ஆணை சிரம் கொண்டு மகிழ்வுடனே செல்லுவேன் நான்
பாஞ்சாலியை அழைத்து வந்து பாரினுக்கே காட்டிடுவேன்

(தீர்மானம் - நடைதாளம்)

## காட்சி - 06

***(பாஞ்சாலியை அழைக்க துச்சாதன்ன வருதல்)***

வரவுகவி - பாஞ்சாலி தன்னை நாளும் பாங்குடன் அழைத்து மீள
வஞ்சனை கொண்டு கொடிய
வடிவமே உருவெடுத்து பாண்டவர் மனைவி
தன்னை பாரினில் இழுத்து நீட பாம்பிலும்
கொடிய துச்சாதனன் சபை வந்திட்டானே

கலரிதாளம் - தந்தானந்தன தந்தானந்தன தந்தானந்தன
தானினா - தந்தானம்......
கோட்டை கொத்தளம் மீதில் ஏறி குதித்து
நாளும் வருகிறார்
நாட்டை வெல்லும் நிலையுடைய துச்சாதனன்
தானுமே - தந்தானம் (தத்தரிக்கிட தகதரிக்கிட தாம் தீம்தகதானினா - 2)

துச்சாதனன் - **பாட்டு**
*ஆடிவிலைப்பட்ட தாதி நீ பாஞ்சாலியே - எமக்*
*கடிமை இனி நீ*
*சூதிட்ட பாண்டவர் இழந்தார் உன்னையே*

*பெண்ணை யிழந்தவர் பேச முடியுமா?*
*இத்தரை மீதினில் இனியெம் சொந்தம் நீ*
*வரச்சொன்னார் மன்னர் அழைக்க வந்தேனே*
(தீர்மானம்)

பாஞ்சாலி - **பாட்டு**
பார் வேந்தன் சபை முன்னே நீயும் எனைக்
கூவியழைப்ப தென்ன தர்மமோ சொல்தம்பி
(தர்மமோ சொல் தம்பி)

சூதில் நான் வசமானேன் என்றால் - அந்தப்
பாவச் சபையின் முன்னே வருதலும் சரியோ

நான் என்றும் ஆணவம் கொண்ட உங்கள்
நாயகன் சிந்தையீதோ சொல்வாய் நீ தம்பி
(பார்வேந்தன்......)

துச்சாதனன் - **பாட்டு**
*பாஞ்சால மன்னனின் பைங்கொடி இனி நீயும்*
*பிடிவாதம் செய்வாயோ*
*அரிய மன்னனின்பிரியமாகலாம்*
*சரியென்று சொன்னால் உரிமையாகலாம்*
*வஞ்சகர் செய்திட்ட பகடையாட்டத்தால்*
*தஞ்சமென நீயும் வஞ்சிக் கொடியானாய்*
(தரு - ஆடிவிலைப்பட்ட)
***(தாளம் - பாஞ்சாலியை இழுத்துச் செல்லல்.)***

## காட்சி - 07

***(துரியோதன்ன சபை - பாஞ்சாலி)***

பாஞ்சாலி - **பாட்டு**
*அம்மிமிதித்தே முடித்தேன் ஐவர்தனை மணம் செய்தேன்*
*மன்னவா - மாநிலம் இதை தாங்குமோ*
*(துரியோதனன் சிரிப்பு)*
*வீரம் நிறை விஜயன் எங்கே தர்மம்மிகு தர்மன் எங்கே*
*சூதிலே என் பெண்மை விலை போனதோ*
*(சகுனி துச்சாதனன் சிரிப்பு)*
*சக்கரமே ஏந்தி நின்றாய் தக்கவர்கள் தமைக் காப்பாய்*
*கண்ணனே கடிதில் வா நீ புண்யனே*
(தரு - நன்ன நன்ன......)

கர்ணன் - அறிவாய் துச்சாதனனே நீயும் மகிழ்வுடனே
களைவாய் இவள் சேலையை வன்பாய் - மாநிலம் இதை
அறியும் நகைத்து எங்கும் இன்பாய்
அந்தக் கொடுநிறை பகைவர்கள் கொடுமையை நொடிதனில்
வடிவாக அடக்கிட்டோம் புதுமையிது பாரும்

சகுனி - எளிதாய் எமை அவர்கள் எண்ணி - அன்று நகைத்தார்
பெரிதும் துன்பம் கொண்டோமே நாங்கள்
வஞ்சனையாலே அழிந்தார் இன்று இவர்கள் கேளும்
எங்கள் துரிமன்னன் அரியணை புவியினில் இனிதாய்
மகிழ்வுடன் நிலைத்தெங்கும் பெருமை மிளிர்ந்தொளிர

துச்சாதனன் - சகுனி மாமனே நீயும் வாழ்க உந்தன் செயலால்
புவிமேலே கௌரவர்கள் என்னும் வீறு கொண்டோம் நாம்
ஜெயமே எங்கும் அடைவோம் கேளும் இந்தக்
கொடியவர் பகைதன்னை கடிதனில் வென்றிட்டோம்
மிடி இனி எமக்கில்லை அருள்நிறை மாமனே

கர்ணன் (அகவல்) இன்னிசை - கர்வம் நிறை பாண்டவரின் கண்யமிக்க பாஞ்சாலியே
புண்ணிய பாவமில்லை நண்ணியே நீ இவள் சேலையை
மானமுடன் சேர்த்து ஒன்றாய் ஈனமுடனே களைவாய்
நமது மன்னர் இன்பம் பெற நயமுடனே செய்திடுவாய்

*(துகில் உரிதல்)*

பாஞ்சாலி - **பாட்டு**
*ஆதியில்லா ஆதியப்பா மேதினியை ஆளும் கிருஷ்ணா*
*தீது செய்யும்மக்கள் பாராய் - கிருஷ்ணா!*
(தரு - நன்ன நன்னா....)
(துச்சாதனன் துகிலை உரிதல்)

*கரியினுக்கருள் புரிந்தாய் கரிய நன்னிறமுடையாய்*
*உரியநேரம் உதவி செய்வாய் மாதவா!!*
(தரு........)

*அட்சரப் பொருளுடையாய் துக்கங்கள் அழித்திடுவாய்*
*கொண்ட கண்ணீர் துடைத்துக் காப்பாய் - முரளீதரா!!!*
(தரு....)
*(துகில் உரிதல்)*

*அறிவினைக் கடந்த கிருஷ்ணா - நெறியுள்ளோர் உறையும் கிருஷ்ணா*
*அறிவில்லாரின் இன்னல் தீர்ப்பாய் - ஜெகதேவா!!!!*
(தரு - நன்ன.....)
*(துகில் உரிதல்)*

*கீதை தந்த சோதி வண்ணா - போதை நீங்கும் புண்ய கிருஷ்ணா*
*வாது செய்யும் துஷ்டர் பாராய்*
*(துச்சாதனன் மயங்கி விழுதல்)*

***கிருஷ்ணன் காட்சி தரல்***

***பாஞ்சாலி - பாண்டவர் - சபதம்***

வீமன் - ஆணையிட்டேன் அண்ணல் மாரே கேளும்
நாணமற்ற செய்கைதனைப்பாரும்
தாமரைப் பூவில் உள்ள சாற்றிய தேவன் ஆணை
ஆண்மை சிறிதுமில்லா அரக்கனாம் மன்னனை
போரினில் முடிப்பேனே பாருள்ளோர் அறியவே
தொடையைப் பிளந்து உயிர் குடிப்பேனே

அர்ச்சுனன் - பாதகனாம் துரியோதன மன்னன் காதகனாம் கர்ணனும் கூடவே
நீதியில்லாச் செயல் மேதினி அறிந்திடும்
மோதி அவர்கள் உடல் பாதியாய்ச் சிதறவே
நீதியில்லாக் காண்டீபம் மீதிலே ஆணையிட்டேன்
பார்ப்பீரே நீரும் இதைப் போரிலே

தருமன் - விருந்துண்ணவே வாருங்கள் என்றீரே
மருந்துபோல மானத்தை தின்றீரே
அருந்தவ மங்கையின் பெண்மையைச் சிதைத்தீரே
பொருந்துமோ இச் செயல் பூவினில் நாளுமே
திருந்துமோ உங்கள் நிலை தம்பியர் கூறுவீர்
வருந்துவீர் நாளை நீவிர் பாருமே
(தரு - தனன்னனா தாந்தனந்தன........)

நகுலன் - போர் செய்யவே முடியாது என்று எண்ணி
பாரினிலே சூதினை ஆடிட்டார்
வீரரே உங்கள் செயல் மேன்மையோ கூறுவீர்
பாதகச் சகுனியின் வாது நிறைந்த சூதால்
மேதகு பண்பினை பாரினில் இழந்திட்டீர்
பார்ப்போமே நாளும் உம்மைப் போரிலே

சகாதேவன் - விண்ணின் மீதே ஆணையிட்டேன் பாரும்
கண்ணன் துணை பூவினில் தன்னைக் கேளும்
அண்ணலே உங்கள் செயல் நீதியோ கூறுவீர்
கண்ணின் கருமணியாள் தன்னையே பூவினில்
எண்ணரும் செய்கையால் ஏளனம் செய்திட்டீர்
நீதியோ உங்கள் செயல் கூறுவீர்
(தரு - தனதனனா....)

பாஞ்சாலி - ஓம் என்றினி உரைத்திட்டேன் அண்ணலே
காமுகனாம் துரியோதன மன்னன்
மேவு செயல்தனை பூமகள் அறியவே
பாவி துச்சாதனன் மேனிக் குருதி தனை
சீவிக் குழல் முடிப்பேன் பாரினில் நாளுமே
பூமி அதிர்ச்சி காணும் பாருமே

**- சுபம் -**

# இலங்கேசன்

**(நாட்டுக்கூத்து)**



**கம்ப இராமாயணத்தை தழுவி எழுதப்பட்டது.**

**பாத்திரங்கள்:**

| | |
|---|---|
| இராவணன் | இராமன் |
| மாலியவான் | இலக்குவன் |
| சேனாதிபதி | அங்கதன் |
| பிரதத்தன் | சுக்கிரீவன் |
| ஒற்றர்கள் | அனுமன் |
| மண்டோதரி | சீதை |

# காட்சி - 01

| | | |
|---|---|---|
| வரவு கவி | - | வாரணம் பொருத மார்பன்<br>வரையினை எடுத்த தோழன்<br>தாரணி மௌலிபத்தும் தகவென ஒளிரும் ராஜன்<br>தேரணி இணையே இல்லா நீள்கடல் சூழ்ந்த<br>வீரமா இலங்கை வேந்தன் விரைவினில்<br>வந்திட்டானே<br>(தீர்மானம்) |
| ஆடல்தரு | - | ராஜாதிராஜன் வந்தான் ராஜசபையை நாடி<br>திரிலோகமும் புகழும் தென்னிலங்கை மன்னன்<br>மதிவாணர் பாடிட - மங்கையர் ஆடிட<br>துதியரும்கூறியே அதியின்பம் கண்டிட<br>மதிவாணர் பாடிட - மங்கையர் ஆடிட<br><br>ராஜன் மகராஜன் எழில்ராஜன் உயர்வேந்தன்<br>வெள்ளிமலை தன்னையசைத்த அண்ணல் இராவணேசன்<br>தகதகதகதக திகிதிகிதிகிதிகி - தகித்தெய் தளாங்கு<br>தாம் திமி தோம் |
| இராவணன் | - | **பாட்டு**<br>நூறுகோடி பேர்கள் வீறு கொண்டெழுந்திட - எம் ஈழ<br>நாட்டில் ஆறுகள் கூடியே அழகு பொங்கிட<br>என்றும் அமைவாய் கேட்பாய்<br>ஏறுகள் கரிகள் அணி அணி என<br>மாறு கொண்டவரை தூறுகள் செய்திட<br>எத்திசையும் புகழ் நற்றர சென்னிடம்<br>இடும்பர் வென்றிடக் கடும்பகையுண்டோ |
| சேனாதிபதி | - | வெள்ளிமலைதனைக் கிள்ளி யெறிந்திட்டானே எங்கள் வீரமன்னவன்<br>பள்ளி கொண்டசிவன் பார்த்து மலைத்திட்டானே<br>இதை அறிவாய் நீயும்<br>துள்ளியெழும்படை வெள்ளமாக வரும்<br>கள்ளுக்கள் குடித்தால் கடும் பெலன் வரும்<br>எள்ளி நகையாடி எவர் வந்தாலென்ன<br>உள்ளத்தில் என்றும் நீ உறுதி கொள்ளுவாய் |
| மாலியவான் | - | மன்னவர் மன்னனே மடமை இது கேளும் நம்<br>குலத்தைக் கெடுக்க சின்னவர் செயலைச் செய்திடல்<br>முறையன்றோ இதையறிவாய் என்றும்<br>அன்னமடமாது சீதை தன்னையே<br>இன்னமும் வைப்பது இழி செயலன்றோ<br>வானரப்படைகள் வருமுன்னே நாமும்<br>ஈன செயல்தன்னை இன்றே போக்குவோம் |
| இராவணன்<br>கழில் நெடில் | - | சீர்மிகு பவளம் சிறந்த நம் ஈழம்<br>வேளங்கள் நிறைந்த நம் நாடு<br>தாரணி மாந்தர் சிறப்புடன் வாழ்ந்து<br>காரெழில் பொழியும் நம்நாடு |

சோனாதிபதி

| | | |
|---|---|---|
| இன்னிசை | - | சிங்கம் தனையே நிகர்த்த லங்காபுரி வேந்தனே கேள்<br>பங்கம் இங்கு நேர்ந்ததையா பாழும் கேடு வந்ததையா<br>பொங்கும் இந்தியாவில் நின்று ராமசேனை சூழ்ந்ததையா<br>தங்கம் நிகர் எம்இலங்கை தாறுமாறாய்ப் போனதையா |

(தீர்மானம்)

| | | |
|---|---|---|
| இராவணன் கல்வெட்டு | - | மற்றெல்லாம் நிற்க அந்த மனிதர்கள் வானரங்கள்<br>இற்றைநாள் அளவும் எமது இலங்கையில் வந்ததில்லை<br>சுற்றிடும் இலங்கைத்தீவில் சூழவே உள்ள எமது<br>ஒற்றர்கள் தமையே நீயும் உடனேயே அழைத்து வருவாய் |

(தீர்மானம்)

***(இராவணன் இருக்க ஒற்றர்கள் வருதல்)***

| | | |
|---|---|---|
| வரவுக்கவி | - | இராவணன் ஆணைகேட்டே எழில்மிகு ஈழநாட்டில்<br>காவலர் வலிமைதன்னை கடிதினில் அறிந்து கேட்டு<br>மாவளர் எமது நாட்டை மதிப்புடன் காத்து வாழும்<br>சீர்வளர் ஒற்றர் தானும் சடுதியில் வந்திட்டாரே |

(தீர்மானம்)

| | | |
|---|---|---|
| கலரிதாளம் | - | தனத்ததானா தனதன தனதன தனத்ததானா......... |
| ஒற்றன் 1 | - | அரிந்து பகைவர் சிரம்தனை நாய்நரி - எறிந்து போகும்<br>தசமுடி ராஜன்<br>பரிந்து எம்மை அழகுடன் அழைக்கிறார் - ஏகுவோம் |
| ஒற்றன் 2 | - | செறிந்து பைம்பொன் திகழ்மணி ஒளிசேர் - சிறந்து<br>விளங்கும் எழில்மிகு ராவணன்<br>அறிந்து எம்மை அழகுடன் அழைக்கிறார் - ஏகுவோம்<br>(தரு - தனத்ததானா.....) |
| ஒற்றன் 1 | - | கடல் நிகர் நாட்டை கருக்கிட வந்திட்ட<br>உடல் தனில் வாலுடன் ஓடியே சென்றிடும்<br>அடர்வலிமிகுந்த அனுமன் என்றே நான் கூறுவேன் |
| ஒற்றன் 2 | - | இரத்தினதீவை ராமர்கள் அனுமர்கள்<br>நத்தியே இங்கு நாடிய உண்மையை<br>இத்தினமேயாம் இயம்புவோம் மன்னனிடம் - வாருங்கோ<br>(தரு - தனத்ததானா ...........) |

(தீர்மானம்)

| | | |
|---|---|---|
| ஒற்றன் 1 நெடில் | - | மன்னவர் மன்னனே கேள் மதிப்புறு எமது நாடு<br>மாமலை சூழ்ந்த நாடு நீள் அலை வீழும் நாடு |

ஒற்றன் 2 நெடில் - இராகவன் இலக்குவன் சேர் வானரப்படைகள் யாவும்
சூழவே எமது நாட்டில் தொல்லைகள் புரியுதப்பா

ஒற்றன் 1 நெடில் - அண்ணலே உந்தன் தம்பி அழகுறு ராமனோடு
திண்ணமாய் ஈழம்தன்னில் சுற்றிடும் காட்சி கண்டோம்

(தீர்மானம்)

இராவணன் நெடில் - எழில்மிகு ஈழநாட்டில் இயல் பகை வந்ததுண்டோ
பொழில் நிறை எமது நாட்டை பற்றலர் வெல்வதுண்டோ
நாயினை நரியினைப்போல் நாமவர் சிரமே கொய்து
நேயமாய்ச் சென்று நாமும் நேரெதிர் கொள்வோம் வாரீர்

(தீர்மானம்)

இராவணனன் - **பாட்டு**
*சென்றிடுவோமே எட்டுத்திக்கும் வென்றிடுவோமே*
*வென்றிடுவோம் நாமும் வீரர்கள் வாருமே*
*குன்றுகள் கோடுகள் யாவிலும் கூடியே*

சேனாதிபதி - இந்தியாதனில் ஆள் ஏந்தல் ராமன் இங்குவந்தானோ
சண்டைகள் செய்து சமர்தன்னைப் புரிவோமே வாரீர்
திங்களும் வாழ்கவே செங்கதிர் வாழ்கவே (2)
பங்கமாய் அவன்தலை பாரினில் உருண்டிட

மாலியவான் - இதுவும் ஓர் கோலம் மன்னன் தம்பி வீடனும் கூட
முறையிதுதானோ அண்ணல்தனைப் போர்தனில் சாட
மந்திகள் குரங்குகள் வந்ததுண்டோ கண்டீர்
சொந்த நல்நாட்டினைக் காட்டிடல் நன்றோ
(தரு - சென்றிடு வோமே)

ஒற்றன் 1 - நாரதமுனியை உந்தன் நாவால் நயமுடன் வென்றாய்
பாரத முனிகள் எங்கள் ஈழம் பாங்குடன் வளைத்தார்
மாருதி சுக்ரீவன் வாலிமைந்தன் கூட
மேருமலை விட்டே ஈழம்தனில் வந்தார்

ஒற்றன் 2 - பத்துத்தலை சூழ் பாவலனே பாங்குடன் கேளும்
சுற்றியே பகைவர் இங்குவந்து சூழ்ந்தனரையா
வெற்றிவாகை சூட வீறுடன் செல்லுவோம்
சற்றினும் தயங்காது சாடுவோம் பகைவரை
(தரு - சென்றிடுவோம் எட்டுத்.....)
தரு முடிவில் வடமோடி அடி

## காட்சி - 02

**பாத்திரங்கள் - இராமன், இலக்குவன், அங்கதன், அனுமன் - இலங்கை வரல்**

வரவு கவி - வெற்றிவாள் கையில் தாங்கும் எண்டிசை புகழும் வீரர்
குன்றுபோல் உயர்ந்த தோளில் கொற்றவில் தூணியாத்து
புதர்நிறை அடவி நீங்கி புகழ்வுறு ஈழம் நோக்கி
மன்னவன் ராமன் தம்பி மகிழ்வுடன் வந்திட்டானே

தீர்மானம்

ஆடல்தரு - அன்னம் சீதையை அன்புடன் தேடியே
மன்னன் ராவணன் தன்னையே சாடவே
வண்ணமாகவே ராமனும் தம்பியும்
தென்னிலங்கை நகர்தன்னில் வாறாரே

தீர்மானம்

ராமன் - **பாட்டு**
*சீர்புகழும் வளம்மிகுந்த ஈழம்*
*ஏர் புகழும் எழில் நிறைந்த நாடு*
*பார்புகழ் பவளங்கள் வைரங்கள் மின்னுதே*
*பாங்குடன் பார்த்திடுவாய்*

இலக்குவன் - குன்று தோறும் சென்றழகாய் ஓடி
அன்றலரந்த மலரினைப் போல்பாரும்
அழகுடன் பாய்ந்திடும் வளம்மிகு நதிகளை
அண்ணலே பார்த்திடுவாய்

அங்கதன் - கரிய மனம் உடையவனாம் மன்னன்
அரிய சீதை தன்னைச் சிறையில் வைத்தான்
எரியுதே என்மனம் அனலிடை மெழுகு போல்
வருகுவீர் விரைவினிலே
(தரு - சீர்புகழும்....)

அனுமன் - அன்றொருநாள் அக்கினியை மூட்டி
அழகிலங்கை தனை எரித்தேன் நானே
அந்தரமிந்தர மெங்கினும் பாய்ந்தோடி
தந்திரமாக வந்தேன்

இராமன் - முத்துப்பந்தல் முழுநிலவைப் போல
மெத்தவுண்டு மிக அழகாய்ப்பாரும்
பத்துத்தலை மன்னன் பவள மணிவயிரம்
எத்தனை கோடி தம்பி
(தரு - சீர்புகழும்.....) (தீர்மானம்)

***இராமரும் சுற்றமும் இருக்க இராவணனுடன் சண்டை பிடித்து சுக்கிரீவன் முடியுடன் வரல்.***

வரவு கவி - வாலியின் தம்பியான வானரப்படையின் தலைவன்
தாதவிழ் கூந்தல் சீதை தன்னையே கவர்ந்து சென்று
ஏழிசை புகழும் ஈழம் தனில ரசாளும் மன்னன்
கூடவே சண்டை செய்து கொணர்ந்திட்டான் மௌலிதன்னை
(தீர்மானம்)

கலரிதாளம் - பொன்னின் மாமுடி கையினில் தாங்கியே பொற்புறும்
மன்னர் முன்னிலை நாடியே
வண்ணமாகவே சுக்ரீவன் வந்திட்டான் - தன்னன்னா
தன தாந்தன்னா தானா தன்னன்னா

சுக்ரீவன் பாட்டு - 1 *முத்துக்கள் சிதறிட மத்தகம் பிளிறிட - நத்தியல்*
*வளர்புடை நாடு - இங்கு*
*பத்துத்தலை மன்னன் யுத்தமே புரிந்திட தத்துவம் மிக உயர் நாடு*

2 *கழுகின் வேந்தனாம் சடாயு அடவியில் - கடுஞ்சமர்*
*தனைச் செய்தான் - இந்தக்*
*கொடிய ராவணன் தலையைக் கொணர்ந்திலேன்*
*கொடுமை தான் இது பாரும்*
*(தரு - தாந்தன்னன தாந்தன்ன.....)*

3 *பூத நாயகன் புவிக்கு நாயகன் சீதை நாயகன் கேளாய் - நீ*
*வேத நாயகன் விதிக்கு நாயகன் காதகன் செயல்பாராய்*

4 *ஆழ நீர்க்கங்கை ஏழை வேடனாம்*
*தோழன் குகன் செயல் பாராய்*
*இந்த மானிலம் புகழ்*
*வானரப்படைத் தலைவன் செயல் தனைப்பாராய்*
*(தரு - தாந்தன .................)*
(தீர்மானம்)

சுக்கிரீவன் இன்னிசை -
பத்துத்தலை இராவணனின் பொற்கிரீடம் பார்த்திடுவாய்
முத்தொழி சேர் ஈழமன்னன் மொய்ம்புறவே வீழ்ந்திட்டானே
(தீர்மானம்)

இராமன் நெடில் - வாலியின் தம்பியான வானரத்தலைவா கேளும்
தானைகள் சேனையின்றி தனிச்சமர் செய்யலாமோ
நானிதை தாங்குவேனோ நன்மைகள் தானுமுண்டோ
சேனைகளின்றி நீரும் செல்லுதல் முறையோ கூறும்
(தீர்மானம்)

சுக்கிரீவன் இன்னிசை -
மீட்டிடவே சீதை தன்னை காட்டினிலே கழுகின் வேந்தன்
நாட்டமுடனே சமரை நயமுடனே செய்திட்டானே
ஆற்றினிலே பரதர் சேனை அழித்திடவே அண்ணல் குகன்
சீற்றமுடன் எழுந்திட்டானே சின்னவன் நான் என்ன செய்வேன்

இராமன் இன்னிசை- தென்னிலங்கை வேந்தனிடம் சென்றிடுவாய் அங்கதா நீ
மன்னன் ராமன் மகிழ்வுடனே இங்குவந்தசேதி சொல்வாய்
அன்னம் நிகர் சீதைதன்னை அமைவுறவே விட்டு விட்டால்
இன்னல் இனி இல்லை யென்பாய் இன்றேல் யுத்தம் - உண்டே சொல்வாய்

அங்கதன் இன்னிசை -மன்னன் விடை மொழி தன்னையே மகிழ்ந்து கேட்டே சென்றிடுவேன்
தென்னிலங்கை வேந்தனிடம் சொன்ன கதை செப்பிடுவேன்
(தீர்மானம்)

## காட்சி - 03

***(இராவணன் சோனதிபதி ஆகியோர் இருக்க அங்கதன் வரல்)***

வரவு கவி - வாலியின் மைந்தனான வண்மை சேர் அங்கதனாம்
சூழ்கலி சேர்ந்த மன்னன் தொல்சபை தன்னைநாடி
பாழ்கலி போக்கும் ராமன் பகர்ந்திட்ட சேதிசொல்ல
தோள்வலி நிறைந்த வீரன் தோன்றினான் சபைதனிலே

(தீர்மானம்)

கலரிதாளம் - மத்தாள மேளங்கள், நற்றிசை வாணங்கள்
மெத்தவே ஒலித்திட மேதினி தன்னில் வந்தார்
ஓங்கி நடைநடந்து ஒய்யாரமாய்க் குதித்தார்
தாந்திமி தொமென தாரணிமீதினில் வந்தார்
தன்னன்ன தானன தானின தானின

(தீர்மானம்)

அங்கதன் பாட்டு - *நாடியிங்கு ஓடி வருவேன் - இலங்கை தன்னில்*
*பேடிதன்னைக் காணவருவேன் நாடியிந்த மன்னனிடம்*
*ராமர் சொன்ன காதை தன்னை வாட்டமாகவே உரைப்பேன்*
*நாட்டில் உள்ளோர் தான் அறிய*

*1 தேசமின்னகர் தன்னில் வாழும் - செனரே கேளும்*
*வாசமலர் சீதை தன்னையே*
*ஆசையுற்ற ராவணன் தன் பாசமாகவே கவர்ந்தான்*
*நீசமுள்ள செய்கையாலே - காசினி யெல்லாம் நகைக்க*
*கஜரத படையணி கலீர் கலீர் கலீரென*
*துரகபதாதிகள் துவண்டெழுந்தோடிட - வாய்ந்த நகுமிசை*
*மிகுந்த சபைதனில் தாந்திமித் திமி ததிங்கு தோமென*
(தரு)

*2 சீதை தனைவிட்டு விடுவாய் - ராவணா நீயும்*
*போதை தன்னை அற்று விடுவாய் பேதை யென்று நீ நினைத்தால்*
*வாதை மெத்த உனக்குண்டு - மாதைச் சிரசிலணியும்*
*மாபெரும் சிவன்மேல் ஆணை*
*(கஜரத..............)*
(தரு)

(தீர்மானம்)

இராவணன் நெடில் - ஏமமிகு மென் நாட்டில் ஏதடா வந்தாய் நீயும்
தாமதமறவே உன்னைத் தாரணி அறியப் பாராய்
நான்வதை செய்வேன் இங்கு நானிலம் காணும் நாளும்
ராமனோ யாரோ உன்னை அனுப்பிய வகை சொல்வாயே

(தீர்மானம்)

அங்கதன் நெடில் - வீரபலமே நிறைந்த ஈரமில்லா மன்னனே கேள்
தாரணியில் மானிடரின் பூரணனாம் ராகவனின்
தூதனாக வந்தவன் நான் தொல் புகழ்சேர் மன்னன் ஆணை
மாதுதன்னை நீ விடுத்தே மாண்புடனே வாழ்ந்திடுவாய்

இராவணன் வெட்டு - வெள்ளி மலை தன்னில் பள்ளி கொள்ளும்
வீரன் சிவனா உந்தன் ராமன்
துள்ளி வரும் அழகு நடை தூயவன் திருமாலா சொல்
ஏழுலகு தன்னைப்படைத்த இயற் கடவுள்
பிரம்மாவோ கூறு
மூவுலக தேவர்கள் முக்கோடி வேந்தர்கள்
தாமாக அஞ்சிடும என்சபையில்
கேளாமல் வந்தவனே கேடுமதியாளனே நீயார்?

(தீர்மானம்)

இராவணன் பாட்டு - *மந்திர தந்திரந் தந்திடும் மந்திகள் மெத்தவும் உண்டோ இங்கு*
*தந்தி முகன் குகன் அரன் அரியாவரும் வந்ததும் உண்டோ- எங்கள்*
*அரண்மனை தனிலொரு மானிடனிடமாக பரிந்துரை*
*பகர்ந்திடும் பாதகா நீ யார்?*

அங்கதன் பாட்டு - *சந்தணக் குங்கும கந்த மலருடை ராமதூதன் நான் - அன்னாள்*
*சுந்தர வந்தனம் தந்திடு மிங்கித வாலி மைந்தன் நான் - அன்றொருநாள்*
*உனை வெஞ்சமர் செய்திட்ட சண்டமாருதன் - வாலி*
*அண்டர்கள் முண்டர்கள் கண்டு நடுங்கிடும் ராஜ மைந்தன் நான்*
*உந்தன் அடர் கொடுவினை தன்னை நொடிதன்னில் போக்கியே*
*கடிதனில் ஏகிடும் திடமிகு நானே*
(தரு)

ராவணன் பாட்டு - *துங்க நரர் புகழ் எங்கனுமே விடும்*
*இங்கிர்தலோலன் - நானே*
*இந்திரன் யானையை பங்கமதாகவே*
*வென்றிட்ட சூரன்*
*எங்கணு நோக்கினும் என்புகழ் பாடிடும்*
*அங்கதா கேளாய்*
*உந்தன் தந்தையே நண்பனாய் வந்து*
*மகிழ்ந்திட்ட என்னகம் சேர்வாய்*
*உன்னை மணி பளீர் பளீரென*
*அணி கலீர் கலீரென*
*அரியணை அமர்த்துவேன் முறையிது பாரும்*

அங்கதன் பாட்டு - தாடகை தனை ராமன் கொன்றிட்ட போது
நீ என்ன செய்திட்டாய்
உந்தன் தங்கையை இலக்குவன் வதை
செய்தபோது நீ என்ன செய்திட்டாய்
நாடதில் தீ தன்னை மூட்டிய அனுமனை
என்ன செய்திட்டாய் - உந்தன்
கிரீடத்தைப் பறித்திட்ட சுக்கிரீவன் தன்னையும்
என்ன செய்திட்டாய்
நீயும் பிடிவாதம் செய்யலாமோ அழகுறு
சீதையை கடிதினில் விடுவாயே
இது இனி நன்றே
(தரு)
(தீர்மானம்)

அங்கதன் அகவல் - நூறு கோடி வெள்ளம் சேனை நீயுடையாய்
என்பதுண்மை
வீறு கொண்டே நாம் எழுந்தோம்
வீரன் ராமன் ஆணையிது
தூறுபல செய்திடினும் ஏறுமாறாய்ப்
போக மாட்டோம்
காறு கொண்டே நீயழிவாய் நானிலத்தில்
இ∴தே உண்மை

(தீர்மானம்)

இராவணன் கல்வெட்டு -
எடடா கொடுவாளினை பிடிடா இந்தக் குரங்கினை
அருஞ்சிறை தனிலே நாளும் அடைத்திடு இவனை நீயும்
கொடிய வெங்கொடுமை தன்னை இனி நீயும் அறிவாய் நன்றோ
ஏகியே மனை சென்றே நான் கடிதினில் வருவேன் பாரும்

தீர்மானம்

*(இராவணன் அங்கதனைப் பிடிக்கச் செல்லுதலும் அங்கதன் பாய்ந்து ஓடுதலும்)*

## காட்சி - 04 (A)

*(தூது சென்று அங்கதன் ராமர் கூட்டத்திடம் வரல்)*

அங்கதன் இன்னிசை -
சென்னி முடி மன்னவனாம் தூயவனை நான் வணங்கி
தென்னிலங்கை மன்னனிடம் சொன்னவகை இயம்பிடுவேன்
முற்ற ஓதி என்ன பயன் மூர்க்கன் தலை பத்துக்களும்
அற்றபோது அன்றி ஆசை நாளும் ஆறா(து) இ∴தே உண்மை

(தீர்மானம்)

ராமன் நெடில் - வானர வீரரே கேள்! வாயில்கள் யாவும் சென்று
ஊர்நிறை அரக்கர் தம்மை உலோகர்கள் கண்டறிய
நீர் வதை செய்திடுவீர் நீள்கடல் சூழ்ந்த தீவை
பார் இனி அறியும் உண்மை - பார்ப்போமே போரில் நாளும்

(தீர்மானம்)

## (B)

*(முதல் யுத்தம்)*

சுக்கிரீவன் - அண்ட கோடிகள் அசைந்தாடிட
கண்டு வானவர் களி கூர்ந்திட
கொண்டு கூற்றமும் குதித்தோடிட
மண்டு போரிடை மடிந்தேகிட
அரக்கன் சேனை பறக்க உயிர்துறக்க
இந்தக் குரங்கு வேலை நெருக்கே வென சிறக்க இனிதாக

தூவியம்படை அரிகள் சிதறியே
மேரியுன்படை தெறி கொண்டோடிட
மேகவண்ணன் பாதம் நாளும் போற்றுவோம்

சேனாதிபதி - கொல்ல ஆயிரம் கரிகூடியே
வல்லவன் புகழ் பறை சாற்றியே
பொல்லா வானரர் தனைச் சாடியே
நல்ல தேவர்கள் துணை தேடியே
எமைப் பாதகர் நகைக்காமலே
வகைப் போடுனை தொலைப்பேன் இது உண்மை
தந்திரம் நிறை மந்திகள் இனி
இந்தியாதனைக் கெந்தி ஓடிட
கூறுவேன் நம் ஈழமன்னன் புகழினை

***(வடமோடி அடி) அடி முடிவில்***
***சுக்கிரீவன் தளபதியைக் கொல்லுதல்.***

அனுமன் - ஐயகோ என ஓலம் செய்திடும்
மெய்யில்லா வாழ் வீணர் சேனையை
உய்யவோ இனி நாளும் பூவினில்
கொய்யவோ சிரம் துய்யவோ உடல்
கொலைப் பாதகர் மலைக்காமலே
நகைப்போடுனை சளைக்காமலே பார்
கொடிய படைதனைக் கடிதில் வெல்லுவோம்
மிடிய பகைதனை அரிதில் வெல்லுவோம்
கொன்று கொன்று குவிப்பேன் நானும் பாருமே

மாலியவான் - சாற்றுமன் புகழ் போற்றியே தினம்
கூற்றுவன் போல் குத்துவேன் உனை
மாற்றுவர் தெறி கெட்டு ஓடியே
போற்றுவர் எமைத் தேவர் கூடியே
வாடா இங்கு நீசா உனைச் சாடாமலே
மூடா விடுவேனா
அரிவேன் உன் சதை நரிகள் உண்ணவே
எரியும் தீயிலே உரியதாய் வைத்தே
அரிய சிவன் பாதம் நாளும் பணிகுவோம்

***(வடமோடி அடி)***
***அடிமுடிவில் அனுமன் மாலியவானைக் கொல்லுதல்.***

***அனுமனும், சுக்கிரீவனும் வெற்றிக் களிப்புடன் செல்லுதல்.***

## காட்சி - 05

***(இராவணன் படை தோற்ற நிலையை ஒற்றர்கள் ஓடிவந்து இராவணனிடம் கூறல்)***

வரவு கவி - போர்தனிலே படைகள் யாவும் பொலிவிழந்த நிலைதனையே
நேர்தனிலே பார்த்துவிட்ட வீரர்களும் ஓடிவந்தே
வீரமன்னன் ஈழவேந்தன் தன்னிடமே கூறி மீள
விரைவினிலே வாறாரே விரைந்தோடி மன்னனிடம்

(தீர்மானம்)

ஒற்றன் 1 - மன்னர் மன்னா கேளும் இக்கொடுமையை (2)
மாண்டதையா எம்படை பாருமே (2)
மதிப்பு மிகவும் கொண்ட பிரகத்தன் மாண்டானே
வளம் மிகு எம்படை நலிமிக ஆனதே
களம் விட்டுப் போனதை கருத்துடன் கேட்போமே
உரம் நிறைந்த சுக்கிரிவன் பாருமே

ஒற்றன் 2 - கீழ்வாயினில் சுபரீசன் மாண்டானே
சூழும்படை வீழ்ந்திடச் செய்தானே
நாளுமே பூவினில் எம்படை குறையுமோ
ஆழிசூழ் எம்புகழ் தாழ்வுற்றுப் போகுமோ
வாழ்வினில் எம்நிலை கீழ் நிலையாகுமோ
பார்ப்பாயே இதை நீயும் போரிலே
(தனதனா....... தரு)
(தீர்மானம்)

இராவணன் பாட்டு - எப்படியடா பொறுப்பேனோ - கொடிய செயல்
எப்படியடா பொறுப்பேனோ (2)
எப்படியோ நான் பொறுப்பேன்
இப்படியும் வந்ததுண்டோ (2)
பங்கமுறும்படி வம்பு செய் வானரர்
கொன்றிடுவேன் தலை சிங்கங்கள் உண்டிட

1 பேடி என்று எண்ணி விட்டானோ - நாளும் என்னை
தேடியிங்கு வந்து விட்டானோ
பேடியென்ற வன் செயலை நாடினியே தானறியும்
பங்க முறும்படி............
(எப்படியாடா................ தரு)

2 குன்று தோறும் சென்றிடுவீரே - வீரரே நீரும்
வெற்றிதனைக் கண்டிடுவீரோ
சென்றிடுவீர் குன்றுதோறும் வன்புகழைக் கூறிடுவீர்
பங்கமுறும்படி..............
(எப்படியடா..................... தரு)

# காட்சி - 06

*(இராவணன், சுக்கிரீவன், அனுமன், இலக்குவன் ஆகியோரோடு சண்டை)*

வரவு கவி - பீறிடவே அண்டம் யாவும்
பிளிறிடவே களிறு யாவும்
ஏறிடவே தேர்கள் யாவும்
மாறிடவே படைகள் யாவும்
முத்தொளி சேர் தரள மணி
பளீரெனவே சிதறிடவே
பத்துத்தலை ராவணனும் பாய்ந்திட்டான் களம்தனிலே

(தீர்மானம்)

இராவணன் பாட்டு - ஏழுலகும் புகழும் தேவர்களும்
என்னடி வீழ்ந்தனரே - இனி
பாணம் விட்டேனே பாய்ந்திடும்
சுக்கிரிவா வீழ்ந்திடுவாய் பாரும்

சுக்கிரீவன் - வீழ்வாய் என்று நீ சொல்லி என்னபயன்
வீரர்கள் நாங்களப்பா - இனி
நாளும் சிந்தை கொள் ராவணனே உனை
வெல்லுவேன் பார்த்திடுவாய்
(தன்னன்னா.........................)

***தருமுடிவில் ராவணன் சுக்கிரீவனை அடித்து வீழ்த்தல்.***

அனுமன் - துள்ளித் துள்ளி நான் உன்தலை கிள்ளுவேன்
வள்ளி சிவன் ஆணை
வெள்ளம் போன்ற உன் சேனை மடிந்ததே
வீரனே பார்த்திடுவாய்

இராவணன் - வீரன் என்மேலே வீண்பகை கொள்ளாதே சூர அனுமானே
ஆரம் கொண்டிடு வீரனே ராவணன் பாரினில்
தான் உண்மை
(தன்னன்னான்ன.................... தரு)

***இராவணன் அனுமனை வீழ்த்தல்***

இலக்குவன் - தந்தோ மெனத் தாரணி மீதினில்
தருக்கர் தானையை உருக்குலைக்கவே
வென்றோமென வீறுடன் கூறியே
மிகுந்த துணிவுடன் எழும் என் பாணமே
அரனே அரிய தொரு சிவனே எனதருமை
பரனே அடியார் துயர் தீர்த்திடும் தேவா
உம்பர் போற்றும் தேவனே நீ உதவுவாய்

இராவணன் - வென்றோ மென வீறுடன் பேசிடும்
மிகுந்த புஜபலம் நிறைந்த ராவணன்
நன்றே உனை நாளுமே கொல்லுவேன்
நயந்து பாரெல்லாம் வியந்து போற்றிட
நரர்கள் பயந்து என்றும் மறமே

விளைந்து எங்கும் புறமே அறைந்து
இன்பம் பூவினில் நாட
இந்திரனை வென்றவன் நான் பாருமே
(தந்தானம் தானின்............ தரு முடிவில் ராவணன் லக்குவனை வீழ்த்தல்)

### *இராமன் யுத்தகளம் வரல்*

வரவு கவி - குடதிசையில் எழுகதிரோன் குன்றனைய தோளுடையோன்
மட அரக்கர் தனை வென்றே
மண் மீது நல்ஆட்சி செய்ய
எழுக தேர் விழுகபோர் வெல்லுக வேந்தன் எனவே
தொழு புவியோர் அடிபணிய நல்ராமன் சபையில் வந்தான்
(தீர்மானம்)

ராமன் பாட்டு - அன்றொரு நாள் சீதைதன்னை நீயே கூறு
தந்திரமாய் ஏன் கவர்ந்தாய் பாரில்
எந்தவித சக்தியாலும் வென்றிடவும் எண்ணமுண்டோ
முந்த உன்னைக் கொன்றிடுவேன் கந்தமலர் சிவன் ஆணை

இராவணன் - மெத்தவும் கெறுவுடைய மன்னா - இந்த
பத்துத்தலை ராவணனைப்பாராய் (2)
முத்தொளிசேர் ஈழம் தன்னை வெற்றி பெறும் எண்ணமுண்டோ
பித்து மிகதான் உடைய வித்தகனின் வீரம் பாராய்

ராமன் - பொற்கிரீடம் போகுது பார் மன்னா
உந்தன் நற்புகழும் கூடவே சேர் மன்னா
அற்பனே பார் உந்தன் சேனை விற்கணையால் கொண்டு போகும்
பொற்புறவே உந்தன்படை வெற்புதனை நாடிஓடும்
(தரு - அன்றொருநாள்......)

இராவணன் - தாடகையை நீ வதைத்தாய் அன்று - எந்தன்
தங்கைதனை தான் வதைத்தான் தம்பி
மேனியெங்கும் பொங்கும் சினம்
மேவியுன்னைக் கொன்றிடுமே
கூனி நீயும் ஓடிடுவாய் நானிலமே பார்த்திடவே

ராமன் - வெல்வேன் என்று வீறுகொண்ட மன்னா
நீயும் வீழ்ந்தாய் இன்று நாளை வாராய் நன்றாய்
சீற்றம் மிக கொண்டு நானும் போற்றும் ஈழம் தன்னை நாடி
வாட்டம் கொண்ட சீதை தன்னை
மீட்டிடுவேன் உண்மை பாரும்

(தீர்மானம்)
***(இராவணன் தோற்றுப்போகும்போது அசரீரி பாட்டு)***

வாரணம் பொருத மார்பும் (வலிய குன்றெடுத்த) தோளும்
நாரத முனிவற்கேற்ப நயம்பட உரைத்த நாவும்
தாரணி மவுலி பத்தும் சங்கரன் கொடுத்த வாளும்
வீரமும் களத்தே போட்டு வெறுங்கையோடிலங்கை புக்கான் (3)

## காட்சி - 07

*(இராவணன் சீதையை அரக்கியர் மத்தியில் சந்தித்தல்)*

வரவுகவி - இன்றுபோய் நாளைவா வென்றியம்பினான் ராமன் அன்றே
சென்றதே மானம் என்றே குறுகியே கூனி நின்றான்
அன்றிலைப்பிரிந்த அன்னம் அடவியில் இருந்த தென்றே
நன்றிதே என்று எண்ணி நண்ணினான் சீதை தன்னை

(தீர்மானம்)

இராவணன் - திங்களில் ஒளிமிகுந்த பவளச் செவ்வாய் திகழ்நிறை அழகுடைய
பலவித மலர்களும் அழகுடை நதிகளும் பாடிடும் வண்ணமானே

சீதை பாட்டு - நல்வகை குணமுடைய அண்ணலாம் ராமனின் மனைவி நானே
இரக்கமே சிறிதில்லா அரக்கனின் தலைவனே
ஏனிந்தக் கொடுமை செய்தாய்

இராவணன் - மலைபடு திரவியங்கள் உனது காலில் மனங்கவர் மணி வகைகள்
அழகுறு நகர்தன்னில் அரசியாய் விளங்கிட
அம்மையே மனம் இசைவாய்

சீதை பாட்டு - மூடனே கேட்டிடுவாய் உனக்கு வந்த கேடதைப் பார்த்திடுவாய்
பீடுயர் உனது நல் ஏறு சேர் நாடினி அழியுமே பார்த்திடுவாய்
(தந்தனம்.............. தரு)
தீர்மானம்

ஒற்றன் 1 - (இந்திர ஜித்து மாண்டகதை கூறல்)
வன்மை மிகவேயுடைய தென்னிலங்கை வேந்தனே கேள்
உன்மகனே போரினிலே மாண்டுவிட்டான் நீயறிவாய்
நன்னயம் சேர் தென்னிலங்கை தன்னையே நாம் மீட்டிடவே
இன்றே நீயும் வந்திடுவாய் போர்தனையே கண்டிடுவாய்
(தீர்மானம்)

## காட்சி - 08

*(இராமன இராவண இறுதி யுத்தம்)*
*(வடமோடி அடி - முடிவில் ராவணன் வீழ்ந்து இறத்தல்)*

மண்டோதரி வரவு கவி -
அநந்தம் நூறாயிரம் அரக்கர்கள் மங்கையர்கள்
புனைந்த பூங்குழல் விரித்தே பொங்கியே அழுதிடவே
நினைந்திடவே நெஞ்சமெல்லாம் - நனைந்திடவே மண்மகளும்
இனம் தொடர்ந்து உடன்வரவே - ஏகினாள் மண்டோதரி

பாட்டு - *மன்னவா! எந்தன் உயிரினும் உயிரே - நீ*
*உயர் வீடு சென்றாயோ காதலா*

*அந்நாள் சீதை அழகினில் மயங்கியே*
*மன்னன் ராமனின் மனைவியைக் கவர்ந்தாயோ*
*இந்நாள் உந்தன் பகைவர்கள் வதைத்தாரோ*
*எனையுன் பங்கய திருப்பாதம் சேர்ப்பாயே - மன்னவா*

*அன்று அந்த இந்திரன் யானையை*
*கொன்று குவித்த உன் குன்றுபோல் தோள் எங்கே*
*இன்று உந்தன் நிலையிதுவானதோ*
*பொன்னா வீறுடை புரவலா காதலா - மன்னவா*

*வெற்பு தனை வீறு கொண்டசைத்திட்ட*
*பொற்பு மிகவுயர் புயந்தனை இழந்தாயோ*
*கற்பு அந்தச் சீதையால் வந்ததோ*
*சிற்பம் சிதைந்ததோ சீர்குன்றிப் போனதோ - மன்னவா*

*எங்கும் உந்தன் புகழ்தன்னைக் கேட்கவே*
*அஞ்சும் அகிலமே அழகுடை ராவணா*
*துஞ்சம் உந்தன் நிலையிது வானதோ*
*அஞ்சுகமே எந்தன் அழகுடை மன்னனே - மன்னவா*

**- சுபம் -**

# வாலி வதை

## (நாட்டுக்கூத்து)



## காட்சி - 01

*(இராமன் இலக்குவன் ஆகியோர் சீதையை தேடி ஆரணியம் வரல்)*

வரவு கவி - அண்ணனின் மனைவி தன்னை அரக்கனாம் இலங்கை
வேந்தன் கண்ணிலான் போன்று காட்டில் கவர்ந்திட்ட
சேதி கேட்டு புண்ணிய மூரத்தி ராமன் பொங்கிடும் சோபையோடு
திண்ணிய தம்பியோடு சபைதனில் வந்தார் பாரும்.....

ஆடல் தரு - வருகின்றார் ராமன் சபைதனில் வருகின்றார். ராமன்....
கையினில் வில்லோடு கடுகி நடை நடந்து மெய்யினில் துயரோடு
மேதினில் தனில் பாரும்.....
பத்து தலையில் முடி கொண்ட பாவியாம் மன்னன் தத்தை
தனை கவர்ந்த பித்து பிடித்தவனை இத்தினமே தேடி
இங்கி தோ வருகின்றார்.....

(தீர்மானம்)

இராமன் - முத்தொழில் சிறகுடை நத்தியல் மிக நிறை தந்திடும் மடமாதே
உணரியல் மெத்தவும் உடைய வென் கத்திடும் குயிலினை
அத்தையை அறியாயோ.....

இலக்குவன் - அண்ணலே ஒன்று கேள் திண்ணமாய் கூறுவேன்
எண்ணமே நிறைவேறும் - புவிதனில்
நண்ணியே விரைவினில் செங்கதிர் சிறுவனாம்
சுக்கிரிவன் தனை நாடி.....

இராமன் - துள்ளியே ஆடிடும் புள்ளிகள் மிகவுடை பள்ளிகொள்
மயிலாரே - எனது நல்
கன்னியாம் சீதையை அள்ளியே கவர்ந்திட்டான்
சொல்லிடும் வகையேது.....

இலக்குவன் - அண்டங்கள் எழிலோ ஆகாயம் தன்னிலோ
எங்குமோ நாமறியோம் - சீதையை
கொண்டுந்தன் பாதமலர் அண்டியே வைப்பது
சின்னவன் எனதா மோ....
(தரு)

இராமன் - செந்திரு மலரினை செவ்வான முக மெங்கே சிந்திடும்
செந்தூரம் - அழகியை எந்திரு கரமதில் எவ்வித
மடைகுவேன் என்னரும் இளையோனே.....

இலக்குவன் - உருசிய முகமலை தன்னிலே ஆண்டிடும் வாலியின்
தம்பியான - சுக்கிரிவன்
தன்னையே தேடி நாம் காற்றிலும் வேகமாய்
செல்லுவோம் வந்திடுவாய்......

இராமன் - களிறுடன் களித்திடும் பிளிறுகள் பாராயோ
காணவே முடியாதே - மனைவியை
வெருவியே சென்றிட்ட திருடனாம் இராவணன்
தன்னையே தேடிடுவேன்

இலங்குவன் - அஞ்சுகம் தனை நீயும் நெஞ்சகத் திரையினில்
கொஞ்சமும் மறந்திலையோ - அண்ணரும்
விஞ்சிடாச் சமர் புரிந்தஞ்சிடா தரக்கனை
கெஞ்சவே வைத்திடுவாய்
(தரு)

## காட்சி - 02

வரவுக்கவி - வரிசிலை வீரர் தம்மை வாலியின் வீரரென்றே
உருசியந் தன்னில், ஆளும், இரவி தன் புதல்வன் கண்டு,
எண்ணிரும் துன்பம் கொண்டு வாயுவின் மைந்தனோடு
யாரென அறிய இந்த பாரினில் வாறார் பாரும்......

ஆடல் தரு - வாலியின் தம்பி வாகுடன் வந்தார், மேளங்கள்
தாளங்கள் மேதினி அதிர, அனுமனும் கூட
அணிபடை சூழ ஆதவனின் மைந்தன் இந்த சபைதனில்
வந்தார்

தரு - தந்தனம் தன தனதந்தனம் தன தன.......

சுக்கிரீவன் - என்னடா யாரிவரோ எங்குதான் வந்தனரோ
சின்னவன் என்று என்னை வெஞ்சமர் செய்ய இங்கு
தஞ்சியடா நய்ய வந்த தேனோ......

அனுமன் - கருணையைப் போன்றவர்கள் தரும அழகுடையோர்
தாளாது பேசிடாதே
மறலியர் அஞ்சும் இவர் - விறலியர் பாரும் கோபம் வேண்டாமே

சுக்கிரீவன் - இந்திரன் புத்திரனாம் எந்தனின் மூத்தவனாம்
கிஸ்கிந்தை தன்னில் ஆளும் வாலியாம்
அன்று என்னை கேலிகள் செய்தாய்
நெஞ்சம் - கனலாக

அனுமன் - சாந்த முகத்தைப் பாராய் வேந்தர் இவர்கள் கேளாய்
வீணான தாபம் வேண்டாம்
வேதனை கொண்டு நம்மை நாடியே
இங்கு வந்தார் - பாராய்
(தரு)

சுக்கிரீவன் - எந்தனின் அகத்தாள் தன்னை சொந்த மனைவியாக
கொஞ்சமும் நாணமின்றி வஞ்சனை செய்து அவன்
மஞ்சத்தில் கொண்டான் இது - தகுமோ.

அனுமன் - இரவி தன் புத்திரனே விரைவினில் பார்த்திடுவாய்
இங்கிதோ வந்தார் பாரும்
வாலியின் காலம் இனி குறுகியே போகும். இது - உண்மை.
(தரு)

(தீர்மானம்)

அனுமன் நெடில் - இங்கு நீர் வந்ததென்ன தேவரோ கூறுமிப்போ
இந்திரன் புதல்வன் வாலி
கொடுமையால் இங்கு ஓடி
வாடியே நிற்கும் இந்த இரவி தன் புதல்வன் தன்னை
இன்று நீர் பாரும் நன்றாய் வடிவாகக் கூறுமிப்போ.....

இலக்குவன் நெடில் - வாலியின் ஏவலாலே வந்தவர் நாங்களல்ல
ஆழி சூழ் அயோத்தி மன்னர் தசரதன் மைந்தர் நாங்கள்
சூழ்வினையாலே இன்று கானகம்
தன்னில் வாழ்ந்தோம். சீதையைத் தேடி இங்கு
நின் துணை நாடி வந்தோம்.

இராமன் இன்னிசை - நெஞ்சத்தினில் கிஞ்சித்தும் நீர் அஞ்சவே
தான் வேண்டாம் கேளும் வஞ்சகனாம்
வாலி செயல் மாண்புறவே கூறுமிப்போ
அஞ்சிடவே ஓடி வந்த காலமினி மாறிப்போகும்.
வெஞ்சமரே தான்புரியும் வேதனையை நீக்கிடுவாய்.

சுக்கிரீவன் இன்னிசை - என்னருமை மன்னவனே சொன்ன கதை
கேட்டிடுவாய், அன்று நாங்கள் அண்ணன் தம்பி
என்றவாறே தானிருந்தோம். வல்லவன் தான் வாலிதானும்
வள்ளல் தன்மை தானுடையோன் புல்லர்களின்
புத்தியினால் சின்னவனாய் மாறி விட்டான்......

அனுமன் இன்னிசை - இரவி தன் மைந்தன் காதை இயல்பாக
நீயும் கேட்டாய் விரைவினில் சென்று அந்த
இந்திரன் மகன் தன்னையே மருவியே கொன்று எந்தன்
மன்னன் துயர் தான் களைவாய் உரிமையோடொன்று
சொல்வேன், அதையும் நீயே கேட்டிடுவாய்.

(தீர்மானம்)
(தந்தனத்தோம் தன தானா தந்தனத்தோம் தனதானா....)

சுக்கிரீவன் - மூவுலகை ஈரடியால் முறையோடே அளந்தவனே
மேவியே நின் தம்பியோடும் ஆரணியம் அடைந்தவனே
பாவியாம் வாலியின் உயிர்தனை போக்கிட
சீரிய வழி சொல்லுவாய்.

அனுமன் - ஆதிசேடன் தாங்கிடுமே பூமியை நீ பார்த்திடுவாய்
ஆர்கடலும் வான்புவியும் செங்கதிரும் தண்மதியும்
யாவும், வாலியின் சினத்தால் அஞ்சியே வாழ்வதே
நீயறிவாய்

சுக்கிரீவன் - பாற்கடலைத் தனியாகத் தான் கடைந்த பெருமையினை
பார்த்திடுவாய் நீ இன்று பாங்காகத் தான் அன்று
வாலியின் வலிமையில் மாண்புறு
ராவணன் தானுமே சிக்கிக் கொண்டான்.
(தரு)

அனுமன் - கூடவரும் எதிரிதனின் பாதிபலம் வந்து விடும்
நாடி நீயும் போகும் போது நயமாக இருந்திடுவாய்
வாலியின் வால் இன்றி கோல் தானும் செல்லாது
வன்மை நிறைந்தவனே.

சுக்கிரீவன் - உருமை யென்ற இரவிமகன் அருமை யென்னும்
மனைவி தனை சிறுமையுடன் வாலி தானும்
சேர்த்துக் கொண்டான். கேளி தனை இருமையும்
உந்தனை இழந்தவன் வருகிறான்
கர்மம் பார்த்திடுவாய்

அனுமன் - ஈரமிகு உடையவனே ஆரமிகு பேரரசே
தாரமிதை பறித்தனனே தாரணியோர்
பார்த்திடவே யாரும் பொறுப்பாரோ தம் உயிர்
இழப்பாரோ பாரினிலே கேளும்.
(தரு)

இராமன் நெடில் - அனுமனின் காதையினை அறிவுடன்
அகத்தில் கொண்டேன். உலகமே ஏழும் வந்து
அவனுயிர் உதவினாலும் தலையை யோடரசும் உந்தன்
தாரமும் தருவேன் இன்று புலமையோன்
வாலி தன்னில் உறையிடம் தன்னைக் காட்டும்.

அனுமனின் இன்னிசை - வாலி தன்னைத் தானழிக்க
வல்லவர்கள் துணையும் கொண்டு ஏழுலகுதான் மகிழ
நன்றே செல்வோம் வாரீர் இன்று

(தீர்மானம்)

***(வாலியைத் தேடி ராம இலக்குவ சுக்கிரிவ அனுமர்கள் செல்லல்)***

சுக்கிரீவன் - சென்றிடுவோம் வாரீர் விரைந் தொன்றாய்
வாலியிடம் தேடி சென்றிடுவோம் வெகு
சீற்றமுடன் அங்கு கொன்றவனை மிக
நேர்த்தியுடன் மீள.

அனுமன் - முன்னை விலையழிக்க புவிதனில் மூர்த்திகள்
தானிருவர் என்ன தவமெடுத்தார். பாருமே இப்புவி
மீதுளரோ என்ன அகந்தையால் எம் மன்னர்
தம்மையே சொன்ன அவ் வார்த்தைக்கு பின்னதை நாடியே.

இராமன் - சிந்தை மிக நொந்ததே நாமமிங்கு வந்த துணை நாடி
கிந்தை அரசனவன் அந்த இந்திரன் புத்திரனை எந்தனின்
அம்பினால் பந்தாகக் கொய்யுவேன் சந்ததம் வெற்றியை
நான் உனக்குய்யுவேன்.
(தரு)

இலக்குவன் - அண்ணன் உரைப்படியே யாம் வெகு திண்ணமாய்
சென்றிடுவோம். மண்ணும் கலங்கிடவே ஏனந்த விண்ணும்
மலறிடவே கண்ணும் இமையென வாழ்ந்திட்ட சோதரர்
என்னிடம் போதிலே வேறாய் மாறினார்.

சுக்கிரீவன் - என்ன நினைத்திட்டானோ வாலியும் தன்மதி பொய்த்திட்டானோ.
சின்னவன் என்றேதான் என்னையும் மன்னவன் எண்ணிட்டானோ
வானிலோ விண்ணிலோ வாழும் உலகிலோ தேடிப்பிடித்தந்த
பாவியுயிர் கொல்லுவேன்.
(தரு போகும் வரை)

## காட்சி - 03

*(கிஸ்கிந்த அரசன் வாலி வருகை)*

வரவுக் கவி - மலைக் குகை சிங்கமென மதயானை முழக்கமென
நிலப் புலத்தின் தீயெனவே
நீள் கடலின் ஆழமென உடல் பலத்தால் ஒளிமிகுந்தோன்
உண்மை மிகு வீர தீரன்
கடற்கடைந்த கரத்தோடு களரியில் தோன்றினானே.

ஆடல்தரு - இப்புவியில் வெடி கொடி தீர்ந்திட (2)
தக தக தகவென சலங்கை குலுங்கிட (2)
தகிடத்தாம் திகிடத்தாம் தலங்குதோமென
தாம் தாம் என தகி தகி தோம் என
தீந்தாம் என திகு திகு தோமென
தக தக தக வென சலங்கை குலுங்கிட
தீரனாய் வாலியும் சபைதனில் தோன்றினார்.

வாலி - ஜெக தல மீதில் உளர்யாரும்
எனதடி பணிவார் விரைவாக
புவியினில் வீரசூரன் நானே
இந்திரனின் மகனே.....

தாரை - மந்தரையை மத்தாக வாசுகியை கயிறாக
கொண்டு பாற் கடலினையே
நீ கடைந்தாய் வாலால்
(தரு...)

வாலி - என்னருமை தம்பி தானும்
எந்தனுடன் மறைத்து தானே
தன்னரிய சூழ்ச்சியினால்
என்னரசு பறித்தான்.

தாரை - மீண்டும் குகை வந்த நீங்கள்
ஆண்ட பரி மைந்தனையே
வேண்டி உயிர் பிரியும் மட்டும்
வேதனையால் வதைத்தீர்
(தரு...)

வாலி - செங்கதிரும் தண்மதியும்
சிந்தையுயர் ஆகாயமும்
எங்குமுள்ள உடுக்களும்தான்
எந்தன் ஆணைமீறாய்.

தாரை - நோன்மை சாயல் கவியரசே
இந்திரன் புத்திரனே
எந்தன் உயிர் மன்னவனே
வள்ளல் நிறை வாலி
(தரு...)

வாலி - மாயாவி என்றசுரன் மார்பு தட்டி இங்குவந்தான்
பாதாள குகைதனிலே பாவியுயீர் குடித்தேன்.

## காட்சி - 03 (ஆ)

*(இராமனின் ஏவலால் சுக்கிரீவன் வாலியை போருக்கு அழைத்தல்)*

சுக்கிரீவன் - வாலியே! நீ வாடா! உனைக்கோலியே
உயிர் குடிப்பேன் இன்று
நீலியே நீசா நினை அழிக்க காலனாய்
நான் வந்தேன் பாராய்
போவியே புல்லா நான் இனி தூங்கலாமோ
கேலியே செய்தவனே கெடுமதியாளா வாடா

வாலி - வந்தனன் வந்தனன் வடிவுடன் பாராய் இன்று
கொன்று நின் உயிர் குடிக்க குதித்தனன் பூமி தன்னில்
ஏனடா இங்கு வந்தாய் ஏதடா புதிய மாற்றம்
நில்லடா, நில்லடா, நீசனே வாராய் இன்று

*(தாரை வாலியை மறித்தல்)*

தாரை - ஐய நின தடி மெய்யாய் பணிகுவேன்
உய்ய ஒரு வழி கூறும்
பைய பதுங்கியே நய்யசென்றவன்
கையில் வலியோடு வந்தான்
(தரு...)

உந்தன் உயிர் தனை நன்றாய் கவரவே
வந்தான் காலனும் பாராய்
தந்தை ஆணை கேட்டு வந்த இராமனும்
சிந்தை துணிவுடன் வந்தான்
(தரு...)

தேவ இந்திரன் சாயல் மைந்தனே
பாவி சொல் தனைக் கேளாய்
ஆவி போகுமோ கூவி அழுகின்றேன்
மேவி என்னடி வருவாய்
(தரு....)

(தீர்மானம்)

வாலி பாடல் - ஏது சொன்னாய் எனது இராமன் புகழை
என்ன வென்றறியாயோ
என்ன அறிவிருந்தும் எப்பொருள் தான் கற்றும்
பெண்ணறி வென்பது தெரியாதோ
இன்னும் புரியாதோ சொல்ல அறியாதோ (ஏது....)

சொன்ன அக்கைகேயி வல்ல தன் ஆட்சியை
மெல்லப் பரதனிடம் அளித்தானே
முடிதுறந்தானே காடு அடைந்தானே
துயர் மிகுந்தானே. (ஏது....)
அறத்தோன்றல் இராமனாம் அன்பதனை நீக்கி
மறத்தின் வழியினோடு செல்வானோ
எனை வெல்வானோ உயிர் கொல்வானோ (ஏது சொன்னாய்....)

***வாலி சுக்கிரீவன் மற்போர்***

சுக்கிரீவன் - வாலியே நீ இங்கு வாடா வாகுடனே வந்தேன் நானும்
மேவியுந்தன் உயிர் தன்னைப் போக்கவே
பாவியே நீ அன்று என்னை பூமியில் அடித்து
நன்றாய் ஓடிய குருதியாறு வெள்ளமாய்
(தரு) தந்தனம் தனந்ததான

வாலி - 1) வந்தேன் இன்று வாலிபாராய் வானில் தோன்றும்
ஆதவன் போல் நொந்து உயிர் தன்னைப் போக்க இங்குவா

2) அன்று அந்த பாற் கடலை தான் கடைந்த
கைகளுண்டு இன்று உடல்தான் களைவேன் என்கையால்
(தந்தனம்...... தரு)

சுக்கிரீவன் - இந்திரனின் தன் மகனே இன்றுடனே உந்தன் வாழ்வு
மந்திரமாய் தான் மறையும் பாரடா
தந்திரமாய் எந்தன் உயிர் காதலியை தான் கவர்ந்தாய்
விந்தையினைக் காணப்போறாய் பாரடா

வாலி - செங்கதி ரோன் தன்மகனே செப்பிடுவேன் உந்தன் கதி
பன் முறை போகுதடா பார் தம்பி
இங்கதனில் தோன்றும் நீயும் மங்கைதனை தான் இழந்து
பொங்கியெழும் என் சினத்தால் மாளவே

சுக்கிரீவன் - மின்னலெனவே குதிப்பேன் துள்ளியே உதைத்திடுவேன்
சின்னவன் தான் யானும் என்று எண்ணாதே
அண்ணனோ நீ எந்தனுக்கு விண்ணும் மண்ணும்
தான் நகைக்க எண்ணியே போல்யாவும்
வெற்றி பாரடா (தரு....)

***சுக்கிரீவனும் வாலியும் மற்போர் செய்தல் சுக்கிரிவன் இராமரிடம் ஓடி வருதல்.***

சுக்கிரீவன் நெடில் - என்னருமை இராமனே நீர் இன்னும்
மௌனம் ஏனோ சொல்லும்
முன்னரிவன் கூட நானும் மன்னும்
சமர் தான் புரிந்தேன்
சொன்னபடி நீர் கணையை மின்னலென
எய்திடாமல் எண்ணம் சோபை தான் கவிய
இங்கு நிற்பதென்ன சொல்லும்.....

இராமன் கல்வெட்டு- உள்ளம் நீ குலைந்திடாதே உருவமோ தெரியவில்லை
அண்ணனும் தம்பி தானும் யார் என்றே புரியவில்லை
திண்ணமாய் நீயே இன்று வண்ணமா மலரிலான
கண்ணினைப் பறிக்கும் இந்த ஆரத்தை அணிந்து செல்வாய்

## காட்சி - 04

*வாலி சுக்கீரீவன் இறுதிப்போர்*

சுக்கிரீவன் - எனை மெத்த வதை செய்து அடல் முற்ற வரு வாலி வாடா
உனை கணை தைத்த உடல் போலே வினை தைத்த
விதி போலே கொல்வேன்.

வாலி - எனையொத்த தனிவீரர் உளரோ இப்புவிமேலே கோளாய் தம்பி.
பனையொத்த கரத்தாலே சுனையாகும் குருதிதான் பாராய்
(தரு.....)

சுக்கிரீவன் - அடடா நீ கொடும் பாவி அடியேனின் மனை தன்னை கவர்ந்தாய்
விடலாமோ இனிமேலும் என நானும் வருகின்றேன் பாராய் உன்னை

வாலி - சாக்காடு தான் பார்க்க கூப்பாடு போட்டே நீ வாடா இது
பூக்காடு என்றா நீ ஆர்ப்பாடு செய்தாயோ - கேளாய்
(தரு.....)

***இறுதி போர் இராம பாணம் பட்டு வாலி உயிருக்காக போராடுதல்.***

அசரீரி பாடல் - கதலியின் கனியின் ஊசி கனிந்திட சேருமாப்போல்
கணைதனை ஏற்று மார்பில் கலங்கிட சுற்றும்
பார்த்து அலங்கு தோள் வலியான் வாலி
விலங்கினின் அரசன் தானே கலங்குகால்
ஓசையென்ன கடிதினில் வீழ்ந்தான் பாரும்.

வலிய தன் கரத்தால் வாலி பற்றிய வாயிதனை
காலிலும் வாயிலுமாய் கடிதுடன் இறுக்கமாக
பிடிதனில் தளர்வு இன்றி பிணைத் தந்த கணையும் தானே
கடிதுடன் விட்டவன் யார்
காண்கிலேன் பாரும் அங்கு.

*வாலி கணையை மார்பில் பிடித்துக் கொண்டு வேதனையுடன் பாடுதல்*

வாலி - எங்கிருந்து தானோ வந்ததுவோ பாணம் எந்தன் ஆவி தன்னை
போக்கவே கந்த மாமலர் சிந்து தாரணி எந்த
வேலவனின் வேலிதோ

அட்ட திக்கு தன்னில் கொட்டி வீறு கொள்ளும் துட்டன்
இந்திரனின் பாணமோ வட்டப்பாற் கடலில் நித்தம்
பள்ளி கொள்ளும் பித்தன் மாயவனின் பாணமோ
(தரு.....)

*(வாலி இறத்தல் தாரை ஓடி வந்து புலம்பி அழுதல்)*

## காட்சி - 05

வரவுக்கவி - மலை குயிலாள் தாரைதானும் மன்னனின் நிலையைக் கேட்டு
அலைக்கழியும் மனத்தோடே கருவிழிகள் தாரையென்ன
பொழியுமுகில் மழையெனவே பொல பொல வென நீர் சொரிய
எழில் குலைந்து நிலம் வீழ்ந்த எழி லரசின் உடல் விழுந்தாள்

***(தாரை வாலியின் உடல்மீது வீழ்ந்து புலம்புதல்)***
தானினா தான தந்தன தானினா தான தந்தன
தானினா தான தந்தன தானினா தான தந்தன
தனனம் தனனம் தனனம் தானின தான

தாரை பாடல் - மன்னாதி மன்னவனே
என்னாவி தந்தவனே
கண்ணான தாதை நீயோ
புண்ணாகு தென் மனமே

மண்மீது தான் சரிந்தாய்
உன்னாவி நீ இழந்தாய்
விண்ணோர்க்கு தான் அமுதம்
உண்ண நீ ஏன் கடைந்தாய்

கணமும் உனை நான் பிரியேன் என நீ
சொன்னதும் பிழையோ விதியோ முறையோ (தானினா)

வானோர்க்கு பேரமுதம்
தானுண்ண நீ துணிந்து
மாபெரும் வாலினாலே
மானோர்கள் தான் வியக்க

ஆலகால விஷமும்
பால்போலே தானெழும்ப
நாலு காலோடு வாலும்
கோலமாய் நீ இணைத்தாய்

அரசனும் சரியும் புவியில் திகைக்க
அளித்தாய் அமுதம் அறிவார் புவிமேல் இனிமேல் (தானினா)

நறிதாக நல்ல மிழ்தம்
நயந்தே தான் உண்டவர்கள்
அறியாரோ நின் பெருமை
தெரியாரோ நின் அருமை

ஐயாவே எந்தனுயிர்
மெய்யாவே உந்தனுடன்
பொய்யாக தேவர்தானும்
எய்தாரோ தான் கணைகள்

நிலமும் இனிமேல் உனது உடலை
புவியில் அறிமோ பெரிதாய் நகுமோ (தானினா)

நீள் மலை மேடு தானும்
நீருடும் நீ முனிந்தால்
மாயமோ நானறியேன்
தீயன செய்தனரோ

தேறேன் யான் என்னரசே
மாறேன் நான் எந்தன் நிலை
ஆடுகவே நயனம்
பேராகவே மழை போல்

பொழிந்தேன் அழிந்தேன் மொழிந்தேன்
இனியும் புவியில் கணமும் தரியேன் (தானினா)

---

# தாவீதும் கோலியாத்தும்

**(நாட்டுக்கூத்து)**



1. தாவீது
2. அமைச்சர்
3. சவுல் மன்னர்
4. யூத குரு
5. மன்னன் மகள்
6. கோலியாத்
7. தானாதிபதி
8. சேனைத் தலைவன்
9. கதை சொல்வோர்
10. சேவகர்கள்
11. வள்ளுவர்கள்

# காட்சி - 01

*(கதை சொல்வோர்கள் வரவு)*

வரவுக் கவி - சீரிய உலகு மூன்றும் செய்த நம் இறையைப் போற்றி
நேரிய தாவீது காதை நீள் புவிக்கோதிடவே
பாரிய சிலுவை தாங்கி பார்தனை மீட்ட அண்ணல்
வேரிய கமலபாதம் வணங்கியே களரி வந்தார்.

(தீர்மானம்)

ஆடற்தரு - அண்ணல் தாவீதன் காதையைக் கூறவே
வண்ணமாகவே வந்திட்டார் பாருமே
எண்ணம் சேர்ந்தினி வையத்தை மீட்டிட
சின்ன எம்பரன் பாதத்தை நாடியே (நன்னனா)

(தீர்மானம்)
தந்தனோம் தானத்தானா தந்தனோம் தானத்தானா
தந்தனோம் தானத்தானா தந்தனோம் தானத்தானா

1ம் நபர் - அலைகடல் வானம் யாவும் அமைந்த பல்லுயிர்கள் - எல்லாம்
நிலையில்லாப் பறவை மிருகம் நீள்தரை யாவும் கொண்ட
உலகமே படைத்தாய் இறைவா உன்திருப் பாதம் போற்றி
கலகனை ஒழித்த இளவல் தாவீதின் காதை சொல்ல

2ம் நபர் - மெய்வழி நீங்கி அன்னாள் வீழ்ந்திட்ட எந்தை மீட்க
நல்வழி காண கர்த்தர் நாளுமே தேர்ந்த நாடாம்
பயனினால் மறைநூல் கொண்ட பகலவன் ஒளியைக் கொண்ட
வியனுறு உலகம் கொண்ட விந்தைசேர் நாடகம் கேளும்
(தரு.... தந்தனோம்....)

1ம் நபர் - யூதேயா என்னும் நாட்டில் சவுல் எனும் நாமம் கொண்ட
மன்னவன் ஆளக் காண்பீர் மாபுகழ் கூறக் கேட்பீர்
பின்னும் அந்நாளில் அங்கு பிலித்தையர் எனும் பகைவர்
மின்னிடும் வேகந் தன்னில் வெஞ்சமர் புரியக்காண்பீர்

2ம் நபர் - பேயெனப் பாய்ந்து வெல்லும் பிலித்தையர் துயரால் நாளும்
ஆய ஓர் வழியுமின்றி அல்லலால் வாடி மன்னும்
நேயமாய் அவரை வெல்லல் நீள் புவி தன்னில் யாரும்
வேகமாய் வந்தால் அவனை வீரனென்றுரைப்பான் கேளும்.
(தரு.... தந்தனோம்....)

1ம் நபர் - மன்னவன் சேதிகேட்டு வந்திட்டான் தாவீதண்ணல்
அன்னவன் தன்னை நாளும் அவனியில் வெல்வேன் என
கல்லொடு கவணைக் கொண்டு கருத்தினில் இறையைக் கொண்டு
வல்லவன் தன்னை வீழ்த்த விரைந்திட்டான் தாவீதண்ணல்.

2ம் நபர் - பேயதை வீழ்த்த இங்கு பிள்ளையும் வந்ததுண்டோ
நாயதைப் போலே வீழ்வாய் நானுமே உண்மை என்றான்
கடவுளைப் பகைத்த அரக்கன் கன்றியே நிலத்தில் வீழ
கவண்தனில் கல்லைச் சேர்த்து கடிதினில் விட்டான் பாரும்.
(தரு.... தந்தனோம்....)

1ம் நபர் - வில்லம்பு பட்ட மான்போல் வீழ்ந்திட்டான் கோலியாத்தும்
சொல்லம்பு கேட்ட யூதர் துடித்திட்டார் களிப்பினாலே
மன்னவன் தாவீதென்றே வானகம் கேட்கக் கூறி
அன்னவன் ஆட்சி தன்னில் அழகுற இருக்கக் காண்பீர்
(தரு.... தந்தனோம்....)

(தீர்மானம்)

***கதை சொல்வோர் போகும் பாட்டு***

1ம் நபர் - செம்பொன்னொளிரும் ஆனாள் அடிதன்னைப் போற்றி
செல்லுவோமே எந்நாளும் கதை தன்னைச் சாற்றி

2ம் நபர் - வதைக்கு மடர் சேர் மாய மயல் நீங்கி ஓட
செழிக்கும் எம் நகர் நாளும் கயல் இங்கு கூட - செம்பொன்

1ம் நபர் - திங்கள் மூன்று மாரி பெய்து செனர்வளமாக
அம்பொன் மங்கையர் கன்னி பதம் பணிவாக

2ம் நபர் - இயல் இசை நாடகமும் இனிதாக எம்மூர்
செயல்பெற்று ஒளிவீச அருள் செய்வாய் தாயே

***(வடமோடி அடி கதை சொல்பவர் போதல்)***

***வள்ளுவன் 2 பேர் ஒவ்வொருவருக்கும் 2 கட்டு***

## காட்சி - 02

***(சவுல் மன்னன் வரவை வள்ளுவர்கள் சபைக்கு ஓதல்)***

வரவுக் கவி - எம்பரன் உதித்த நாடாம் எழில்மிகு யூதேயாவின்
அம்பரன் சவுலதிபன் வரவினை சபைக்கு ஓதி
தெள்ளிய தமிழில் கூறி செகந்தனில் ஆடிப்பாடி
வள்ளுவன் சபைக்கு வந்தான் வடிவுடன் பாருமிப்போ

(தரு....) தந்தனோம் தனந்தானா தானின தந்தனோம்.... (2)

1. மன்னவன் சவுலரசன் - சபைதனில்
மகிழ்வுடன் வருகிறார் கேளுமிப்போ
அன்னவன் தாள் பணிவோம் - பணிந்திங்கு
அனைவரும் சேர்ந்தொன்றாய் ஆர் பரிப்போம்

2. தந்தை தாய் செய்தமிடி - தீர்த்திட
தரணியில் வருவார் யேசுபரன்
சிந்தையில் நாம் கொள்ளுவோம் - நாமினி
வந்தனை செய்தடி வீழ்ந்திடுவோம் (தரு)

3. மெத்தவும் துயருடையான் எம்மன்னன்
பிலித்தையர் சமரினால் அயர்வுடையான்
நிட்சயமாய் வெல்லுவோம் - சில நாளில்
அவன் தலை சீவியே முடி சூடுவோம்

4. பொன்னுமே மணியணியும் இன்றுமே
கண்ணினைக் கவர்ந்திடும் அணிதுணியும்
சொன்னவாறே கொணர்ந்து அவனடி
கும்பிட்டு யாவரும் சென்றிடுவோம் (தரு)

5. யூதேயா நாட்டில் வாழும் - செனரெல்லாம்
கூடியே இந்நாளில் ஓடிவாங்கோ
வீதியில் தோரணங்கள் - கமுகுடன்
வாழையும் சேர்ந்தொன்றாய் அலங்கரிங்கோ

6. வித்தகர் பாவலர்கள் - இன்னுமே
மெத்தவும் படித்திட்ட கோவலர்கள்
சுற்றியே ஓடிவாங்கோ - யாவரும்
அவனடி சூழ்ந்தொன்றாய் ஆர்ப்பரிங்கோ

*(தரு முடிவில் வள்ளுவர் போதல் வடமோடி அடி) (மின்குமிழ் அனைத்தல்)*

## காட்சி - 03

*(சவுலரசன் பவனி வருதல்)*

வரவு கவி - மின்னிடும் மணிகள்தாங்கி கண்ணையே பறிக்கும் ஒளியோ
தன்னையே மௌலி யாக்கித் தரணியை ஆளும் மன்னன்
கன்னியின் வயிற்றில் கர்த்தன் தன்னையே தேர்ந்த நாடாம்
யூதேயா மகிபன் சவுலும் சபைதனில் வாறார் பாரும்

(தீர்மானம்)

ஆடற் தரு - யூதேயாவின் ராஜனும் வந்தான் - சபைதனிலே
யூதேயாவின் ராஜனும் வந்தான்
யூதேயாவின் ராஜன் வந்தான் - ராஜ சபை தனை நாடி (2)
மூவுலகை யாளும் மன்னன் பூவுலகில் வந்த நாட்டின்
பரிகரி படையினர் பணிந் தங்கும் ஓடிட
அரிவையர் பூவையர் அணிமலர் சாற்றிட
வாய்ந்த பிலித்தையர் தலையைச் சீவிட
தாந்திமி திமி தளங்கு தோமென - (யூதேயாவின்)

சவுல் - கதிரும் தண் மதியும் பூவினில் கடலும் அருவிகளும் - சேர்ந் தொன்றாய்
எதிரும் புதிருமாய் படைத்த எம் இறைபரன்
மதி பரன் தாளடி பணிந்துமே நாளும்
கனக மாமணியும் விறல் சேர் கானக ஆவினமும் - இன்பமாய்
உலகம் தனை நீயும் அளித்தாய் எழுநாளில்
உனது திருவடி பணிந்தோமே கேளும்
உம்பர்கள் போற்றும் தேவா போற்றியே

அமைச்சர் - எமது நகரிடையே இங்கெழு பகைஞர் வலி கடிதோ - அரக்கர்கள்
தமையே வென்றினி பெருமை கொண்டிட
அருள்வாய் ஏகோவா எந்தையர் தலைவா
கரிய மலையதாமோ அவர் தோற்றம் கொடிய புரியதாமோ - மலைகளில்
அரிதாய் பதுக்கியே எளிதாய் வென்றிட்டார்
எரியும் எம் நெஞ்சம் சொரியுதே குருதி
ஏ கோவா நீயேதான் உதவுவாய்

யூதகுரு - அறமே சிறிதுமில்லா அரக்கர்கள் புரியும் கெறுவிதமோ - இந்நாளில்
அரிந்து அவர்சிரம் எறிந்து விலங்குகள்
இருந்து புவியினில் விருந்து கண்டிடவே
எங்குமே விளங்கும் எம்உயிர் அளித்த எம் இறைவா - உன்பதம்
பெரிதும் போற்றினோம் கொடிய பிலித்தையர்
கடிதில் ஓடிட கர்த்தனே காப்பாய்
காத்தருள் எம் தேவா போற்றியே

************

சவுல் - இந்தப் புவிதனிலே அரக்கனை எளிதாய் வென்றிடவே - துணிவுடன்
சொந்த நாட்டினில் வந்த காளைக்கு
தங்க மகளினைப் பரிசாகக் கொடுப்பேன்
முந்தை வினையறுத்த எம்பரன் தந்தை பதம்பணிந்து - அன்பாக
சிந்தை மகிழ்வுடன் சென்று எம்பதி
கொன்று அரக்கனை வென்றிடுவோமே
இரட்சகன் தாளினைப் பணிவோமே

அமைச்சர் - மன்னன் உரைப்படியே மாபடை சென்றே சமரிடையே - அரக்கர்கள்
உரிய தொன்றிலா உருவம் கண்டுள்ளம் வெருவி மயங்கிடும் வேதனைதீர
அரிதாய் மலைதனிலே ஆணையை அளித்த எம்பரனே - எமைமீட்க
உதித்த எம்பரன் அளித்த திடமுடன் குதித்து அவர்களை வென்றிடு வோமே
தேவாதி தேவா நீயும் வாழ்கவே

அரசன் கழில் நெடில்
- வான மளந்த தனைத்தையும் படைத்த வல்லபன் இறையினைப் போற்றி
வானாம் மந்திரரே மனம் களிகூந்து மாண்புற இனிதர சோச்சி
கானகந்தனிலே கரும் பகை புரியும் காதகர் சிரந்தனைக் கொய்து
பீறுடன் நானும் பெருமை கொண்டெய்த பின்னுபோர் வழிதனைக் கூறும்

மந்திரி கல்வெட்டு - கூறுமென்றுரைத்த மன்னா குவலயந்தன்னில் நாளும்
வீறு கொண்டிளவல் யாரும் பீடுடன் வருவாராகில்
ஏறுபோல் விளங்கு மரக்கன் சிரந்தனைத் தூறு செய்து
நாளுமே வெற்றி கொண்டால் நானிலம் புகழச் செங்கோல்
தாருடை மன்னன் மகளைத் தரணியில் தருவென்றறைவோம்
(தீர்மானம்)

சவுல் அகவல் - எங்குந்திகழ் இறைவன் புகழ்பாட அருள்கூட
சிங்கம் நிகர் வீரர் இனிகூட பகைசாட
தங்கம் ஒளிமனையில் இன்பம்தேடி புகழ் நாடி
பொங்குந் திருமகளார் துணைதேடி நாம் போவோம் வாரிர்

சவுல் மனைக்குச் செல்லும் பாட்டு -
வானமும் விண்மீனும் அங்கே மோன நிலவும் கதிரும் - சேரும்
நல்லுயிர்கள் யாவையும் - தந்த ஆதிபரன் தாளினையை
மேதினியில் கூப்பி நாளும் - சோதி யொளியை வணங்குவோமே

அமைச்சர் - யூதேயா நல் நாட்டரசே தீதில்லாத் தலைமகனே - நாளுமே அமைவாய்க்
கேளும் - நாங்கள் தீட்டும் இந்தப் போரினிலே வாட்டமுடனே
அரக்கர் கேடுடன் மடிவதென்பது உண்மை

யூதகுரு - உண்மையென்ற அமைச்சன் சொல்லை
திண்மையாக கொண்டு நானும்
பாரினில் அவர்களை வென்று - எங்கள்
ஏகபரன் ராட்சியமே பூவினிலெங்கும் பரவ
ஏகோவா எந்நாளும் காப்பார் வாரும்

சவுல் - ஆரெழுந்தெறிக்கும் பௌவம் சீர் புகழ் எமது நாடு
பூவினில் எங்குமே சிறக்க - இங்கு
கார் எழுந்து மாரி பெய்து மீளளுந்து வீடு எய்த
ஆனாள் அன்னை என்றுமே தான் காப்பு

அமைச்சர் - மோயீசனார் கண்ட அந்த முட்செடி ஒளிவிளக்காய்
எங்கள் இஸ்ரவேலின் பரனே - பொல்லாத்
தூறு செய்யும் கோலியாத்தை நாம்புவியில் வென்றிடவே
கூருவாய் அருளே இச்சணமே

யூதகுரு - இச்சணமே என்றுரைத்த நற்சபை புகழ் அமைச்சே
வீறு கொண்டோமே யாம் பாரும் - எங்கள்
ஏகோபாவின் தாள் பணிந்து பூகோளத்தில் வெற்றிகான
தேவாதி தேவனே சரண் பாரும்
(தந்தனோம்..........)

*(வடமோடி அடி போதல்)*

# காட்சி - 04

*(கோலியாத்து வருகை)*

வரவு கவி - நீண்டவாள் புடையிற்தாங்கி மாண்டதோர் கவசம் கொண்டு
பூண்டதோர் பூதமென்ன பொருப்பினை ஒத்த உருவோ
ஆண்டவன் தன்னை இந்த அவனியில் பழித்த அவுணன்
ஈண்டிலங்கு வருகிறானே கோலியாத் தரக்கன் தானும்

ஆடற் தரு - ஒய்யாரமாக உலகினில் ஓங்கி நடை நடந்து
உலகினில் ஓங்கி நடை நடந்து
குண்டர்கள் அஞ்சிட வெஞ்சமர் கொண்டிட
கோலியாத்தும் வந்தான்
தந்தனைத் தானானா தானா தந்தனானைத் தந்தானா தானா தந்தனானைத்தானானா
தந்தனம் தந்தனம் தந்தனம் தந்தனம் தந்தனைத் தானானா

(தீர்மானம்)

**பாட்டு**

கோலியாத் - வாரும் எல்லோருமே சேரும் ஒன்றாகவே
பாரும் இந்நகர் தன்னில் யூதரின் கோலமே
ஏகோவா முன் சென்று - மாவரந்தான் கொண்டு
கொடிய யூதர் தம்மைக் கடிதினில் வென்று நாளும்
மிடிய துயர் களைந்து கொடி சிறந்தோங்க

இஸ்ரவேல் நாடிதே இராக்கதர் வீடிதே
எந்நாளும் எமதாட்சி எங்கிகங்கும் ஓங்கவே
சவுல் என்னும் மன்னனோ குறைவிண்டு வந்தானோ
அரிதில் அவன் சிரமே நொடிதில் உருண்டிடவே
வெருவி சென்றிடுவோம் விரைவினில் யாமே

அமைச்சர் - மன்னாதி மன்னா நீ மாண்புயர் செல்வா நீ
எந்நாளும் சவுல் மன்னன் - பொல்லாத வேந்தனே
பித்தனைப் போன்றோரே எத்தனைக் கர்த்தனில் வாழ்வோரே
இந்த ஆட்சி தன்னில் பங்கமேது மின்றி
சிங்கம் போன்று வாழ சங்கற்பம் கொண்டு

கோலியாத் - மேடுகள் பள்ளங்கள் மேவியே எம்படை
நாடு நகர் சிறக்க பீடுடன் செல்லுமே
கொங்கர் கலிங்கர்கள் எங்குள்ள வம்பர்கள்
பொங்கும் என்சினத்தால் இங்குமங்குமாக
பந்துபோல் ஓடி கன்றியே வாட
(வாரும் எல்லோருமே)
(தீர்மானம்)

அமைச்சர் இன்னிசை - குன்றமெனவேயுயர்ந்த கோலியாத்து மன்னனே கேள்
அன்றெழுந்த சமர்தன்னில் அஞ்சியோடிய யூதர்கள்
இன்று மீண்டும் பள்ளந்தன்னில் இயல்பாகக் கூடிநின்றார்
வென்றிடுவோம் வாருமிப்போ கொன்றிடுவோம் யூதர் தம்மை
(தீர்மானம்)

கோலியாத் அகவல் - அறிவுறும் அமைச்சர் சொல்லை அழகுடன் அகத்தில் கேட்டேன்
செறிவுறும் பிலித்தியர்க்கிங் கெதிர்வரும் பகையுமுளதோ
பிரிவுடன் சென்ற நீயும் பிலித்தையர் தானைத்தலைவன்
அரியதாய் அழைத்து இங்கு அமைவுடன் ஓடிவாரும்

அமைச்சர் இன்னிசை - ***வடமெட்டுத்தாளத்துடன்***
வாருமென்ற மன்னன் சொல்லை மகிழ்வுடனே கேட்டுநாளும்
சீருடனே சென்றிடுவேன் சேனைத்தலைவனை இங்கு
நானுடன் அழைத்து இந்த நானிலம் புகழச்சண்டை
தானுமே நடந்திடுமே தாரணியர் கண்டிடவே
(தீர்மானம்)

***அமைச்சர் தானைத் தலைவனைத் தேடிச் செல்லுதல்***

அமைச்சர் - மன்னனுரைப்படி சொன்னவாறேகுவேனே
தானைத் தலைவனைத்தேடி
மன்னனுரைப்படி சொன்னவாறேகினி - (2)
தகிதித்திட, தமிதித்திட பொலிமத்தன,
புவிகக்கிட, நராமெச்சிட, அடிவைத்திட
அரசுக்கினி நாளும் - (2)
திரு நித்திய கொடையில் கெறு விதமுற்றிட வீறு,
புவியிற் கொடை தனியில் நடை அரசுதனையாளும்
(மன்னனுரைப்படி)

அமைச்சர் - எங்குள்ள யூதரும் வந்து குவிந்திட்டாரே எங்கள் அரசுக் கெதிராகச்
சண்டைகள்தான் செய்ய சங்கமம் கொண்டனரே - இதை பார்ப்போம் போரில்
ஏகனென்றே கூறும் நீச மனிதர்கள் தூசியாய் போவார்கள்
காசினிமீதிலே - நேசமுடனேயான் மன்னன் சொற்படி - (தகிதித்திட)
(மன்னனுரைப்படி)

கொங்கர் கலிங்கர் மற்றெங்குள்ள யூதர்களும்
இங்கு வந்திறை தந்திட இங்குள்ள மன்னவன் சவுல் என்னும் யூதன்
எங்கள் அரசுக் கெதிராய்
சண்டைகள் பூண்டிங்கு அண்டையில் வந்திட்டானே
எந்தையர் வலிமை அறிவாறோ இனி சிந்தையில் இதையும்
தெளிவாய் இருத்தி - தகிதித்திட.......

திங்கள் ஒரு மாரி பொங்கி நகர் செழிக்களங்கள்
நாடுதன்னில் கங்குலில் நாவாய்கள் வந்து கரையிறங்க
வேளாண்மை சிறக்க பொங்கிடும் புனலில் பயிர்கள் செழிக்க
இங்குள்ள கலைகள் எங்குமே பரவ
தங்கமதலைகள் தரையில் பிறக்க - தகிதித்திட.....
(தீர்மானம்)

***நடை தாளத்துடன் போதல்***

# காட்சி - 05

***தானைத்தாலைவனும் அமைச்சரும் வருகை***

வரவுகவி - வீங்கிய தோளின் வலிமை தாங்கிய தானைத்தலைவன்
ஏந்திய கோலியாத்தின் இன்னலை நீக்கப்பாரில்
பாங்கிய மனையை நீக்கி பணிவுறு அமைச்சரோடு
ஓங்கி வசியும் கொண்டு ஒயிலாக வந்தான் பாரும்
(தீர்மானம்)

சேனைத் தலைவன் ஆடற் தரு -
சேனையின் தலைவன் வந்தான் பாருமே - ஐயா
சேனையின் தலைவன் வந்தான் பாருமே
சேனையின் தலைவன் வந்தான் சிங்கார நடையோடு
பாரினில் படைதனைப் பாங்காக வெல்லவே
சேனையின் தலைவன் வந்தான் பாருமே
(தீர்மானம்)

**பாடல்**

சேவைத்தலைவன் - வாருமென்றெனையழைத்ததேனோ ஆதி ஏகோவாதைத்
துதிபுரிந்தென் எழிலரசே கூறும்

ஏதும் சமர்கள் இங்கு உண்டோஎங்கள் நாடினிலே
போட்டிகளும் புதிதாய் வந்ததுண்டோ
வாதும் வஞ்சச் சூதுகளும் உண்டோ - எங்கள்
மாதரசி நிலைகுலைந்து மயங்கித் திரிவதுண்டோ
இச்சணமெனக்கிதை மெச்சவே சொல்லுவீர் எனதினிய மன்னா
(வாரும் மென்றெனை)
எங்களாட்சிக் கேதும் தடை தானோ நாட்டில்
போற்று வளமேது மின்றி புவியில் பகையுமுளதோ
சிங்கார மதத்திற் கெதிரும் உளதோ இங்கு
சிற்றெறும்பைப் போல சிலர் மாற்றம் தேடும் வகையோ
இச்சணமெனக்கிதை மெச்சவே சொல்லுவீர் எனதினிய மன்னா
(வாரும் மென்றெனை)

அறிவுறுமென் கோலியாத்து மன்னா - இங்கு
அடு கொடிய யூதர் வலி அடர்மிகவுமுளதோ
செறிவுறும் எமதரசைநாடி - இந்த
செகத்தில்லொரு தனியரசன் படையுடன் வந்தானோ
(இச்சணம்.......)

கோலியாத் அகவல் - செப்பியவாறே இங்கு சடுதியில் வந்த தலைவா
கப்பிய இருளைப்போல கடுதியில் வந்தார் யூதர்
இப்படை கொண்டு நாமும் முடுகியே செல்வோம் வாரும்
இப்படை தோற்கின் பூவில் எம்படை ஜெயிக்கும் பார்ப்போம்

சேனாதிபதி இன்னிசை -
பார்போமென்று சொன்ன மன்னா பாருலகில் வீறு கொண்டோம்
நாற்புறமும் உள்ள யூதர் நாளைவீழ்வ தென்பதுண்மை
கூப்பிய கரந்தனிலே ஏற்போம் இனி வேலும் வாளும்
தாக்கியே முன்னேறுவோமே தாரணியில் இ∴தே உண்மை

பாடல்

*(குதிரை ஓட்டம்)*

கோலியாத் - சிந்தையில் புகழுடனே விரைத்திங்கு
சினங்கொண்டு யூதரின் சிரம்அரிவோம் - ஐயா சிரம்அரிவோம்
எந்தையர் நாடிதுவே - எந்நாளும்
எளிதினில் வென்றிட இடமளியோம் - ஐயா இடமளியோம்

அமைச்சர் - மன்னவன் உரைப்படியே மகிழ்ந்திங்கு
மின்னிடும் வேகத்தில் சென்றிடுவோம் - ஐயா சென்றிடுவோம்
அண்ணவன் உரைகேட்டு அனைவரும்
ஆவேசமாயத் தலை கொய்திடுவோம் - ஐயா கொய்திடுவோம்

தனைத் தலைவன் - கைதனில் வேலும் கொண்டு அடர்மிக
வெய்திடும் வாளிதானும் உண்டு - ஐயா தானும் உண்டு
பையவே பள்ளங்களில் பதுங்கியே
மெய்யினைச் சரித்திடச் சமர்புரிவோம் - ஐயா சமர்புரிவோம்
தந்தனோம்......

கோலியாத் - என்னதான் நினைத்திட்டானோ சவுல் மன்னன்
சின்னவன் என்றெனை அழைத்திட்டானோ - ஐயாஅழைத்திட்டோனோ
நண்ணியே சமர்புரிவோம் - நம்நகர்
எண்ணியே வீறுடன் வென்றிடுவோம் - ஐயா சமர்புரிவோம்

அமைச்சர் - கங்குலில் எழுந்திடுவீர் - உயர்மிகு
காளையர் வீரரே வந்திடுவீர் - ஐயா வந்திடுவீர்
பொங்கிடும் வேகத்தோடு - திருமகன்
தங்கிடும் வகையாலும் சமர்புரிவோம் - ஐயா சமர்புரிவோம்

தானைத்தலைவன் - பாய்ந்திடும் பரியிற் செல்வோம் எம் நகர்
மாய்ந்திட புவிதனில் இடமளியோம் - ஐயா இடமளிரோயம்
சூழ்ந்திடும் வெற்றிநாதம் இராக்கதர்
தாழ்ந்திடும் வகையினில் புவியில் இல்லை - ஐயா புவியில் இல்லை
(தந்தனோம் தனத்தானா...........)
(தீர்மானம்)

## காட்சி - 06

***(பள்ளத்தாக்கில் பிலித்தியருக்கும் இஸ்ரவேலருக்கும் சண்டை)***

வடமோடித் தாள அடியுடன் இருபக்கமும் படைகள் சபைக்கு வருதல்

வரவு கவி - செருக்குறு இராக்கதன் எரிஎழச் சினந்து சீறி
உருக்குறு யூதர் தம்மில் உயிர்களைக்குடிக்க - நாளும்
தருக்குறு படைகள் கொண்டு தானைகள்
சூழ்ந்திங்கு மிடுக்குடன் சண்டை செய்ய
வீறுடன் வாறார் பாரும்
***(கோலியாத்துப் படை வரல்)***

வரவு கவி - குன்றமோ பேயோ என்று குவலயந்தன்னில்
நாளும்நின்றிடும் கோலியாத்தை நேரெதிர்
கொள்ளப் போரில் - கன்றிடும் மனத்தைக் கொண்டு
கருத்தினில் இறையைக் கொண்டு இன்றி தோ
வருகிறாரே இஸ்ரவேல் யூதர்களும்.
***(இஸ்ரவேல் படை வரல்)***

## பாட்டு

கோலியாத் - கையில் வலிமைதாங்கி வந்த யூதரே நீரும்
மெய்யில் துணிவிருந்தால் வாரும் - சிங்காரமாக
துடியிடை மிகவுயர் எனது நல் படைகொண்டு
விரைவினில் உமை வெல்வேன் - யூதரே கேளும்

சவுல் - போரில் பெரிதாய் உனை எண்ணிக் கெறுவுடனே
போரில் நீ வெல்வாயோ சொல் தம்பி - ஒளியின் துணை
பாரில் எமக்குண்டு நீ தம்பி நல் வாழ்வை என்றும்
சீரில் உணர்ந்து கொள்ளு தம்பி - அன்று
பாதியாய்ச் செங்கடல் மீதினில் வழிகண்ட
மேதையின் துணை என்றும் பூவினில் உண்டு

கோலி. அமைச்சர் - உண்டு என்று சொன்னீரே இன்று - அதையும் பார்த்தும்
கண்டு களிகூரவே வந்தோம் - உமது ஊனைத்
தின்று மிக மகிழ்வு கொண்டு - இஸ்ரவேல் தன்னை
வென்று எமது புகழ் கொண்டு
அடடா வாரும் எங்கும் எமது புகழ் தங்கி
மன வலிமை பொங்கி யெழுந்தெறிக்க
சிங்கம் போல் வந்தோம்

சவுல் அமைச்சர் - வந்த அரக்கரே நீர் கேளும் - புவிதனிலே
இந்த நிலையும் ஓர் நாள் மாறும் - சொந்த நாட்டில்
தந்தை வலியு மெமக் கூரும் தற்பரன் தன்னை
நிந்தை செய்யாதீரிதைக் கேளும் - எங்கள்
முந்தியிருந்த முனி சொன்னவாறே இனி
மின்னிடும் வேகத்தில் உம்மை வெல்வோம் பாரீர்

சவுல் யூதகுரு - வெல்வோமே என்றுரைத்த மன்னா - மேதினி தன்னில்
கல்லும் கரையுமோர்நாள் உண்மை - உன் மத்தங்கொண்டு
அல்லும் பகலும் எம்மை வெல்ல பள்ளங்களிலே
கொல்லுஞ் சினங் கொண்டிங்கு வந்தீர் - எங்கள்
நல்ல இறைவன் துணை சொல்ல இப்புவிதன்னில்
புல்லியே மாய்ந்திடும் யானைபோல் வீழ்வீர்

தானதிபதி - வீழ்வோமே என்னுரைத்த குருவே - வீறு கொண்டோமே
பாழுஞ்சினங் கொண்டும்மைக் கொல்வோம் - பாரிலே என்றும்
ஆளும் நிலையை யாமே கொள்வோம் - கோலியாத்து முன்
நாளும் சமர் செய்வீரோ கூறும் - நாங்கள்
சிங்கம் போல் சினந்தும்மை பங்கமாய் சிதைத்தென்றும்
அங்கம் நாய் நிரி உண்ணும் அறிவீரோ உண்மை

சேவ சவு - அறிவாயோ என்றுரைத்த அரக்கர் - சிரத்தை நானும்
அரிவேனே என்வசியால் பாரும் அற்பனே பாரும்
பெரிதாக எண்ணிடாதீர் கேளும் - தேவாதி தேவன்
உரிய வேளை வருவார் பாரில் - எங்கெங்கும் இஸ்ர வேலின்
புகழ் மணக்க யூதர் அருள் சிறக்க
வேதமுடைய பரன் தாளினைப் போற்றி

கோலியாத் - போற்றிப் புவியில் வந்த யூதர்நடு நடுங்க
நாற்றிசை யெங்கும் போவார் பாரும் - திடமே கொண்டு
காற்றிலும் வேகமாகப் நாம் தாக்கி - ஜெயமே கொள்வோம்
சாற்றியிதையறைந்து எங்கும்கேலியாத்து மன்
கண்டு மகிழ்வு கொண்டு சென்று சிறப்படைய
என்றுமே துணை செய்வார் ஏகனே பாரும்
***(சண்டை வடமோடி அடி)***

***கடைசியில் வடமோடி அடி தாளத்துடன்***
***இஸ்ரயேலர் படை பின்வாங்கிப் போதல்***

## காட்சி - 07

***சவுல் மன்னன் சோகத்தோடு யூதேயா வருதல்***

வரவு கவி - அனிலிடை மெழுகு போன்று ஆழியில் ஓடம்போன்று
அவுணரின் தாக்கத்தாலே அமைதியை இழந்த மன்னா
வளர் நகர் தன்னை நோக்கான் மாண்புறு மக்கள் நோக்கான்
களர் நிலம் தன்னை நோக்கி கன்றியே வாறார் பாரும்
(தீர்மானம்)

சவுல் - என்ன செய்வேன் ஏது செய்வேன் - எங்கள் நாட்டை
இவ்வரக்கர் சின்னாபின்னம் செய்கின்றாரே - பாரும்

மந்திரி - பொன்னொளிரும் முடிபுனைந்து மன்னவனே நீரும் கேளும்
நல்ல வகை நானும் சொல்வேன் மன்னா

யூதகுரு - எண்ணத்திலே தான் சிறந்த வண்ணமிகும் தங்கநாடு
மண்ணடிமை யான தன்றோ பாரும்

மந்திரி - மெய்நெறிகள் தன்னை விட்டு மையிருளின் பக்கம் சென்ற
கயவர் செய்யும் கொடுமைக்கேது முடிவோ

சவுல் - வண்ணமயில் போன்றதொரு என்னருமைக் கன்னிதன்னை
அவுணர் தன்னை வெல்வோர்க்கு நான் அளிப்பேன்

குரு - உந்தன் எண்ணம் ஊரறிய தந்திடுவேன் நான் முரசு
கந்த மாலை அணிந்த மன்னா வாரும்
(என்ன செய்வேன்)

சவுல் அகவல் - அறிவுறுமெனது அமைச்சரே நீர் போய்
பிரியமதாகவே நகர்தனிலெங்கும்
அடர்கொடு வலிய அவுணரை வென்று
இடர்தனை நீக்கும் இளவல் யாரெனினும்
சுடர் மிகு வீசும் சோதி என் மகளை
உடனளிப்பேனென உணம்மையாக் கூறும்

தரு: என்ன செய்வேன் ஏது செய்வேன் எங்கள் நாட்டை
இவ்வரக்கர் சின்னா பின்னம் செய்கின்றாரே பாரும்
(இந்தத் தருவுடன் மன்னன் வெளியேறல்
மின்குமிழ் அனைத்தல் அடுத்த 8ம் காட்சியில் சவுல் மன்னன்
கொலுவில் இருக்க தாவீது சபைக்கு வரும் காட்சி அமைய வேண்டும்)

## காட்சி - 08

### *(தாவீது வரவு)*

வரவு கவி - (தென்மோடி)
நாற்பது நாட்களாக நடந்த இப்
போரைக் கேட்டு, மூத்ததம் அண்ணல் காணா
முகமது வாடித்தம்பி பூத்திடும் அல்லி போன்று
புண்ணிய சோபை வீசும் கோத்திரத் தண்ணல் தாவீது
தெளிதாகச் சபையில் வந்தான்
(தீர்மானம்)

ஆடற்தரு - மன்னவன் சவுல் அரசன் அறைந்
திட்ட மங்கலச் சேதி கேட்டு நன்னயமாகவே
தான் தாவீதண்ணல் நற்சபை தன்னில் வாறார்
நன்னன னானான நன்ன

தாவீது - எங்களின் மன்னன் முன்னே செல்வேனே - இந்த
அரக்கர் அழியும் வகை சொல்வேனே - யூதேயா நாடரசு
பூவிலே பேரரசுநீட எமதுரிமை நாட சகல செல்வம்
கூட கலையினருள் ஓட வறுமையிருள் - (எங்களின்)

பிலித்தையர் கூட்டம் இனிப்பயந்தோட - எங்கள்
சலித்திடும் இஸ்ரா யேலர்கள் வலி கூட - தங்க
மாதரசிகள் துணை எமை நாட சிங்க
போதில்லா இளவலணி ஒருசேர
நீதியில்லா யூதர் கூட்டம் மோதி வெறி புரள
கருணை மழை பொழியும் அருணன்
முக ஒளியும் தரு நல்பரம வேதம் பூவினில் நீட

கார் மேகம் போலும் ஒரு கசடனாம் - அந்த
கோலியாத் என்னும் கொடிய அசடனாம் - பெரிய
பருவதம் போன்ற தொரு முரடனாம் - கரிய
காளியைப் போன்ற நிறத்திருடனாம்
நீண்டவாள் புடையில் கொண்டு பூண்ட அரக்கதனாம்
நீதி நன்முறையால் நிறைந்த நீள் தவமாய்
ஆதி எம் மறையை கேலிதான் செய்து
(தீர்மானம்)

தாவீது இன்னிசை - உலகெல்லாம் வணங்கச் செங்கோல் ஓச்சிடும் எம்
இறைமகனே கலகம் செய்யும் பிலித்தையர் தம்
கொடுமை கேட்டு ஓடி வந்தேன் அலகை இருள்
தீரத்த குறை அமலன் துணை என்றும் கொண்டு
இலகுவில் நான் அவன் சிரமே கவர்ந்தளிப் பேன்
ஈதே உண்மை.
(தீர்மானம்)

சவுல் அரசன் பதில் -
இன்னிசை உண்மை என்று நீ உரைத்த திண்மைகேட்டு
நான் திகைத்தேன் வண்மையான மேரு போன்ற
வடிவு கொண்ட கோலியாத்தை என்னவிதம் நீ

வெல்லுவாய் இதுவு மொரு கேலியாமோ பன்னிருமன்
குலத்துதித்த பாலகனே விடையளிப்பாய்
(தீர்மானம்)

**பாடல்**

சவுல் அரசன் - ஆடுகள் மேய்த்திடும் அன்புடைத் தம்பியே
பீடுடன் நீ சொல்லுவாய் அந்தமேருமலை போன்ற
கோலியாத் தன்னையும் எப்படி நீ வெல்லுவாய்
இந்த மேதினி தன்னிலே தாங்கிடா எம்துயர்
எவ்வாறு நீ துடைப்பாய் தம்பி

தாவீது - வானமும் பூமியும் ஆன பல்லுயிரும் திங்களும் செங்கதிரும்
அன்று ஏழு நல்நாளிலே என்றவாறே எங்கள் தற்பரன்
தான் படைத்தார் - அந்தத் தேவனின் முன்னாலே
பூமியில் மானிடர் மெய்வலி தானுமுண்டோ - மன்னா

சவுல் அமைச்சர் - தேவனின் தன்னருள் கூறிடும் பாலகா சிந்தையிற் புத்தி
கொண்டு - அந்தப் பாதகன் கோலியாத் தன்னையும்
நீயுமோ என்னவாறே வெல்லுவாய் - சும்மா
வாய்ப்பந்தல் போட்டிட்டால் ஈர்க்குமோ காரியம் நன்றே நீ சொல்லிடுவாய் - தம்பி

தாவீது - கானகந்தன்னிலே தோன்றிடும் யானைகள் சிங்கம்
புலி கரடி எந்தன் கையாலே நான் கொன்று
மெய்யாக வீசுவேன் மேதினி ஈதறியும் - இன்னும்
ஈனமனதில் தோன்றிடும் சந்தேகம் நன்மையோ
சொல் இறைவா - நானும்

குரு - பேயதைப் போன்ற தோர் ஆயன் அவன் உரு நீயுமோ
கண்டிலையோ - சின்ன நாயைப் போல் தோன்றிடும்
நல்லுயிர்தம்பியே நானுமோ நம்பவில்லை அந்தக்
கன்மலை தன்னருள் உண்டாறும் பூமியில்
எப்படி நீ வெல்வாயோ தம்பி..
ஆடுகள் மேய்த்திடும்.....

(தீர்மானம்)
அரசன் இன்னிசை - உந்தன் ஆண்மை நானறிந்தேன் என்னருமைத்
தாவீதே கேள் - வாளும் வேலும் கேடயமும் வாகாய்
நானும் தந்திடுவேன். நாலுபடைத் தேர் புரவி
நானிலத்தோர் மெச்சச் செங்கோல் ஈதுனக்கு
நானளித்தேன் இன்றே சென்று வென்றிடுவாய்

தாவீது - வாளும் வேலும் கேடயமும் ஆருந்துணை
ஒன்றும் வேண்டாம் நாளும் கோளும் தன்னில்
உள்ள நல்லிறைவன் துணை உண்டு பூணுகின்ற
கவண் கொண்டு ஐந்து கற்கள் இன்னும் உண்டு
நானவனை வென்றிடுவேன் நானிலம் இதையறியும்

(தீர்மானம்)
***வடமோடி சவுல் செல்லுதல்***

## காட்சி - 09

*தாவீது போருக்குச் செல்லுதல்*

தாவீது - சுந்தரப் பொன்னா ரரசர் சொன்னபடி நானுமே (2)
தொல்லை தரும் கோலியாத்தை கொல்லுவேனே கேளுமே
ஐந்து கல்லினோடு கவண் தன்னைக் கொண்டு செல்வேனே
எந்தனிறை தந்தருளும் என்னுடனே நாளுமே
தந்தனத்தோம்.....

ஆடு மேய்க்கும் பையனென்று மன்னவரும் சொன்னாரே
கோடு போன்ற கோலியாத்தை நான் உடனே கொல்வேனே
ஈடு செய்வேன் நானும் எங்கள் இஸ்ரவேலர் வாழவே
பீடுடன் பெருமை கொள்ளும் யூதகுலம் பாருமே
தந்தனத்தோம்......
நிந்தனைகள் செய்து எம்மை நீசன் என்றே சொல்லிட்டான்
தந்திடுவேன் நான் பரிசு தாரணியோர் காணவே
கந்தமலர் தாரணிந்த எங்கள் மன்னன் தானுமே
சுந்தர நற்கன்னி தன்னைத் தந்திடுவான் - பாருமே
தந்தனத்தோம்.....

*வடமோடி அடியுடன் கோலியாத் பாடல்*

## காட்சி - 10

கோலியாத் - யாரடா நீ இங்கு வந்தனை நீயடா எனை வெற்றி கொள்வது
நாயடா நீ பாலகா பார் - பாயும் மத்தகம் போன்ற என் தொளை
திறந்தே வாய் புகுந்தே நீ இறந்தே உனை மறந்தேன் என
துறந்தாய் இனிப்பாராய் - நொய்யும் உன் உடல்
ஐயகோ என கையினில் இனி வீழ்ந்து மாய்ந்திடும்
இஸ்ரவேல் வீழ்ச்சிதனைக் காணுவாய்

தாவீது - வேலும் வாளும் வில்லும் கொண்டிங்கு தூறு செய்திடும்
பாதகா கேள் - நாளும் பூவினில் நல்ல தேவனின் பூணும்
தன்னருள் என்றும் உண்டினி இனி யூதர்கள் திகைக்காமலே
நகைப்போடுனை விழிப்பாக அழிப்பேன் இது - உண்மை
கொன்று உன் சிரம் தின்று நாய்நரி இன்று
அழிந்திட கன்றியே வந்தாய் ஏகனருள் என்றும் துணை செய்யுமே

கோலியாத் - வெல்லவையோ நீ வீறு கொண்டினி வல்லவையோடினி
உடலைமாய்ப்பேனே - கல்லுமோ ஒரு கவணுமோ
இந்தப் புல்லராயுதம் பூமி தன்னிலே ஏகன் ஒரு
தூசி எனப் பேசி இந்தக் காசினியில் கூசிடாமல்
கேளும் கொடுமை மிகவுயர் அடிமை யூதர்கள் மட
மையும் நீங்கும் பாரினில் - கொல்வேன் உந்தன்
சிரந்தனைப் பாருமே

தாவீது - ஏந்தல் ஈரடிவேண்டியே நானும் வேந்தன் தன் புகழ்
பாடியே கேளும் - சாந்தமாய் புவி தன்னை மீட்டிட்ட
காந்தன் பேரருள் ஏந்தியே தினம் மெய்யே இன்றிப்
பொய்யே கொண்டு ஐயா வெனக்குய்யோ தரும்
வையகந் தன்னில் பாரும் - அன்று முட்புதர் தன்னில்
சோதியாய் கண்ணில் தோன்றிய ஏகனே கேளும்
சத்திய நல் பெட்டகமே காத்திடு
(தீர்மானம்)
*(இராக மாற்றம்)*

கோலியாத் - தேடியே என்னை ஓடியே வந்திட்ட மாட்டிடையன் வாடா
அட பேடியே இனி உன் உயிர் போகுமே ஓர்
நொடியில் பாராய்.

தாவீது - கோடி கோடியே வீரர்கள் வந்தாலும் நாம் இனி
அஞ்சிடோமே அட பாடி உன்னுயிர்
தன்னையே வெல்லுவேன் இராட்சதா நீ கேளாய்

கோலியாத் - கல்லோடு சிறு கவணுமோ கொண்டு நீ எந்தனை
வென்றிடுவாய் - புல்லனே உனை அழித்திடுவேன்
காணும் பூமியிலே பாராய்

***(தாவீது கோலியாத்தை கவனால் வீழ்த்தல்)***

கவி அசரீரி - கடைமுகத்தில் கார் முகில்கள் கருகியே வீழ்வது
போல் படை முகத்தில் பதை பதைத்து பழித்தவனே
துடி துடித்து விடை கொடுத்து வீழ்ந்தது பார்
கோளியாத் அரக்கன் தானே உடைவாளைத்
தானுருவி சிரம் கொய்தான் தாவீதண்ணல்

## காட்சி - 11

***(வெற்றிப் பவனி வரும் சவுல் அரசர் கூட்டம்)***
***(தாள அடியுடனும் அட்ட காசத்துடனும் வருகை)***

வரவு கவி - தென்மோடி
கோண்மையால் உயர்ந்த அண்ணல் தாவீது
கூட இன்று பான்மையால் சிறந்து இங்கு
பாங்குடன் வெற்றி கொண்டு நேர்மையாய்
சொன்ன சொல்லை நீன் புவிக் எடுத்து ஓடி
சீர்மையாய் வருகிறாரே செல்வியோடிங்கு பாருமே

(தீர்மானம்)

சபையோர் - மாபரன் தனனைப் போற்றியே வாரும் மந்திரர் வாகாய்
நல் பாக்கள் சாற்றியே தோகை மயில்கள் ஆட
பாகாய்க் குயில்கள் பாட தொல்களை பல்புகழ்
நல்நகர் தொல்லைகள் நீங்கியே நாளும்

சவுல் - வேதந்திகழும் நாட்டிலே - பொல்லா அரக்கர்
நாளும் பகையை மூட்டியே தீதாய் பகைவர் கூட்டியே
செய்தார் சமர்கள் சிறப்பாய் நாம் வென்றோம் போரிலே

போதில் ஆர்வேதமுனி - ஆதி மறையின் கனி
பொய்மைகள் நீங்கியே தன்னருள் வீங்கியே
மெய்யின்பம் கூட

மகள் - தந்தை உரைத்த வாறிங்கே - தரணி தன்னில்
சிந்தை மிகவும் மகிழ்ந்தே - எந்தையர் போற்றும்
வீரனாம் தாவீது தன்னை - வந்தனை செய்ய நானுமே
இந்த இதயம் தன்னில் பொங்கிடும்
இன்ப வெள்ளம் வந்து சுரந்திட
தந்தருள் செய்திடு தாதையே நீயும்

தாவீது - அருள் நிறை எங்கள் நாட்டிலே அமைதி ஓங்கி
மருள் தரும் பொய்மை ஓட்டியே
இருளடர் நாதர் கூடியே செய்தவினைகள்
பொருள் அற்று போன இன்றிலே
அருள் வளர்மோயீன் தந்திட்ட வேதகனி
அண்ணலின் தாளடி சென்னியில் வீழ்தினி உன்னதமாக

அமைச்சர் - மந்தைகள் மேய்த்த செல்வனை - சிந்தை மகிழ்ந்தே
எந்தையும் தந்தார் பூவிலே - சந்தோசம் கொண்டு நாளுமே
நரர் புகழ விந்தைகள் செய்வோம் பாருமே
கந்தமலரின் ஓசை சிந்திடும் பூவின் வாசம்
தந்திடு சுந்தர தம்பதி சந்ததம் கொண்டினி வாழ

யூதகுரு - வீர இளவல் தாவீது செய்த சமரால்
ஈரமில்லாத அற்பர்கள் பூமியில் வீழ்ந்தனர் பாருமே
கோலியாத்துமே - போரினில் மாண்டான் பாருமே
யாருமில்லாதவர்க்கும் பேரின்பம் தாருமே தேவ
உன்னடி தன்னையே வண்ணமுடன் யானும்
பண்ணிசைப்பாடி (மாபரன்....)
(தீர்மானம்)

அரசன் இன்னிசை - எந்தனுயிர் குருமணியே சிந்தையில் மகிழ்வு கொண்டே
முந்தை சொன்ன வாக்குப் போல மூவுலகத் தேவனருள்
தந்தெனது மகளார் தன்னைத் தாரணியோர் காண இங்கு
பந்தனமே செய்திடுவாய் பாருலகத் தானறிய
(தீர்மானம்)

### *மணமுடித்தல்*

யூத குரு - அருளுறை மாதி சுதனும் ஆவியினருளினாலே (சம்மனுசு பாட்டு)
பொருளுறை யூதேயா நல் அரசனின் மகளார் தன்னை
இருளடர்த் தீர்த்த தெங்கள் தாவீது வேந்தனுக்கு
திருமணம் செய்தேன் நானும்
திண்ணமாய்க் கேளீர் ஈதை மருளுறு மாயை நீங்கி
வாழ்வினில் இன்பங் கொண்டு
அருளுடன் கூடிநாளும் அமைதியில் இன்பம் காண்பீர்
(தீர்மானம்)

## காட்சி - 12


தாவீது - எனது காதலி ஒளிரும் நிலவு நீ
மலரும் உவகையில் கூடியே
மனது பொங்கியே மகிழ்வு கொண்டினி
எனது நிலையை யான் மறந்தேனே

மன். மகள் - எனது காதலா இனிய நாயகா
உனது வரவை நான் எண்ணியே
உதய சூரியன் வரவு கண்டலர்
பதுமம் போலவே ஆகினேன்

தாவீது - நிருதர் பகையினை அரிதாய் வென்றிட
அருளின் ஒளி இங்கு கூடியே
எனது நகரிலே பொழியும் மழை வளம்
களனி பெருகியே சாடவே

மன். மகள் - இனிய தமிழிலே கவிகள் பாடியே
கனியுஞ் சுவை ஒன்று கூடியே
மனித வாழ்விலே இனிமை கண்டினி
மதனும் ரதியும் போலானோமே.

- முற்றும் -





# இந்திரஜித்

**(நாட்டுக்கூத்து)**

## காட்சி - 01

*வடமோடி, தென்மோடி ஆகிய இரண்டு இராகங்களும் கலந்து நிறைந்தது*

## காட்சிகள்

**காட்சி 01** - இலங்கை மன்னன் இராவணனும் மனைவி மண்டோதரியும் சபைவரல்

சம்பவங்கள்
1. நாட்டு நடப்பு
2. மந்திரி மாலியவான் ஆரியர் படை வரவிருப்பதைப்பற்றிக் கூறல்
3. விபீஷணனைப் பற்றியும் இராவணன் கவலையுறல்
4. இந்திரஜித்தைப் பற்றிச் சிறப்பாக மண்டோதரி எடுத்துரைத்தல்
5. வீடு திரும்பல் - காட்சி நிறைவு

**காட்சி 02** - அனுமன், சுக்கிரீவன், விபீஷணன் ஆகியோர் இலங்கைவரல்

சம்பவங்கள்
1. இராவணனுடைய லங்காபுரியைச் சுற்றிப்பார்த்தல்
2. சீதை இருக்குமிடத்தைத் தேடுதல்
3. இலங்கைக்குத் தீவைத்தல்

**காட்சி 03** - இந்திரஜித் சபை வரல், இலங்கை எரிவதைக்கண்டு பகைவர்களோடு சண்டைபிடித்தல், அனுமன், சுக்கிரீவன் ஆகியோரை வாலில் நெருப்புவைத்து துரத்துதல்.

சம்பவங்கள்
1. இந்திரஜித்தும் அரக்கர்களும் அனுமன், சுக்கிரீவனோடு சண்டை
2. விபீஷணனும் இந்திரஜித்தும் விவாதம்
3. அனுமன் வாலில் தீ பற்றவைத்து இலங்கையை விட்டு ஓடுதல்

**காட்சி 04** - சுலோச்சனை - இந்திரஜித் சபை வரல்

சம்பவங்கள்
1. இருவர் காதல் கொள்ளுதல்
2. இராவணன் - மண்டோதரி அருள் வழங்கி மணம் செய்வித்தல்
3. அமைச்சர் மாலியவான் வருதலும் அந்நிய நாட்டுப் பகையைப் பற்றிக் கூறுதலும்
4. இந்திரஜித் போருக்குப் புறப்படல் - சுலோச்சனை தடுத்தல்

**காட்சி 05** - நிரும்பலை என்னும் பாசறையில் இந்திரஜித் துயில் கொள்ளும்போது தீடீரென அனுமன் - சுக்கிரீவன் - இலக்குவன் - நாகநாட்டரசன் ஆகியோர் சுற்றி வளைத்தல். இந்திரஜித் ஆர்வத்தோடு போர் புரிதல்
விபீடணன் இந்திரஜித்தின் கையைத் துண்டித்தல்
இலக்குவன் கணையைத் தொடுத்தல்
நாகநாட்டரசன் தலையை அறுத்தல்

**காட்சி 06** -
1. இந்திரஜித் மடியில் வீழ்ந்து மண்டோதரி புலம்பல்
2. சுலோச்சனை கதறி அழுதல்
3. தேவர்கள் பூமாரி பொழிதல்
4. இராவணன் வெஞ்சினம் கூறுதல்
5. நிறைவு

**எடுக்கப்பட வேண்டிய பாடல்கள்:**

1. ஓரானைக் கண்ணே - கண்ணே
2. பெற்றவளே தாயே
3. கங்கை சுற்றும் புவிதாரணன்
4. தனத்ததானா
5. வாரும் மந்திரர் கூடியே
6. ஐய நினதடி
7. எனது காதலா
8. வருகிறான் ராமன்
9. சென்றிடுவோமே
10. ஐயா மனங்களி கூரும்
11. கந்தப்பூர் மன்னனிடம் செல்வேனே
12. தனத்ததானா - தனத்ததானினா
13. எப்படியடா பொப்பேனோ?
14. கப்பந்துரைப்பாட்டு
15. மங்கள வாழ்த்து - மங்களம் சொல்வோம்

## காட்சி - 01

மெட்டு - தன்னான தானே தனா தன தானே தன தானே தனா
தன்னான தானே தனா தன தானே தன தானே தனா

மண்ணெல்லாம் வீரம் துள்ளும் - எங்கள்
மாதர் கண்கள் கற்பு சொல்லும்
விண்ணிலே ஏறுகின்ற எங்கள் வீரக்கொடி
பகையை வெல்லும்
பண்ணெல்லாம் மானம் காட்டும் - எங்க்ள்
பரதர் புகழ் பாடிநிற்கும்
எண்ணில்லா புகழைச்சேர்க்கும் எங்கள்
வங்கக்கடல் அலைகள் ஆர்க்கும்
தண்ணென முத்தமிட்டு எங்கள் தமிழ்த்தாயார் அரவணைக்கும்
அன்னம்மாள் அன்னை கரம் எங்கள் மன்னுயிரைக் காத்து நிற்கும்

காப்பு - புனித சிலுவை நுதல் வரைந்தே இந்தப்
புவியினிலே ஆடிவரும் கலைஞர் நாங்கள்
மனித நேயம் மாண்புடனே இசைகூட்டி எடுத்துரைக்கும்
மாண்பு நிறை கவிதை தன்னை மாநிலத்தோர் கேட்டிடவே
தென்னிலங்கைப் பெருக்குடியின் மன்னவனாம்
தன்மானச் சுடர் ஒளியாம் இலங்கை வேந்தன்
அகுழ்குன்ற நிலத்தினிலே ஆணிப் பொன் முத்தான
கமழ்கின்ற கற்பகரத்தின ஒளி இந்திரஜித் உறவே
குமிழ்கின்ற இடும்பர்தனை இப்புவியில் நீக்க நாளும்
தமிழ்ஈன்ற நறை மலராம் மரிபாதம் பணிந்து நாமும்
தவழ்கின்ற அருமகனார் தரணியெங்கும் புகழ் ...
அமிழ்தமொதிகழ் யேசு அடி பணிந்திடுவோம்.

வரவு கவி - முத்தெனத்திகழும் நாட்டின் முடிபுனை இலங்கைவேந்தன்
சத்தெனத்திகழும் அமைச்சன் மாலியாவானும் கூட
வித்தகமொழியாள் விரலிள் இசைத்திடும் வீணை மனையாள்
கைத்தலம் பற்றி நாளும் களிப்புடன் சபை வந்தானே

ஆடற்தரு - வருகின்றான் பாரும்
சபைதனில் வருகின்றான்பாரும்
பத்துத்தலை கொண்ட முத்தொளிர் இராவணன்
தத்தும் கடல்சூழ்ந்த தென்னிலங்கை மன்னன் வருகின்றான் பாரும்

தத்தரிகிடத் தத்தரிகிடத் தத்தரிகிடத் தாதீம்
தித்தரிகிடத் தித்தரிகிடத் திக்தரிகிடத் தீதீம்
தனக்கு தகதிக தளங்குதோமென
தகதீம் திகதீம் தகனு னுதாமென வருகின்றான் பாரும்

வசனம் இராவணன்- அமைச்சரே

மாலியவான் - என்ன மன்னா?

இராவணன் - எமது இலங்கை நாடு எப்படி இருக்கிறது?

மாலியவான் - ஏன் நன்றாக இருக்கின்றது - நாற்புறமும் கடல் சூழ்ந்து, நற்றமிதின் புகழ்பாடி
சிவமும் சீலமும் செழித்தோங்க
பண்ணும் பரதமும் கண்ணும கருமணியின் விழியுமெனத் திகழ
- கயவர்கள் இல்லை
காமவலை வீசி கற்பினைச் சூறையாடும் காமுகர்கள் இல்லை
கயமைகள் இல்லை - மாதர்கள் அறம்பாடி மாமறை
புகழ் பாடி - மிகவும் நன்றாக இருக்கின்றார்கள் - ஆனால்

இராவணன் - என்ன ஆனால் ஏதோ ஒரு மயக்கம் இல்லை தயக்கம் நடக்ககூடாதது
நடந்துவிட்டதா. அல்லது நடக்கவிருக்கிறதா கூறும் விரைவாகக் கூறும்.
இல்லையென்றால் வேதன்பால் துடித்துடு வேன் - பித்துப்பிடித்து
உன்மத்தன் ஆகிடுவேன்.

மாலியவான் - ஆமாம், ஆரியர்கள் அந்த இந்திய ஆரியர்கள், வடக்கிருந்து
வரஇருக்கின்றார்கள்.
படையெடுத்து நம் நாட்டை பாழ்படுத்த நினைத்துவிட்டார்கள் - இராமர்
இலக்குவன் மட்டுமல்ல கூட இருக்கும் குரங்கும் குந்தியெழும்பி குதித்தாடிட
திட்டம் போடுகிறார்கள். கொட்டம் அடிக்கின்றார்கள்.

இராவணன் - மந்திரியே இதற்கா பயந்தாய்? இதற்காக அஞ்சினாய்? அச்சம்தவிர்
அஞ்சாதே அணுவளவும் அணுத்துளியளவும்,
அஞ்சாதே பொரு தடக்கை வாள் எங்கே?
மணி மார்பெங்கே? போர்முகத்தின் எவர்வரினும் புறங்கொடாத
பகுவயிரத்தோள் எங்கே பரந்த துணிவுதான் எங்கே? எங்கே.

மாலியவான் - மன்னா! வீணைக்கொடியுடைய வேந்தனே, இவர்கள் மட்டுமல்ல கூடவே
நமது இலங்கையை எளிதாகக் காட்டிக்கொடுக்க அந்த விபீஷணன்
மன்னனும் வருகிறாராம்.

இராவணன் - என்ன விபீஷணன் என் தம்பி விபீஷணன் வந்துள்ளானா.
அவன் விபீஷணன் அல்ல விஷக்குன்று
கூட இருந்தே குழி பறித்தகுள்ளநரி, செருக்கு, செம்மாப்பு
- நறுக்குத்தெறிகக்கும் நளினம் - நம்மவர் போற்றும நாகரீகம்
எல்லாவற்றையும் இழந்து அந்த வஞ்சகனிடம்
ஆரிய இராமனிடம் சரணடைந்த ராஜத்துரோகி. அவனுமா வருகின்றான்.
அவனும் வருகின்றானா என்ன செய்வேன்... என்ன செய்வேன் ..... மந்திரியே

தரு - தன தன தத்தம் தானதானா - தன தன தத்தம் தான தானா
தன தன தத்தம் தானதான - தானே தந்த தனா

இராவணன் - வில்லினை எடடாக்கையிலே நீயும் - அந்தப்
புல்லியர் கூட்டம் பூழ்தி செய்வோம்
மெல்லியர் என்று எண்ணிட்டானோ - அவன்
மேதினியில் எம்மை

மாலியவான் - மன்னவனே கேட்டிடுவாய்
கன்னல் மொழி மைந்தன் தானும்
மின்னல் என எதிர்த்து நிற்பான்
மேககாரன் அவனே

மண்டோதரி - சிங்கத்தினைப்பிடித்து வந்தான்
பங்கமுறக் கட்டிவைத்தான்
இந்திரனை வென்று வந்தான்
இந்திரஜித் மகனே

தரு - தன தன தந்தம்.............

இராவணன் - மந்திரியே எங்கெங்கு நோக்கினும் எம் திராவிட இனம்
எதிரொலிக்கும் கடல் அலைகள்
எப்போதும் கத்துகின்ற கடல் - பரந்து விரிந்து உயர்ந்து
நிற்கின்ற பாரிய மலைகள்
வெற்றி வெகு தொலைவில் இல்லை "இல்லை" யென வெறி கொண்டு
கெக் கெலிக்கின்ற வீரர் கூட்டம் - எனவே எனவே

இராவணன் - உச்சிமீது வானிடிந்து
வீழுகின்ற போதினிலும்
அச்சம் ஒரு துளியும்வேண்டாம்
ஆண்மையுடன் எதிர்ப்போம்

மாலியவான் - மன்னா அந்த வடிகட்டிய முட்டாள் - துரோகத்தின் மொத்த உருவம்
அண்ணன் மண்ணென நினைத்தவன்
மட்டுமல்ல நரித்தனம் நிறைந்தவன் கயமைகள் மலிந்தவன்
அவனை - அவனை
புற்றீசல் போலச்சென்றான்
சுற்றம் தனை மறந்துவிட்டான்
பற்றுப்பாசம் இழந்துவிட்டான்
பாதகன் உன் தம்பி

மண்டோதரி - மன்னா மன்னா! என் மகன் இந்திரஜித்
காட்டிலிருந்த சிங்கங்களைப்பிடித்து
வந்து வீட்டிலே கட்டிவைத்தவன்
இந்திரனை எதிர்த்துப்புறமுதுகிடச் செய்தவன்
அந்த மகன் - இந்திரஜித்

இந்திரஜித் என்மகனாம்
மந்திரங்கள் நிறைந்தவனாம்
தந்திரமாய்க் கயவர் தம்மை
வென்றிடுவான் பாரிரீ

தன தன தத்தம்............

*(பாட்டுத் தரு முடிவில் எங்கிருந்தோ அம்பு ஒன்று வந்து விழுதல் - மூவரும் திகைத்து நிற்க - இராவணன் அம்பில் தைத்திருக்கும் ஓலையை எடுத்து வாசித்தல்)*

நாங்கள் இராம தூதர்கள். சீதாபிராட்டியைத் தேடி இலங்கை வந்துள்ளோம். ஓ இராவணா? வீணே அகந்தை கொள்ளாதே. சீதை எங்கிருந்தாலும் பிராட்டியைத் தேடிக் கண்டுபிடிப்பது எங்கள் கடமை. அதைச் செய்யுமட்டும் ஓயமாட்டோம். ஒழியமாட்டோம். உடனே பிராட்டியை எங்களிடம் ஒப்படை. இல்லையென்றால் இலங்கை எரியும்........ எரியும்......

இராவணன் - மடையர்கள் மமதை கொண்டவர்கள். ஆரியப் பேயீகள்
எங்களை என்ன ஆட்டுக்கு அள்ளிப் போடும் கிள்ளுக்கீரை
என்றா நினைத்தார்கள்
பார்ப்போம்! அதையும் போர் என்றால் போர்

மாலியவான் - வெற்றிச்சங்கு எட்டுத்திக்கும் முழங்கட்டும். வேழத்தின் மீது இவந்தது
முரசம் அறையுங்கள். எக்காளம் ஒலிக்கட்டும் - சண்டைக்கு நாங்கள்
என்ன பயந்தவர்களா? செங்குருதியைக் கண்டு திகைத்தவர்களா

மண்டோதரி - மன்னர் மன்னா. உன் நாத கானத்தால் நாதனையும்
அடிபணிய வைத்தவனே உன் நாட்டுக்கு இப்படியொரு சோதனையா
ஜெய் பராசக்தி - ஜெய் பராசக்தி

**பாட்டு** தரு........ தனத்தானா தன தன தானினா தனத்த தானா தனதனதானின
தனத்ததானா தனதன தானின தானினோ

இராவணன் - தூங்கும் புலியைப் பறை கொண்டு எழுப்புவோம்
தூய தமிழரைத் தமிழ் கொண்டு எழுப்புவோம்
தீங்குறு பகைவரை இவண் நின்று நீக்குவோம்
வாருமே ............... தனத்தனா

மாலியவான் - குரங்கு கூட்டம் எமைத் தேடி வருகுது
தறங்கு கரத்தை விரைவினில் நீக்குவோம்
சிரங்கு மனத்தை சீர் செய்து வாழுவோம்
வாருமே.............. தனத்ததானா

மண்டோதரி - இராம லக்குவ படைகளை எதிர்ப்போம்
நாமம் கெட யாம் நற்புகழ் தேடுவோம்
ஏமம் என்றும் எமக்கினி உள்ளன
பாருமே.......
(தரு - தனத்ததானா.............)

## காட்சி - 02

வரவுகவி - என்னரும் இலங்கை நாட்டின்
எழில் தன்னைப் பார்த்து மீள
மன்னருங் கவிதை சீதை
பாங்குடன் அழைத்துச்செல்ல
உன்னத சொல்லின் சொல்வன்
உயர்திரு சுக்கிரீவனும்
நன்னயமாக வந்தார்
நளினமாய்ச் சபை தனிலே

ஆடற்தரு - சொல்லின் உயர் செல்வன் அவன்
அனுமன் சுக்கிரீவன் அங்கதனும்
கூடச்சேர்ந்து அவனியில் வந்தார்
வில்லினைப் பிடித்து உயர் வீறுடன் வந்தார்
நல்லிலங்கை தனிலே நலமாக வந்தார்

ஜதி - தகிர்தாம் திகிர்தாம்
தனங்கு தோமென
தகஜனு தகஜனு
தளங்கு தோமென
தகதிமி தனதிமி- தனதிமி தோமென

அனுமன் - ஆகா என்ன அழகான நாடு

சுக்கிரீவன் - அனுமனே இரத்தினத்துதீவு என்று இலங்கைக்குப்
பொருத்தமாகத்தான் கொடுத்திருக்கிறார்கள்

விபீஷணன் - அனுமன், சுக்கிரீவன் எங்கள் நாடு இரத்தினங்கள் மிகுந்தநாடு
மாணிக்கற்கள் நிறைந்தநாடு - மயன் எழுப்பிய மாடமாளிகைகள்
கூடகோபுரங்கள் பார்ப்பதற்கு கந்தர்வலோகம் போன்று அல்லவா இருக்கும்

அனுமன் - இந்திரனின் அந்தப்புரம்கூட இலங்கைக்கு அடுத்ததாகத்தான் இருக்கும்

அங்கதன் - இங்கு சுந்தர தருவிகளும் அரம்பை, ஊர்வசி, மேனகை போன்ற
தேவ லோகமங்கைகளும் நிறைத்திருப்பது போன்றதொன்று

தரு - தந்தனத்தோம் தனத்தானா தானினத்தோம் தனத்தானா
தானா தன தன தானா தன தானின தானினனா

அனுமன் - பொன்னெழில் சேர் பூநாடு
பூம்பொழில்கள் சூழ்நாடு
அம்பொன் மணி நிறை அழகிய திருவொளி
எங்கணும் திகழ்நாடு

விபீஷணன் - வீணை இசை மிகு நாடு
யாழின் ஒலி எழும் நாடு
ஏழிசை தனில் எழில் பாவிசை பாடிடும்
ஏற்றங்கள் நிறை நாடு

சுக்கிரீவன் - நித்திலங்கள் முடிந்ததென
முத்துப்பற்கள் தனையீந்த
மெத்தவும் அழகு மங்கையர் நிறைநாடு
எத்தனை கோடியின்பம்

அங்கதன் - முறம் பிடித்து புலிவிரட்டும்
மூதையர்கள் வாழ்ந்தநாடு
அறம் நிறைந்து மதம் வளர்க்கும்
சான்றவர்கள் மிகுநாடு
திறன் நிறை இளஞர்கள் விறல்வலிசேர்ந்திடும்
வீரம் நிறைந்தநாடு

தரு - தந்தனத்தோம் தனத்தானா................

அனுமன் - விபீஷணரே அதோ தெரிகிறதே அதுதானே - இலங்கை மன்னன் இராவணன் மாளிகை - இரத்தினக்கற்கள் நிறைந்து எங்கும் ஜெகஜோதியாக சிவப்பொளி வீசுகின்றதே

விபீஷணன் - ஆமாம், அனுமா, அதுதான் அவன் சுந்தரமனைவி மண்டோதரியின்
அந்தப்புரம் மண்டோதரியின்
தந்தை மயனால் உருவாக்கப்பட்ட இந்திரலோகத்துச் சுந்தரபுரி
இங்குதான் இராவணன் துயில் கொள்ளுவான்

அனுமன் - ஆமாம் முதலில் நாங்கள் இராவணனிடம் செல்வோம்.
அவன் செய்த தீமையென
எடுத்துரைப்போம். நீதியின் வழிநடக்க அறவழி வாழ ஆன்ற உரைகள்
பகர்வோம் நேர்மையின் புறம் நடக்க

விபீஷணன் - வேண்டாம் அனுமனே. இந்தவேளை அந்திமயங்கும்வேளை அவன் மதியிழந்து கதியிழந்து காரிகையரின் காலடியில் காவடிச்சிந்து பாடுகின்ற நேரம். இந்தவேளை அவன் யாரையும் மதிக்கமாட்டான்.

அனுமன் - அப்படி யென்றால் - அப்படியென்றால் அசோக வனத்துக்குச் செல்வோமா? அங்கு சீதா பிராட்டியாரைச் சந்திப்போமா

விபீஷணன் - அதுவும் வேண்டாம் அது அரக்கர்கள் நிறைந்த இடம்.
காவல்கள் மிகுந்த இடம்.
அங்கும் இப்பொழுது செல்வது அதுவம் இந்த இரவுவேளையில்
செல்வது சரியல்ல

அனுமன் - நீங்கள் கூறுவதைக்கேட்டால் நம் கணங்கள் வீணாகிவிடுமே
எங்கள் வருகை பாழாகி விடுமே - எங்களது முயற்சி
பயனற்றதாகிவிடுமே

விபீஷணன் - இல்லை அனுமா, அதற்குள் அவசரப்படாதீர்கள்
நாங்கள் மந்திரி மலியவானிடம் செல்வோம்
அவனிடம் எங்கள் நோக்கத்தை எடுத்தியம்புவோம்
நடந்ததை நயமிக்க எடுத்துச் சொல்வோம்
நடக்கப் போவதைப் பயமாக எடுத்துச் சொல்வோம்

அனுமன் - ஆமாம் மந்திரிக்கழகு மதியூகமுரைத்தல்
கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாம் சொல்.

விபீஷணன் - வாருங்கள் வாருங்கள் விரைவாகச் செல்லுவோம்

**பாட்டு**

அனுமன் - சென்றிடுவோமே இலங்காபுரி
சென்றிடுவோமே
சென்றிடுவோம் வாரீர் தென்னிலங்கை நாடி
மன்னவன் ராவணன் தன்னையே தேடியே

விபீஷணன் - பத்துத்தலை சேர் - எந்தன் அண்ணன்
பித்தனானே - வித்தகம் சேர்ந்து
சீதை தன்னைப் பக்கம் வைத்தானே
எத்தர்கள் வாழ்கின்ற உத்தம நாடிது
அத்தன் சிவன் பாதம் முத்தியடி சேர

சுக்கிரீவன் - மூவடியாலே பேருவகைத்
தான் தனந்தானே - ஈரடிதன்னை
சென்னி தன்னில் யாம் குவிப்போமே
இராமனின் சீதையைத் தேடி வந்தோம் நாமே
இராவணன் ஆட்சியை இல்லா தொழிக்கவே

அங்கதன் - மாவலியாறு பொங்கிப் பாய்ந்து
பேரொலி செய்ய - மாணிக்க கங்கைப்
புனல் சாய்ந்து சொள் தனைத்தள்ள
முத்துக்கள் சிந்திட தத்தைகள் கொஞ்சிட
பித்தன் லங்காகேசன் பேரெழில் காணவே
சென்றிடுவோமே...............

*மாலியவான் அரண்மனை*

விபீஷணன் - மாலியவான் - மாலியவான்

மாலியவான் - யாரது இந்த அர்த்தராத்திரியில்

விபீஷணன் - யான்தான் விபீஷணன்

| | | |
|---|---|---|
| மாலியவான் | - | யாரது விபீஷணனா இந்த அர்த்த ராத்திரியில்<br>அற்புதமான மாலை வேளையில்<br>அழைக்காமலே வந்திருக்கின்றீர்களே நீங்கள் யார்?<br>உங்களுக்கு அருகிருக்கும் இந்தக்குரங்குகள் யார்? |
| விபீஷணன் | - | அமைச்சரே வாரத்தையை அளந்து பேசும். வந்திருப்பவர் அப்படி எவரோ எவரோ அல்ல இலங்கை மன்னன் தம்பி<br>அவர்கள் குரங்குகளல்ல புனிதமான இராம தூதர்கள் |
| மாலியவான் | - | தூதர்களா அல்ல அல்ல 5ம் படையென்று அழகாகக் கூறுங்கள் |
| விபீஷணன் | - | 5ம் படையல்ல அமைதிப்படை, அன்புப்படை |
| மாலியவான் | - | ஓகோ, அமைதிப் படையாம் அமைதிப் படையின் ஆர்ப்பாட்டங்கள்<br>அட்டகாசங்கள் ஆவர்த்தனங்கள் அக்ரமங்கள் அராஜகங்கள்<br>அத்தனையும் எங்களுக்கு நன்குதெரியும் |
| விபீஷணன் | - | அமைச்சரே யாகாவராயினும் நாகாக்க - நாகாக்க ஹ்ஹ்ஹா |
| மாலியவான் | - | சரிசரி என்னை நாடிவந்த உங்களை அவமதிப்பது சரியல்ல.<br>அதிதியாகிய உங்களுக்கு இப்பொழுது என்னவேண்டும் |
| அனுமன் | - | மன்னன் வேண்டும். மன்னன் இராவணனைப் பார்க்க வேண்டும்.<br>அவரோடு ஒருசில நிமிடங்கள் பேசவேண்டும்.<br>உண்மையை உணர்த்த வேண்டும். பொய்மையை அகற்ற வேண்டும். |
| அமைச்சர் | - | எப்படி? எப்படி எப்படி? |
| அனுமன் | - | ஆகா கூறுகிறேன் கேளும்<br>ஐயா நான் கூறுவதைக் கேளும் - கிலேசமின்றி<br>மன்னன் இராவணனிடம் கூறும் - அந்தக்<br>கயமை மிகநிறைந்த கொடுமைகள் புரிந்திட்ட<br>பகைமையை வளர்த்திட்ட பாதக மன்னனிடம் |
| விபீஷணன் | - | நெஞ்சில் உரத்தினையே விட்டு - உமதுமன்னன்<br>நேர்மைத்திறத்தினிலே கெட்டு - அந்தப்பஞ்சவடிதனிலே<br>கஞ்சமலர்தனையே வஞ்சமாய் கவர்ந்திட்டான்<br>பஞ்சமாபாதகன் |
| சுக்கிரீவன் | - | இன்ப மனைவி துணை உண்டு - உமது மன்னன்<br>தங்க மதலைகளும் கண்டு - அன்று<br>பொங்கும் மன எழிலில் எங்களின் இராமன்தனின்<br>பங்கயமலர்தனைக் கவந்திட்டான் பாருமே |
| அங்கதன் | - | வாரும் அரண்மனையை நாடி<br>செல்வோமே யாமும் மன்னன் இராவணனையேத் தேடி<br>அன்று இந்திரன் யானையை வென்றவன் எம்மன்னன்<br>நன்று நீர் காணுவீர் நாநிலத்தோர் - ஐயா |

தரு.......... ஐயா நான் கூறுவதை......

## *இராவணன் அரண்மனை*

இராவணன் - வாருங்கள் - வாருங்கள் - அருமைத்தம்பியாரே வாருங்கள்
ஹ்ஹாஹ்ஹா அறிவிக்காத உங்கள் வருகை மனதுக்கு நிறைய மகிழ்ச்சி

விபீஷணன் - இன்னமும் காலம் சென்றுவிடவில்லை

இராவணன் - என்னத்துக்கு?

விபீஷணன் - சீதையை ராமனிடம் மீண்டும் ஒப்படைப்பதற்கு

இராவணன் - காலங்கடந்த பேச்சு, வெறும் ஞானம் கடந்த பேச்சு

விபீஷணன் - இராவணா!

இராவணன் - ஆத்திரப்படாமல் பொறுமையாக இருங்கள், பிறகு உறுமலாம்

விபீஷணன் - பொறுமைக்கும் ஓர் அளவு உண்டு

இராவணன் - அதைத்தான் நீர் ஏற்கனவே காட்டிவிட்டீர். பச்சோந்தியாக பகல்வேவுதாரியாக
கபடவேடமிட்டு, கள்ளத்தனம்பூண்டு, அடிவருடியாக, அமையாகச்
சென்றுவிட்டீர் இதுதான் பொறுமையா

விபீஷணன் - செய்வதையும் செய்துவிட்டு நன்றாக நடிக்கின்றாய்

இராவணன் - இது நடிப்பல்ல இதயத்துடிப்பு, எனது தங்கைக்கு நடந்த
அவமானத்தின் வெடிப்பு

அனுமன் - சீதையை எம்மிடம் ஒப்படைக்கவேண்டும்

இராவணன் - இல்லையென்றால்

அனுமன் - எரிப்பேன் இலங்கையை - அதுமடிந்து மண்மேடாகும்
அங்கு நிம்மதி இருக்காது அங்கு
அனற்பூக்கள் பூக்கும். அக்கினி கொழுந்துவிட்டு எரியும்
எப்பொழுதும் எரிகின்ற மயானகாண்டமாகத்தான் இருக்கும்

இராவணன் - அடேய் யாரங்கே?
எப்படியடா பொறுப்பேனோ
குரங்கு செயல் எப்படியடா பொறுப்பேனே
எப்படியடா பொறுப்பேன் இப்பயும் தம்பியுண்டோ
செப்படிவித்தையே நாட்டியே நீயுமே தப்பிய தாளங்கள்
போடவோ வந்திட்டாய்
பேடியென்றா எண்ணிவிட்டாயோ - என்னை
நீயும் பேடியென்று எண்ணிவிட்டாயோ ஏனோ
பேடியென்று எண்ணி நீயும் இராமன் பக்கம் சென்றாய்
கோடி கோடி பொன் வந்தாலும் நாடிழக்க நான் விரும்பேன் - பேடி

இராவணன் - யாரங்கே
சேவகன் - மன்னா

இராவணன் - தீயைமூட்டுங்கள். இந்தக்குரங்குகளின் வாலில் கொழுத்தி விடுங்கள். அவைகள் அப்படியே எரிந்து மடியட்டும். அடேய் குரங்குகளா என்னிடமா வாலை ஒட்ட எரித்துவிடுவேன்

***(குரங்குகளின் வாலில் தீ மூட்டப்படுகின்றது. அவர்கள் தங்களுடைய வாலில் உள்ள தீயைக் கொண்டு இலங்கையை எரித்துவிட்டுச் செல்லுகின்றார்கள்.)***

தரு - பேடியென்று............

## காட்சி - 03

***இந்திரஜித் சுலோக்சனை - இராவணன் - மண்டோதரி - மாலியவான் சபைவருதல்***

வரவுகவி - இந்திரனை வென்ற சூரன்
ஈடில்லா இளையதீசன்
தந்திரமாய் சிங்கந்தன்னை
தனிக்காட்டில் பிடித்த மாரன்
தந்திரமாய் அன்னை தந்தை
மாண்புடனே கண்டு மீள
இங்கிதோ வருகின்றாரே
இணையில்லா இளைய மன்னன்

ஆடற்தரு - ஆடிப்பாடி அகமகிழ்ந்து அகன்ற நெற்றியில் பொட்டுமிட்டு
கூடிக்குதித்துப் பாய்ந்து பாய்ந்து கூற்றம் போல வருகின்றாரே
சீறிச்சினந்து சிங்காரமாய் மங்காத ஒரு நடனமாடி
ஆரியரைத் துவம்சம் செய்ய ஆட்டம் போட்டு வருகின்றாரே
தானந்தந்தன தானந்தந்தன தானத்தந்தன - தானந்தந்தன

இராவணன் - மகனே இந்திரஜித்

இந்திரஜித் - என்னதந்தையே - ஏன் பதற்றம் யாரைக்கண்டும், எதைக்கண்டும் அஞ்சாத உங்கள் வதனம் இன்று அச்சத்தால் பீடிக்கப்பட்டிருக்கின்றது. சிவபெருமானை அன்று கயிலங்கரியிலே அசைத்த உங்கள் தோள்கள் துவண்டிருக்கிறது. சோர்ந்திருப்பது என்ன? என்ன நடந்தது தந்தையே?

இராவணன் - அஞ்சுவது அஞசாமை பேதமை - நம் நாட்டை நோக்கி ஆரியர் படையெடுக்க எண்ணியுள்ளனர். அந்த ஆரிய இராமன் திராவிடர்களைப் பந்தாட எண்ணியுள்ளான். காட்டிக்கொடுப்பதற்கு உனது சிற்றப்பன் படையை ஓட்டிவருதற்கு அந்தக்குருங்குக் கூட்டம், அதனால் தடுமாறுகிறேன் தந்தளிக்கின்றேன். என்ன செய்வேன்

இந்திரஜித் - அப்பா இதற்கா பயந்தீர்கள். அன்று மேகத்திலே பாய்ந்து நிலவைப் பிடிக்கச் சென்றேன். இந்திரனின் யானையாகிய ஐராவதத்தைப் பிளந்து உயிர்குடித்து அவனை வென்று இந்திரஜித் என திருநாமம் சூடியவன். அடர்ந்திருக்கும் அடவிக்குள் சென்று படர்ந்திருக்கும் சிங்கத்தின் பிடரி மயிரைப் பிடித்து இழுத்துவந்து வீட்டிலே நாயைப் போல கட்டி வைத்த உங்கள் மகன் இந்திரஜித் இருக்கின்றேன்.

இராவணன் - மகனே இந்திரஜித் ஈன்ற பொழுதிலும் பெரிதுவக்கும்
உன் தந்தையைப்பார்.. இதோ பெற்ற தாய் மண்டோதரியைப் பார் மட்டுமல்ல
பிறந்த உன் பொன்னாடு ஈழத்தைப்பார்

இந்திரஜித் - அப்பா தந்தையே குண்டலம் செவியில் மின்ன, குலமணி மார்பில் மின்ன
மண்டலம் ஆளும் மரபிலே வந்த உங்கள் மகன் இந்திரஜித் மரபுக்கோர்
ஓர் இலக்கணமாய்ப் போரிடும் காட்சியை
நீங்கள் பார்க்கத்தான் போகின்றீர்கள்.
எனது கையில் சக்கரமாகச் சுழலப்போகும் இந்தவாள்
இந்திரனின் வஜ்ஜிராயுதமா
அல்லது பீமனின் கதாயுதமா அதையும் நீங்கள் பார்க்கத்தான் போகிறீர்கள்
அப்பா - தந்தையே - வீணக்கொடியுடைய வீரனே

இந்தரஜித் - வீரத்திருநாட்டில் கோழைகள் வருகையோ - பொற்றொளிர்
களம் புகுவேன் நானே - சோரம் புகாமலே பகையை வெல்லுவேன்
இதைக் கேட்பீர் நீரும்
மத்தகமேறி யுத்தங்கள் செய்து பித்தனைப்பிடித்து வெற்றி கொள்வேனே
எத்தகையோரும் எனை வெல்வாரோ
- த்தாதரிகுட த்தரிகுடா தத்தரிகுடத் தாம் (பிற்பாட்டு)

இராவணன் - இந்திரன் தனையே எதிர்த்து வென்றாயே அன்று விண்ணில் ஏறி
சந்திரன் தனையே கொணர முயன்றாயே - இதை அறிவேன் நானும்
தந்திரமாகக் காட்டில் சென்று சிங்கத்தைப்பிடித்து வீட்டில் கொணர்ந்தாய்
எந்தையும் தாயும் மகிழ நீயும் - இன்றேதான் இராமனை வென்று திரும்புவாய்

மண்டோதரி - மகனே - என் அருமைப்புதல்வா - உனது ஆற்றலை நான் நன்று
அறிவேன் ஐயா
சென்று வா மகனே வென்று வா போரிலே - எனக்கூறிநானும்
கன்றினைப் பிரிந்த பசுப்போல் வாடுவேன் - இது தாயின் தன்மை
குன்றினை யொத்தகுமரன் நீயுமோ பன்றிகள் முன்னே முத்தினைப்போலவே
என்றுமே அஞ்சா உள்ளம் கொண்டாய்
- த்தாதரிகுட த்தரிகுடா தத்தரிகுடத் தாம் (பிற்பாட்டு)

சுலோச்சனை - கண்ணின் மணியைப் போன்ற கணவன் நீர் - எனதெண்ணமிதுவே
திண்ணமாகவே போரில் வெல்லுவீர் - இதை உணர்வேன் நானும்
மண்ணில் எவரும் எமையே எதிர்த்து வெற்றி கண்டிடமுடியுமோ இனி
தரணியெங்கும் பரணிபாடும்
- த்தாதரிகுட த்தரிகுடா தத்தரிகுடத் தாம் (பிற்பாட்டு)

இராவணன் - மகனே இந்திரஜித்து

இந்திரஜித்து - என்ன தந்தையே

இராவணன் - எனது நெடு நாளைய ஆசை

இந்திரஜித்து - கூறுங்கள். அதைச்செயலாக்குவது எனது கடமை - ஆணையிடுங்கள்
உனது அன்புக் கட்டளைக்கு உடனே அடிபணிகின்றேன்

இராவணன் - இந்திரஜித்து, மகனே நீ கவர்ந்துவந்தாயே, நாக நாட்டரசன்
மகள் சுலோச்சனை அவளை இன்று, இப்போதே உனது

வாழ்க்கைத் துணைவியாக
உன் பாதியில் பாதியாக உன் உடம்பின் உயிராக திருமணம் செய்துவைக்க விரும்புகின்றேன்

இந்திரஜித் - நன்றியப்பா, மிகவும் நன்றி

இராவணன் - மண்டோதரி அழைத்துவா உன் மருமகள் சலோச்சனையை
இந்திரஜித் இதோ உனக்குரிய மாலை - சுலோச்சனை இந்தா உனக்குரிய மாலை - இருவரும் இப்பொழுதே மாலையை மாற்றுங்கள் - மாலை
கழிந்ததும் மனதினை மாற்றி மணவறைக்குச் செல்லுங்கள்

இராவணன் - நாங்கள் வெற்றி நிட்சயம் என்ற உறுதியோடு அரண்மனை செல்கின்றோம்

*வாரும் மந்திரர் கூடியே*

இராவணன் - மாமனை தன்னை நாடியே செல்வோம் மந்திரர்
வாரும் சங்கீதம் பாடியே - ஓமம் மிகுகீத நாடு
ஏழிசை பொங்கும் நாடு மங்களச் சங்கிலி
எங்குமுழங்கிட தங்கமழலைகள் கிண்கிணி பாடிடவே - மாமனை

மண்டோதரி - மாவலியாறு எங்குமே புனல் பரப்பும்
பேரொலி கேட்கும் நாடிது
மாதர்கள் கற்பு பாரிலே கனல்தெறிக்கும்
மாபுகழ் கொண்ட நாடிது
சீதக்கதி ரொலிகள் சீராக வீசிடவே
சிங்கு இசைராக்கள் கொண்டு உடல்வலி
பொங்கு மழகுடன் வாழ்ந்திடும் நாடு - மாமனை

இராவணன் - எங்களின் வாழ்வும் வளமும்
ஒன்றாய் இணைந்தே
மங்காத் தமிழ் என்றே பேசும்
இங்குள்ள பகை வர் யாபேரும்
எங்கே மறைந்தார் என்றே நாம் ஒற்றாய்க் கூடினோம்
திங்களோடு உடுக்குன் செழுமை நிறை இரவி
தங்குலில் நாவாய்கள் வந்து துயைடை
நவீகப்பரதர்கள் பொங்கும் எழில்நாடு

மண்டோதரி - முத்தழில் ஒன்றாய்க் கூடியே
இசையெழுப்பும் வித்தகம் சேர்ந்த நாடிது
கத்தும் கடலின் ஓசையே சிலம் பொலிக்கும்
புத்தம் புதுக்கலைகள் மெத்தவும் எங்கணும் பத்தர்கள்
எத்தர்கள் பூமியில் ஓடிட எங்களும் பித்தர்கள்
சித்தமாய் கந்தனை வேண்டிடும் நாடு

*(மன்னனும் மண்டோதரியும் சபை மீளல்)*

இந்திரஜித் - சுலோச்சனை

சுலோச்சனை - என்ன மன்னா?

இந்திரஜித் - என்னை மன்னன் என்று அழைக்காதே

சுலோச்சனை - வேறு எப்படி அழைப்பதாம்

இந்திரஜித் - மதனா என்று கூறு. உன் அதரங்களில் மதுரசம் கொப்பழித்திடும் இது மன்மதன் மலர் அம்பு கொண்டு எய்கின்ற உன்னதவேளை

சுலோச்சனை - பிரபு இந்த இரவு

இந்திரஜித் - இனி என்றைக்குமே சாந்த இரவு - சுந்தர இரவு - சொர்க்க இரவு

சுலோச்சனை - சீ போங்கள் தீபங்கள் எரிந்து ஒளி நடனம்புரிகின்றது
- அதனால் நாணம் கண்ணை மறைக்கிறது
அவற்றை அனைத்துவிட்டால்

இந்திரஜித் - வேண்டாம். நானல் பொங்கும் அழகு அந்த அற்புத ஒளிதான் உன் அபூர்ப படைப்புக்களைப்பார்த்து
என் ஆசை கற்பனைகள் தூண்டிவிட்டது. வள்ளுவனே கூறியுள்ளார் ஊடல் முதல் அதபின்பு கூடல் என்று - எனவே - எனிய்

**பாட்டு**

இந்திரஜித் - எனது நாயகி இனிய காதலி
உனதுவரவை நான் எண்ணியே
உதய சூரியன் வரவு கண்டலர்
இனிய தாமரையாகினேன்

சுலோச்சனை - எனது நாயகா இனிய காதலா
உனது வரவை நான் என்னியே
மறையும் பொழுதினில் மலரும் அல்லியின்
மதியைப் போலவே ஆகினேன்.......... தரு

இந்திரஜித் - உருளும் விழிதனைப் பருக எண்ணினேன்
கருகும் இரவினில் வந்துள்ளேன்
விரகதாபத்தில் பெருகி மாழ்கினேன்
அருகில் வந்திடு அம்மணி

சுலோச்சனை - கண்கள் மட்டுமா காதல் பேசிடும்
கையும் கூடவே பேசிடும்
மெய்யும் அனலினில் மெழுகாய் உருகிடும்
பைய வந்து நீ சேர்ந்திடு......... தரு

இந்திரஜித் - சுலோச்சனை

சுலோச்சனை - என்ன அத்தான்

இந்திரஜித் - நான் ஒன்று சொல்வேன் கேட்பாயா

சுலோச்சனை - ஒன்றல்ல ஓராயிரம் சொல்லுங்கள் இங்கு இருப்பதென்றால் மட்டும் சொல்லுங்கள். இல்லை என்னைப்பிரிந்து வேறு எங்கும் செல்லுவதென்றால் அதை வேறுயாருக்கும் சொல்லுங்கள்

இந்திரஜித் - பிரிவதா! கடலை விட்டு அலைகள் பிரியலாம். கன்னித்தமிழ் விட்டு இனிமை பிரியலாம்

அழகிய மலரை விட்டு பாடும் வண்டு பிரியலாம்
உன்னைவிட்டு ஒருபோதும் நான்பிரியமாட்டேன்
சுலோச்சனை ஒருபோதும் பிரியமாட்டேன்- ஆனால்

சுலோச்சனை - வேண்டாம். வேண்டாம் ஆனால் என்ற இந்தச் சொல்
வேண்டாம் வேண்டவே வேண்டாம்

இந்திரஜித் - என் பிரிய சகியே சுலோச்சனை அவசரப்படாதே. காலம் தான்
நம் காதலை வளர்க்க வேண்டும்
நாளை நான் திரும்பலை செல்லும் பாசறைக்கு செல்லப் போகின்றேன்.
இது என் காதல் பாசறை. அது என் போர் பாசறை
மடிந்த வாள்தனைக் கூராக்குவேன் - ஓடிந்த வேல்களைச்
சீராக்குவேன். போர் சென்றால் ஓர்புதுத்தெம்பு. முறுக்கேறுகின்ற
என் நரம்புகளைப்பார் கண்ணே
மயிர்க்குத்திட்டுச் சில்லிட்டுத் துடிக்கின்ற என் மீசையைப்பார்.
புளகாந்த மடைந்து கனத்துப்பெருத்துவிட்ட எனது புஜங்களைப்பார்.
விரட்டும் அந்த ஆரியப்படை போர் - போர் - போர்...
போகவிடை கொடு சுலோச்சனை

சுலோச்சனை - அத்தான் மணவிழா நடந்து அரையாண்டுகூட ஆகவில்லை
அதற்குள்ளே போர் என்கிறீர்களே

இந்திரஜித் - சுலோச்சனை, என்ன இது இந்த வேளையில் கண்ணீர் சிந்துவது அழகல்ல
வில்லால் வீரம் விளைகின்ற பரம்பரை நாம். தொழுது வாழ்வது
அறிஞரையன்றிப்பகைவரை அல்ல எனவே பொழுது விடிந்ததும் புறப்பட
விடைகொடு

சுலோச்சனை - அத்தான் இந்திரஜித்

பாட்டு
வண்ணம்

அத்தான் கேளும் அரையாண்டு முடியவில்லை
எந்தனைப் பிரிந்து நீரும் எங்குதான் செல்லப்போறீர்
இனையில்லா வீரன் எந்தன் இந்திரஜித்து மன்னா
கனைதனைத் தேடும் மானாய் கானகம் செல்லப் போறீர்

இந்திரஜித் - சுலோச்சனை இந்த ஈழநாடு இடியோசை கேட்ட மழலைகள்
கைகொட்டிச் சிரிக்கும் நாடு. ஹ்ஹ்ஹா முடியாது என்ற சொல்லை
ஒருபோதும் அறியாதநாடு - வண்ண
பைங்கிளியே இதற்கா பயப்பட்டாய் - இதற்கா பயப்பட்டாய்

சுலோச்சனை - ஐயையோ அத்தானே அஞ்சி நடுங்கினேன் நானே - எந்தன்
மெய்தனை இழந்து நான் மேதினி தனில் இனி வாழேன் - அந்த
நஞ்சுமனங்கொண்ட வஞ்சகச் சிற்றப்பன் செய்த - புண்மை
நெஞ்சில் இருத்தியே உன்னை யழைத்திட்டான் பாரும் - தனத.....

இந்திரஜித் - சுலோச்சனை இதோபார் இரத்தச் சேறு படிகின்ற எனது அகன்ற திண்மார்பு
அதில்முத்தமிடு - உன் அழகு விரலால் எனது அகன்ற நெற்றியில்
வீரத்திலகமிடு - இராவணன் மகன் இந்திரஜித் என்பதை இதோ இப்போதே
ஊர்அறிய உலகறிய பார் அறியப் பறைசாற்றுகின்றேன்.

சுலோச்சனை
வண்ணம் - ஐயையோ எந்தன் ஆவியே உயிரே
வையவே நீரும் பாவியைப் பிரிந்தே
உய்யவேப்பாரில் வழியேதுமின்றி
செய்வினைப்பழியை செயத்தினல் கொண்டீர்

இந்திரஜித் - அன்பே சுலோச்சனை பழுதுவருவது யாருக்கு - உடலுக்கு பொருளுக்கு
ஆவிக்கு ஆனால் பழந்தமிழ் பண்புக்கு அல்ல - மறந்துவிடாதே

சலோச்சனை - தேறுதல் அடைதற்கு வழியின்றித்தவிக்கின்றேன் அத்தான்
ஒரு ஆறுதல் மொழி சொல்லாய் அன்பே எந்நாளு அழகாய்
இடியோசை கேட்கின்ற நாகம் போல் ஆகினேன் அத்தான்
உந்தன் மடிமீது கெஞ்சினேன் மாவீரன் சென்றுவா மன்னா - தாதானாதா

இந்திரஜித் - வருகிறேன். சுலோச்சனை வருகிறேன்

## காட்சி - 04

*திரும்பலை என்னுமிடம் நெடியதோர் பாசறை போர்க்காட்சி*

***விபீஷணன், இலக்குவனன், நாக நாட்டரசன், தேர்ப்பாகன், அனுமன்***

வரவு கவி - இத்தரை மீதினிலே எழில்மிகு ஈழம் நோக்கி
பத்தரைமாற்று மன்னன் மைந்தனை வதைத்துமீள
முத்திரை வில்லும் நாணும் மூவடிவேந்தன் துணையும்
பத்திரமாகப் பாரில் பாய்ந் தெழுந் தோடி வந்தார்

ஆடற்தரு - வருகின்றார் பாரும் ஆரியர்கள் வருகின்றார்பாரும்
கையினில் வில்லோடு கடுஞ்சமர் செய்யவே
பையவே ஈழமும் பாழ்பட்டுப்போகவே - வருகின்றார் பாரும்

சபையோர் - தத்தரிகிடத் தத்தரிகிடத் தத்தரிகிடத்தாம்
தித்தரிகிடத் தித்தரிகிடத்தித்திரிகிடத்தீம்

விபீஷணன் - வாருங்கள், வாருங்கள் மௌனம் முக்கியம் அதோ தெரிகின்றதே நிரும்பலை
அதுதான் இந்திரஜித்தின் நெடிய பாசறை. அங்குதான் நம் கும்பலை
அழித்திடும் போர்க்கருவிகள் நிறைய இருக்கின்றன.
இந்திரஜித்தின் பெரும்படை அதுதான். அதைத்தந்திரமாகத் தகர்த்திட்டால்
ஹஹஹா... வெற்றி எமக்குத்தான்

இலங்குவன் - விபீஷணன் நீ ஒன்றுக்கும் அஞ்சாதே. இந்திரஜித் நிரும்பலை
அந்தப்பாசறையை மட்டும்
எனக்குக்காட்டு, பிறகுபார் எனது அம்பின் மகத்துவத்தை.
காற்றிலும் வேகமாக தூதுசெல்லும்
பகைவரைக் கொல்லும். வான்வீடு அவர்களுக்கு உடனே தெரியும்.

அனுமன் - இந்திரஜித் இணையில்லாத வீரன். போர் என்றால் பொங்கி எழுவானே

விபீஷணன் - பயப்படவேண்டாம் அவன் தேருக்குச்சாரதியே நம்மவன்தான்
உரியநேரத்தில் முடித்துவிடுவான் காரியத்தை

தேர்ப்பாகன் - மன்னவா, புயலுக்கு முன் அடையாளம். வானம் இருண்டு கறுத்து மழை மேகம் சூல் கொண்டுவிட்டது. வாருங்கள் விரைந்து வாருங்கள்

பாட்டு - தனத்ததானா தனத்த தானினா தானின தன்ன தனத்ததனா (குளக்கரையில்)
தனத்ததானா தனத்ததானினா ஐயா - தனத்த தானினா

விபீஷணன் - எடுத்த செயல் யாவும் வெற்றியே - எங்கள் நாட்டில்
தொடுத்த பகை தான் முடிக்க அடுத்து வாரீரோ - ஐயா அடுத்துவாரிரோ
விடுத்த சவால் ஏற்றுக்கொண்டேனே - இந்திரஜித்தை
மடுத்து நாங்கள் ஈழம் தன்னில் வெற்றி காண்போமோ?
ஐயா வெற்றி காண்போமோ

இலக்குவன் - சிறுமுயலும் எதிர் வரலாமோ - இந்திரஜித்து
உறுபகையை எண்ணி எம்மைக் கேலி செய்யவோ
அருள் மொழியான் ராமன் தானுமே - எங்களை இங்கு
அனுப்பிவைத்தான் கணத்தில் அவன் உயிர் குடிக்கவே
- ஐயா உயிர்குடிக்கவே
தனத்தானா.........

அனுமன் - வீணைக்கொடி கொண்ட இராவணன் - வீணாக எம்மை
நாணமுறச் செய்துவிட்டானே - ஐயா செய்து விட்டானே
சீதை தன்னை விட்டுவிட்டாலே - எந்நாடும் அறப்
பாதை தன்னில் நாம் நடப்போம் கண்ணியமாக - ஐயா - தனத்தானா........

தேர்ப்பாகன் - சொல்லின் செல்வன் கூட வந்தானே - இந்திரஜித்
வில்லினாலே மாண்டிடுவான் மாநிலத்தோரே
தொல்லையின்றி வாழ்ந்திடலாமே - இராவணன் என்றும்
அல்லல்பட்டு தன் உயரை வீணாய் மாய்க்கவே - ஐயா
- வீணாய் மாய்க்கவே

தரு - தனத்தரு...........

*(தரு முடிவில் இராமர் படை நிரும்பலைப் பாசறையை அண்மித்து இந்திரஜித்தைச் சுற்றி வட்டமாக நிற்றல்)*

விபீஷணன் - வீரர்களே ஒன்றுக்கும் அஞ்சாதீர்கள் எங்கைக் கண்டதும் இந்த இளஞ்சிங்கம் பிடரியைச்சிலிர்த்துக் குதித்துப்பாயும். அவன்வீரன். தந்தையை விட வீரமிக்கவன். அவன் ஆற்றல் அளவிடமுடியாது. நான் ஏற்கனவே நமது ஒற்றன் ஒருவனை அவனது தேர்ப்பாகனாக அனுப்பிவைத்துள்ளேன். அவனது தேர் அச்சாணிகள் உரியவேளையில் மறைவாகக் கழற்றப்படும். அச்சாணிகள் இல்லாத தேர் முச்சாணும் ஓடாது.
தேர்த்தட்டு சாய்ந்து விழும். குதிரைகள் நான்கும் பதறிப்பாயும். நடைக்கால்கள் சிதறித் தெறிக்கும். அப்பொழுது அந்த வீரனின் கரங்கள் என்னால் நறுக்கிவிடப்படும்

இலக்குவன் - ஹ்ஹாஹஹா.. சரியான சதித்திட்டம் மந்திரமும் மதிநுட்பமும் சிலவேளைகளில் ஆயிரம் யானைகளைவிடப் பலம் வாய்ந்தது. பராக்கிரமும் நிறைந்தது.

விபீஷணன் - கரத்தை இழந்தாலும் அவன் நெஞ்சுரத்தை இழக்கமாட்டான் அவனது வீரம் ஒரு சொட்டும் வீணாகாது.

இலக்குவன் - சரியானவேளையில் எனதுபாணம் அவனது நெஞ்சைப்பிளந்து உயிர்குடிக்கும் அப்பொழுது இந்திரஜித் ஒழிவான். ஹ்ஹ்ஹா

எல்லோரும் சிரித்தனர் ஹ்ஹ்ஹா....

விபீஷணன் - வாருங்கள் அவனை எழுப்புவோம்

எல்லோரும் உரத்த குரலில் - இந்திரஜித் இந்திரஜித் இந்திரஜித்

***(இந்திரஜித் துயில்நீங்கி எழுதல்)***

இந்திரஜித் - யார்நீங்கள். எங்கிருந்து வருகிறீர்கள். எதற்காக இந்த அர்த்தராத்திரியில் அம்புவில், ஆளனி, படை பலத்தோடு வந்திருக்கிறீர்கள்

விபீஷணன் - நாங்கள் இராம தூதர்கள். உன் உயிரைக்குடிப்பதற்காக வந்திருக்கின்றோம்

இந்திரஜித் - அடேய் சித்தப்பா. சித்தம் கலங்கிய சித்தப்பா. மணிமுடிக்காக மாற்றான் அடிவருடிய மாசுநிறைந்த சித்தப்பா. சொந்த மண்ணைக் காட்டிக்கொடுக்கப் பகைவர்களுக்குப் பட்டாடை விரித்துவிட்ட பாதக சித்தப்பா. உன் உடம்பில் ஓடுவது குருதியல்ல..... குரோதம் பார்த்துவிடுகின்றேன். உங்களை ஒருகை பார்த்துவிடுகின்றேன்.

பாட்டு

இந்திரஜித் -
யாரடா? நீ எங்குவந்தாய்
போரடா நீ செய் வதற்கா?
பாரடா நீ இந்தமண்ணில் வீழுவாய்
கூறடா நீ கொண்டு வந்த
வீரர் களைக் கூறு செய்வேன்
புல்லியர்கள் கூட்டம் இனி வெல்லுமோ

விபீஷணன் -
என்ன சொன்னாய் இந்திரஜித் - மன்னன்
என்றா எண்ணி விட்டாய்
சின்னவன் நீ சிந்தித்திடு நன்றாக
மன்னவன் உன் தந்தைதானும்
மாசு நிறை காரியங்கள்
காசினியில் செய்துவிட்டான் - கேளடா

(தரு - தந்தனோம் தனத்ததானா - தந்தனோம் தந்தா தனி)

இலக்குவன் -
தென்னிலங்கை மன்னவனின்
சென்னி காத்த மைந்தனேகேள்
மண்ணில் உந்தன் தாதைசெய்த
எண்ணில்லாத தீமைபாராய்
மனை கவர்ந்தே வினை அடைந்தே
பவமுயர்ந்தே தவமாறி அவமானான் குறிக்கோள்
காம இச்சையில் மாய உருவினால்

தூய சீதையைக் கவர்ந்தான்
தந்தைசெய்த செயல்தனை எண்ணாமல்

இந்திரஜித் - என்ன செய்தாய் இலக்குவா நீ
எந்தன் மாமி மூக்கறுத்தாய்
முத்துநகை யான பெண்ணை
மூளியாக மாற்றிவிட்டாய்
அவமானம் இதை நானும் அறிந்தேனே
திடமாகவே உனை கொல்ல வந்தேனே
கயிலங்கிரிதனில் உறையும் சிவபதி
தனையும் இசைத்திட்ட மன்னன்
இந்திரனின் யானை தனை வென்றவன்.

விபீஷணன் - இந்திரஜித் வீணாக மடியப்போகிறாய் - கடைசியாக
ஒரு சந்தர்ப்பம் சரணடைந்துவிடு - அதுதான் உயிரைக்காக்கும் ஒரே வழி

இந்திரஜித் - அடேய் சிற்றப்பா உயிரைப்பற்றி நீயா கூறுகிறாய்?
உயிர்பெரிதல்ல மானம் மானந்தான்பெரிது
மயிர்நீக்கின் உயிர்போக்கும் கவரிமான் நான். உன்னைப்போல்
எச்சிலுக்கு அடிபணியும் அடிவருடியல்லநான்

விபீஷணன் - வீரர்களே இன்னும் ஏன் தயக்கம்? இவனைச் சுற்றிவளைத்துப்
பிடியுங்கள்.

பாட்டு
விபீஷணன் - அந்தோ உந்தன் ஆருயிர் இழக்கவே - (நந்தா)
வலிந்து நாடினாய் விதியைத் தேடினாய்
தந்தோம் பார் தரணியில் நாளுமே
தருக்கர் சாகவே பெருக்கமாகவே
அன்று உனது தந்தை தந்திரமாகவே
பஞ்சவடி தனிலே சீதையைக் கவர்ந்தான்
பாருலகு ஏற்குமோ இதைக் கூறுவாய்?

இந்திரஜித் - மண்ணாளும் எண்ணமே கொண்டு நீ
கண்ணான அண்ணனைப் பிரிந்துதான்
இராமன் காலடி தானும் சேர்ந்தனை
வஞ்ச மனத்துடனே நஞ்சு நிறைந்தவனாய்
கெஞ்சியே ஆரியர் தஞ்சமே யாகினாய்
உலகு உன்னைத்தாங்குமோ சொல் - பாதகா
தரு - தந்தானம் தானினத்தானா.......

***(தருமுடிவில் விபீஷணன் அம்பு எய்து இந்திரஜித்தின் இரு கரங்களையும் துண்டித்தல் கரமிழந்தநிலையில் வாயில் அம்புவைத்தும் கால்களினாலும் தலையினாலும் இந்திரஜித் வீரமாகச் சண்டைபிடித்தல். இக்காட்சி பக்கவாத்திய ஒலிகளினால் காட்டப்படவேண்டும். இவ்வேளை இலக்குவன் எய்த கணையினால் இந்திரஜித் நிலைசாய்ந்து விழுதல்)***

பின்னணி - இருகரமும் இழந்த போதும்
பரபரனப் போராடிப்
பகைவருமே பாராட்டத்

தனியொருவன் பகையொழித்தான்
பெருங்கோழை இலக்குவனாம்
தொடுத்திட்டான் கணைதனையே
தாய்நாடு வாழ்கவென
தரணியிலே வீழ்ந்திட்டான்

வரவுகவி - போர்க்களத்தில் போராடிப்
புவிவீழ்ந்த கணவன் தன்னைப்
பார்த்திடவே பாவிமகள்
சுலோச்சனையும் ஓடிவந்தாள்
தனியொருவன் ஆயிரம்பேர்
தனையெதிர்த்து சமர்புரியும்
தமிழ்வீரம் நாட்டுகின்ற
தன்மானக் கணவன் கண்டாள்

சுலோச்சனை - தென்னிலங்கை மன்னவனின் (அம்மிமிதித்து)
கன்னல் மொழி மைந்தனேநீ
மேகத்தில் நீ பாய்ந்து சென்ற
நாள் இதுவோ.........

இந்திரனைப் பிடித்திழுத்து
தந்திரமாய் வெற்றிகண்டாய்
அன்று நீ சிங்கங்களைப் பிடித்து
வந்தாய்.....

தாய்நாடு வாழ்கவென
தன் குருதி சொரிந்தவனே
சென்றுவா..
தரணியை நீ வென்றுவா

(தரு......)

- முற்றும் -

# “சூதாட்டம்”

## (இலக்கிய உரைநடை நாடகம்)

*(பாரதியின் பாஞ்சாலி சபதத்தை அடிப்படையாக வைத்து எழுதப்பட்டது)*



# காட்சி - 01

*(துரியோதன்ன, சகுனி)*

(பாண்டவர்கள், அவர்கள் நடாத்திய ராஜசூய யாகம், அதனால் அவர்கள் அடைந்த கீர்த்திபற்றி சகுனியிடம் தாங்க முடியாத துயருடன் துரியோதனன் முறையிடுதல்)

துரியோதனன் - மாமா! என் ஆருயிர் மாமா! எப்படிப் பொறுத்திடுவேன்? இதை நான் எப்படிப் பொறுத்திடுவேன்? இந்த உலகம் தொடங்கியது முதல் அந்தப் பாண்டவர்கள், அவர்களின் தலைவன் தருமன், அவர்களே! அவர்களின் புகழும் கீர்த்தியும், பெருமையும் பெற்று வாழ்கிறார்கள். இவர்கள் இருக்குமட்டும் அந்த மடையர்கள் வாழு மட்டும், எப்படி நான் வாழ முடியும். சொல்லுங்கள்! மாமா - மாமா நீங்களே சொல்லுங்கள்! அந்தப் பீமனின் புஜ பெலம், அந்த அர்ச்சுனனின் வில்லாண்மை, அந்த வழவழத் தருமனின் பொறுமை, இவைகளுக்கு முன்னால் எப்படி என் கீர்த்தி! எனது கீர்த்தி!! ஓங்கிஔிர முடியும்? எப்படி? நான் பேரும்புகழும், நாடும், நலமும் கொண்டு வாழமுடியும்? இவர்களைத் தொலைக்க வேண்டும் இல்லை அழிக்கவேண்டும். அவர்களை வேரோடும் மண்ணோடும் இல்லாதொழிக்க வேண்டும். மாமா, என் ஆசைமாமா, சட்டங்கள் செய்வதிலும் பட்டங்கள் ஆள்வதிலும், திட்டங்கள் தீட்டுவதிலும் நீங்கள் தான் மாமா புகழ் பெறவர். உங்கள் மூளை அபார மூளை. எனவே நீங்கள்தான் இதற்கு ஒருவழி சொல்ல வேண்டும். ஒரு சூழ்ச்சி! ஹ! ஒரு தந்திரம், இல்லை ஒரு கபடநாடகம், எதுவென்றாலும் பரவாயில்லை அந்தப் பாண்டவர்கள் அழியவேண்டும். ஒழிய வேண்டும். முகவரி இல்லாத முட்டாள்களாக மாறவேண்டும்.

சகுனி - (தன் தாடியைத் தடவியவாறு கண்களை மேலிருந்து கீழ் உருட்டி சிரித்துக்கொண்டு) ஹ்ஹ்ஹா - ஹ்ஹ்ஹா எனன துரியோதனா? இதற்கா பயந்தாய்? இது உங்க மாமாவுக்கு பூனை எலியைப் பிடிக்கின்ற ஒரு சின்ன விளையாட்டு. பூனைக்கு விளையாட்டு ஆனால் எலிக்கு உயிர்போகும். இன்றே தருவேன் வெற்றி. ஒரு உபயம் ஒரு சின்ன விளையாட்டு. செல்லம் அது அவர்கள் வாழ்க்கையையே சிதறடித்துச் சீரழித்துவிடும். இதற்கு ஏன்? வீண் வார்த்தை வளர்க்கின்றாய்? நீ மட்டும் சரியென்று ஒப்பினால் அவர்களை ஊர் சிரிக்க - உலகம் சிரிக்க பார் சிரிக்க - பார்த்திருப்போர் சிரிக்க - அன்றாடக் காட்ச்சிகளாய் ஓட்டாண்டிகளாய் ஏன் அலைந்து திரியும் அகதிகளாய் ஆக்கிக்காட்டுகின்றேன். ஆனால் மனதை மட்டும் அலைபாய விடாதே. மார்க்கம் ஒன்று இந்த மாமா செய்கின்றேன். நெஞ்சத்தை உறுதி செய். மங்காத புகழ் உனக்குக் கிடைக்கும். இந்த மாமாவை அவர்கள் யாரென்று நினைத்தார்கள் மட்டுமல்ல மடையர்கள் இந்தக் கௌரவர்களை அவர்கள் யார்? என்று எண்ணினார்கள்.

துரியோதனன் - அதைச் சொல்லுங்கள் மாமா! சீக்கிரமாய்ச் சொல்லுங்கள். என்னால் பொறுக்கமுடியவில்லை. பொறுக்கவே முடியவில்லை மாமா. நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள்? எப்படி அந்தப் பாண்டவர்களை இந்தப் பூமியை விட்டே இல்லா தொழிக்கப்போகின்றீர்கள்? மாமா - மாமா நான் சொல்வதைக் கவனமாகக் கேளுங்கள். உன்னிப்பாகக் கேளுங்கள். கூர்மையாக அவதானியுங்கள் மாமா அந்த ராஜசூய யாகம் - அன்று அந்த யாகத்தில்

சகுனி - ஏன்! ஏன்! ஏன்!! ராஜசூய யாகத்தில் என்ன நடந்தது துரியோதனா?

துரியோதனன் - என்ன? என்ன நடந்ததா? ஏன் நீங்களும்தானே அங்கு இருந்தீர்கள். எனக்குப் பக்கத்தில் அல்லவா இருந்தீர்கள். என் அப்பனுக்குப்போல் உங்களுக்கும் என்ன கண்ணும் கபோதியாகிவிட்டதா? நீங்கள் அதைப்பார்க்கவில்லையா? அந்தக்

கோரக்காட்சியை உங்கள் இரு கண்களும் காணவில்லையா? ஐயகோ! அதை எப்படி மாமா விண்டுரைப்பேன்? அந்த வேதவியாசன் மஞ்சன தர்மனுக்கு, கேவலம் கிளிக்கதை படிக்கும் வஞ்சகத் தருமனுக்கு அல்லவா வாழ்த்துக்கள் கூறினார்கள். அதுமட்டுமா, அந்தக்குஞ்சரச்சாத்தகி வெண்குற்றம் பிடிக்க, அந்தத் தடிப்பயல் பீமனும், குளங்கொற்றவன் அர்ச்சுனனும் விசிறிகள் விசிற, வெண்சங்குதனிலே, புனித கங்கை நீரைக் வெண்டுவந்து அந்தவஞ்சகக் கண்ணனுக்கு அர்ச்சித்தார்களே! அவன் காலடிகளுக்கு அர்ப்பணம் செய்தார்களே! அதைக்காண என் மூர்ச்சை அடைத்ததடா மாமா அன்றே நான் செத்து மடிந்திருக்க வேண்டும். இன்னமும் உயிர்வாழ்கின்றேனே மாமா.

சகுனி - பொறுமை! துரியோதனா பொறுமை! புலி பதுங்குவது பாய்வதற்கு. மறிக்கடா பின்னுக்குப்போவது மீண்டும் தாக்குவதற்கு, இதெற்கெல்லாம் சரியான பாடம் நான் புகட்டுகின்றேன். இவர்களுக்கு இந்தக்கேடுகெட்ட பாண்டவர்களுக்கு நல்லதோர் திட்டம் தீட்டி, அதனைக் கட்டம் கட்டமாக அரங்கேற்றுவேன். அத்திட்டம் என்னவென்று இப்பொழுது சொல்லவா? துரியோதனா?

துரியோதனன் - சொல்லுங்கள். சொல்லுங்கள். உடனே சொல்லுங்கள் இவை எல்லாவற்றையும் கூட பொறுத்துக்கொள்ளலாம் மாமா. அந்தக் கொவ்வைச் சிரிப்பவள வாயில்லை கொடி இடையாள், பஞ்சவர்ணக்கிளி, பாஞ்சாலி ஒருவனை மட்டுமல்ல ஐந்து பேரைக் கலந்ததேவி என்னைப் பார்த்துச் சிரித்தாளே ஒரு சிரிப்பு அதை எப்படிப் பொறுப்பேன்? அவளது அந்தச்சிரிப்பு என் மனத்தை ஈட்டியால் துளைத்தது. ஓ! என் இதயத்தை உடைத்துச் சுக்குநூறாக்கியது. அந்தச்சிறுக்கியை அடக்கி அவளை அவமானப்படுத்தவேண்டும். அப்பொழுதுதான், அப்பொழுதுதான் நான் அமைதிபெறுவேன். மாமா உங்கள் திட்டத்தில் இவளையும் மானபங்கப்படுத்தக்கூடிய அம்சமும், நாசுக்காக, நயவஞ்சகமாக இடம்பெறவேண்டும். என்ன மாமா என் ஆசை மாமா அருமை மாமா இப்பொழுது எடுத்து விடுங்கள் உங்கள் திட்டத்தை.

சகுனி - துரியோதனனே வீணே உணர்ச்சிவசப்படாதே! வெறும் உணர்ச்சியால் ஒன்றும் செய்துவிட முடியாது. முதலில் விவேகம் வேண்டும். பின்பு வேகம் வேண்டும். இங்கு இதயம் ஆமைபோல் அமைதியாய் இருக்க மூளை வேகமாய் வேலை செய்யவேண்டும். சபா மண்டபம் ஒன்று புதிதாக அமைத்திருக்கின்றோம். அதைக்காண வாருங்கள் என்று அந்தப் பாண்டவர்களுக்கு ஒரு மகாவிருந்து விடுத்து முடிவில், விருந்து முடிவில்

துரியோதனன் - விருந்து முடிவில் ஒரு வீரப்போர்

சகுனி - அவசரப்படாதே துரியோதனா! இங்குதான் உனது யூகம் பிழைத்துப்போகின்றது. ஒருவேளை போரில் அவர்கள் வென்றுவிட்டால் நாம் தோற்றுவிட்டால் ஒன்றும் செய்ய முடியாது.

துரியோதனன் - அப்படியென்றால் வேறு என்னதான் செய்யப்போகின்றோம்?

சகுனி - செல்லம் அப்படிவா வழிக்கு துரியோதனா! இப்பொழுதுதான் எனது மூளை வேலை செய்கிறது. அர்த்த சாஸ்திரம் என்று அரசியல் வியூக முறைகளை அழகாக எழுதிய கௌடில்யருக்குக்கூட இப்படியொரு தந்திரமூளை வந்திருக்காது. விருந்து அருந்திய பரவசத்தில் ஒரு விளையாட்டு - ஒரு ஆட்டம், ஒரு பக்கம் பாண்டவர் மறுபக்கம் உனக்காக நான். அந்த விளையாட்டின் சூத்ரதாரியே நான்தான். வெற்றி எமக்குத்தான் வெற்றி! வெற்றி!!

துரியோதனன் - என்னமாமா? விளைாடுகிறீர்களா? அப்படி என்ன விளையாட்டு? எப்படி நாம் வெல்வது? போர் வேண்டாம் என்று சொன்னீர்கள். இப்பொழுது விளையாட்டு என்று வேடிக்கை காட்டுகின்றீர்கள். ஒன்றும் விளங்கவில்லையே

சகுனி - விளங்காது செல்லம். அதுதான் ஆட்டம், சூதாட்டம் ஒரு சதுரங்க விளையாட்டு. ஒரு பக்கம் ராஜா மறுபக்கம் ராணி பகடையாட்டம் மெள்ள மெள்ளக் காய்களை நகர்த்த வேண்டியதுதான். அவர்கள் ஆடுவதற்குச் சம்மதித்தால்சரி. மெள்ள மெள்ள காய்களை நான் நகர்த்துவேன். இதற்குள் ஒரு உபாயம் தந்திரம் சாமர்த்தியம் சூதாட்டத்திற்குள் ஒருசூது. அவர்கள் மாடு, ஆடு, வீடு, நகர் நரர் இறுதியில் பாண்டவர்கள்

துரியோதனன் - வெற்றி! வெற்றிமேல் வெற்றி எல்லாம் நம்வசம்

சகுனி - கொஞ்சம் பொறு செல்லம். முந்திரிக்கொட்டை பழம் பழுப்பதற்குமுன் வந்துவிடும். அப்படி அவசரப்படாதே. பாண்டவர்களுக்குப்பிறகு அன்று உன்னை எள்ளி நகையாடினாளே! உன்னைப்பார்த்துச் சிரிக்கக்கூடாத இடத்தில் சிரித்துத் தொலைத்தாளே அந்த அணியிழை ஆயிழை சேயிழைப் பாஞ்சாலி அவளும் உனக்குத்தான். எப்படி மாமாவின் மதிநுட்பத்தைப் பார்த்தாயா?

துரியோதனன் - வெற்றி! வெற்றி! வெற்றி! மாமா உங்களுடைய மூளை அபார மூளை. ஆனால் அந்தக்குருடன், கண்ணில்லாக் கபோதி! அவன்தான் என்னைப் பெத்த அப்பன் அவனுக்கு இதை எப்படி எடுத்துச் சொல்வது.

சகுனி - அதை என்னிடம் விட்டுவிடு. அதை நான் செய்கிறேன். கேட்டார் பிணிக்கும் தகையுவாய்க் கேளாரும் வேட்ப மொழிவராட் சொல். சொல்லுகிறபடி சொன்னால் கல்லும் கரையும். வா செல்லம். இப்போதே செல்வோம். இதற்கு ஒரு முடிவு கட்டுவோம். திருதராட்டின மன்னனுக்கு கண்மட்டுந்தான் குருடு. ஆனால் எவரையும் தீர்மானிப்பதில் அவருக்கே நிகர் அவர்தான்.

துரியோதனன் - மாமா! சகுனி மாமா வெற்றிக்களிப்பை இப்போதே கொண்டாடவேண்டாமோ? இதோ என் வைரமாலை இதை அணிந்துகொள்ளுங்கள். வெற்றி! வெற்றி!!

*(வைரமாலையை துரியோதனன் சகுனிக்கு அணிவித்தல்)*

## காட்சி - 02

***(திருதராட்டின மன்னன் அரண்மனை - திருராட்டினன் மனைவி காந்தாரி, துரியோதனன், சகுனி மாமா)***

சகுனி - அரசே வணக்கம்!

திருதராட்டினன் - யாரது (குருட்டு நடிப்பு) கரகரத்தகுரல் வஞ்சகமும் சூழ்ச்சியும் கபடும் நிறைந்த ஒலி யாரது? சகுனியா?

சகுனி - ஆமாம் சகுனி. சகுனி மாமாவேதான். எப்படிக் கண்டுபிடித்தீர்கள் மன்னா. உங்களிடம் ஒரு முக்கியமான விடயம் பேசவேண்டும். அதுதான் வந்தேன். நலந்தானா மன்னவா!

திருதராட்டினன் - ஆமாம் நலத்திற்குக் குறைவு ஒன்றும் இல்லை. அப்படி என்னமுக்கிய விடயம்? குழப்பமா? இல்லை குளறுபடியா? இல்லை வேறு ஏதாவது பிரச்சனையா? உருவாக்கிவிட்டு வந்திருப்பாய் அல்லது புதிதாக உருவாக்குவதற்கு வந்திருப்பாய். அதுமட்டுமல்ல நீ தனியாக வந்திருக்க மாட்டாயே, என் மகன் துரியோதனனையும்

சேர்த்துக் கூட்டிக்கொண்டு வந்திருப்பாய். அப்பொழுதுதானே உனக்கு நிம்மதி. எனக்கு உண்மையிலேயே கண்கள் இல்லை. ஆனால் யார்வந்திருப்பார்கள் அவர்கள் என்ன நோக்கத்தோடு வந்திருப்பார்கள் என்று ஊகிக்கும் உள்ளுணர்வு உண்டு.

துரியோதனன் - தந்தையே! நானும்தான் கூட வந்திருக்கிறேன். சில முக்கிய விடயங்கள் பேச உங்களிடம் கலந்தாலோசனை செய்து முடிவு காண்பதற்கு. இல்லையில்லை அது சம்பந்தமாக உங்களுடைய தீட்சண்யமான அறிவுரைகளைப் பெற்றுக் கொள்வதற்கு மட்டுமல்ல அதற்கு மேலான உங்களுடைய அநுமதியைப் பொற்றுக்கொள்வதற்கு.

திருதராட்டினன் - என் அன்பு மகனே! நான் எத்தனை முறை உனக்குச் சொல்லியிருக்கிறேன். இந்த கள்ளச் சகுனியின் சகவாசம் உனக்குத்தேவையில்லை என்று. இவன் உன்னை நாசப்படுத்தி விடுவான் மகனே! உன்னைத் தீய வழிகளில் நாசப்படுத்தி விடுவான். உன்னைத் தீய வழிகளில் இட்டுச் செல்வான். உன்னைக் கூட்டிக்கொண்டு அதலபாதாளத்தில் தள்ளிவிடுவான். பாசி படர்ந்த பாழும் சேற்றில் புதைத்து விடுவான். நீ கெட்டழியப்போகிறாய் மகனே! கெட்டுக்குட்டிச்சுவராய்ப்போகப் போகின்றாய்.

துரியோதனன் - அப்பா! என்னை என்ன வேண்டுமென்றாலும் சொல்லுங்கள். திட்டுங்கள் வைது பேசுங்கள் நான் உங்க்ள் மகன். உங்கள் இரத்தத்தின் வித்து. எல்லாவற்றையும் பொறுத்துக்கொள்வேன். ஆனால் என் ஆசை மாமா, அருமை மாமா அவரைப்பற்றி மட்டும் ஒன்றும் சொல்ல வேண்டாம் அவர் என் உயிர். எனக்காக என் நன்மைக்காக, எத்தனையோ காரியங்களைச் சாதிக்க உள்ளார்.

காந்தாரி - துரியோதனா, என் அன்பு மகனே! ஏன் சொல்லக்கூடாது? அவன் என் தம்பிதான். ஆனால் அவன் ஒரு விரியன்பாம்பு. அவன் இப்போது உன் காலைச்சுற்றியிருக்கிறான். எப்பொழுது அவன் உன்னைச் சீண்டுவான் அல்லது எங்களைத் தீண்டுவான் என்பது யாருக்குத் தெரியும்? அந்தப் பாழ்படுவானோடு சேர்ந்து நீயும் வீணே பாழாகப்போகின்றாய்

சகுனி - அக்கா! நீங்கள் தயவுசெய்து சும்மா இருங்கள். உங்களுக்கு அரசியலைப் பற்றியோ, நாட்டு நடப்புக்களைப்பற்றியோ, ஒன்றும் தெரியாது. நீங்கள் அடுக்களையோடு மட்டும் நின்றுவிடுங்கள். அடுப்பூதுவதுதான் உங்கள் வாழ்க்கை அதற்கு மேல் செல்லாதீர்கள். நன்றாக நடிக்கின்றீர்கள். பத்தாவுக்கு ஏற்ற பதிவிரதையாக உங்களுக்கும் கண்கள் குருடு இல்லையே! கண்ணில் கட்டியிருக்கின்ற கட்டினை அவிழ்த்துவிட்டு இந்த நிஜ உலகை நன்றாகப் பாருங்கள். அப்பொழுதுதான் உங்களுக்கு உண்மை வெளிச்சமாகத் தெரியும். அன்று நடந்த அந்த ராஜசூய யாகம், அந்தப் பாண்டவர்களை புகழேணியில் ஏற்றி இமயத்தின் சிகரத்துக்கே கொண்டுபோய்விட்டது. ஆமாம் அந்த ராஜசூய யாகம்... அதைப்பார்த்ததிலிருந்து உங்கள் மகன் சுவையின்றி சாப்பிடுகின்றான். அழகு ரசனையின்றி உடுக்கின்றான். இப்பொழுது உங்கள் இரண்டு கண்களையும் நன்றாகத்திறந்து பாருங்கள் எப்படியிருந்த உங்கள் மகன் இப்பொழுது எப்படியிருக்கின்றான். அவன் துரும்பாய் இளைத்து விட்டான். வெள்ளை வெளேரென அவன் முகம் வெளுத்துவிட்டது.

திருதராட்டினன் - அடேய் சகுனி! கள்ளச் சகுனி! உந்தன் மாய்மால வித்தையை இங்கு காட்டாதே. பன்றியோடு சேர்ந்த கன்றும் மலம் தின்னத்தானே செய்யும். யாகம்! யாகம்!! யாகம்!!! அன்று அந்தப் பாண்டவர்கள் நாடாத்திய யாத்தில் என்ன நடந்தது? அங்கு அந்தப் பாண்டவர்கள் என்ன செய்தார்கள்? என் ஊனக்கண் இருட்டாக இருந்தாலும் அங்கு நடந்தது எல்லாவற்றையும் நான் நன்கு அறிவேன். எனக்கு அந்த யாகத்தைப்பற்றி நீ ஒன்றைப்பத்தாக்கி பத்தை நூறாக்கிப் பற்ற வைக்காதே. உண்மையைக் கூறு.

சகுனி - ஞான சூன்யம். ஞான சூன்யம்!! அன்று அந்த ராயசூய யாகத்தில் அவர்கள் யாருக்கு முதன்மை அளித்தார்கள். உங்களுக்குத்தந்தார்களா? அல்லது அண்ணன் மகன் துரியோதனனுக்குத் கொடுத்தார்களா? இளவரசன் துரியோதனன் இருக்க அந்த வெண்ணெய்திருடி கோபியர் கொஞ்சும் மணாளன், அந்த வஞ்சகக் கண்ணனுக்கு அல்லவா முதலிடம் கொடுத்தார்கள். கங்கை நீரைச் சங்கினில் கொண்டுவந்து அந்த அடுத்துக் கெடுக்கும் நாரதமுனியும், அந்தக் கிளிக்கதை படிக்கும் வழவழத் தருமனும் கண்ணனுக்கு அல்லவா அர்ப்பணம் செய்தார்கள்.

துரியோதனன் - அதுமட்டுமல்ல தந்தையே! அந்தக்கொவ்வைச் சிவப்பழகி ஐவருக்கும் மனைவி ஆமாம் அப்படித்தான் கேவலம் ஒரு பெண் என்னைப் பார்த்து ஏளனமாக எள்ளி நகையாடி, சிரிக்கக்கூடாத இடத்தில் சிரித்துத் தொலைத்தாளே! அதை எப்படி நான் பொறுப்பேன் தந்தையே! எப்படிப்பொறுப்பேன்?

சகுனி - சொல்லுங்கள் மன்னா! சொல்லுங்கள். இதற்குச் சரியான பதிலை முறையாச் சொல்லுங்கள். ஒரு நாட்டின் எதிர்கால மன்னனை இப்போதைய இளவரசனை கேவலமாய் ஒரு பெண் அதுவும் ஐந்துபேர்களுடைய ஆசைநாயகி, இப்படி எள்ளி நகையாடலாமா? இப்படி உடுக்கை இழக்கும் நிலையில் உன்மத்தமாய் பரிகசிக்கலாமா? சொல்லுங்கள் மன்னா! சொல்லுங்கள்.

காந்தாரி - இதற்குரிய பதிலை நான் கூறுகின்றேன். மொந்தைக் கள்ளை மாந்திக் குடித்துவிட்டு போதை தலைக்கேறி பித்துப்பிடித்து கண்மண் தெரியாமல் கால்கள் நடக்க முடியாமல் தள்ளாடி, தள்ளாடி நாலுகாலில் சின்னத்தனமாய்த் தடுமாறி வருகின்ற என் மகன் துரியோதனைப் பார்த்தால் அவன் மைத்துணி பாஞ்சாலி மட்டுமல்ல அவனைப் பெற்றெடுத்த தாயாகிய நானும் கூட சிரித்துத்தான் இருப்பேன். "ஈன்றாள் முத்தேயும் இன்னாதாள் என் மற்றுச் சான்றோர் முகத்துக்களி" என்று ஆன்றோர்கள் கூறியதை நீ அறிவாயா? சகுனி? பன்றியின் முன்னால் முத்துக்களை வீசினால் அதன் பயன் பன்றிக்குத் தெரியுமா? மானம் - மரியாதை - பண்பாடு - கலாச்சாரம் இவைகளைப்பற்றி உன்னிடம் பேசி என்ன பயன்?

திருதராட்டினன் - துரியோதனா! உனக்கு நான் என்ன குறைவைத்தேன்? தேவர்கள் அருந்தும் இன்னமுதை ஒத்த உணவுகள் இங்கு இல்லையா? அந்தத் தெய்வலோக இந்திரனும் பார்த்து நாணக்கூடிய பொன்னொளிர் ஆடைகள் இங்கு இல்லையா? நீ காலால் இட்ட பணியைத் தலையால் செய்யும் மன்னவர்கள் நமது அட்சிக்குக்கீழ் இல்லையா? துன்பம் தவிர்க்கும் ஆன்ற அமைச்சர்கள் இங்கு இல்லையா? நீ சேர்ந்து ஆடிப்பாட அரண்மனையில் அழகான ஆரணங்குகள் இங்கு இல்லையா? நாநிலம் போற்றும் குடி, படை, அரண், செல்வம் இங்கு இல்லையா? இதையெல்லாவற்றையும் விஞ்சின எல்லாத்துக்கும் மேலான உன் அன்புச் சகோதரர்கள் பாண்டவர்கள் இல்லையா?

துரியோதனன் - ஹ்ஹ்ஹா - பாண்டவர்கள்! பாண்டவர்கள்!! பாண்டவர்கள்!!! எப்போதும் எங்கும் எதிலும் பாண்டவர்கள். அவர்கள்தான் உங்களுக்கு ஆண்டவர்கள். உங்களுக்கு உங்கள் அண்ணன் மக்கள் பாண்டவர்கள் என்றால் தித்திக்கும் கரும்பாய் திகட்டாமல் இனிக்கின்றது. உங்கள் அருமை மகன் துரியோதனன் என்றால் வெறுக்கும் வேம்பாகக் கசக்கின்றது. பாண்டவர்கள் இவர்கள் அழய வேண்டும். அவர்களை இந்தப் பூமியில் இருந்தே இல்லாதொழிக்க வேண்டும். அதுதான் என் இலட்சியம். அதுதான் என் குறிக்கோள். இதில் எந்தவித மாற்றமும் இல்லை.

சகுனி - மன்னர் மன்னா! வேள்வியில் அந்தப் பாண்டவர்கள் வேண்டிய மட்டும் நிறை செய்தனர். நமது மன்னர் இளைய வேந்தல் துரியோதனனை ஒரு சிறிய கடுகளவு தானும் அவர்கள் மதிக்கவில்லை. நான்கு திசையிலும் இருந்து வந்த மன்னர்கள் அந்தத் தருமனைப் போற்றினார்கள். அந்தப் புண்ணிய கங்கை நீரால் கண்ணனை அர்ப்பணம் செய்தார்கள். இவர்கள் செய்தது போதாதென்று அந்த ஐவர் பூவை

பாஞ்சாலி, நமது மன்னனைப் பார்த்துச் சிரித்தாள், சிரிப்பென்றால் எப்படிப்பட்ட சிரிப்பு, இதழோரப் புன்முறுவல் பூக்கவில்லை. புன்னகையாய்ச் சிரிக்கவில்லை. குறு நகை பூக்கவில்லை. நமது மன்னன் உங்கள் ஆசை மகன் துரியோதனனைப் பார்த்து என்னமாய் எள்ளி நகையாடினாள் - ஏளனமாய்ச் சிரித்தாள். தனது தங்கம் ஒளிர் அங்கமெல்லாம் குலுங்க குலுங்கக் கெக்கலியிட்டுச் சிரித்தாள். அதை எப்படிக் கூறுவேன் மன்னா? எப்படிக்கூறுவேன்?

திருதராட்டினன் - சரி என் மகனை ஆட்டிப் படைக்கும் பேயென நீ வந்து நிற்கிறாய். உண்மையிலே நீ பேய்தான். அதுவும் கொள்ளிவாய்ப் பிசாசு. உன்னை என்னால் மட்டுமல்ல யாராலும் திருத்த முடியாது. அவன் வாழ்வைச் சீரழிக்கப் போகின்றாய். அதற்கு நான் இப்பொழுது என்ன செய்ய வேண்டும். உன் கள்ள மனத்தில் என்ன திட்டங்கள் தீட்டியிருக்கின்றாய்? அதையும் கூறு.

சகுனி - நாங்கள் இப்போது கட்டியிருக்கின்ற சபாமணி மண்டபத்தைப் பார்ப்பதற்கு அவர்களை அழைக்க வேண்டும். மண்டபத்தைப் பார்வையிட்டபின் அவர்களுக்கு மாபெரும் விருந்து.

திருதராட்டினன் - நல்லவிடயம் தானே, அப்படியென்றால் சிறிய தந்தை விதுரனை இன்றே அனுப்புவோம். அவர்களை அன்போடு அழைப்போம்.

சகுனி - மன்னர் மன்னா கொஞ்சம் பொறுங்கள். இன்னமும் எனது திட்டம் முழுவதும் முடிவடையவில்லை. விருந்து முடிந்தபின் ஒரு விளையாட்டு சூதாட்டம் சதுரங்கம் சும்மா பொழுது போகவேண்டும் அதற்காக ஒரு வேடிக்கை விளையாட்டு.

திருதராட்டினன் - அடேய், கள்ளப்பயலே, சகுனி! உன்னை நான் நன்கு புரிந்துவிட்டேன். இப்பொழுது புரிகின்றது உன் கபடநாடகம். மகுடியின் நாதத்தில் மயங்கி கடிக்காமல் பிராரனின் கையைப்பார்த்து ஆடுகின்ற நாகத்தைப்போன்று அவர்களை சூதாட்டத்திலே ஆட்டிவைக்கப்போகின்றாய். அவர்களின் எல்லாச் செல்வங்களையும் சூதாட்டத்திலே இழக்கவைத்து ஓட்டாண்டிகளாக பஞ்சைப் பராரிகளாக அன்றாடங்காச்சிகளாக அகதிகளாக ஆக்கப்போகின்றாய் இதற்கு ஒருபோதும் நான் சம்மதிக்க மாட்டேன். இது நாசம் பேராபத்து கொடுமை கொடுமையிலும் கொடுமை

துரியோதனன் - உங்கள் குருட்டுக் கண்ணுக்கு இது கொடுமையாகத்தான் தெரியும். உங்களுக்கு இதில் இஷ்டமில்லை. அப்பா! அப்படியென்றால் நான் இதோ உங்களுக்கு முன்னாலேயே என் உயிரை மாய்த்துக்கொள்கின்றேன். *(துரியோதனன் வாளை உறையிலிருந்து உருவுதல். சத்தம் திருதராட்டினனுக்குக் கேட்ட உடன்)* நடைப்பிணமாக இந்த உலகில் வாழ்வதை விட இறந்து பிணமாகி விடுதல் எவ்வளவோ மேல்.

திருதராட்டினன் - வேண்டாம்! வேண்டாம் மகனே! எனக்கு நீ வேண்டும். நீதான் வேண்டும். என்ன செய்தாலும் என் மகன் வேண்டும். என் சதையின் இரத்தம் வேண்டும். சிலர் கண்ணிருந்தும் கபோதிகளாக வாழ்கின்றார்கள். ஆனால் நான் கபோதியாய் இருந்தும் கண்ணோடு தான் வாழ்கின்றேன். தண்ணீரில் மீன் அழும் ஆனால் அது யாருக்கும் தெரிவதில்லை. அதுபோன்றுதான் நானும் அழுகின்றேன். கபோதி அழுவது யாருக்கும் தெரியாது.

யாரங்கே உடனே மந்திரி விதுரனை அழைத்து வாருங்கள். போச்சுது! போச்சுது நாடு நல்லறம், வாழ்வு, வளம் எல்லாம் போச்சுது. விதி! விதி! விதி, மகனே வேறென்ன சொல்வேன். எல்லாம் விதி. “ஊழின் பெருவழி யாவுள மற்றொன்று சூழினும் தான் முந்துறும்” விதியைவிட மிக்கவலிமை உள்ளவை வேறு எவை உள்ளன. ஊழைவிலக்கும் பொருட்டு மற்றொரு வழியை ஆராய்ந்தாலும் அங்கும் விதிதான் முன்வந்து நிற்கும். (ஒரு சேவகன் மந்திரி விதுரனை அழைத்துக் கொண்டு வருதல்)

விதுரன் - என்ன மன்னா! அழைத்தீர்களாமே!

திருதராட்டினன் - ஆம்! விதுரா உடனே இந்திரநகர் செல்லுங்கள். என் அண்ணன் பாண்டுவின் மைந்தர்கள் பாண்டவர்களை உங்கள் சிறிய தந்தை அழைக்கின்றார் என்று கூறுங்கள். ராஜசூய யாகத்தின் பின்னர் அதிக நாட்கள் அவர்களைப் பார்க்கவில்லை உங்கள் சிறிய தந்தை தற்போது புதிதாகக் கட்டிமுடித்துள்ள சபா மண்டபத்தைப் பார்ப்பதற்கு அழைக்கிறார் என்று கூறுங்கள். மண்டபத்தைப் பார்த்து மகிழ்ந்தபின் மாபெரும் விருந்தும் உண்டென்று சொல்லுங்கள். இங்கிருந்து இந்திரநகர் செல்லும்போது இரத்தின மாலைகள், பொன், பவளம், வைரம் போன்றவைகளையும் மறக்காமல் எடுத்துச் செல்லுங்கள். அப்படியே விருந்து முடிந்தபின் மன்னர்கள் மரபின்படி சூதாட்டம் ஒன்று பொழுது போக்கிற்காக நடைபெறும் என்று ஜாடைமாடையாகச் சொல்லுங்கள். எல்லாம் விதி. தம்பி எல்லாவற்றையும் சொல்லி அவர்களை மறக்காமல் அழைத்து வாருங்கள்.

விதுரன் - என்ன மன்னா? சூதா? இது சகுனி மாமாவின் திட்டமிட்ட செயல் கபடநாடகம். இதில் ஏதோ ஒரு சூது மறைந்துள்ளது. நீங்களும் உங்கள் பிள்ளைகளும் அவர்களை நிம்மதியாக வாழவிட மாட்டீர்களா?

துரியோதனன் - சிற்றப்பரே! நீங்கள் மன்னன் சொல்வதை மட்டுமே செய்யுங்கள். வீண் குதர்த்தம் பேசத்தேவையில்லை. வீணான விளக்கமும் தேவையில்லை. நாங்கள் என்ன செய்வோம்? ஏது செய்வோம்? என்பதைப் பற்றிய கவலையும் உங்களுக்குத் தேவையில்லை. ஐவருக்கு அதாவது அந்தப் பாண்டவர்களுக்கு நெஞ்சும் அரண்மனைக்கு வயிறும் உங்களுடையது எனக்கு மட்டுமல்ல இந்தக் கௌரவர்களுக்கே நன்றாகத்தெரியும். சரி நீங்கள் போய் வாருங்கள்.

விதுரன் - நான் மன்னன் ஆணையைத் தலைமேற்கொண்டு இந்திரநகர் போகின்றேன். ஆனால் போகுமுன் ஒன்று சொல்லிவிட்டுப் போகின்றேன். தருமத்தின் வாழ்வுதன்னைச் சூது கவ்வும் ஆனால் இறுதியில் தருமமே வெல்லும். நான் வருகிறேன்.

## காட்சி - 03

***(இந்திரநகரில் விதுரனைப் பாண்டவர்கள் வரவேற்றல்)***
***(குந்தி, பாஞ்சாலி, தருமன், பீமன், நகுலன், சகாதேவன் அர்த்த வரிசையில் நிற்றல்)***

விதுரன் - *விதுரன் குந்தியைப் பார்த்து,* வணக்கம் அண்ணி! என்ன நல்லாய் இருக்கின்றீர்களா? ராஜசூய யாகம் நிறைவடைந்தபின் நீண்ட நாட்களாகத் தங்களைச் சந்திக்கவில்லை அதுதான் சந்தித்து நலம் விசாரித்துவிட்டுச் செல்லலாம் என்று வந்தேன்.

பாஞ்சாலி - வாருங்கள் மாமா! எங்கே அதிக நாட்கள் இந்தப் பக்கமே தங்களைக் காணவில்லையே. என்னமாமா நல்லா இருக்கின்றீர்களா? எல்லோரும் நலமே?

தருமன் - வாருங்கள் சிற்றப்பா - திருதராட்டினன் சிற்றப்பா நலமே இருக்கின்றாரா? தம்பி துரியோதன்ன ஏனைய தம்பிமார்கள், பிதாமகர் பீஷ்மர், ஆசாரியர், துரோணர், ஆசாரியர் கிருபர், துச்சாதனன், சகுனி மாமா, கர்ணன் அனைவரும் நலமே இருக்கின்றார்களா?

விதுரன் - ஆமாம், கண்ணன் அருளால் எல்லாரும் நலமாகவும் நல்லாயும் இருக்கின்றார்கள். நீங்கள் எப்படி இருக்கிறீர்கள்?

தருமன் - வாருங்கள் குளித்துவிட்டு, உணவருந்தி சற்றுக்க காலாறிவிட்டு ஆர அமர்ந்து உரையாடலாம் ***(விதுரனை அழைத்துச் செல்லுதல். மின்குமிழ் அனைத்தல். உடனே விதுரனோடு ஐவரும் மீண்டும் வருதல்)***

விதுரன் - தருமனே! பொறுமையின் அணிகலனே! பாண்டவர்கள் தலைவனே! மாமகள், பூமகள் போற்றும் மணவாளன், வேந்தர்பிரான் திருதராட்டினக் கோமகன், அத்தினபுரத்து அரசன், தெய்வ நலங்கள் சிறந்திட உம்மைச் சீரோடும், சிறப்போடும், வாழ்க வாழ்கவென வாழ்த்துச் சொன்னான். ராஜசூய யாகம் முடிந்தபின் உங்களையும் தம்பிமாரையும் அண்ணி குந்தி தேவியையும், மருமகள் பாஞ்சாலியையும் நீண்ட நாட்கள் சந்திக்கவில்லையாம். இடையிலுள்ள நாட்களும் பொருந்தவில்லையாம். ராசியற்ற நாட்களாக அவைகள் இருந்தன. ஆகையினால் இப்போது அன்போடு உங்களை அழைத்துவரச்சொன்னார். திருதராட்டினன் எங்கள் சிறிய தந்தை, நான் அவரது தம்பி மட்டுமல்ல அவையின் அமைச்சரும் கூட ஆகையினால் அவரது அன்புக்கட்டளையை என்னால் தட்டமுடியவில்லை. ஆதுதான் அவரது பணியை தலைமேற்கொண்டு ஓடோடியும் வந்தேன் உங்களை அழைத்துச் செல்வதற்காக.

தருமன் - அழைப்புவிடுப்பதோ அவரோ இவரோ இல்லை சிற்றப்பா திருதராட்டின மன்னன் அழைப்பு விடுத்திருக்கிறார். இன்னுமொரு சிறிய தந்தையும் அவையின் அமைச்சர் பெருமானும் தூதராக வந்திருக்கிறார். வைரமான திராட்சைப்பழங்களை தங்கத்தட்டில் வைத்ததுபோல எப்படி இந்த அழைப்பை மறுக்க முடியும்? ஆனால் சிறிய தந்தையே திருதராட்டினன் மன்னன் மகன் துரியோதனன், அவனை நம்பமுடியாது. எங்கள் வாழ்வைக் கெடுக்க எங்கள் உயிர்களைப் பறிக்க, எத்தனையோ கொடுமைகள் செய்தான். வீட்டை எரிப்பதற்கு நெருப்புத்தழல் எடுத்துக் கொடுக்கும் துஷ்ட மந்திரிபோல் அந்தக் கள்ளச் சகுனி அவனுக்கு உறுதுணையாக இருக்கின்றான். அவன் அவனோடு இருக்கின்றான். அவனுள் இருக்கின்றான். அதுதான் சிறிது கவலைப்படுகின்றேன். நீங்கள் எங்களை அன்புரவாக அழைப்பதின் உண்மை நோக்கம் துல்லியமாகத் தெரியவில்லையே சிற்றப்பா. இனிய பலாப்பழத்திற்குமேல் முட்கள் இருப்பதைப்போல இவ்வழைப்பிலும் ஏதோ மர்மம் இருக்கிறது.

விதுரன் - நீங்கள் கூறுவது உண்மை. உண்மையிலும் உண்மை. மங்களம் நிறைந்த அத்தினபுரத்திலே இந்தவையகத்திலே ஈடு இணையற்ற மணிமண்டபம் ஒன்றை சிற்றப்பாவும் தம்பிமார்களும் சேர்ந்து அமைத்துள்ளார்கள். அந்த மண்டபத்திலே கூடிக்களிப்பதற்கு அமுதபானமும், உண்டுகளிப்பதற்கு அறுசுவை விருந்தும் அளிக்க உள்ளார்கள். அந்த விருந்தின் முடிவிலே முடிவிலே

தருமன் - என்ன சிற்றப்பா? விருந்தின் முடிவில் என்ன நடக்கப்போகிறது? ஏன் இடையில் நிறுத்திவிட்டீர்கள்? சொல்வதற்கு தடுமாறுகிறீர்கள்? ஏன் இந்தக்குழப்பம்? நாக்குழறுகின்றது. முகமெல்லாம் வியர்வைத்துளிகள் அரும்புகின்றன. உண்மையை அப்படியே கூறுங்கள். நாங்கள் எந்தப்பிரச்சனையென்றாலும் எதிர்கொள்ளத்தயார்.

விதுரன் - ஒரு இன்பத்தின் முடிவு துன்பத்தின் ஆரம்பம் என்பது உனக்குத்தெரியாதா? தருமா? விருந்தின் முடிவிலே அந்தக்கள்ளச் சகுனியோடு இணைந்து துரியோதனன் உங்களோடு சூதாட்டம் ஆடவும் எண்ணியுள்ளான். உங்கள் சிறிய தந்தை திருதராட்டினன் இதையும் உங்களிடம் பட்டுப்படாமலும் ஜாடையாகச் சொல்லி வைக்கும்படி என்னிடம் கூறினார். அவருக்கு இச்சூது முற்றாக விருப்பமில்லை. என்ன செய்வது குலத்தைக் கெடுக்க வந்த கோடரிக்காம்பாக அவருக்கு மகனாக துரியோதனன் வந்துபிறந்துள்ளானே.

தருமன் - பார்த்தீர்களா! சிற்றப்பா, பார்த்தீர்களா, கொல்லும் கொடிய வேங்கையை நம்பலாம். பல்லில் விஷமுடைய பாம்பினை நம்பலாம், சீற்றமிகுந்து கர்ச்சிக்கும் சிங்கத்தை நம்பலாம், தந்திரமிக்க குள்ள நரிகளைக்கூட நம்பலாம் ஆனால் இந்தத் துரியோதனனை நம்பமுடியாது. நம்பமுடியாது. விஷம் நிறைந்த பாம்புகள் மிகுந்த நச்சுப் பொய்கையில் எங்களுக்கு உணவிலே விஷத்தையும் கலந்து தள்ளிவிட்டான். தப்பிவிட்டோம். அரக்கினாலே மாளிகை அமைத்து

எங்களையெல்லாம் எரிப்பதற்கு வகைசெய்தான் அதிலும் ஜெயித்துவிட்டோம். இப்பொழுது மண்டபம் என்ற பெயரிலே எங்களை மண்ணோடு மண்ணாக்குவதற்கா அழைக்கின்றான்?

விதுரன் - அண்ணன் திருதராட்டினன் இந்தச் சூதுவேண்டாமென எத்தனையோ முறை பக்குவமாக எடுத்துரைத்தான். சாம பேத தான தண்டங்கள் அத்தனையும் ஒன்று சேர்ந்து தடுக்க முயன்றான். இந்தத் துஸ்ட துரியோதனன் ஒன்றுக்கும் மசியவில்லை. அழுங்குப்பிடியாக அழுத்தமாக சூதே வேண்டுமென்று நிற்கின்றான். ஏதோ என்னால் இயன்றவரை என் அறிவுக்கு எட்டியவரை, உங்களிடம் எடுத்துரைத்தேன். சொல்லுவது என் கடமை. தீர்மானிப்பதும் செயல்படுவதும் உங்கள்கடமை. வெற்றியே தருவதானாலும் வேந்தர்கள் சூதினை ஒருபோதும் விரும்புவதில்லை. சூதினால் எத்தனையோ நாடுகள் அழிந்து மண்மேடாக மாறிவிட்டன. "வேண்டற்க வென்றிடினும் சூதினை - வென்றதூஉம் தூண்டில் பொன் மீன் விழுங்கியற்று" வெற்றியே பெறுவதானாலும் சூதாட்டத்தை விரும்பக் கூடாது. வென்ற வெற்றியும் தூண்டில் இரும்பை இரையென்று மயங்கி மீன் விழுங்கினாற்போன்றது என்று ஆன்றோர்கள் கூறியிருக்கின்றார்கள்.

தருமன் - பீமா! அர்ச்சுனா! நகுலா! சகாதேவா நீங்கள் இதைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்? அத்தினபுரம் செல்வதுபற்றி உங்கள் அபிப்பராயம்தான் என்ன?

வீமன் - அண்ணா! பாம்பின் கால் பாம்பறியும். இது மரணத்தின் அழைப்பு. வேண்டாம் அண்ணா! வேண்டவே வேண்டாம் இவர்களுடைய விருந்தும் வேண்டாம் மருந்தும் வேண்டாம். அந்த மணிமண்டபம் எத்துணைச்சிறப்பாக இருந்தாலும் பராயில்லை. பார்க்கச் செல்ல வேண்டாம். மண்டபமாம் மண்டபம். கள்ளப் பயல்களே, யாருக்குச் சமாதி அமைப்பதற்கு இந்தச்சபாமண்டபம். அங்கு யாரைக்குழி தோண்டிப்புதைக்கப்போகிறார்கள்? யாருக்கு நடுகல் நட்டப் போகின்றார்கள்? நல்லாயிருக்குதாம் நரிசுட்ட பலகாரம். நல்ல மாமனும் மருமகனும். இவர்க்ள இரண்டுபோரும் சேர்ந்தா எமக்கு சாவூருக்கே வழி திறந்துவிடப்போகின்றார்கள்? செல்வோம் எல்லோரும். போருக்கு ஆயத்தமாகச் செல்வோம். அர்ச்சுனா வில்லுக்கு வேந்தனே! எடடா காண்டீபத்தை. எனது புஜபலம் மட்டும்போதும் அண்ணா. நீங்கள் அஞ்சாதீர்கள். அச்சம் என்பது மடைமை அஞ்சானம் எம் இனத்தின் உடைமை. புறப்படட்டும் கஜ-ரத-தூக-பதாதிகள் வாழ்வு அன்றேல் சாவு. வெற்றி அல்லது வீரமரணம். "எடடா கொடு வாளினை அந்தக் கொடியோர் செயல் அறவே"

தருமன் - தம்பி பீமா, கொஞ்சம் பொறுமை! நீ கூறுவதும் சரிதான். ஆனால் எம்மை அழைத்திருப்பவரோ அவரோ இவரோ இல்லை. மிகவும் முக்கியமானவரும் பொறுப்புள்ளவரும் எமது தந்தையோடு ஒட்டிப்பிறந்த தொப்புள்கொடி உறவுள்ள எம் அப்பாவின் தம்பி திருதராட்டின மன்னன். இப்பொழுது அவரும் எமக்குத் தந்தையே! தூதுவந்திருப்பவரோ, வேறு யாரும் இல்லை. எமது சிறிய தந்தைதான். மதியூகமும் விவேகமுமுள்ள மந்திரி. "மூத்தோர் சொல்வார்த்தை அமிர்தம்" எல்லாம் விதி பீமா. விதி தந்தை சொற்கேட்டு இராமன் 14 ஆண்டுகள் காட்டில் கழிக்கவில்லையா? அரசு கட்டிலைத் துறக்கவில்லையா?. எங்களுக்கு என்ன நடந்தாலும் பரவாயில்லை. நாங்கள் அத்தினபுரம் செல்வோம். விதி சங்கிலியைப் போன்றது. அது ஒன்றோடொன்று பின்னித்தான் இருக்கும். அதுபோன்றுதான் வாழ்க்கையும் தோன்றி அழிவதுதான் இங்கு துன்பத்தொடு இன்பம் வெறுமையாம். என்ன நேர்ந்தாலும் நெஞ்சில் ஊன்றிய கொள்கையை விட்டு யாம் விலகப்போவதில்லை. பீமா புறப்படு, யாம் அத்தினபுரம் செல்வோம். மாநிலத்தில் விதியை வென்ற மனிதர் எவருமேயில்லை.

அர்ச்சுனன் - பீமா, அண்ணன் சொற்றபடியே நடப்போம். எமக்கு எந்த ஆபத்தும் வராது. அந்தத் துரியோதனன் எமக்கு என்ன செய்தாலும் அதை எதிர்கொள்ளத்தயாராவோம். கூற்றமே கூட குதித்துவந்தாலும் யாம் அஞ்சமாட்டோம். அண்ணன் தருமனின் சொல்லை வேதவாக்காக ஏற்று நடப்போம். வாருங்கள் செல்வோம் அத்தினபுரத்துக்கு.

தருமன் - பாஞ்சாலி! நீ என்ன செய்யப்போகின்றார்?

பாஞ்சாலி - எண்ணித்துணிக கருமம். ஆமாம் நானும் துணிந்துவிட்டேன்.
(கவிதை நடையில் சொல்லப்படும்)
*"பெண்மை வாழ்கவென்று கூத்திடுவோமடா*
*பெண்மை வெல்கவென்று கூத்திடுவோமடா*
*அன்னமூட்டிய தெய்வமணிக்கையில்*
*ஆணை காட்டில் அணலை விழுங்குவோம்"*
வாருங்கள் மகிழ்வுடன் செல்வோம் அத்தினபுரத்துக்கு.

## காட்சி - 04

***(அத்தினபுரத்தில் துரியோதனன், கர்ணன், சகுனி, பீஷ்மர் போன்றோர் பாண்டவர்களை அன்போடு வரவேற்றல்)***
***(பீஷ்மர், துரோணாச்சாரியர், கிருபாச்சாரியார் ஆகியோரை மெய்யரத்தழுவிய பின் திருதராட்டினக் கோமகனிடம் சென்று வணங்கல்)***

பீஷ்மர் - வாருங்கள்! வாருங்கள்! இப்பொழுதுதான் வந்துசேர்ந்தீர்களா? அந்த ராஜசூய வேள்விக்குப்பிறகு அதிக நாட்கள் உங்களைச் சந்திக்கவேயில்லை நீங்கள் இந்தப்பக்கம் வரவேயில்லையே.

துரியோதனன் - வாருங்கள்! வாருங்கள். அன்பு அண்ணன்மார்களே வாருங்கள். எமக்குள் நீண்ட இடைவெளி வந்துவிட்டது. யாம் ஒருவரை ஒருவர் பார்க்கவில்லை, பழகவில்லை, பேசிவில்லை ஆம் அதற்காகத்தான் இந்த அழைப்பு. உங்களுக்கு ஒன்று மகிழ்ச்சியுடன் கூறவிரும்புகின்றேன். நான் அண்மையில் ஒரு சபாமண்டபம் அமைந்துள்ளேன். கலை வல்லவன் ஆக்கிய - நல்ல வண்மைக் கவிஞர் கனவினைப் போல - நல்ல தொழில் உணர்ந்தவர்களைக்கொண்டு இந்த அத்தினபுரம் அனைத்துமே புகழ்ச்சிகள் கூற, கல்லையும் - மண்ணையும் பொன்னையும் கொண்டு கட்டியுள்ளேன். வாருங்கள்! வாருங்கள். அதைப்பார்த்து மகிழுங்கள்.

கர்ணன் - ஆமாம், வெள்ளிப்பனிமலை போன்று இராவணன் மனைவி மண்டோதரிக்காக மயன் மண்டோதரியின் தந்தை லங்காபுரியில் மாதோட்டத்திலே அமைத்த மாளிகை போன்று, அண்ணன் - நமது மன்னன் துரியோதனன் அமைத்த சபாமண்டபத்தைக்காண வாருங்கள். வாருங்கள்.

காந்தாரி - பாஞ்சாலி இத்தனை நாளாய் நீ எங்கிருந்தாய் அம்மா? இந்திரநகர் அப்படியென்ன அழகு நிறைந்ததா? மலை சூழ்ந்த குறிஞ்சி மலர் பூத்துக்குலுங்கும் குன்றமா அது? எங்களையெல்லாம் மறந்துவிட்டாயா பாஞ்சாலி?

பாஞ்சாலி - இல்லை மாமி, அத்தினபுரம் வரவேண்டும் உங்களையெல்லாம் பார்த்து சல்லாபித்து மகிழவேண்டும் என்றுதான் ஆசைப்பட்டுக்கொண்டிருந்தேன். அதற்குள் உங்களது அழைப்பையும் கொண்டு விதுரமாமா எங்களைத் தேடி வரவே உங்களைப் பார்ப்பதற்காக ஓடிவந்துவிட்டேன்.

திருதராட்டினன் - என் அன்பான பிள்ளைகளே! யமுனை ஆற்றுத்தண்ணிரு குளிர்ச்சியானது. ஆற்றில் இறங்கி அதிகதூரம் போய்விடாதீர்கள். முதலைகளால் ஆபத்து. யமுனைத் தண்ணீர் உடலுக்கு இதமும் உள்ளத்திற்குத் தெம்பும் தரக்கூடியது. அதில்

குளித்துவிட்டு பயணக்களைப்பெல்லாம் நீங்கி உணவருந்தி இளைப்பாறிவிட்டு சபைக்கு உங்களோடு என் மகன் துரியோதனன், மாமா சகுனி ஆகியோர் உரையாடி சல்லாபித்து உறவாடக் காத்திருக்கிறார்கள். மிகுந்த நாட்கள் சென்றுவிட்டன அல்லவா யாமும் உங்களோடு உறவாடி மகிழ்வோம். அத்துடன் மகிழ்ச்சியின் கொடு முடியாக சின்ன விளையாட்டு ஒன்றும் தேவையல்லவா? அதுதான் அதுதான் அண்ணன் தம்பியர்களிடையே சூதாட்டம் ஒன்றும் நடாத்தத்திட்ட மிட்டுள்ளோம். ஆமாம் சகுனி மாமாதான் இந்த ஆட்டத்தின் கதாநாயகன். அதையும் நன்றாகப் பார்த்து மகிழுங்கள்.

## காட்சி - 05 - சூதாட்டம்

*(திருதராட்டினன், காந்தாரி, பீஷ்மர், கர்ணன், துச்சாதனன், விதுரன் கிருபர், விகப்ணன், தேர்ப்பாகன், ஒருவரிசையில் அமர்ந்திருத்தல் தருமன், பீமன், அர்ச்சுனன், நகுலன், சகாதேவன், சகுனியும் துரியோதனனும் சூதாடுதல்)*

சகுனி - தருமன், பீமன், அர்ச்சுனன், நகுலன், சகாதேவன் ஆகிய பாண்டவ அறத்தோன்றல்களே! உங்களை இந்தச்சூதாட்டத்திற்கு வருக! வருக!! வளமுடன் வாழ்க! என்று வாழ்த்தி வரவேற்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். நீங்கள் இந்த உலகை ஆட்டிப்படைக்கும் அசகாய சூரர்கள் மட்டுமல்ல மல்யுத்தத்திலும், வில்யுத்த்திலும் பேராண்மை பெற்றவர்கள். உங்களின் வில்லாண்மை உலகின் எட்டுத்திக்கிலும் வானளாவ கொடிகட்டிப் பறக்கின்றது. வில்லுக்கு விஜயன், மல்லுக்கு பீமன், அதான் உண்மை. உங்கள் இருவருக்கும் ஈடுமில்லை இணையுமில்லை இப்பொழுது நாம் ஆடப்போகின்றதோ ஒரு வித்தியாசமான போர். இதற்கு கத்தியில்லை இரத்தமில்லை ஆனால் புத்திவேண்டும். சூது என்னும் போர், சதுரங்கம் என்னும் நாடகம் இது போர் வீரர்களை நகர்த்துவது அல்ல மாறாக காய்களை நகர்த்துவது இதில் வெல்வது யார்? அல்லது தோற்பது யார்? பார்த்து விடலாம். வாருங்கள் வீரர்களே என்று உங்களுக்கு நான் அறை கூவல் விடுக்கின்றேன். பாண்டவர்களே பயப்படாமல் வாருங்கள். வெற்றி அல்லது தோல்வி மன்னர்களின் வரலாற்றில் சூது என்றும் எப்போதும் மங்காத இடத்தைப் பெற்றிருக்கின்றது. அரசுகள் ஆடி அசைந்து வீழ்ந்திருக்கின்றன. சாம்ராஜ்யங்கள் சரிந்து தரைமட்டமாகியிருக்கின்றன. வாருங்கள் இரண்டில் ஒன்று பார்த்துவிடுவோம் பார்த்து.

தருமன் - “ஒன்று எய்தி நூறு இழக்கும் சூதர்க்கும் உண்டாம் கொல்
நன்று எய்தி வாழ்வதோர் ஆறு” சகுனியே ஒரு பொருள்பெற்று நூறு மடங்கு பொருளை இழந்துவிடும் சூதாடிகளுக்கும் நன்மைபெற்று வாழும் ஒரு வழி உண்டோ என ஆன்றோர்கள் அன்று சொல்லிவைத்தார்கள். சகுனி மாமாவே இந்தச் சதிநிறைந்த சூதுக்கா எங்களை அழைத்தாய். இதில் என்ன பெருமையைக் கண்டாய்? அறத்தின் வெற்றி இதில் உள்ளதோ? அல்லது ஆன்ற மறத்தின் பீடும் இதில் உள்ளதோ நீயும் துரியோதனனும் தீட்டிய சதித்திட்டமா? இது. உங்களது பகையின் இ்.தை உடனே நிறுத்து. வீணாக அழிவதற்கு வழிதேடாதே. ஒரு பிள்ளைத்தவளை பெரும்பாம்பை எதிர்த்துப் போராட முடியுமா?

சகுனி - பைத்தியக்காரா! ஹ்ஹ்ஹா வைத்தியக்காரா! ஆய கலைகள் (64) அறுபத்து நான்கிலேயும் சூதாட்டமும் ஒருகலை. அது உனக்குத் தெரியாதா? நீ பெரிய மன்னன் துணிந்தவன் என நான் நினைத்தேன். இப்படிப்பயந்தாங்கொள்ளி போல் பேசுகிறாயே. இந்தப் பட்டப்பகலில், இத்தனை மாமன்னர்களும், மந்திரிப்பிரதானிகளும், பிதாமகர் பீஷ்மர், கிருபர், துரோணாச்சாரியர் ஆகியோர் பார்த்திருக்க உன் சொத்தை நான் என்ன திருடப்போகிறேனா? அல்லது கபளீகரம் செய்து கவரப்போகின்றேனா? ஒரு நாழிகை, ஒரேயொரு நாழிகை, இதோ கச்சைகளும், காய்களும் காத்துக்கிடக்கின்றன நிட்சயம் நீதான் வெல்வாய். வெற்றித்தேவதை உன்பக்கந்தான். என் செல்லம் வா தருமா! பயப்படாதே - வா ஆடுவோம். ஆடிக்களிப்போம்.

தருமன் - சகுனி! சூது ஒரு விஷம். இவ்வுலகத்தில் எந்த மன்னரும் அதை விரும்பமாட்டார். வஞ்சகத்தினால் நீ எங்களை வெல்லப் பார்க்கின்றாய். சூதாடிக் கொல்லப்பார்க்கிறாய். விரும்பமென்றால் வா வெஞ்சமர் புரிவோம். அதில் வெற்றியைக் காண்போம். ஆதலினால் இந்த மாயச் சூது வேண்டாம். பாம்பிற்குப் பல்லில் மட்டுந்தான் விஷம், ஆனால் உனக்கோ உடல் முழுவதும் விஷம். விஷத்தால் எங்களைத் தீண்ட முற்படாதே. சூது என்னும் ஆசையை அடியோடு விட்டுவிடு. உங்களை அழைப்பை ஏற்று அன்போடு வந்தோம். உங்கள் அழகான மணிமண்டபத்தை, கலைநயமிக்க சபாமண்டபத்தைப் பார்த்தோம். களி கொண்டோம். அருமையான அறுசுவை விருந்துண்டோம். ஆடினோம், பாடினோம். எங்களை வற்புறுத்தி சேற்றில் இறக்கிவிடாதே அமிழ்த்தி விடாதே, நாங்கள் களிப்போடு இந்திரநகர் செல்கின்றோம். தயவுசெய்து உன்னைக் கெஞ்சிக் கேட்கிறேன் சகுனி. வேண்டாம் இந்தச்சூது.

சகுனி - சாத்திரங்கள் பேசுகன்றாய். சதுருக்கு அஞ்சுகின்றாய். ஆரிய வேந்தனே அறத்தோன்றலே மன்னவர் கோத்திரப்படி கவருடலும் ஓர்குலவழமை, கோத்திரமரபு, கோமன்னர்களின் பண்பாடு. மன்னவர் மல்லக்கு அழைத்தால் அதை மறுப்பது தவறு. வாட்போர் என்றாலும் கைதேர்ந்தவன் வென்றிடுவான். தொழில் தேர்ச்சியில்லாதவன் தோற்றிடுவான். நெறிமுறை அறிந்தவன் வென்றிடுவான். முறைதவறியவன் தோற்றிடுவான். வாழ்க்கையில் வெற்றியும் தோல்வியும் நாணயத்தின் இருபக்கங்கள். இது வரலாறுதந்த வரிச்சுவடுகள். இதற்கா பயப்படுகின்றோம். வா தருமா... வா பொழுது அவமே கழிகின்றது.

தருமன் - சகுனி, உனக்கு சூதின் கெடுதி பற்றி எத்தனையோமுறை துல்லியமாக எடுத்துரைத்தேன். வரலாற்று நூல்களிலிருந்து சூதாட்டத்தினால் சீரழிந்த வாழ்வுதனை எவ்வளவோ உதாரணங்களோடும், உவமேயங்களோடும் எடுத்தியம்பினேன். ஆனால் அவைகள் எல்லாம் எருமைமாட்டுக்கு மேல் வார்த்த நீர்த்துளி போல வீணாகி விட்டது. ஊழிற் பெருவலி யாதுனது? எவ்வளவோபோர் தடுத்தாலும் விதி இருக்கிறதே விதி அதுதான் எல்லாவற்றையும் ஓடி முந்திவிடும். சகுனி தானாக நீ அழியப்போவது மட்டுமல்லாமல் மற்றவர்களையும் வீணே அழிப்பதற்கு கங்கணம்கட்டி நிற்கின்றாய். இங்கு கூடியிருக்கின்ற ஆன்ற பெரியார்களும் உனது திமிருக்கு முன்னால் அடங்கி, அவிந்து, வாய்மூடி மௌனமாய் இருக்கின்றார்கள். பேச வேண்டிய இடத்தில் பேசி, இடித்துரைப்பதற்கு இங்கு எவருமேயில்லை. நீகூறுகிறது எல்லாம் சரி, நான் மன்னன். ராஜபரம்பரை, என்னோடு எனக்குச் சமமானவர்கள் மட்டுமே சூதாட முடியும். என்னோடு சூதாடினால் நான் வைக்கப்போகின்ற பந்தயப் பொருட்களுக்குச் சமமாக வைப்பதற்கு உனக்கு என்ன தகுதியிருக்கின்றது? என்னோடு சமமாகச் சூதாடுவதற்கு நீயார்? நீ மன்னனா? துரியொதனனின் மாமா. அவனது நிழல். எனக்கு நிழல் வேண்டாம், நிஜம்தான் வேண்டும்.

விதுரன் - ஹ்ஹ்ஹாஹா சரியான கேள்வி முறையா இடத்தில் இருந்து வந்திருக்கிறது. தருமராஜனோடு சரிசமமாக சூதாடுவதற்கு இவன்யார்? இந்தச் சகுனி மாமாவிற்கு இஞ்சித்தும் தகுதியில்லை. வேண்டுமென்றால் துரியோதன மன்னன் ஆடட்டும். அவரோடு தருமராஜா ஆடுவார் அதுதான் முறை, அதுதான் ராஜதர்மம், ராஜநீதி அதுதான். இதையும் மீறி

துரியோதனன் - விதுரா வாயைமூடு. நன்றிகெட்ட விதுரா! சிறிதும் நாணமற்ற விதுரா! தின்ற உப்பினுக்கே தீமை செய்யும் விதுரா! அரண்மனைக்கு வயிறும் அந்தப் பாண்டவர்களுக்கு நெஞ்சும் காட்டுகின்ற விதுரா. நீ சரியான பச்சோந்தி! நேரத்துக்கு நேரம் நிறம் மாறுவதே உனது தொழில். எனக்குப் பதிலாகத்தான் சகுனி மாமா ஆடுகின்றார். அவர்தான் எனது பிரதிநிதி. நான் ஆடினால் என்ன? என் மாமா ஆடினால் என்ன? எல்லாம் ஒன்றுதான். அவர் ஆட்டத்தை ஆடட்டும். வேண்டிய

பந்தயப் பொருட்களை வரிசையாக நான் வைக்கின்றென். இதில் பெரிதாக பாதிப்பு ஒன்றும் ஏற்படப்போவதில்லை. இது ஒரு வெறும் பொழுதுபோக்கு அவ்வளவுதான். விதிகளும், உபவிதிகளும், சட்டங்களும், பிரமாணங்களும் இங்கு தேவையில்லை. நான்தான் மன்னன் - மாமா நான் ஆணையிடுகின்றேன் நீங்கள் பயப்படாமல் காயை நகர்த்துங்கள்.

விகர்ணன் - அண்ணா என்ன இது? ஒருவன் சூதாட வேறொருவன் பணயம் வைப்பது தர்மமில்லை. இது அதர்மம், அநியாயம், அக்ரமம், அராஜகம். மாமன் சூதாட மருமகன் எப்படிப் பணயம் வைப்பது? இது நீதியுமில்லை, நியாயமுமில்லை. இதுஅநீதி! அகரமம்.

துரியோதனன் - விகர்ணா தம்பி நீ பேசாமல் இரு. திருதராட்டின மன்னனின் நூறாவது பிள்ளை நீ இன்னும் முளைத்து 3 இலை விடவில்லை. நீ பச்சைப்பாலகன் உனக்கு அரசியல் சாணக்கியம் ஒன்றுமே தெரியாது. ஒன்றும் தெரியாதவன் அவையில் பேசுவதைவிட அமைதியாய் இருப்பது எவ்வளவோமேல். தருமா! ஏன் யோசிக்கின்றாய்? நீ உனது முதல் பணயத்தை இப்போது வைக்கலாம்.

## சூதாட்டம் ஆரம்பம்

தருமன் - இறைவா எனக்கு இந்தச்சூதில் இஞ்சித்தும் விருப்பமில்லை. இவர்களுடைய தொல்லையும், அழுத்தமும் தாங்க முடியாமல் இதில் பங்கு பெறுகின்றேன். என்னைக்காப்பாற்று தெய்வமே. இதோ ஒளிமிகுந்த மணிமாலை ஒன்றை முதலில் வைக்கின்றேன்.

துரியோதனன் - பயப்படாதே தருமா முதல்வெற்றி உனக்குத்தான். ஹ்ஹ்ஹா ஒரு மாலையா? இதோ ஒன்பது மாலைகள் வைக்கின்றேன். மாமா உருட்டுங்கள் காயை
***(சகுனி மாமா காய்களை உருட்டுதல் - சகுனி வெல்லுதல்)***

சகுனி - வெற்றி - ஆஹா வெற்றி - முதல் வெற்றி எமக்குத்தான். ஆகவே இனி முழுவெற்றியும் எமக்குத்தான்

துரியோதனன் - சபாஷ் மாமா - சபாஷ்

தருமன் - இதோ ஆயிரம் குடம் பொன் வைக்கின்றேன்

துரியோதனன் - சபாஷ் இதோ பத்தாயிரம் குடம் பகட்டாக வைக்கின்றேன்

சகுனி - தருமா - இப்பொழுது காய்கள் உன்பக்கம் நீயே உருட்டு
***(தருமன் பகடை உருட்டுதலும் தோற்றுப் போதலும்)***

சகுனி - வெற்றி! வெற்றி! ஹ்ஹஹா - துரியொதனா வெற்றி!!

தருமன் - (*கவிதை வடிவில் கூறிவேண்டும் Poetrc Single*)
செம்பொன் எழிலிணைந்த வடிவும்
வாளை அணிந்த தோறும் - மாலை மணிகுலுங்கு மார்பும்
விளையுபின்பதூன்கள் - தம்மில் மிக்க தேர்ச்சியோடு
களை இலங்குமுகமும் - சாயற்க்கினும் நன்கு கொண்டோர்
இளைஞரான மாதர் - ஆயிரக்கணக்காக
ஐவர்க்கடிமை செய்துவாழ்வோர் - அத்தனைபேரையும் அப்படியே
வைக்கின்றேன்

துரியோதனன் - தாதவிழ் மலர் தோகை தன்னையுடையோர்
போதில் ஆர் திருஷிடையோர் - நல்ல காதற் கனிமொழியோர்
துடியிடை தனையுடையோர் - பிச்சிநிகர் அழகுடையோர்
அடியினிற் சிறிதுடையோர் ஆயிரமாயிரம் வைத்தேன்

துரியோதனன் - மாமா இப்பொழுது காயை நீங்கள் உருட்டுங்கள்
***(சகுனி காயை உருட்டுதலும் வெற்றியடைதலும் வெற்றி! வெற்றி!! வெற்றி!!! சகுனியும் துரியோதனும் துள்ளிக்குதித்தல்)***

சகுனி - தருமா! நீசோர்வடையாதே! ஆரியனுக்குச்சோர்வு அறவே கூடாது மீண்டும் ஒரு தடவை உன் அதிஸ்ட தேவதையை மனத்தில் இருத்தி மேலானதொன்றைப் பணயம் வை. அப்பொழுது நீ ஜெயித்தாயானால் நீ இழந்தது அத்தனையும் உன்வசம் வந்துவிடு மல்லவா. யோசிக்காதே - மனத்தை அலையவிடாதே

தருமன் - மந்தை மந்தையாக அத்தனை ஆடுமாடுகளையும் பரிகளையும் வைக்கின்றேன்

துரியோதனன் - நானும் அதற்கு மேலாக வைக்கின்றேன்

சகுனி - இதோ இப்பொழுது உனது சந்தர்ப்பம் எங்கே காய்களை உருட்டு பார்க்கலாம்.
***(தருமன் காய்களை உருட்டுதலும் தோல்வி அடைதலும்)***

துரியோதனன் - வெற்றி மாமா, வெற்றி எங்கெங்கே நோக்கினும் வெற்றி எப்படியானாலும் வெற்றி ஹ்ஹ்ஹா

சகனி - தருமா! பொறுமையின் திருஉருவமே! ஏன் நிறுத்திவிட்டாய்! வெற்றி உனக்கு நிட்சயம். வெற்றித் தேவதையின் மிக அருகில் வந்துவிட்டாய் இன்னும் சொத்துக்கள் ஏராளம் இருக்கின்றன. எதையாவது ஒன்றைப் பணயமாகவை. இம்முறை நிட்சயம் நீதான் வெல்வாய்.

தருமன் - வாரணங்கள் ஆயிரம் வைக்கின்றேன்

துரியோதனன் - நீவைத்ததைவிட பதின்மடங்கு வாரணங்கள் நான் வைக்கின்றேன். மாமா இது நமதுமுறை எங்கே காய்களை நீங்கள் உருட்டுங்கள் பார்க்கலாம்.
***(சகுனியும் துரியோதனனும் வெற்றி, வெற்றி என ஆர்ப்பரித்தல்)***

சகுனி - தருமா! வீடிழந்தாய், வீறு கொண்ட வீரர் தம்மையிழத்தாய், ஆடு, மாடு இழந்தாய், நல்ல பரிகள் இழந்தாய், பொருது வாரணங்கள் இழந்தாய், அழகு ஆரணங்குகள் இழந்தாய், பொன் இழந்தாய், பூவிழந்தாய். இப்பொழுது உனது நாடு இருக்கிறதே அதை வைத்து ஆடினால் நிட்சயம் வெற்றி பெறுவாய். வெற்றி பெற்றால் இழந்தது அத்தனையும் மீளப்பெறலாம் அல்லவா? ஏன் தயக்கம்? உனது நாட்டினை வைத்து ஆடு.

விதுரன் - போதும்! போதும்! *(உக்கிரகோபத்துடன் Furiously)* நிறுத்துங்கள். இந்தச் சூதாட்டத்தை. இது சூதாட்டமல்ல, பாண்டவர்களை படுகுழிக்குள் வீழ்த்த திட்டமிட்ட கபட நாடகம். இதை வானம் பொறுக்குமோ? வையம் பொறுக்குமோ? ஏழ் கடல்தான் இதைத்தாங்குமோ? சகுனி மாமாவே நீ பாண்டவர்களை என்ன செய்ய நினைத்தாய்? சபையில் கெம்பீரமாய் வீற்றிருக்கும் ஆன்ற அறிவுசார் பெருமக்களே! ஆசாரியர்களே! இந்தக்கொடுமையைப் பார்த்துக் கொண்டு கண்பொத்தி, வாய்சூடி மௌனிகளாக இருக்கின்றீர்களே. ஐயகோ! இதை என்னவென்று சொல்வேன். இது அக்ரமம், அராஜகம், கடைந்தெடுத்த அடாவடித்தனம். பாண்டவர்கள் சொத்துக்களைப் பறித்து அவர்களைப் பஞ்சைப்பராரிகளாக மாற்றி வீடின்றி, நாடின்றி அனைவருக்கும் பச்சைத்தனமான ராஜதுரோகம். ஐயோ! இது நீதியான செயலா? இல்லை இல்லை. எந்த அரசர்கள் அதைப்பார்த்துக்கொண்டு கைகட்டி,

வாய்பொத்தி உங்களைப்போல அமைதியாக இருப்பார்கள். உங்கள் மனச்சான்று உங்கள் இதயங்களைக் குத்திக்கிழிக்கவில்லையா? இந்தக் கள்ளச்சகுனி பிள்ளையைப் பிடித்த பேயென நிற்கிறான். துரியோதன மன்னனை தன் வஞ்சக எண்ணத்தால் ஆட்டிப்படைக்கின்றான். இவன் பிறந்த அன்று எல்லை நரிகளும் சேர்ந்து ஊஊ! என ஊளைவிட்டனவாம். அப்படிப்பட்ட நாசகாரன். இவன் ஒரு தூமகேது. குலத்தைக் கெடுக்க வந்த கோடரிக்காம்பு தூ இதுவும் ஒரு விளையாட்டா? உடனே நிறுத்துக இந்த நாசத்தை. அழியப்போகின்றீர்கள் எல்லாம் அழியப் போகின்றீர்கள். நிட்சயம் அழிவீர்கள். இந்தக் கொடூரமான கொடுமையை இப்போதே நிறுத்துங்கள் விதியே! எங்களை என்ன செய்ய நினைத்தாய் இது சூதாட்டமல்ல. பேயாட்டம், இது ஒரு விதியின் ஆட்டம்.

துரியோதனன் - *(உக்கிரகோபத்துடன் Furiously)* போதும் நிறுத்து! உன்னைப்பற்றி நான் அப்போதே கூறி விட்டேன். நீ நன்றி கெட்டவன். கொஞ்சமும் நாணம் இல்லாதவன். தின்ற உப்புக்கே துரோகம் செய்பவன். உன் இதயம் எப்போதும் பஞ்சபாண்டவர்கள் பக்கந்தான். உன்னை யார் இங்கு அமைச்சராக நயிமித்தது. சூதாட்டத்தில் என்ன பிழையைக் கண்டாய் நீ. பட்டப் பகலிலே, கற்றோர்கள் சூழ்ந்திருக்க - மன்னர்கள் எல்லாம் கவினுறப்பார்த்திருக்க, எதுவித ஒளிவு மறைவுமின்றி தெளிவாக - சீர்க்கமாக நடைபெறுகின்ற இச்சூதிலே எவ்வித உள்நோக்கமோ? உட்கருத்தோ இல்லை. இ∴து அரசர்களுக்கே உரிய பொது நீதி. இதில் எதவிததந்திரமுமில்லை. மாயாஜால மந்திரமுமில்லை. அதிர்ஷடம் உள்ளவன் வென்றிடுவான். இலட்சுமி கடாட்சம் இல்லாதவன் தோற்றிடுவான். பாண்டவர்கள் எல்லாவற்றையும் இழந்துபோனால் அதில் உனக்கு என்ன நஸ்டம்? உன் வயிற்றுக்கு நிறைய சாப்பாடு அப்பொழுதும் என் அரண்மனையிலேதானே கிடைக்கப்போகின்றது. வாலையாட்டுகின்ற நன்றியுள்ள நாய் போன்று பேசாமல் இருப்பதை விட்டுவிட்டு ஏன் வீணாக குலைத்துக்கொண்டிருக்கிறாய்?

விகர்ணன் - அண்ணா போதும் நிறுத்துங்கள்! இது உங்களுக்கு நன்றாக இருக்கிறதா? நீங்களி அத்தினபுரத்து மன்னர். பாண்டவர்கள் எங்கள் சகோதரர்கள். இப்படிஅவர்களை இந்தப் பாழ்பட்டுப்போன சூதாட்டத்திற்கு அழைத்து அவர்களை இம்சைப்படுத்தி, நிர்க்கதிக்கு உள்ளாக்குவது அரசதர்மமில்லை. பொழுது போக்கிற்காக ஆடுவது என்றாலும் அதற்கும் ஓர் எல்லையுண்டு. வரையறை உண்டு. ஆகையினால் அவர்களைப் பழிக்குப்பழி வாங்கும் வஞ்சக எண்ணத்தை அறவே ஒதுக்கிவிடுங்கள். தயவுசெய்து இந்த ஆட்டத்தை இத்தோடு நிறுத்தி விடுங்கள்.

துரியோதனன் - விகர்ணா? நீ என்ன பேசுகின்றாய்? யாரோடு பேசுகின்றார்? என்பதை நன்கு சிந்தித்துப்பேசு. அரசவிவகாரங்களில் அனாவசியமாகக் குறுக்கிடாதே. நீ இளையவன். உலக அனுபவம் கொஞ்சமும் இல்லாதவன். இத்தோடு உன் பேச்சை நிறுத்திக்கொள். அவ்வளவுதான். நான் இந்நாட்டின் மன்னவன். எதைச் செய்யவேண்டும்? எதைச்செய்யக்கூடாது என்பது உன்னைவிட எனக்கு நன்றாகத் தெரியும். மாமா என்ன செய்கிறீர்கள்? நீங்கள் ஆட்டத்தை ஆரம்பியுங்கள்.

சகுனி - தர்மா! தருமராசா! என்னப்பா ஓய்ந்துவிட்டாய்? கொஞ்சமும் அஞ்சாதே! இறுதி வெற்றி உனக்குத்தான். உன் நாடு இருக்கிறதே! அதை ஈடுவைத்து ஆடு. சிலவேளைகளில் இம்முறை வென்றுவிட்டால் நீ இழந்தது அனைத்தையும் மீளப் பெற்றுவிடலாம் அல்லவா?

தருமன் - வென்றாலும் சரி, தோற்றாலும் சரி, சென்றாலும் இருந்தாலும் சரி, இனி என்ன நடக்கப்போகின்றது? என்பதை நான் நன்கு உணர்வேன். இந்தச்சூது இன்றோடு முடியப்போவதில்லை. நீ அழிவுக்கு அடிமேல் அடி எடுத்து வைக்கின்றாய். இந்தச் சபையில் இத்தனை பேர் இருக்கின்றீர்களே! நாடுகளின் பேரரசர்கள் இருக்கிறார்கள். நாடு போற்றும் நல்லறிஞர்கள் இருக்கிறார்கள். கங்கையின் மைந்தன் பிதாமகர் இருககிறார். எங்களுக்கெல்லாம் வில்லாண்மை கற்பித்த ஆசாரியர்

துரோணர் இருக்கிறார். மறையோதிவாழும் ஒழுக்கத்தில் குன்றாத உயர்குல பார்ப்பனர்கள் இருக்கின்றார்கள். பட்டப்பகலிலே அறத்தைக் கொலைசெய்து, தர்மத்தை அழித்து அண்ணன் - தம்பிகளுக்கிடையே அநியாய பகைமைப்பேயை உருவாக்கி ஆடவைப்பதற்கு இப்படி ஒரு சூழ்ச்சி! ஒரு கபட நாடகம்! தொடர்ந்தும் நடக்கின்றதே, இதைக்கேட்பதற்கு இங்கு யாரும் இல்லையா? இது என்ன யாருமற்ற வரண்ட பாலைவனமா? அல்லது சிங்கம், புலி, கரடி வாழும் பயங்கரப் பெரிய காடா?

துரியோதனன் - ஏன் நாங்கள் இல்லையா? நாங்கள் மனிதப்பிறவிகள் இல்லையா? தருமா சும்மா வறட்டு வேதாந்தம் பேசாதே. உங்கள் நாட்டைப் பணயம் வைத்து ஆடு. இந்தமுறை லட்சுமிதேவி உன் பக்கம்தான் நிட்சயம் நீ வெல்லுவாய்

தருமன் - சரி என்ன நடந்தாலும் பரவாயில்லை, கண்களை விற்றபின் ஓவியம் வேண்டி என்ன பயன். எங்கும், எதிலும், வியாபித்திருக்கின்ற எல்லாம் வல்ல இறைவனை வேண்டி எந்தன் நாட்டைப் பணயம் வைக்கின்றேன்.
***(சகுனி காயை உருட்டுதல் வெற்றிபெறுதல். வெற்றி வெற்றியென துரியோதனனும் சகுனியும் கட்டிப்பிடித்து தோளைக் குலுக்கிக் கொண்டு துள்ளியாடுதல்)***

துரியோதனன் - ஹ்ஹ்ஹா தருமா! தருமராஜா என்ன செய்யப்போகின்றாய்? பொன்னையிழந்தாய், பூவையிழந்தாய், கரியிழந்தாய், பரியிழந்தாய், அழகொளிரும் ஆரணங்குகளை அப்பவே இழந்தாய். அன்பு நிறை படைவீரர்களை அப்படியே இழந்தாய், வீடுவாசல் இழந்தாய், தோட்டந்துரவினையும் இழந்தாய் இறுதியாக, இறுதியாக உன் சொந்த நாட்டினையும் இழந்தாய். இப்பொழுது நீ இருப்பதற்குக்கூட இடமில்லை. என்ன செய்யப் போகின்றாய் தருமா? இல்லை தர்மராஜா!

கர்ணன் - துரியோதனா! இவனை இனிமேல் மன்னனென அழைக்கமுடியாது. எப்படி இவனை மன்னன் என்று அழைப்பது? ஒரு கோட்டையில்லை நாட்டுக்கு ஏற்ற கொடியில்லை. எப்படியப்பா நீ ராஜாவாகமுடியும்? உன் அருமைத் தம்பிமார்கள் இனி என்ன செய்யப் போகின்றார்கள்? உன் அவள் இருக்கிறாளே! அழகிய மடமாது பாஞ்சாலி அவள் என்ன செய்யப்போகின்றாள்? கலகலவென தன்முத்துப் பற்களைக் காட்டிச்சிரிக்கப் போகின்றாளா? அல்லது மழைத்துளிபோல் சொட்டுசொட்டாய் கண்ணீர் சிந்தி அழப் போகின்றாளா?

துரியோதனன் - ஐயோ! தரும மகாராஜா, உன்னை ராஜாவென்று சொல்லவே என்நா கூசுகின்றது. வேண்டுமென்றால் உன் தம்பிமார்களை வைத்து ஆடு. இப்படி நான் சொல்வது அவ்வளவு சரியில்லை. என்ன செய்வது எல்லாம் விதிசெய்த சதி. ஒரு வேளை அவர்கள் அதிர்ஸ்டசாலிகளாக இருந்தால் வெற்றிமாதேவியின் கடைக்கண்பார்வை அவர்கள் பக்கம் இருந்தால் நீ வென்றுவிட்டால் நீ இழந்த சொத்துக்கள் அத்தனைம் நீ பெற்றுவிடலாம் அல்லவா? இழந்து போனவைகள் அத்தனையும் பெற்றுவிட்டால் பிறகு நீயும் மன்னன் அல்லவா?

சகுனி - ஹ்ஹ்ஹாஹா *(நமட்டுச்சிரிப்பு)* ஆமாம் அதுவும் சரிதான் - உனக்கு நாடில்லை, நகரில்லை இருப்பதற்கு வீடும் இல்லை. இப்படியிருக்க உன் அருமைத்தம்பிமார்கள் நாடோடிகளாய் அனாதைகளாய் அகதிகளாய் அலைந்து கேவலம் மரத்தின் கீழ் வசித்தால் உனக்குத்தானப்பா வெட்கம். வெட்கம் மட்டுமல்ல தாங்கமுடியாத வேதனையும்கூட, எனவே தம்பிமாரை அடகுவைத்து இன்னொருமுறை ஆடு

துரியோதனன் - மாமா சொல்வதும் சரிதான். எல்லாம் உன் நன்மைக்குத்தான். எல்லாரையும் ஒன்றாய்வைத்து ஆடிவிடாதே. தனித்தனியாய் ஒவ்வொருவராய், வைத்துப்பார். சிலவேளை அதிர்ஷ்டக்காரத் தம்பிகள் வெற்றியை உனக்கு அள்ளிக் கொண்டுவரலாம் அல்லவா. சரிசரி இது உன்முறை காய்களை உருட்டு.

தருமன் - சீ! நாய்களே நாய்களுக்காவது தனது ஐந்தறிவு கொண்ட இயல்பிலே வாலை ஆட்டிக்காட்டுகின்ற சிறிதளவு நன்றியாவது இருக்கும். கேவலம் மகத்தான அரச பாரம்பரியத்தில் உதித்த உங்களுக்கு அத்தன்மையும்கூட இல்லையே! சரி இறைவா! இப்பொழுது என் அருமைத் தம்பிமார்களை வைக்கப்போகின்றேன். கண்ணா! நீல மணிவண்ணா! என்ன இந்த வேளையில் காப்பாறு மாதவா! எப்பொழுதும் பிரம்மத்தையே தலையாகக் கொண்டு உலகம் வாழ்வதுபோல எண்ணத்திலே தூய்மை உடையவன் தப்பில்லாமல் இன்பம் துய்ப்பவன் என் தம்பி சகாதேவனை முதலில் வைக்கின்றேன்.

துரியோதனன் - ஏன்! ஏன்! பீமன் இல்லையா? அர்ச்சுனன் இல்லையா? அவர்களை முதலில் வைத்து ஆடலாமே?

வீமன் - அடேய் துரியோதனா! துஸ்டனே! வார்த்தையைச் சரியாக அளந்துபேசு. என் அருமை அண்ணன் தருமராஜாவுக்காகவும், என்னைப் பத்துமாதம் சுமந்து பெற்றெடுத்த தாய் குந்தி தேவிக்காகவும், பாண்டவர்கள் இதுவரையிலும் காத்துக்காத்து வந்த நற்பெயருக்காகவும் இதுவரையில் பொறுத்துக்கொண்டிருக்கின்றேன். இல்லையென்றால் இல்லையென்றால்

அர்ச்சுனன் - அண்ணா! தயவுசெய்து பொறுமையாய் இருங்கள். ‘‘அகழ்வாரைத்தாங்கும் நிலம்போல தம்மை இகழ்வார்ப் பொறுத்தல் தலை’’ அண்ணாவுக்காக யாம் இறுதிவரை பொறுமையாய் இருப்போம்.

தருமன் - துரியோதனா! நீ சொல்லி பணயம் வைக்கவேண்டிய அவசியமும் அவசரமும் எனக்கில்லை. இது என்னுடைய உரிமை. அதிலும் அனாவசியமாக நீ தலையிடாதே. சரி சரி உங்களோடு பேசிப் பயன் ஒன்றுமில்லை. உயரஉயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகுமா?

சகுனி - தருமா! இது உனது தருணம் இப்பொழுது காய்களை நகர்த்து.
***(தருமன் காய்களை நகர்த்தியபின் - தோற்றல்)***
***(சகாதேவனிடம் இருந்து வாள் - முடியெல்லாம் கழற்றி பையில் ஒரு பக்கமாக ஆளை நிறுத்துதல்)***

துரியோதனன் - வெற்றிமாமா! வெற்றி வெற்றிமேல் வெற்றி!
***(துரியோதனனும் சகுனியும் துள்ளிக்குதித்தல்)***

சகுனி - ஹம் தாமதம் செய்யாதே. தாமதிக்கும் ஒவ்வொரு கணமும் எங்களுக்குத்தான் சோதனை. இனிமேல் சிந்தித்துப்பார்த்து பயன் ஒன்றுமில்லை. எண்ணித்துணிக கருமம் துணிந்தபின் எண்ணுவது என்பது இழுக்கென்று ஆன்றோர்கள் கூறியுள்ளதை நீ அறிய மாட்டாயா? பெஞ்சேற்றில் கால்வைத்த யானையும் கூட மெள்ளமெள்ளப் புதையுண்டு தன் பலம் இழக்கும்.

தருமன் - மாபெருந்தவறு செய்துவிட்டேன். வஞ்சகம் சூது, பொருமை இவைகளின் மொத்த உருவம் நீ என்பது இப்பொழுதுதான் எனக்குப் புரிகின்றது. நீ பசுந்தோல் போர்த்திய புலி. உன் கண்ணி வலைக்குள் நான் அகப்பட்டுவிட்டேன். என் அருமைத் தம்பி நகுலனைப் பணயமாக வைக்கின்றேன்.

துரியோதனன் - மாமா! என் அன்பு மாமா. உங்களை எப்படிப் புகழ்வதென்றே தெரியவில்லை. இப்பொழுது காய்களை நீங்கள் நகர்த்துங்கள்.
***(சகுனித காய்களை நகர்த்தி வெற்றியடைதல்)***

துரியோதனன் - வெற்றி! வெற்றி தற்பொழுது நகுலனும் தொலைந்தான். தருமராஜா! ஒன்றுக்கும் கவலைப்படவேண்டாம். தற்பொழுது மல்லுக்கு வீரன், தமிர்பிடித்தவன், கர்வம்மிக்கவன், அந்தப்பீமனை அடகுவையுங்கள். சகாதேவனும், நகுலனும் மாத்திரிக்குப்பிறந்தவர்கள் என்றுதானே அவர்களை முதலில் பணயம் வைத்தாய். இப்பொழுது தெரிகிறது உனது மாற்றாந்தாய் மனப்பான்மை. உனது ஓரவஞ்சகம் இதிலும் நன்கு புரிகின்றது. திண்ணிய பீமனும், திடமிகுந்த பார்த்தனும், குந்திதேவிக்குப் பிறந்தவர்கள் என்றுதானே அவர்களை இமயச்சிகரத்துக்கு உயர்த்தினாய். இப்பொழு யாரை வைக்கப்போகின்றாய்?

தருமன் - எங்கள் ஒற்றுமை ஒருபோதும் குலையாது. எங்கள் ஐவரின் உடல், அங்கங்கள் எவ்வேறாக இருப்பினும் உடலுக்குள் இருக்கின்ற அந்த உயிர் ஒன்றுதான். செப்புகின்றவாய் ஐந்தானாலும் சிந்தனை ஒன்றுதான். எங்கள் சிங்கமறவன், வில்லினில் வீராதி வீரன், கண்ணனுக்கு ஆருயித் தோழன், எங்கள் கண்ணிலும் மேலானவன் அந்தப் பார்த்தனை அர்ஜுனனை வீர விஜயனை இப்பொழுது பணயம் வைக்கின்றேன்.

துரியோதனன் - சபாஷ் மாமா, தொலைந்தான் அர்ச்சுனன், காய்கள் இப்போது நம்பக்கம். உருட்டுங்கள் தாயத்தினை ***(சகுனி காயை உருட்டுதல்)***

சகுனி - துரியோதனா, வெற்றி! வெற்றி!! வாளையும் முடியையும் கழற்றி எறிந்துவிட்டு இழுத்துவாருங்கள் அர்ஜுனனை. ***(அர்ஜுனன் மறுத்து வாளையும் முடியையும் தானே கழற்றி வைத்துவிட்டு நடந்துவரல்)***

துரியோதனன் - தருமா! இப்பொழுது நீ என்ன செய்யப்போகின்றாய்? இன்னும் உனக்குப் பொன்னான காலங்கள் இருக்கவே இருக்கின்றன. இப்பொழுது அந்த மல்யுத்த வீரன் நூறு யானைப் பலமுடையோன், அந்தத் தடிப்பயல் பீமனைப் பனையம் வை. அவனைத்தான் நான் ஆவலோடு காத்திருக்கிறேன்.

தருமன் - துரியோதனா! அகடவிகடம் பேசாதே! ஆணவத்திமிர் பிடித்து அலையாதே, கேடு வரும் பின்னே மதி கெட்டு வரும்முன்னே என்று பின்னால் வரப்போகின்ற யுத்தத்திற்கு இப்பொழுது வீணே கட்டியம் கூறாதே. உனது வார்த்தைகள் முன்னுக்குபின் முரணாக இருக்கின்றன. "யாகாவாராயினும் நா காக்க" விளையாட்டு என்றாய், வெறும் பொழுதுபோக்கு என்றாய்! இப்பொழுதுதான் உனது நரித்தனமும், நயவஞ்சகமும் கைகோர்த்து நர்த்தனம் புரிவதை நன்றாகக் காணக்கூடியதாய் இருக்கின்றது. ஐவர் தமக்கோர் தலைவனைப் போன்றவனை எங்கள் ஆட்சிக்கு வேர் போன்றவனை, ஒரு தெய்வம் முன் நின்று எதிர்த்தாலும் நின்று சீறடிக்கும் தீரனை கைவளர் யானை பலவற்றின் வலிகாட்டும் மாபெரும் வீரனை எங்கள் பீமனை, இந்தப் பொய் வளர் சூதினில் இப்போதே வைத்திட்டேன்.

துரியோதனன் - இப்பொழுது காய் உன்பக்கம், நீயே நகர்த்து. ***(தருமன் காய் நகர்த்துதலும் தோல்வி அடைதலும்)***

துரியோதனன் - வெற்றி! வெற்றி!! மாமா அந்தப்போர்யானை பீமனும் தொலைந்தான்.

சகுனி - தருமனே, இன்னமும் சூதாட்டம் முடியவில்லை. உன் அருமைத் தம்பிதமார் நால்வரையும் வைத்து இழந்துவிட்டாய். உனக்கு இன்னமும் வெற்றி காத்திருக்கின்றது. தங்கத்தம்பிமார்கள் அத்தனை பேரையும் வைத்து இழந்தபின் நீ தனியோருவன் தனிவழியில் தனியாக நின்று என்ன செய்யப் போகின்றாய்? சும்மா விகடத்திற்காக உன்னை நீ வைத்துப் பார்க்கலாமே! ஒருவேளை நீ வென்று விட்டால், இழந்த அத்தனையையும மீளப்பெற்றுக்கொள்ளலாம் அல்லவா? எனவே நீ உன்னைப் பணயம் வைத்துப்பார்.

துரியோதனன் - மாமா சொல்வது நூற்றக்குநூறு சரி. நீ உன்னையே ஒரு கணம் சோதித்துப்பார். சிலவேளைகளில் அதிர்ஸ்ட தேவதை உன்னை அணைக்கலாம் அல்லவா?

தருமன் - நான் என்னையே வைக்கின்றேன்.

துரியோதனன் - மாமா, இப்பொழுது எங்கள் முறை எனவே நீங்களே ஆடுங்கள். நகர்த்துங்கள் காயை.

***(சகுனி காயை நகர்த்துதல் வெற்றிபெறுதல்)***

***(துரியோதன் வெற்றிபெறுதலும், வெற்றி வெற்றி என வீரமுழக்கமிடுதலும்)***

சகுனி - வெற்றி! வெற்றி!!

துரியோதனன் - வெற்றி! வெற்றி!! பாண்டவர் வீழ்ந்தனர். அவர்களது புகழ் ஒளி மங்கிவிட்டது. மறைந்துவிட்டது. மண்ணோடு மண்ணாகிவிட்டது. எங்கே அவர்களது ராஜசூய யாகம் அந்த வெள்ளை வெளேர் பாஞ்சாலியின் கள்ளச்சிரிப்பு எங்கே? தம்பிதுச்சாதனா! இந்த மாபெரும் தோல்வியை பாண்டவரின் வீழ்ச்சியை உலகம் முழுவதற்கும் முரசறைந்து பறைசாற்று. அவர்கள் மீண்டும் எமது அடிமைகள். வீடில்லை, நாடில்லை, ஆடில்லா மாடில்லா வாழ்வதற்கு ஒரு செப்புக்காசுகூட கையில் இல்லை. உற்றார் பெற்றார் ஒருவருமேயில்லை. எங்கேயாவது காட்டுக்கு மீண்டும் செல்ல வேண்டியிருந்தாலும் பிச்சா பாத்திரம் ஏந்த வேண்டியததான். துச்சாதனா! என்தம்பி துச்சாதனா ஏன் தாமதம்? முழங்கட்டும் பறைஒலி எட்டுத்திக்கும் தெருக்குத்தெரு சென்று எல்லாருக்கும் முழங்கட்டும் முரசு. ஹ்ஹ்ஹா...ஹ்ஹ்ஹா

சகுனி - கொஞ்சம் பொறு துரியோதனா! அவசரப்படாதே! பாண்டவர்கள் உன் அன்புச்சகோதர்கள். உன் தந்தையோடு ஒட்டிப்பிரந்த அண்ணன் மக்கள். பாவம் அவர்களை இப்படி அலையவிடலாமா? இன்னமும் ஒரேயொரு சந்தர்ப்பம் அளிப்போம். இதுவே கடைசிச் சந்தர்ப்பம். அவர்கள் உன் இரத்தத்தின் இரத்தம் அல்லவா! அவர்களுக்கும் உனக்கும் உள்ளது தொப்புள்கொடி உறவல்லவா

துரியோதனன் - மாமா! என்ன பிதற்றுகின்றீர்கள்? நீங்கள் சொல்வது ஒன்றுமே விளங்கவில்லையே?

சகுனி - உனக்கு உலக நடப்புக்கள் ஒன்றுமே வளங்காது. ஒரு முக்கியமான விடயத்துக்கு இப்பொழுதுதான் வந்திருக்கிறோம். இதற்காகத்தான் இந்தச்சூதாட்டமே நாங்கள் ஆடத்தொடங்கினோம். அன்று உன்னைப் பார்த்து எள்ளி நகையாடி கைகொட்டி சிரித்தாளே அந்த சிரிப்புச்சிங்காரி உன் துவர்வாய் மைத்துனி அவளை வைத்து ஆடினால் முழுச்செல்வத்தையும் பாண்டவர்கள் திரும்பப் பெறலாம் அல்லவா?

துரியோதனன் - மாமா என் ஆசைமாமா! தந்திரத்தால் பெரியவன் சாணக்கியன் என்று சரித்திரம் சொல்கிறது. ஆனால் உங்களது தந்திரம் அதையும் விஞ்சிவிட்டது. இது பொன் தூண்டில். இத்தூண்டிலை “சூதாட்டம்” என்னும் மீன் விழுங்கிவிட்டால். அப்புறம் மாமா என்னை யாருமே ஒன்றும செய்யமுடியாது. அந்தச் செப்பிதழ் வாயுடையாள் என்னைச் சேர்ந்திடுவாள். இந்த அத்தினபுரம் மட்டுமல்ல எட்டுத்திக்குமுள்ள நாடுகள் அனைத்தும் எனக்குத்தான். அன்று மூவடியால் உலகளந்த வாமனையும் வென்றுவிடுவேன். சபாஷ்மாமா, நீங்கள் ஆரம்பியுங்கள் உங்கள் நாடகத்தை.

சகுனி - தருமசீலனே! ஏன் யோசனை? ஏன் இந்தப் பதட்டம்? இது உனக்குத் தரப்படுகின்ற இறுதிச்சந்தர்ப்பம். நிட்சயம் இதில் நீதான் வெற்றி பெறப்போகின்றாய். இந்தக்காய் நகரத்தோடு முழுச்செல்வமும் உன்னக்கு வந்துவிடும். இனிச் சூதாட்டமும் முடிவுறும். உன் வாழ்வும் முடியும். அதற்கப்புறம் நீதான் குபேரன். ம்.. சீக்கிரம்... காலம் பொன் செய்யும். காலத்தை வீணாக்காதே.

தருமன் - இந்தப்பாவியர் சபைதனிலே புகழ்ப்பாஞ்சால நாட்டின் தவப்பலனை எங்கள் ஆவி நிகர்த்தவளை - சித்திரத்திலும் மங்காத சீருடையாளை அருள் ஒளியை, நிலத்தில் வாழ் திருமகளை, தேடினும் கிடைக்காத திரவியத்தை, இசையுறவே நடைபயிலும் தெய்வீக மலர்க் கொடியை, வடிவுறு பேரழகை, வாசமலர்ப் பூங்கொத்தை இன்பவனத்தினை இந்தக் காதகர்கள் முன்னிலையில் பணயம் வைக்கின்றேன்.

துரியோதனன் - மாமா! என் ஆசை மாமா! உருட்டுங்கள் இரட்டைப் பகடைக்காய்களை வெற்றி நமக்குத்தான்.
***(சகுனி இரட்டைப் பகடைக்காய்கள் உருட்டுதலும் வெற்றிபெறுதலும். துரியோதனன், சகுனி, கர்ணன், துச்சாதனன், தேர்ப்பாகன் அப்படியே கட்டிப்பிடித்து வெற்றி வெற்றியென ஓங்காரமிடுதல்)***
***ஓப்போடுதல் ஓஓஓஓ.....***

## காட்சி - 06 உச்சக்காட்சி

***பாஞ்சாலிக்குத் துகில் உரிதலும், பாண்டவர்கள் வீரவசனமும்***
***(துரியோதனன், சகுனியைக் கட்டிப்பிடித்துக்கூறல்)***

துரியோதனன் - என் அன்பு மாமா, ஆசைமாமா, என்துயர்தீத்தமாமனே உன்னை எப்படிப் புகழ்வதென்றே எனக்குத்தெரியவில்லை. என் ஏளனம் தீர்த்தாய். அன்று என்னை எள்ளி நகையாடினாளே அந்தக் கள்ளி காதகி இன்று அவளை என் ஆளாக்கினாய். அவளை என்ன செய்கின்றேன் பார்? என் ஆசையைத் தணித்தாய். என் ஆவியைக் காத்தாய். உனக்கு நான் எப்படிக்கைம்மாறு செய்யப்போகின்றேன். பாண்டவர்கள் இனி நாசமடைந்தார்கள். உனக்கு பூசைபுரிவேன் மாமா புண்ணிய தீர்த்தங்களால் என்ன வேண்டும் கேள். ஊர் வேண்டுமா? இல்லை இந்தப்புரக்த பார்வேண்டுமா? எல்லாருக்கும் மேலான பதவி வேண்டுமா? இல்லை சகல கலை வல்லவன் என்ற பட்டம் வேண்டுமா? எங்கே விதுரன்? விதுரன் எங்கே? அந்த நன்றிகெட்ட விதுரன் எங்கேபோய்விட்டான்? அந்தமாய்மால மந்திரி, பச்சோந்திபோல் நேரத்துக்கு ஒரு வேஷம் போடுகின்றவன். எங்கே விதுரன், விதுரா!

விதுரன் - என்ன துரியோதனா! வார்த்தைகள் மிகவும் சூடாவருகின்றன. வார்த்தைகளில் அனல் தெறிக்கின்றன. நெருப்புச்சுவாலையென்ன பற்றி எரிகின்றது. நாகாக்க மன்னா நாகாக்க. இந்த எலும்பில்லாத பொல்லாத நாக்கு வலைந்து நாலுபக்கமும் மாறிமாறிப்பேசும். ஊரை எரிக்கும் உலகத்தைக் கொளுத்தும். எனவே மன்னா உனக்கு முதலில் வேண்டியது நாவடக்கம். இரண்டாவது வேண்டியது நாவடக்கம். மூன்றாவது வேண்டியது நாவடக்கம்.

துரியோதனன் - என்ன விதுரா. சாத்தான் வேதம் ஓதுகின்றதோ? என் நாவை அடக்குவதற்கு நீயார்? நான் மன்னன். ஆள், அணி - படை, கூப்பிட்டகுரலுக்கு சேவகம் புரிய பணியாளர்கள். அத்தனையும் உடையவன் நான். போய் அந்தப் பாஞ்சாலியை அழைத்துவா. உன் மன்னன் இல்லை இல்லை உன் மைத்துனன் துரியோயதனன் கொஞ்சி விளையாட மஞ்சத்துக்கு அழைக்கிறான் என அவளை அன்போடு அழைத்துவா. அன்று அந்த ராஜசூய யாகத்திலே என்னைப்பார்த்து சிரித்தாளே ஓர் சிரிப்பு ஆஹஹ்ஹா அத்தனை பேர்மத்தியிலே என்னை ஏளனமாக எள்ளி நகையாடினாளே, எனக்கு அன்று மூச்சை அடைத்தடா. என்ன ஒரு நாயிலுங் கேவலமாக, கேலிப்பொருளாக, நகைப்புக்குரியவனாக, பார்த்துப்பார்த்துச் சிரித்தாளே. ஹஉம் பாண்வர்கள் அவர்கள் இப்போது தோல்வியைப் பூண்டவர்கள். அவர்களிடம் இப்போது என்ன இருக்கிறது? ஒன்றுமேயில்லை.

(கவிதை நடையில்) கோபுரமில்லை - குடிசையில்லை
குயில்களில்லை - மயில்களில்லை
ஆட்டமில்லை - பாட்டுமில்லை
ஆசையில்லை - அவசரமுமில்லை
காதலில்லை - கவலைகளில்லை
ஏழைகளில்லை - செல்வர்களில்லை
வாகனமில்லை - சேவகரில்லை
வரவுகளில்லை - செலவுகளில்லை
எனவே தாமதிக்காதே விதுரா. வீண் தாமதம் விபரீதத்தை விளைவிக்கும். உடனே அழைத்துவா என் மைத்துனியை. இல்லை இல்லை உந்தன் ஆசை மருமகளை அன்போடு, ஆசையோடு அழைத்துவா.

விதுரன் - மூர்க்கனே! மூடனே, வடிகட்டிய முட்டாளே! சொல்லக்கூடாத வார்தைகளை எப்படிச் சொல்வதற்கு உனக்கு மனம் வந்தது? உனக்கு மதி கெட்டுவிட்டது. எனவே சாவூருக்குப்போவதற்கு வழிதேடுகிறாய். எருமை வாகனத்தில் வருபவளை வரவேற்பதுற்கு கட்டியம் கூறுகின்றாய். நெறிதவறி அதலபாதாளத்தில் விழுந்துவிட்டாய். அதிலிருந்து உன்னால் மீள முடியாது. ஒருபோதும் மீளமுடியாது. ஒரு புள்ளிச்சிறுமானால் எப்படி புலியை எதிர்க்கமுடியும்? ஒரு பிள்ளைத் தவளையால் பெரும்பாம்புடன் மோத முடியுமா? ஐவர் பகையினால் பெரும் அழலை வளர்க்கின்றாய். பாஞ்சாலி ஒரு தெய்வத்தீ! யாகத்தீ! அத்தீயில் நீ கைவைத்தால் நீ எரிந்து பிடி சாம்பலாய்போய்விடுவாய். மகனே நான் சொல்வதைக் கேள் மகனே! பாஞ்சாலியை இப்பாவிகள் சபைக்கு அழைக்காதே அழைத்து அவளது பரிசுத்மான தூய்மையைக் கெடுக்காதே. இந்தக் கள்ளச் சகுனியால் கவறாடிப் பெற்ற அத்தனை செல்வங்களையும் அவர்களிடமே திருப்பிக் கொடுத்துவிடு. அவர்களிடமிருந்து கௌரவமானதும், நீதியானதும், நேர்மையானதுமான மன்னிப்பைப் பெற்றுக்கொள். அவர்களை வாழவிடு. இல்லையென்றால் நிட்சயம் போர் வரும். இந்த நாடு அமைதிகுலையும். அறம் இங்கு நிலைநிற்காது. வானம் வரண்டு மழை பெய்யாது பொய்க்கும். தானம், தவம், இரண்டுமே இனி நிலைக்காது. நீ அழிவாய்! உன் குலம் அழயும். இந்தநாடு அழியும். இதோ என் வில்லின்மேல் ஆணையிட்டு, தர்மத்தின்மேல், நீதி தேவனின் மேல் ஆணையிட்டு இத்தவில்லை முறித்து வீசுகின்றேன். நீ நாசமாய்ப் போவாய்! நான் வருகின்றேன்! இன்றிலிருந்து நான் உன் ஆட்சியைவிட்டு அரண்மனையை விட்டு நீங்குகின்றேன். (விதுரன் வில்லை முறித்து வீசிவிட்டு கோபத்துடன் வெளியேறுதல்)

துரியோதனன் - போடா மடையா! மந்திரிம் நீயோ! இந்த அத்தினபுரமும் உனதோ உன்னையறிந்தா நான் அரசு கட்டிலேறினேன். எனக்கு உன்னைப்பற்றி ஏற்கனவே நன்கு தெரியும். நீ ஒரு பகல் வேஷக்கார். பாண்டவர்களுக்கு ஒரு நிறமும் கௌரவர்களுக்கு மறுநிறமும் காட்டுகின்ற பச்சோந்தி. உண்டசோற்றுக்கே வஞ்சகம் புரியும் ஊர்த்தோசி. எங்கே தேர்ப்பாகன்? எங்கே தேர்ப்பாகன் எங்கே தொலைந்துவிட்டான்.

தேர்ப்பாகன் - என்ன மன்னா?

துரியோதனன் - உடனே சென்று அரண்மனை அந்தப்புரத்திலிருக்கும் பாஞ்சாலியை அழைத்துவா, அவளுடைய அன்புக்கணவன் தருமன் அவளைச் சூதிலே பணயம் வைத்து இழந்து விட்டான் என்றும் அதனால் அவள் இனிமேல் எனக்குமட்டுந்தான் சொந்தம் என்றும். அவன் ஆடி விலைப்பட்ட தாதியென்றும் நான் கூறியதாக இந்த அத்தினபுரத்து மன்னன் கூறியதாக்கூறி அவனைச் சீக்கிரம் அழைத்துவா.

## காட்சி மாற்றம் பாஞ்சாலியின் அந்தப்புரம்

தேர்ப்பாகன் - அம்மா! அம்மா! பாஞ்சாலி

பாஞ்சாலி - யாரது? இந்தவேளையில் அழைப்பது?

தேர்ப்பாகன் - நான்தான் துரியோதன மன்னனுடைய தேர்ப்பாகன். உங்களை உடனே சபாமண்டவத்திற்கு துரியோதன மன்னன் அழைத்து வரச்சொன்னார்.

பாஞ்சாலி - ஏன்? என்னவிடயம். நான் பாண்டவர் மனைவி. துரியோதன மன்னன் என்னை இந்த நேரந்தப்பிய வேளையில் அழைப்பதற்கு என்ன காரணம்?

தேர்ப்பாகன் - காரணம் இல்லாமல் காரியம் இல்லை அம்மா! மன்னன் காரணத்தோடுதான் உங்களை அழைக்கின்றார். பாண்டவர்கள் எல்லாவற்றையும் இழந்துவிட்டார்கள். அம்மா - பாவம் பரிதாபத்திற்குரியவர்கள்.

பாஞ்சாலி - ஆமாம் ஐயா பெரியவரே அப்படியென்றால் அவர்கள் பொருட்களைத்தானே பணயம் வைத்து ஆடியிருப்பார்கள். அதற்கு அரசன் ஏன் என்னை அழைக்க வேண்டும்.

தேர்ப்பாகன் - அம்மா! அதை எப்படி விண்டுரைப்பது என்பது எனக்குத் தெரியவில்லை. பொருட்களை இழந்த பாண்டவர்களை இழந்து, தருமன் தன்னையும் இழந்து விலைமதிப்பற்ற உயிருள்ள மங்கையர் திலகமாகிய உங்களையும் பணயம் வைத்து இழந்துவிட்டார்கள் அம்மா - பாவிகள்.

பாஞ்சாலி - நான் ஒன்று கேட்கிறேன் தயவு செய்து குறை நினைக்காதீர்கள் ஐயா சூதாட்டத்தில் அவர்கள் தங்களைப் பணயம் வைத்து இழந்தபின் என்னை ஈடுவைத்தார்களா? அல்லது தங்களை பணயப்பொருளாக வைப்பதற்குமுன் என்னை அடகு வைத்து இழந்தார்களா? என்பதைத் தெளிவாகவும், விரிவாகவும், உங்கள் மன்னனிடம் போய்க்கேளுங்கள். அப்பொழுது இந்தப்புதிருக்குச் சரியான விடைகிடைக்கும். நானும் அந்தப் பாவிகள் சபைக்கு வரவேண்டிய அவசியமும் இருக்காது.

தேர்ப்பாகன் - அம்மா, அவன் திமிர்பிடித்தவன். ஆணவக்காரன், அகம்பாவம் பிடித்தவன். அவனை எப்படித் திரும்பவும் அணுகி விடை காண்பது. என்ன செய்வது பெண்பாவம் பொல்லாதது. வேண்டுமென்றால் உங்களுக்காக மீண்டும் சென்று விரிவாகக் கேட்டுவருகின்றேன்.

## காட்சி மாற்றம் - துரியோதனன் சபாமண்டபம்

தேர்ப்பாகன் - மன்னா! மன்னா!

துரியோதனன் - என்னடா மடையா? என்ன வெறுங்கையோடு வந்திருக்கிறாய். எங்கே அந்தச்சிறுக்கி பாஞ்சாலி?

தேர்ப்பாகன் - மன்னா! என்னை ஒன்றும் செய்துவிடாதீர்கள். பாண்டவர்கள் முதலில் தாங்கள் தங்களை இழப்பதற்குமுன் தன்னைப் பணயமாக வைத்தார்களா? அல்லது தாங்கள் தோற்றபின் பிற்பாடு என்னைப் பணயம் வைத்தார்களா? என்று கேட்டு, உங்கள் பதிலையும் பெற்றுவரச் சொன்னாள் அரசே!

துரியோதனன் - அடேய் தேர்ப்பாகா! ஞானசூனியம், ஞானசூனியம்! உனக்கு வெறுமனே தேரை ஓட்டத்தான் தெரியும். ஆனால் வாழ்வின் சூட்சுமங்களை தில்லுமுல்லுக்களை நீ அறிய மாட்டாய். உனக்கு அவளுடைய கேள்வியும் தேவையில்லை. என்னுடைய பதிலும் தேவையில்லை. உடனே நீ சென்று அவளுடைய கருங்கூந்தலைப் பிடித்து கரகரவென தரையில் அமிழ்த்தி இழுத்துவா. நான் மன்னன் ஆணையிடுகின்றேன். சொன்னதைச் செய். என் கண்முன் நிற்காதே போய்த்தொலை.

தேர்ப்பாகன் - தங்கள் சித்தம் பிரபு.

## காட்சி மாற்றம் - பாஞ்சாலியின் அந்தப்புரம்

தேர்ப்பாகன் - பாஞ்சாலி! பாஞ்சாலி

பாஞ்சாலி - தேர்ப்பாகனே! என்ன மீண்டும் வந்திருக்கிறீர்கள். என் கேள்விக்குரிய பதில் கிடைத்துவிட்டதா? உங்கள் துரியோதன மன்னர் என்ன சொன்னார்?

தேர்ப்பாகன் - அதை எப்படியம்மா சொல்வேன்? உங்களுடைய பிடிவாதத்தால் வீணே என் தலைதான் உருளப்போகின்றது.

பாஞ்சாலி - இதுபிடிவாதமில்லை தேர்ப்பாகா! நன்றாக எண்ணிப்பாருங்கள். ஒரு பெண்ணுடைய கற்பின் திண்மை. அவளுடைய வலிமையான மானம், அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்ற நாற்குணங்களின் சிறப்பு. நிமிர்ந்த நன்னடை, நேர்கொண்ட பார்வை, நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும், நிமிர்ந்த ஞானச் செருக்கும் இருப்பதனால் செம்மை மாதர் திறம்புவதில்லையாம்.

தேர்ப்பாகன் - நீங்கள் சொல்லுவது எல்லாம் சரிதான் அம்மா. கேட்பதற்கு நன்றாகத்தான் இருக்கிறது. ஆனால் அந்தப்பாவி துரியோதனன் உருவிய வாளோட நிற்கின்றான் அம்மா. என் உயிரையும் காப்பாற்ற வேண்டும் அதே வேளை உங்கள் மானத்தையும் காப்பாற்ற வேண்டும். இப்பொழுது என்னை என்னம்மா செய்யச் சொல்கிறீர்கள்.

பாஞ்சாலி - தேர்ப்பாகா! நீங்கள் எனக்கு ஒரு தகப்பனைப் போல, என் வெட்கத்தைவிட்டு, இப்பொழுது உங்களிடம் உண்மையைச் சொல்லப்போகின்றேன். இப்பொழுது என்னால் வெளியில் நடமாடமுடியாத நிலை ஏன் உங்களுக்குத் தெரியும் என்று நினைக்கின்றேன். ஆண்களைவிட பெண்களுக்கே உரிய பலவீனமான சில நிலைகள் சில பொழுதுகள் உண்டு. அதை எப்படி உங்களுக்கு எடுத்துரைப்பது என்றே எனக்கு தெரியவில்லை. நான் இப்பொழுது தீட்டுப்பட்டு இருக்கிறேன். எனக்கு மாதவிடாய். எவர் கூப்பிட்டாலும் என்னால் வெளியே வரமுடியாது என்றுபோய் உங்கள் மன்னனிடம் சொல்லுங்கள்.

தேர்ப்பாகன் - சரியம்மா. ராசாங்க விஷயம் என்தலை தப்பினால் தம்பிரான் புண்ணியம். நான் வருகின்றேன் அம்மா! ஹம் ஆண்டவா! என்ன நடக்குமோ? ஏது நடக்குமோ?

## காட்சிமாற்றம் - துரியோதனன் சபாமண்டபம்

தேர்ப்பாகன் - மன்னா! மகாபிரபு, என்னை மன்னியுங்கள் ராசா!

துரியோதனன் - என்னடா மன்னிப்பு. முட்டாள் இம்முறையும் வெறுங்கையோடு வருகிறாய். எங்கே அவள்? எங்கேயடா அந்தப் பாஞ்சாலி, அந்தச்சிரிப்புச் சிங்காரி இன்னமும் வரவில்லையா?

தேர்ப்பாகன் - மன்னா பாஞ்சாலிக்குச் சுகமில்லையாம் வரமுடியாதநிலை.

துரியோதனன் - என்னடா சுகமில்லை? அவள் பாசாங்குக்காரி, நடிப்பின் சிறந்த ஒரு நடிகை அவளது நடிப்பில் மயங்கிவிட்டாயா?

தேர்ப்பாகன் - இல்லை மன்னா, அவளுக்கு மாதவிடாய், தீட்டு, வீட்டுக்குத்தூரம். இப்படியெல்லாம் சொல்கிறாள் மன்னா

துரியோதனன் - நீ அங்கு நில். என் முகத்தில் விழிக்காதே. முட்டாளே. உன்னைச் செம்மையாகப் பிறகு கவனிக்கின்றேன். எங்கே என் தம்பி துச்சாதனன்? எங்கே என் ஆசைத்தம்பி

துச்சாதனன் - அண்ணா! என்னை அழைத்தீர்களா?

துரியோதனன் - ஆமாம், உடனே பாஞ்சாலியின் அந்தப்புரம் சென்று அவளை அந்த மாய்மாலக்காரி பாஞ்சாலியை உடனே அழைத்துவா! அவள் சூதில் ஆடி விலைப்பட்ட தாதி இப்பொழுது அவள் எனக்குச் சொந்தம்.

துச்சாதனன் - ஆமாம், அண்ணா அப்படியே செய்கின்றேன். *(துச்சாதனன் உடனே போதல்)*

துரியோதனன் - *(கைகளைத் தட்டி)* நில் இல்லை. அவள் தோகையைக் கையால் பின்னி வலிந்து, அவளைத் தரையில் விழுத்தி ஒரு நாயைப்போல கரகரவென இழுத்துவா

துச்சாதனன் - இதோ இதைத்தான் நான் ஆவலோடு எதிர்பார்தேன். அரை நொடியில் அவளைச் சபைக்குக் கொண்டுவருகின்றேன்.

துரியோதனன் - ஹ்ஹ்ஹ்ஹா துச்சாதனா என் ஆருயிர்தம்பி மாடு நிகர்ந்தவனே! சென்றுவா துச்சாதனா, வென்றுவா, உன் வெற்றிக்கு எனது வாழ்த்துக்கள்.

## காட்சி மாற்றம்
## (பாஞ்சாலியின் அந்தப்புரத்திற்கு துச்சாதனன் செல்லுதல்)

துச்சாதனன் - அடி பாஞ்சாலி! என்னடி செய்கின்றாய்? எங்கே ஒளிந்துவிட்டாய்?

பாஞ்சாலி - யார் நீ! ஓ துச்சாதனனா? நான் ஒரு பெண். அதுவும் பாஞ்சாலி நாட்டு மன்னன் துருபதனின் மாண்புமிக்க மகள். பாண்டவரின் பண்புள்ள மனைவி. ஒரு பெண், அதுவும் அந்தப்புரத்திலே தனியாக இருக்கின்ற வேளையில் எவ்வித அறிவித்தலுமின்றி, திறந்த வீட்டில் எதுவோ நுழைகின்றமாதிரி, நுழைகின்றாயே, இது சரிதானா?

துச்சாதனன் - நான் யாரா? என்ன என்னைத் தெரியாத மாதிரி நடிக்கின்றாய்? நான்தான் துரியோதன மன்னன் தம்பி துஸ்டதுச்சாதனன். உன்னை சபா மண்டபத்துக்கு அழைத்துப்போக இல்லை இழுத்துப்போக வந்திருக்கின்றேன். இப்பொழுது நீ பாண்டவர் மனைவியுமில்லை. அந்தப் பாஞ்சால மன்னன் மகளும் இல்லை. உன்னச் சூதாட்டத்தில் பணயம் வைத்து அந்தப் பாண்டவர்கள் உன்னை இழந்து விட்டார்கள். இப்பொழுது ஆடிவிலைப்பட்ட தாதி நீ. அன்று அந்த ராஜசூய யாத்திலே என் அண்ணனைப் பார்த்து கொற்கை முத்துக்களைப் போன்ற உன் பற்கள் எல்லாம் தெரிய பல்லிளித்து கெக்கலித்த அந்த மன்னன் துரியோதனனின் அருமை மைத்துனி மச்சி! வாடி சபைக்கு நீ கூறவேண்டியதை அங்குவந்து கூறு.

பாஞ்சாலி - அச்சச்சோ! அச்சாகேள்! நான் உனக்கு அண்ணி, இப்போது எங்கும் வரமுடியாத நிலை. அதுவும் மாதவிலக்கினால், என் உடல்நிலை மிகவும் பலவீனமாக இருக்கின்றது. அதனால் மாற்றுடை கூட அணியமுடியாமல் இருக்கின்றேன்.

தயவுசெய்து உன்னைக் கெஞ்சிக் கேட்கின்றேன். என்னை இந்த வேளையில் அந்தப்பாவிகள் சபைக்கு அழைக்காதே. அதுவும் இந்த வேளையில் நான் ஆடவர் முன்னே வரக்கூடாது. அதுமட்டுமல்ல சொந்தச்சகோதரர்கள் எப்படி? தங்கள் மனைவியையே அடகுப்பொருளாக பணயம் வைத்துச் சூதாடமுடியும்? அது முறையில்லை. இது அரசதர்மம் அல்ல அராஜகம், அக்ரமம், எனவே என்னை விட்டுவிடு. உன் அண்ணனிடம் சென்று எனது உண்மை நிலையை எடுத்துக்கூறு. மயிர்நீக்கின் உயிர்போக்கும் கவரிமான் அனையவள் நான். தயவு செய்து உன்னை கெஞ்சிக் கேட்கின்றேன் இந்த வேளையில், இப்படியொரு இக்கட்டான சூழ்நிலையில் என்னை நெருங்காதே! என்னைத் தொடாதே!

துச்சாதனன் - என்னடி சொன்னாய்? உன்னைத் தொடவேண்டாமா, மயிலே மயிலே இறகுபோடு என்றால் அது போடாது. வாடி கள்ளி! உன்னை இப்பொழுது என்ன செய்கின்றேன் பார்! ***(துச்சாதனன் பாஞ்சாலியின் தோகையை இரண்டு கைளினாலும் சுருட்டியெடுத்து கீழே விழுத்தி இழுத்துக்கொண்டு போதல் - அசரீரிப்பாட்டுக்கு பாஞ்சாலியின் நடிப்பு)***

## காட்டி மாற்றம் - உச்சக்காட்சி
## (பாஞ்சாலிக்கு துகில் உரிதலும் பாண்டவர்களின் வீரசபதமும்)

***(துரியோதனனின் சபா மண்டபம் - எல்லோரும் பாத்துக்கொண்டு கொண்டிருக்க துச்சாதனன் பாஞ்சாலியை இழுத்துக்கொண்டு வந்து சபையில் நிறுத்துதல்)***
***(பாஞ்சாலி அழுத கண்ணும் சிந்திய மூக்கும் (with full expression) கண்ணீர் வெள்ளம்)***

பாஞ்சாலி - ஐயகோ! *(மேடையில் வீற்றிருக்கும் அரசர்களை ஒவ்வொருவராகப் பார்த்தல்)* என்னைக் காப்பாற்றுங்கள்! அரவக் கொடியுடைய இந்தக் கொடியவன் என்னை மானபங்கப்படுத்தப்போகின்றான். என் பெண்மையைக் கபளிகரம் செய்யப் போகின்றான். ஐயா! பெரியவர்களே! ஆலமரம்போல் உயர்ந்து பரந்து விரிந்த ஆசாரியர்களே! அறிவுசால் மந்திரிகளே! கற்றடங்கிய கவிஞர்களே! பெரியோர்க் கெல்லாம் பெரியோனே பிதாமகன் பீஷ்மரே! வில்வித்தையும் சொல்வித்தையும் நிறைந்த துரோணாச்சாரியாரே! செய்தவத்தால் முதிர்ந்த ஞானப்பழமான கிருபாச்சாரியாரே - என்ன கொடுமையிது? வீரமில்லா நாய்கள்! பாம்புக்கொடியுடைய பாதக மன்னன் துரியோதனன், நெஞ்சில் கொஞ்சமும் இரக்கமின்றி என்னை நாய்போல் இழுத்துவந்த மாடு நிகர்ந்த துச்சாதனனே! இரண்டு கண்களை இழந்து கபோதியாயினும் செல்வத்துள் செல்வமான செவிச்செல்வத்தைப்பெற்று இங்கு நடக்கின்ற அக்ரமங்களை, அராஜகங்களை வெகு - வெகு கூர்மையாக அவதானித்துக்கொண்டிருக்கின்ற என் அருமைத் திருதராட்டின மாமாவே. கபோதியாயிருக்கின்றான் என் கணவன் என்று பத்தாவுக்கேற்ற பதிவிரதையாக மாறி நின் அழகிய விழிகளுக்கும் திரைவிட்டு மூடிமறைத்து வாழ்ந்து கொண்டிருக்கின்ற காந்தாரி மாமியே! ஏன்? ஏன்? எல்லோருக்கும் வாய்மூடி மௌனியாக இருக்கின்றீர்கள்? ஏன் நெட்டை மரம்போல் நின்று பெட்டைப் புலம்பல் புலம்புகின்றீர்கள்? துணிந்து எழுந்து வாருங்கள் உங்கள் மௌனத்தைக்கலையுங்கள். ஊர்ந்து செல்கின்ற எறும்புகூட தன்னை மிதிக்கின்றவர்களை வீறுகொண்டு எதிர்த்துநிற்கின்றது. பட்டப்பகலில் வெட்ட வெளிச்சத்தில் இப்படி ஒரு அநியாயம் நடந்துகொண்டிருக்கிறதே! அதைக் கேட்பவர் யாருமில்லையா? நீங்கள் கேட்கமாட்டீர்கள். உங்களுக்கு மானம் பெரிதில்லை. மரியாதை பெரிதில்லை. பட்டம் பதவிக்காக வெறும கதிரை வாழ்விற்காக அழிந்துபோகின்ற புகழுக்காக, இந்தப் பாவியின் கொலுமண்டபத்தில் இன்னமும் ஒட்டிக்கொண்டிருக்கிறீர்கள். பேயரசு செய்ய பிணம் தின்னும் சாத்திரங்கள் என்று வாழ்ந்து கொண்டிருக்கிறீர்கள். சாத்தான் இங்கு வேதம் ஓதுகின்றது என்று நன்கு தெரிந்தும் அதையும் உங்கள் காது குளிரக் கேட்டுக்கொண்டிருக்கிறீர்கள். உங்கள் அன்பு இல்லக்கிழத்திகளோடு நீங்கள் இல்லறம் நடாத்தவில்லையா? உங்கள் உடன்பிறந்த சகோதரிகளோடு

நீங்கள் வாழவில்லையா? இரத்தத்தின் இரத்தத்தோடு உறவு கொண்டாடவில்லையா? சரி உங்களுக்கு இல்லக்கிழத்திகள் தான் இல்லை. சகோதரிகள்தான் இல்லை. உங்களை பத்துமாதம் சுமந்து பகலை இரவாக்கி இரவைப் பகலாக்கி தன் இரத்தத்தினால் பாலூட்டிச் சீராட்டி வளர்த்த தாயோடு நீங்கள் வாழவில்லையா? ஏன் இந்த மௌனம்? ஏன் இந்த அமைதி? ஒன்று மட்டும் சொல்லுவேன், அல்லற்பட்டு, ஆற்றாது, நான் அழுத கண்ணீர் உங்களைச் சும்மா விடாது. அது உங்களை அழிக்கும். உங்கள் செல்வத்தைத் தேய்க்கும். நிட்சயம் ஒரு நாள் வரும். அப்பொழுது போர் எழும். வாழ்வே போ! போ! சாவே வா! வா! மலையே நீ என்மேல் விழுந்து என்னைக் கொன்றுவிடு. வானமே நீ இடிந்து வீழ்ந்து என்னை என்னை இல்லாமற் செய்துவிடு. இந்தக்காதகர்கள் தங்கள் கறைபடிந்த கைகளால் என்னைத் தொடுவதற்கு முன்பே என் வாழ்வை முடித்துவிடு.

துரியோதனன் - ஹ்ஹ்ஹா - ஹ்ஹ்ஹா பாவம் பாஞ்சாலி ஹ்ஹ்ஹா

பாஞ்சாலி - சிரிக்காதே துரியோதனா - சிரிக்காதே சிரித்தவர்கள் வாழ்ந்ததில்லை. அழுதவர்கள் கெட்டதில்லை என்பது உனக்குத் தெரியாதா?
நான் திண்ணிய கற்போடுசாவேன். கற்பென்னும் கண்ணாடி கறைபடு முன்னே சாவேன். அது நொறுங்கி உடைந்ததுதான் தூளாய்ச்சிதறுமுன்பே சாவேன். செத்துமடிந்து மண்ணோடு மண்ணாகிப்போவேன். என் இடுகாட்டில் எருக்கம்பூ மலராது. நிட்சயம் ரோஜாப்பூக்கள்தான் பூக்கும். மல்லிகை மலர்கள் கொத்துக்கொத்தாய் பூக்கும் நாற்றிசை எங்கும் நறுமணம் வீசும்.

துரியோதனன் - அடி பாஞ்சாலி! என் ஆசைமைத்துணி, அன்று அந்த ராஜாசூய யாகத்தில் என்னைப்பார்த்து எப்படிச்சிரித்தாய். ஹ்ஹ்ஹ்ஹா இப்பொழுது சிரி நன்றாகச்சிரி இங்கேவா. இப்படிவா. என் செல்லம் சிரித்துப்பார். அடி பாஞ்சாலி என் சித்திரை நிலவே, மொட்டவிழ்ந்த பருவமே! மொட்டவிழா உருவமே இங்கு என் தொடையில் வந்து அமர். வா செல்லமே ஹிஹ்ஹ்ஹா வா. காலம் வீணே அவமாகப்போகின்றது. ஹிஹ்ஹ்ஹா
*(பீஷ்மர், துரோணர், கிருபாச்சாரியார், விகர்ணன் ஆகிய நால்வரும் எழுந்து வந்து வலக்கரத்தை நீட்டி சுண்டுவிரல்கள் சுட்டிக்காட்டிப் பேசுதல்)*
துரியோதனா! நிறுத்து உன் அராஜகத்தை, அத்தினபுரத்து மன்னன் அவளை ஒன்றும் செய்துவிடாதே. நாங்கள் சொல்கின்றோம் அவளை விட்டுவிடு. தர்மத்தின் வாழ்வு தன்னைச் சூது கவ்வும். ஆனால் தர்மமே இறுதியில் வெல்லும். தர்மம் வெல்லும்! தர்மம் வெல்லும்! தர்மம் வெல்லும். *(மீண்டும் சென்று ஆசனத்தில் அமர்தல்)*

துச்சாதனா! என் ஆசைத்தம்பி! அவர்கள் கிடக்கின்றார்கள் படித்த மடையர்கள். முற்றிப்பழுத்த கிழங்கள். வேதாந்தம்பேசும் வேதாந்திகள். ஞானசூன்யங்கள். நான் அவமானப்பட்ட பொழுது இவர்கள் எல்லாம் வேடிக்கைப் பார்த்துக்கொண்டுதானே வீணே இருந்தார்கள். அப்பொழுது அவர்களுக்குப் பாண்டவர்கள் பென்னாம் பெரியவர்களாய்த் தெரிந்தார்கள். இப்பொழுது இந்தப் பாஞ்சாலிக்கு வக்காலத்து வாங்குகிறார்கள். அன்று அந்த வஞ்சகக் கண்ணன் முதன்மையும் முக்கியத்துவமும் பெற்றிருந்தான். இவர்கள் நடிப்புச்சுதேசிகள், வேளைக்குவேளை உண்டுகுடித்து உருத்திராட்சமாலையணிந்து உறங்கிக் கொண்டிருக்கும் உன்மத்தர்கள். நேரத்துக்கு நேரம் வேஷம் போடுவதற்காக அரிதாரம் பூசுகின்றவர்கள். துச்சாதானா இழுத்துவா அந்தப் பாஞ்சாலியை இந்த அரங்கத்தின் நடுவே பீடத்திற்கு மேலே எல்லாருக்கும் தெரியும்படி அவளை நிறுத்து. ஐவரைக் கலந்ததேவிதானே இவளுக்கென்னடா நாணம், அச்சம், மடம், நாணம், பயிப்பு ஆடையைக் களைந்தெடு. பாம்பத்தோலை உரிப்பதுபோல் உரித்தெடு அவளது சீலையை. ஹ்ஹ்ஹா
(காந்தாரி மேடையிலிருந்து இறங்கி ஓடிவருதல் - பாஞ்சாலியை இழுத்துக் கொண்டு போகின்ற துச்சாதனனை இரண்டுகைகளையும் விரித்து குலுக்கே நின்று தடுத்தல்)

காந்தாரி - துச்சாதனா நில், அவளை எங்கே இழுத்துக்கொண்டு போகிறாய்? அவளை என்ன செய்யப்போகின்றாய்? பாஞ்சாலியை ஒன்றும் செய்துவிடாதே. நானும் அவளைப்போல ஒரு பெண். நான் திருதராட்டின மன்னனின் அன்பு மனைவி மட்டுமல்ல நீ குடியிருந்தாயே கருவறை உன்னைக் கருவிலே தாங்கிய அன்புத்தாய். ஒரு பெண்ணின் பெருந்தக்கதாய் உள்ளது அவளது கற்பு அதாவது மானம் அதற்கு ஊறு விளைவிக்காதே அவள் கற்புக்கனல். கொழுந்து விட்டெரியும் அழல். அந்தக்கணல் உங்களையெல்லாம் எரிந்துச் சாம்பல் மேடாக்கிவிடும். ஊதினால் பறக்கின்ற வெறும் தூசியாகிவிடும். உங்கள் அரசியல் வரலாற்றையே மாற்றி அமைத்துவிடும். தம்பி என் இரு கரங்களையும் குவித்து மடிப்பிச்சை கேட்கிறேன். தயவுசெய்து அவளை விட்டுவிடு.

துச்சாதனன் - அண்ணா! என்னை என்ன செய்யச் சொல்கின்றாய்?

துரியோதனன் - நான் ஆணையிட்டுச் சொல்கின்றேன். அவளை இழுத்துச்செல். அவள் இப்பொழுது எனக்குமட்டுந்தான் உரிமை. ஆடி விலைப்பட்ட விலை மகளுக்காக ஒருவரும் பரிந்து பேசமுடியாது. அம்மா! உங்களுக்கு ஒன்றும் தெரியாது. வெறும் அடுப்பூதும் பெண்களுக்கு அரசியல் தேவையில்லை. இது என் சொந்தப்பிரச்சினை மட்டுமல்ல தன்மானப்பிரச்சனை. இதில் நீங்கள் வீணே தலையிடக்கூடாது. அம்மா நீங்கள் கண்ணை மறைத்துக்கொண்டு மீண்டும் சென்று அரியாசனத்தில் அமருங்கள்.

பாஞ்சாலி - தருமராஜா! ஏன் இந்த பாவச்செயலைச்செய்தீர்கள்? ஏன் என்னை இன்று இப்படியொரு கேவலமான இழிநிலைக்குக் கொண்டு வந்தீர்கள்? அன்று அந்தப்பாஞ்சால நாட்டிலே நடந்த சுயம் வரத்திலே வென்று அம்மிமிதித்து கற்புக்கனலாம் அருந்ததிபார்த்து, அரைத்த மஞ்சள்பூசி, நறுமணச்சந்தணம் தடவி வண்மைகளார் சுண்ணம்பூசி, ஆடியிலே முகம் பார்து, அகிற்புகை எரிந்து மணம் வீச பொதிகைத் தென்றல் பொல பொலன வீசகின்ற வேளையிலே என்னை மணஞ்செய்தீர்களே! இதற்குத்தானா, இந்தப் பாவிகள் சபையில் கேலிப்பொருளாக என்னை ஆக்குவதற்குத்தானா! ஓ! நீங்கள் பேசமாட்டீர்கள் நீங்களும் சூதிலே துரியோதனனுக்கு அடிமைப்பட்டு நிரந்தர அடிமையாகிவிட்டீர்கள். இப்படியொரு அரசதர்மம் அத்தினபுரத்திலே மட்டுந்தான் உண்டு. தலைகுனிந்து, வெட்கி, வேதனையோடு, வார்த்தை பேச முடியாமல் கூனிக்குறுகி, வாழ்விளந்து, வளமிளந்து, நிற்கிறீர்களே, உங்களால் இனி ஒன்றுமே செய்ய முடியாது. நீங்கள் இப்போது மூங்கையர்கள். இது கொடுமை, கொடுமையிலும் மாகொடுமை.

வீமன் - *(உக்கிரக்கோபத்தோடு)* தம்பி - அர்ச்சுனா! எடுத்துவா, எரிதழலை, சொக்கட்டான் ஆடி, சொக்கிப்போய், சூதினில் எங்களையெல்லாம் விற்றுவிட்டு பேசா மனிதனாக, ஊமையாக இருக்கின்ற அண்ணன் தருமனின் கையை எரிப்போம். தீயினால் சுட்டபுண் காலமெல்லாம் அவருக்கு நல்லதோர் பாடத்தைப் புகட்டும். சுட்ட புண்ணினைப் பார்க்கின்ற பொழுதெல்லாம் சூதாட்டம் செய்த சூது அவர் மனத்தை அழுங்குப்பிடியாக அழுத்தி உறுத்தட்டும்.

அர்ச்சுனன் - பீமா - அமைதி பொறுத்தார் அரசாள்வார். அண்ணன் தவறே செய்திருந்தாலும் அதுவும் நமது நன்மைக்குத்தான். அதைச்சுட்டிக்காட்டி அவரை அவமானப்படுத்துவதற்கு இந்தச்சபா மண்டபம் உரிய இடமல்லை. இங்கே வித்தகர்களும், அறிஞர்களும், ஆச்சரியர்களும் நிறைந்திருக்கின்றார்கள். அவரை மதிப்போம். இது அண்ணாவின் மதியின் பிழையில்லை. இதுவிதியின் பிழை. தயவுசெய்த பொறுமையாக இருப்போம். முடிவு எப்படி முடியப்போகின்றது என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

துரியோதனன் - துச்சாதனா! என்ன வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கிறாய், விரைவாக இவளை இழுத்துச் செல். ஏற்கனவே நான் கூறியமாதிரிச் செய். இவளது மானம் கப்பலேறட்டும். நான் செய் என்று சொன்னவுடன் அவள் ஆடையைக்களைந்துவிடு.

*(திருதராட்டினன் அரியாசனத்திலிருந்து இறங்கிவந்து)*

திருதராட்டினன் - மகனே துரியோதனா! நிறுத்து உன் மூர்க்கத்தனத்தை - நிறுத்து - பாஞ்சாலி அன்று அந்த ராஜசூய யாகத்திலே உன்னைப் பார்த்து சிரித்தாள் என்பதற்காக அவள் இச்சபையிலே மானமிழந்து, மரியாதைஇழந்து எல்லோரும் அவளைப் பார்த்துச் சிரிப்பது, நீதியாகாது, தர்மமாகாது. நீ நூற்றுவர்கள் முதல்வன் நீயும் அந்தக் கள்ளச் சகுனியும் கேட்டுக்கொண்டதற்கு இணங்க அவர்களை மணிமண்டபம் பார்க்க அழைத்தோம். மண்டபம் பார்த்தார்கள். சந்தோஷமாக விருந்துண்டார்கள். ஆனால் பொழுது போக்கிற்காக, சூதாட்டம் என்று வாய்கூசாமல் கூறிவிட்டு இப்படி அவர்களை அடிமையிலும் கேவலமாக நடாத்துகின்றாயே இது நமக்குத்தேவையில்லை. வேண்டுமென்றால் அவர்களது சொத்துக்கள், உடைமைகளைக் கைப்பற்றிக் கொள். ஆனால் பாஞ்சாலியை ஒன்றும் செய்யாதே. அவள் மேல் கைவைக்காதே.

துரியோதனன் - தந்தையே நீங்கள் பேசாதிருங்கள். உங்களுக்கு கண்ணும் தெரியாது ஒரு மண்ணும் தெரியாது. இங்கு என்ன நடக்கின்றது? என்பதுவும் புரியாது. இந்தச்சிறுக்கி பாஞ்சாலி ஒருவருக்கல்ல இருவருக்கல்ல 5 பேர்களுக்கு மனைவி. எங்கேயாவது ஒரு பெண் 5 பேருக்கு முந்தானை விரிப்பாளா? சொல்லுங்கள் தந்தையே. இவள் அன்று அந்த ராஜசூய யாகத்திலே எப்படி என்னைப் பார்த்துச் சிரித்தாள். ஏகடியம் பேசினாள் அங்கதம் சொன்னாள், எள்ளி நகையாடினாள் என்பதெல்லாம் உங்களுக்குத் தெரியாது. உங்கள் செவிக்கு இதுவரையில் எட்டியிருக்காது.

விகர்ணன் - அண்ணா - நீங்கள் கூறுவது சரியில்லை. செய்வது அதைவிடச் சரியில்லை. உங்கள் சொல்லுக்கும் செயலுக்கும் நிறைய வித்தியாசமிருக்கிறது. எந்த அரசனாவது தனது மனைவியை பணயப்பொருளாக வைத்துச் சூதாடுவானா? என்ன செய்வது விதி அவர்களை அப்படிச் செய்ய வைத்திருக்கிறது. பாஞ்சாலி கூறுவது நூற்றக்கு நூறுவீதம் சரி. தருமராஜா தன்னைச் சூதாட்டத்திலே இழந்ததின் பிறகு அவருக்கு சூதாடுவதற்கோ அல்லது பணயப்பொருளாக பாஞ்சாலியை அடகுவைப்பதற்கோ சட்டரீதியாக எந்த உரிமையும் அவருக்கு இல்லை. அப்படித்தான் தவறான முறையிலே பணயம் நடந்து முடிந்தாலும் இத்தனை வித்தகர்கள், விற்பன்னர்கள் கூடியிருக்கும் சபையிலே, சூதாட்டத்திலே அவள் விலைப்பட்டாலும் கூட அவளுக்குத் துகில் உரிவது காட்டுமிராண்டித்தனமான செயல். எந்த ஒரு பெண்ணுக்கும் அப்படி நடக்கக்கூடாது. கணவன் மனைவி உறவில்கூட மனைவியின் சம்மதமின்றி கணவன் பலாத்காரமாக அவளோடு அன்பு செய்ய எத்தனித்தால் அது இன்பச் சேர்க்கையுமல்ல உண்மையான கூடலும் அல்ல அது இன்னல் நிறைந்த பலாத்காரக்கற்பழிப்பு. அவள் துருபதராஜாவின் மகள். பாண்டவரின் மனைவி. இரண்டு வகையிலும் அவள் ஒரு ராஜபரம்பரை, கௌரவர்கள், கண்ணியமானவர்கள், அவளுக்கு இப்படியொரு பச்சைத்தனமான ஈனச்செயலை செய்வது, கடைந்தெடுத்த அநீதி, சொல்லமுடியாத அவமானம், மட்டுமல்ல பெண்ணடிமைக்கு வழிகோலும் மூடத்தனம். உலகத்தில் எங்குமே நடக்காத ஒரு செயல். எனவே பாவம், தயவுசெய்து அவளை விட்டுவிடுங்கள். நீங்கள் நாட்டிலே நல்ல மதிப்பைப் பெறுவீர்கள்.

கர்ணன் - விகர்ணா நீ சொல்வது சரியில்லை. உனக்கு என்ன அறிவிருக்கின்றது? நீ துரியோதன மன்னனின் நூறாவது தம்பி. நேற்றுப் பெய்த மழைக்கு இன்று முளைத்த காளானைப் போன்றவன். சபையில் இத்தனைக் கற்றவர்கள் வித்தகர்கள், மன்னர்கள் அத்தனைபேரும் ஆட்டுமந்தைகள் போலிருக்க உனக்குமட்டும் ஏன் யாருக்குமில்லாத அருகதை? எப்படிவந்தது இந்தத் துணிவு உனக்கு. நீ இன்னமும் மீசை கூட அரும்பாத இளைஞன். நீ பாஞ்சாலியின் அழகில் மையல் கொண்டு இப்படிக் கதை பேசுகின்றாய். அது இளைஞர்களுக்கே உரிய இயல்பு. பாண்வர்கள் இப்போது எமது அடிமைகள். அடிமைகள் மார்பிலே துணியைத் தாங்கமுடியாது.

அரசர்களுக்கு முன்னாலே அவர்கள் அப்படி நிற்கமுடியாது. மட்டுமல்ல இவள் சீரிய மகள் இல்லை. ஒருவர், இரண்டுபேர் அல்ல ஐவரைக் கலந்த தேவி. யாரங்கே துச்சாதனா மாடு நிகர்த்தவன். ஈரற்கறியையும் கள்ளையும் எப்போதும் விரும்புவன். பாண்டவர்கள் மார்பில் அணிந்திருக்கும் துணியையம் களைவாய். பாஞ்சாலியின் சீலையையும் உரிவாய். உடனே செய்.

காந்தாரி - *(அரியாசனத்திலிருந்து கண்களை அவிழ்த்துக் கொண்டு இறங்கி ஓடிவரல்)* துச்சாதனா! வேண்டாம் இந்தக் கொடிய செயல். தட்டிக்கேட்க யாரும் இல்லையென்றா இப்படித் தடியெடுத்தவர்கள் எல்லாம் வேட்டையாடுகின்றார்கள். அவள் ஒரு பெண். சாதாரண பெண் அல்ல ராஜபரம்பரை. தயவுசெய்து நான் சொல்லுவதைக்கேளு. உன்னைப் பெற்றெடுத்த தாய் கேட்கின்றேன், உன்னை ஈன்று சீராட்டி தாலாட்டி வளர்த்தவள் கேட்கின்றேன் தயவுசெய்து உன் கறைபடிந்த கரங்களால் அவளைத்தொடாரே. அவள் சுட்டெரிக்கும் தீ மட்டுமல்ல யாகத்தீ! உன்னை மட்டுமல்ல இந்த அத்தினாபுரத்தையே எரிக்கும் நீ நீ அவளைத் தொட நான் விடமாட்டேன். தீ அளவோடு எரிந்தால் அது விளக்கு - அளவுக்கு மீறினால் அது நெருப்பு. நீங்கள் வீணே அழியப்போகின்றீர்கள்.

துச்சாதனன் - அம்மா! பிறந்தவன் எவனும் ஒருநாள் மடிய வேண்டியவன்தான். நாங்கள் அழிந்தாலும் பரவாயில்லை. இந்தச்சிறுக்கியைச் சும்மாவிடக்கூடாது. தயவுசெய்து நீங்கள் இந்த இடத்தை விட்டுப் போய்விடுங்கள். அனாவசியமாக இதில் தலையிடாதீர்கள்.
***(பிடித்துத்தள்ளிவட்டு - பாஞ்சாலியின் சீலையை உரிதல். துரியோதனன் கர்ணன் சகுனி ஆகியோர் எக்காளமிட்டுச்சிரிக்க பாண்டவர்கள் தலைகுனிந்து மௌனமாக அழுது கொண்டிருத்தல்)***

பாஞ்சாலி - (தன் இரு கைகளாலும் சீலையைப் பற்றிக்கொண்டே)
அச்சச்சோ! தேவர்களே இந்த அநியாயத்தைத் தட்டிக்கேட்போர் யாருமில்லையா? ஐயகோ! வானமே நீ இடிந்து வீழமாட்டாயா? வீழ்ந்து இவர்களை இந்தப்பாவிகளைத் தூர்க்கமாட்டாயா? மலைகளே நீங்கள் பெயர்ந்து எழுந்து சரிந்து இவர்களை மூடமாட்டீர்களா? ஆழ்கடலே நீ அலையலையாய் பொங்கியெழுந்து இவர்களை அழிக்கமாட்டாயா? ஹரி! ஹரி!! அன்று முதலையின் வாயில் சிக்கிய யானையின் பிளிறலைக் கேட்டு உடனே யானையை முதலையின் வாயில் இருந்து காப்பாற்றினாயே! இப்பொழுது வஞ்சகக் கௌரவர்கள் என்ற முதலைகளின் வாயிற்சிக்குண்டு மீளமுடியாமல் அழுகின்ற இந்தப்பாவியைக் காப்பாற்ற ஓடிவா கண்ணா! கரிய நல் நிறமுடை யகண்ணா! அன்று அந்தக்காளிங்கன் என்ற அரக்கப் பாம்பின் தலையில் நடம்புரிந்து தேவர்களைக்காத்தவனே என்னைக் காப்பாற்ற ஓடிவா இறைவா! ஹரி எங்கேயிருக்கின்றான் என்று கேட்ட இரணியனின் மகன் பிரகலாதன் - அவன் தூணிலும் உள்ளான் துரும்பிலும் உள்ளான் என்ற பிரகலாதனைக் காப்பாற்ற நரசிங்கமூர்த்தி அவதாரமெடுத்து தூணிலிருந்து நரசிங்கமூர்த்தியாக தோன்றி இரணியனைப் பிளந்து இரண்டு துண்டுகளாக கிழித்து எறிந்தவனே மாதவா இப்போது வந்து மனித உருவிலிருக்கும் மாகொடிய பாவிகளைக் கிழித்து எரியமாட்டாயா? இராவணன் என்னும் அரக்கனை இலங்கையில் அழிப்பதற்காக இராமனாக அவதாரமெடுத்தவனே இந்தவேளையில் ஓடிவாகண்ணா! முரளீதரா என் மானத்தைக் காப்பாற்று. பெண்ணிற் பெருந்தக்கதாயுள்ள என் கற்பினைக் காப்பாற்று. நீலவண்ணக் கண்ணா? கோபியர் கொஞ்சும் கோபாலா! ஓடிவந்து இந்தத் துஷ்டர்களை ஒழித்து விடு கண்ணா. கருமை நிறக்கண்ணா, சக்கரமேந்திநின்றாய் கண்ணா! சார்ங்கமென்ற வில்லினைக் கரத்துடையாய் கண்ணா! அட்சரப்பொருளுடையாய் கண்ணா! ஆதியில்லா ஆதியப்பா கண்ணா! அக்கர அமுதுண்ணும் பசுங்குழந்தாய் கண்ணா! துக்கங்கள் அழித்திடுவாய் கண்ணா! தொண்டர்கள் கண்ணீரைத் துடைப்பனே! ஓடிவா!

இந்தப்பாதகள் செயலுக்கு ஒரு முடிவுகட்டு. இவர்கள் கொடுமையை அழித்திடு. வானத்துள் வானாவாய் கண்ணா. ஆகாயம், தீ, நீர் மண் - காற்று இவைகளில் கலந்துள்ளாய் கண்ணா! மோனத்துள் அமிழ்ந்திருக்கும் தவமுனிவர் தம் அகத்தினில் ஒளிர்ந்திருப்பாய் கண்ணா! ஞாத்துறைபவனே கண்ணா! கண்ணா என்னைக் காப்பாற்று - என் மானம் போகப்போகின்றதே அதற்குமுன் ஓடிவா கண்ணா!

அரரீரி - பாஞ்சாலி! நீ சீலையை உன் சக்தியை மட்டும் நம்பி இறுகப் பற்றியிருக்கின்றாய். சீலையை இறுகப்பிடித்திருக்கின்ற உன் கரங்களை எடுத்துவிடு. மேலே உயர்ந்து! இறைவனிடம் சரணாகதியாகிவிடு. உன் சக்தியை நம்பாதே! இறை வல்லமையை நம்பி, எடு உன் கரங்களை. விடு உன் பற்றினை. முற்றிலும் இறைவனைச் சரண் அடை. உலகத்தை மற மறந்து அவனது உட்சோதியில் கலந்துவிடு. நீயே இறைவன்! நீதான் நீ என்ற அது. நீயே சக்தி.

***(பாஞ்சாலி இருகரங்களையும் மேலே உயர்த்தி)*** கண்ணா! முரளீதரா! என்னை மன்னித்துவிடு. இதுவரையில் உன்னை நம்பவில்லை. இப்பொழுது உன்னையே முற்றிலும் நம்பினேன். உன்னையே சரணடைந்தேன். மதுசூதனா! மாயவா! இனிப்பயமில்லை. என்பகைவர்களை அழித்துவிடு. தீமையை ஒழித்துவிடு. வெற்றி! வெற்றி முரளீதரா! (நீல ஒளி பாஞ்சாலியின் முகத்தில் படுதல். துச்சாதனன் சீலையை உரிய உரிய பலநிறங்களில் சீலை வந்து கொண்டேயிருத்தல். துச்சாதனன் மயங்கிவிழுதல். திரும்ப சிவப்பு ஒளி கௌரவர்கள் முகத்தில் படுதல். அவர்கள் எல்லாரும் மயங்கிவீழ்தல்)

## வீரசபதம் - இறுதிக் காட்சி

வீமன் - ஜெய் பராசக்தி! இந்த விண்ணின் மேல் ஆணை. நான் பிறந்த மண்ணின் மேல் ஆணை. பராசக்திமேல் ஆணை. எங்கள் மன்னனாம் செந்தாமரை மலர்மேல் உறையும் மாயக்கண்ணன்மேல் ஆணை. எங்களின் பேணும் பெருந்தவத்தாள் பாஞ்சாலியைத் தன் தொடை மேல் வந்து அமரச்சொன்னானே அந்த நாய் மகனாம் துரியோதனை அந்தப்போரிலே! மாமன்னர்கள் பார்த்திருக்க அவனுடைய துர்க்குண தம்பியர்கள் அவனைச் சூழ்ந்திருக்க அவன் தொடையைப் பிளந்து உயிர்குடிப்பேன். இது என் தாய்மேல் ஆணை. ஜெய் பராசக்தி!

அர்ச்சுனன் - ஜெய் பராசக்தி! விஷ்ணுவின் அவதாரம், என் கார்முகில் கண்ணன், மணிவண்ணன் மேல் ஆணை, என் காண்டீபம் மீது ஆணை, என் ஆருயிர் மனைவி பாஞ்சாலியின் சீலையை உரியும்படி கர்ச்சித்த அந்தக்கர்ணனைப் போரில் மடியச் செய்வேன். என் காண்டீபம் அவன் உடலைத் துளைத்து உயிர்குடிக்கும். இது சத்யம், சத்யமே வெல்லும் ஜெய் பராசக்தி!


பாஞ்சாலி - ஓம் தேவி பராசக்தி, ஜெய் பராசக்தி! எந்தன் சீலையில் கைவைத்து என்னை மாடுபோல் வீதிதோறும் இழுத்துவந்தானே அந்தப்பாவி துச்சாதனன் அந்தப்பாவியின் சிவந்த இரத்தம் அந்தப்பாழ்படுவான் துரியோதனனின் உடம்பிலிருந்து அருவிபோல் பீறிட்டுவரும் செங்குருதி இரண்டையும் கலந்து நறு நெய்பூசி, சந்தணம் வார்த்து, அகிற்புகை மணக்க, என் கூந்தலை முடிவேன். அதுவரை என் கூந்தல் அவிழ்ந்து கலைந்து இந்தப்பாவிகளின் கொடுமையை பேய்மாதிரி பறைசாற்றும். என்விழிகள் உருண்டு பிறழ்ந்து காண்பவரைப் பயமுறுத்தி விழித்தெழச்செய்யும். என் நாக்கு வெளியில் துருத்திபோல் நீண்டு காளிபோல் மாறி ஊழிக்கூத்தாடுவேன். இது சத்தியம். ஓம் சக்தி! ஓம் சக்தி! ஓம் சக்தி! ஜெய் பராசக்தி!

- முற்றும் -

# ஈழம் கண்ட

# சோழன்

(மரபுவழி நாடகம்)



**பாத்திரங்கள்:**
எல்லாளன்
கெமுனு
கவந்தீசன்
அமைச்சர்
தூதுவன்
சத்ததீசன்
போர் வீரன்
மைந்தன்
பெண்
விகாரமாதேவி
பிக்கு

வரலாற்றுப் பெருமையும் இலக்கியப் பாரம்பரியமும் நிறைந்த தமிழ் அன்னையின் சரித்திரத்தின் இதிகாச புருஷர்கள், சரித்திர நாயகர்கள், சேர, சோழ, பாண்டியர்கள். இவர்கள் மட்டும் அன்று தங்கள் வாழ்நாளை போராட்டத்தில் கழித்திருக்காவிட்டால் தமிழர்களாகிய யாம் இன்று இந்த ஈனநிலை அடைந்திருபோமா. மூன்று மன்னர்களில் சோழனுடைய காலம் ஒரு பொற்காலம். தன்னிழல்படாத தஞ்சை பெரிய கோவிலை அமைத்துப் பெயர் கொண்டான். ராஜராஜ சோழன் போர்களிலே அழியா வெற்றியை பெற்று சரித்திரத்தைப் புதுமையாக்கினான். பொன்னியின் செல்வன் மதுராந்தக சோழன் ஒரு கன்றினை மைந்தன் கொன்றதற்காக தேரினை ஏற்றி தன்மைந்தனையே கொன்று நீதிக்கு இலக்கணம் அமைத்தான் சோழன் இரண்டாம் இராஜராஜன். அதே பரம்பரை வழிந்து இலங்கையில் படை எடுத்து அனுராத புரியை தலை நகராகக் கொண்டு ஆட்சி புரிந்து வந்தான் சோழ மன்னன் எல்லாளன். தினவெடுத்த தோள்கள் தீட்சணியமான கண்கள், ஒரு வாளைச் சுழற்றும் விசையினிலே இந்த வையத்தையே வெற்றி கொள்ளும் பராக்கிரமம். அன்று சிங்கள மக்களும் தமிழர்களும் பகையின்றி பசியின்றி அன்போடு அறத்தோடு, பண்போடு, பாசத்தோடு வாழ்ந்தார்கள். புத்த கோவில்களைக் கட்டினான் தாதுகோபுரங்களை எழுப்பினான் அப்பொழுதுதான் கவந்தீசன் மகன் கெமுனு சாதாரண கெமுனு அல்ல துட்ட கெமுனு சிங்கக் குருளையாக வளர்ந்தான். தமிழர்களை வெறுத்தான். அவர்களை பழித்தான். பகைத்தான். கி. முன் 3ம் நூற்றாண்டு தமிழர்களுக்கு எதிராக படை திரட்டினான். வாடா போருக்கு என்று எல்லாளனோடு சூழ் உரைத்தான். மறத்தமிழனா போருக்குப் பயப்படுவான். போர் என்றால் தமிழனுக்கு வெண்ணிலாச் சோறு. ஒரு நாள் இருவரும் இரு துருவங்களாக போர் முனையில் சந்தித்தனர். அப்போது.....

# காட்சி - 01

போர் வீர 1 - அட்டத்திக்கு எங்கும் கொட்டி முரசொலிக்கும்
வெற்றிக் கொடி நாட்டும் வீர தீர மன்னன்

போர் வீர 2 - ஈழநாட்டினிலே சாதி பேதமின்றி வேளம்
போன்றதொரு சோழ தயாழன்

போர் வீர 1 - வாய்மை நெறியுடனே

போர் வீர 2 - நேர்மை நீதியுடனே

போர் வீர 1 - வாய்த்த தமிழ் மன்னன்

போர் வீர 2 - எல்லாள மாமன்னன்

போர் வீர 1 - ராஜ ராஜ

போர் வீர 2 - ராஜ கம்பீர

போர் வீர 1 - ராஜ பராக்கிரம

போர் வீர 2 - ராஜ மார்த்தாண்ட

போர் வீர 1 - வீர தீர

போர் வீர 2 - எல்லாள மாமன்னன் வருகிறார் வருகிறார்....

(டோல்கி, மத்தளம், தவில் எல்லாவற்றையும் ஒருமித்து அடிக்க வேண்டும்.
கடைசியில் டிஷ் அடிக்க வேண்டும்.)

அவையோர் - கதிர்வேலுக் கெதிர் வேலுக் கில்லை யென்று
சொல்லும் கதிர்காமக் கடவுளே போற்றி

கந்தமலர் சந்தனமும் மங்களமாய்
பொங்குகின்ற கற்பூர திலகனே போற்றி

ஆறுபடை வீடுடையாய்
வீறு தமிழ் பேறுடையாய்
தன் மான உணர்வுடையாய் - போற்றி

*(ஆலய மணி ஒலித்தல்)*

எல்லாளன் - அம்பிகைதனையனான அருள் பொளி குருவே
கோனே ஆறிரு கரத்தோன் நீயே
ஆடரி திருவே தேவே
வள்ளியின் மணவாளா நீ வழங்குவாய்
நீதி நெறியை உள்ளமே எழுந்தருள்வாய்
குகனே குமரா முருகா.

வசனம் - முருகா முன்னைப் பழம் பொருளிலும் மூத்த நல் முதல்வனே, கதிரமலைக் கந்தா, வேலும் வாளுமுடைய வீரனே
தமிழாட்சி ஓங்குகின்ற என் ஈழத்திருநாட்டிலே வற்றாத வளநதியாம் மகாவலியாறு பொங்கி எழுந்து புனல் பரப்பும் இப்புனித நகரிலே வாய்மை எங்கும் வளம் பெற வேண்டும் அக்கிரமம், அராஜகம், அநீதி இவைகள் அகன்று அன்பாட்சி அருளாட்சி மலர வேண்டும். பௌத்தமும் தமிழும் பாங்கோடு இணை வேண்டும். இங்கு இன மத பேத மின்றி யாதும் ஊரே யாவரும் கேளீர் என்ற புறநானூற்றின் இலட்சியம் மிளிர்ந்து அருள் செய்வாய் அப்பனே.

அமைச்சர் - மன்னா எல்லா மன்னா

எல்லாளன் - அமைச்சர் அறவாளியா, வாருங்கள், வாருங்கள்
என்ன இது உதட்டிலே பதட்டம், உள்ளத்திலே நடுக்கம்

அமைச்சர் - அரசே நமது ஆட்சிக்கு எதிராக

எல்லாளன் - எதிரும் புதிரும் என் ஈழத்திருநாட்டிலா, அதுவும் எனது ஆட்சியின் கீழ் இல்லை இங்கு மன்னனும் மக்களும் ஒரே நிலை

அமைச்சர் - உண்மை உண்மை நூற்றுக்கு நூறு உண்மை. ஆனால் ஒன்று உருவாகி உள்ளது. அது இங்கு இல்லை அரசே உறுகுணையில்.

எல்லாளன் - எப்படி கூறுங்கள் அமைச்சரே

அமைச்சர் - மன்னா இன்று நமது நாட்டில்

**பாடல்**

*துயர் சூழ்ந்ததே மன்னா*
*நம் நாட்டில் துயர் சூழ்ந்ததே*
*வாழ்வை அழிக்க வொரு*

*மனம் தளராது மான்புடனே அங்கு - 3 (துயர் சூழ்ந்ததே)*
*ஈனமானதொரு வீணனால் நம் நாட்டில் பகைமூழ்வதோ - 2*

*கெமுனு உள்ளத்தில் பகை - 2*
*கனலாய் எரியுதே - 2*
*கவந்தீசன் வீட்டினிலே*
*காட்சியும் மாறுதே*
*வளர்ந்திடும் சோழனின்*
*மாபுகழ் மங்கவே - 3*

*ஈனமானதொரு வீணனால்*
*நம் நாட்டிலே பகை மூழ்வதோ - 2*
*துயர் சூழ்ந்ததே....*

அமைச்சர் - மன்னா, மனுநீதி கண்ட சோழப் பெரும் தலைவனே, கவந்தீசன் மகன் கெமுனு கட்சிப்பேதம் பேசத் தொடங்கிவிட்டான். ஒரு பக்கம் கடல் என்கின்றான். மறுபக்கம் மகாவலி கங்கைக்கு வடக்கே இருக்கும் எமது அரசைச் சுட்டிக்காட்டி

எல்லாளன் - என்ன சொன்னான்

அமைச்சர் - தமிழன் என்கின்றான். படையைத் திரட்டுகின்றான் அணியைப் பெருக்குகின்றான், இந்த தமிழர் ஆட்சியை ஒழிக்காமல் தூங்கவே மாட்டேன் என்கின்றான் அரசே

எல்லாளன் - முருகா, கதிரமலைக் கந்தா ஒரே நாட்டிலே பேதம். இரண்டு கண்களிலே ஒன்றுக்கொன்று பகை. ஒன்றாக இருந்தோம், ஒரே ஈழத்தைக் கட்டிக் காற்பதற்காக செங்குருதி சிந்தினோம். கண்ணீராலும் செந்நீராலும் சுதந்திரப் பயிரை வளர்த்தோம். ஆனால் இன்றோ மொழி வெறி, சிங்களம் தமிழ் என்ற இனத் துவேஷம் பார்ப்பேன் அதையும் பார்ப்பேன் அதையும்

**பாடல்**

*ஆ காட்சியும் கொள்கையும்*
*கபட நாடகமும் நிச்சயம்*
*இங்கு நிலை பெறுமா - (இதை)*
*எண்ணிப்பாராமல் போராடும்*
*வேந்தனால் பலனற்று மாறிவிடுமா*

*தீங்கானதே இனப் பேதம்*
*இது நீங்காவிடில் துன்ப கீதம்*
*(என்றும்) தீங்கானதே இனப் பேதம்*

*பாங்கான ஈழமே*
*பண்பற்றுக் கெடுமே*
*தீங்கான நிலைமாறி*
*நிம்மதி கெடுமே*
*நிகர் ஏது இனியும் புவிமீது - 2 இனி*
*இனமும் மதமும் இணைந்திடும் நோக்கில்*
*தினமும் மனதில் சிந்தனை கொள்வீர்*
*(என்றும்) தீங்கானதே இன பேதம்*

எல்லாளன் - சரி இன்று நாம் அனைவரும் வீடு திரும்பலாம் நாளை எமது சபா மண்டபத்தில் ஐம்பெருங் குழு கூடட்டும். மறத்தமிழனின் வீரத்திற்கு ஒரு சவால் என்றால் அல்லது ஒரு அறை கூவல் என்றால் அதை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்

வது தான் எமது பண்பு. மட்டுமல்ல அது
தமிழனின் இரத்தத்தில் உறைந்து விட்ட
பண்பாடு. கெமுனுவின் பகையை கால
கெதியில் பார்த்துவிடலாம். இம், வாருங்கள்

## காட்சி - 02

*(பிரதம பிக்குகளை வரவழைத்தல்)*
*(கவந்தீசன், கெமுனு, சத்த தீசன்)*

அவையோர் - புத்தம் சரணம் ஹச்ஹாமி
சங்கங் சரணங் ஹசிஹாமி

கவந்தீசன் - (கைதட்டல்) யாரங்கே, நமது மல்வத்த பீட பிரதம
பிக்குகளை அழைத்து வாருங்கள்.
கெமுனு, சத்ததீச நீங்கள் இருவரும் எமது விஜய
பாரம்பரியத்தின் சிங்கக் குட்டிகள் மட்டு மல்ல
நமது பௌத்த மதத்தையும் அரசியல் சாசனத்தையும்
எமது தாய் மொழியாகிய சிங்களத்தையும் கட்டிக்
காக்கப் போகின்றவர்கள். இவைகளை அடிப்படை
யாக வைத்து புத்தமதம் சாட்சியாக இன்று நீங்கள் மூன்று சத்தியங்களை
ஏற்றுக் கொள்ள வேண்டும்

கெமுனு, சத்த- ஆமாம் தந்தையே அப்படியே செய்கின்றோம்

கவந்தீசன் - சரி, 1வது இதோ காவி உடை தரித்து இப்போது
எங்கள் முன் காட்சியளிக்கின்றார்களே இவர்கள்
தான் எமது பௌத்த மதத்தைக் கட்டிக் காப்
பவர்கள் இவர்களை நீங்கள் ஒருபோதும்
பகைக்காது உங்கள் கண்ணின் தெய்வமாக
வே போற்றி வாழ வேண்டும்.

கொமுனு, சத்த - ஆம் தந்தையே

கவந்தீசன் - 2வது நீங்கள் இருவரும் எம்மிடையே எப்
போதும் அன்போடு வாழ்பவர்கள் உங்கள்
இருவருக்குமிடையில் எவ்வித பகைமை
உணர்வோ, போட்டியோ, பொறாமையோ
இருக்கக் கூடாது.

கெமுனு, சத்த- ஆமாம் தந்தையே கூறுங்கள்

கவந்தீசன் - சபாஷ் மிக்க நன்றி
3வது தமிழர்கள் எமது அயலவர்கள்
எம் இனத்தைப் போன்று பழமையும் பெருமையும்
பாரம்பரியமும் உடையவர்கள் அவர்களை
நீங்கள் ஓர்போதும் பகைக்கக் கூடாது.

| | | |
|---|---|---|
| கொமுனு, சத்த | - | இல்லை. இல்லை ஒருபோதும் இல்லை<br>தமிழர்கள் எமது பரம்பரை பகைவர்கள் |
| கெமுனு | - | அவர்களை போர் முனையில் சந்தித்து<br>பூண்டோடு அழிப்போம். உறுகுணை<br>ராஜரட்டை, மாயரட்டை இவை அனைத்<br>தையும் எமது சிங்கக் கொடியின் கீழ்<br>ஒரே இராட்சியமாக மாற்றுவோம் இது<br>சத்தியம் |
| கவந்தீசன் | - | கெமுனு, கெமுனு, மகனே |

**பாடல்**

*தந்தை சொல் மீறி நீயும்*
*தரணியில் வாழ்தல் நன்றோ*
*எந்தை போல் எமது வாழ்வில்*
*எம்துயர் துடைத்த மன்னன்*
*என் மதி கேட்டு நீயும்*
*ஈந்து நல் சமயம் காத்து*
*வந்த எல்லாளனோடு*
*போர் செய்தல் நியாயந்தானோ*

## காட்சி - 03

***(விகாரமா தேவி, கெமுனு, சத்ததீச)***

| | | |
|---|---|---|
| வி.தேவி | - | கெமுனு! மகனே என் உன் முகம் என்றும் இல்லாதவாறு<br>இன்று வாடியிருக்கின்றது |
| கெமுனு | - | வாடி, சோர்ந்து, வடிவிழந்து, பொலிவிழந்து<br>கூனிக் குறுகாமல் சூரியனைக் கண்ட<br>தாமரை போல் எப்படியம்மா என் முகம்<br>மலர்ந்திருக்கும். நமது நாட்டில் மறுபுறம்<br>ஓயாது கத்தும் மகாவலி ஆறு. மறுபுறம்<br>செருக்கு மிகுந்த திராவிட இனமாகிய தமிழனின்<br>நெருக்கடி இது நமது ஆரிய வம்சத்திற்கே<br>அவமானம் தாங்க முடியாத அவமானம். |
| வி. தேவி | - | இல்லை இல்லை அபந்தம். அப்படி ஒருபோதும் சொல்லாதே மகனே<br>தமிழ் மன்னன் எல்லாளனுடைய ஆட்சியில்<br>நமது சிங்கள நாடு பகையின்றி, பசியின்றி<br>எவ்வளவு சீரோடும், சிறப்போடும் இருக்கிறது<br>அது உனக்குத் தெரியுமா? |
| கெமுனு | - | தெரிகிறது அம்மா தெரிகிறது நன்றாகத்தெரிகிறது.<br>சிங்களம் என்று கூறவே எனக்கு<br>சிறுமையாய் இருக்கிறது. ஆண்டாண்டு<br>காலமாக ஆண்டுவந்த விஜயனுடைய<br>பரம்பரையாகிய நாம் இன்று கூண்டிலே<br>அடைப்பட்ட சிறுத்தைகளாக உணர்ச்சி, |

சுதந்திரம், தன்மானம் இவை ஏதும் அற்றவர்களாக
சுருங்கக் கூறப்போனால் ஆரியர்கள் நாடம்மா
எங்கள் நாடு.

**பாடல்**

*ஆரியர்கள் நாடம்மாதமிழன் எம்மை ஆழலாமோ*
*முந்தையர் மாண்பெங்கே வீரபரம்பரை எங்கே*
*போர் தொடுத்து வந்தவனை புறம்காட்டி ஓட்டிய*
*நாம் வீரமற்று மானமற்று வாழ்வது தான் சரியோ*

*சிங்க வளி தோன்றல் - தமிழன்*
*அடிமை ஆகலாமோ*
*அம்மா விடை தாராய் - தமிழன்*
*தலையை கொணர்ந்திடவே*
*(சிங்க வளி தோன்றல்.....)*

வி. தேவி - **பாடல்**

*மன்னன் எல்லாளனோடு*
*போரிட எழுந்திடாதே*
*மண்ணினில் அறமே வெல்லும்*
*அளிவரே மற்றோர் அன்றோ*
*என்மதி கேட்டு நீயும்*
*நன்மைகள் புரிந்த வேந்தன்*
*தன்னோடு பகையில்லாது*
*அமைதியாய் வாழ் என் மைந்தா*

கவந்தீச - தேவி என்ன இது அன்னைக்கும் பிள்ளைக்
கும் இடையில் அப்படி என்ன தீர்க்க
முடியாத பிரச்சனை

சத்ததீச - பிரச்சனை என்றால் சாதாரண பிரச்சனை
யில்லை அப்பா. நமது ஆரிய குலத்திற்கே
அழிவு ஏற்படப் போகிறது என்று தான்
அஞ்சுகிறார் எனத அண்ணன். ஆதலால்
மகாவலி கங்கைக்கு அப்பால் அரசாளும்
மனுநீதி கண்ட சோழன் எல்லாளனுடைய
ஆட்சிக்கு இன்றே ஓர் முடிவு கட்ட
உறுதி பூண்டிருக்கிறார்

கவந்தீசன் - கெமுனு வாளை வீசிடலாம் வேலைப் பாச்சி
விடலாம் ஆனால் வீரத்திற்கு முன் விவேகம்
வேண்டும்.
எல்லாள மன்னனோ நீதி தவறாதவன் நேர்மை
பிரளாதவன் அவன் தமிழ் மன்னன் என்று இது வரை
யான் அறிந்ததுமில்லை உணர்ந்ததுமில்லை
எதற்கும் சிந்தித்து செயலாற்று

## காட்சி - 04

*(போர்க்காட்சி கெமுனு அணிவகுத்து வருதல்)*

*மாணிக்கத் தீவிலே வாழவந்தார் இன்று*
*மானகர் ஆண்டிட வந்த சோழ நாடாம்*
*அன்னியர் இன்னிலம் கொண்டாரோ இன்று நாம்*
*ஏகுவோம் வாருமே தேடியே*

*போர் செய்யநாம் போர் செய்ய - இன்று*
*வீரமாக இதோ ஏகுவோம்*
*(போர் செய்ய.... மாணிக்கத் தீவிலே....)*

*விரைந்திடும் துணிவுடனே ஏகி*
*இளைஞரே வென்று நாம்*
*வீர வாகை சூடுவோம்*
*சிங்களமாநகர் இன்று தாரணியிலே*
*வீரமாய் ஆளுவோம் விருதி ஏந்தியே*
*ஏகுவோம் வாருமே தோழரே*
*தாதையர் தேடிய நாடல்லா*
*தமிழர் வந்து பிடித்தார்*
*(போர் செய்ய....)*

## காட்சி - 05

*(தந்தைக்கு மகன் கெமுனு தூது அனுப்புதல்)*

தூதுவன் - அரசே வணக்கம்

கவந்தீசன் - யார் நீ

தூதுவன் - உங்கள் ஆருயிர் மைந்தன் இளவரசர்
கெமுனுவின் தூதுவன்

கவந்தீசன் - தூதுவனா உனக்கு என்ன வேண்டும்

தூதுவன் - இளவரசன் மடல் தந்துள்ளார் தங்களிடம்
கொடுக்கும்படி

கவந்தீசன் - (மடல் வாசித்தல்)
எமது தந்தையும் உறுகுணையின் அரசனுமாகிய
கவந்தீச மாமன்னனுக்கு உங்கள்
ஆருயிர் மைந்தன் வரைந்து கொள்வது

சீர்திருத்தப்பட்டு போதிய பயிற்சி அளிக்கப்பட்டு சிங்கள படைகள்
புதுப் பலம் கொண்டிருக்கின்றது.
எனவே தமிழரை இலங்கையை விட்டகற்றி
இலங்கையை ஒரே குடையின் கீழ் கொண்டுவர
இதுவே தக்க தருணமென நினைக்கின்றேன்
எதற்கும் தங்களது மேலான அனுமதியை
வேண்டுகின்றேன்.
இப்படிக்கு உங்கள் மைந்தர். கெமுனு

கவந்தீசன் - கெமுனு, துட்டகெமுனு, குலத்தைக் கெடுக்க வந்த கோடாரிக் காம்பு நாட்டின் இனபேதத்தை உருவாக்கி இலங்கையை பாழ்படுத்த நினைக்கும் பாதகன் அவனை இப்போது என்ன செய்கின் றேன் பார். தூதுவனே மகாவலியாற்றிற்கு அந்தப்பக்கமே போதுமானதென்று அவனிடம் சொல், இம்.

கவந்தீசன் - என்ன?

தூதுவன் - அரசே அனுமதி கிடைக்க மறுத்தால்

கவந்தீசன் - மறுத்தால்

தூதுவன் - இதை தங்களிடம் கொடுக்கும் படி உத்தரவு

கவந்தீசன் - சரி நீ போகலாம் (பார்சலை உடைத்து பார்த்தல்) அணிவதற்கு வளையலும் உடுத்துவதற்கு சேலையும் என்னைப் பேடி என்று எண்ணி விட்டான் போல் தெரிகிறது. அவனை என்ன செய்கின்றேன் பார்

**பாடல்**

*பேடி என்று எண்ணிவிட்டானோ - என்னை*
*அவன் பேடி என்று எண்ணிவிட்டானோ*
*பேடி என்று சொன்னவனை*
*நாடு நகர் தானறிய*
*கூடி எந்தன் வாளால்*
*தலை கொய்திடு வேன்*
*நரர் கண்டிடவே மிக*
*(பேடி என்று.....)*

சத்ததீச - என்ன தந்தையே என்ன அரண்மனை இவ்வாறு அல்லோலக் கல்லோலப் படுகின்றது

கவந்தீச - உனது அண்ணன் கெமுனுவின் துஷ்டத் தனம் அளவுக்கு மீறிவிட்டது. தமிழரை இந்த நாட்டைவிட்டுத் துரத்துவதற்கே கங்கணம் கட்டி விட்டான். இதற்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை.

சத்ததீச - செய்வதற்கு என்ன தந்தையே இருக்கிறது அவனைப்பிடித்து சிறை செய்து விட்டு அவனது பகுதிகளை தீர்க்க வாவியோடு இணைத்து விட்டால்

கவந்தீச - அவனை அவ்வளவு இலகுவில் சிறை செய்ய முடியுமா அவனது அசூரப் படைகள் அத்தனை பலம் வாய்ந்தவை இம் சரி எதற்கும் நாளையே பறை சாற்றுவேன் கெமுனுவை எங்கிருந்தாலும் கைது செய்து

தருபவர்களுக்கு 15 மாணிக்கக் கற்களும் ஒரு போர் யானையும் பரிசு. மகனே நீ சென்று இளைப்பாறு.

## காட்சி - 06

*(ஆராட்சி மணி அடித்தல் எல்லாளன் அமைச்சர் வருதல்)*

எல்லாளன் - அமைச்சரே என்ன இது என்றுமில்லாத வாறு நமது ஆராட்சி மணி அதிகாலையில் இருந்து அலறிக் கொண்டிருக்கின்றது. உடனே சென்று என்னவென்று அறிந்து வாருங்கள் அமைச்சரே நில்லுங்கள் மன்னனைத் தேடி மக்கள் வரக்கூடாது மன்னன் தான் மக்களைத் தேடிச் செல்ல வேண்டும்.

பெண் - **பாட்டு**

*மானிலம் புரக்கும் மன்னவனே*
*மானிலம் தாங்குமோ தெய்வமும் பொறுக்குமோ*
*நீ பலி கொண்டாயோ என் பசுவின் இளங்கன்றை*
*தாக்கியே கொடுமைதனை புரிந்திட்டாயோ*
*ஆராட்சி செய்து நீ அருந்துயர் போக்குவாய்*
*யார் கொலைஞன் என்கன்றை கொன்றவன் யார்*
*பாரிதோ என்கையால் ஆராட்சி மணி அசைத்தேன்*
*உண்மையை அறிந்திடுவாய்*
*அரசன் நீ பிழை செய்யாய்*
*நின் அரசு பொய்யாது நீதியில் தவற மாட்டாய்*

பெண் வசனம் - மன்னா மன்னா மனுநீதி கண்ட சோழத் தலைவனே ஆண்டியையும் அரசனையும் அளவோடு எடை போடுபவனே உனது நாட்டிலே இன்று அநீதி நடந்து விட்டதே

எல்லாளன் - தாயே அநீதி நடந்து விட்டதா எம் நாட்டில் அநீதி நடந்து விட்டதா கூறுங்கள் தாயே கூறுங்கள்

பெண் - இன்று மாலை உனது மைந்தன் தனது மணித்தேரில் பவனிவரும் போது எனது பசுவின் கன்றை கொன்று விட்டானையா. கொன்று விட்டான் தனது கன்றைக் காணாத பசு கதறி அழும் புலம்பலை காது கொடுத்துக் கேட்டால் வேண்டாம், வேண்டாம். நானே கூறுகின்றேன்.

**பாடல்**

*நீயே துணை மன்னவா நல்ல நீதி அருள் மன்னவா*
*எனக்கு நீயே துணை மன்னவா*

*எல்லாள மன்னனே உன்னரும் புதல்வரே*
*தேர்க்காலில் பசு கன்றினைக் கொன்றானே*
*நீயே துணை மன்னவா.....*

*ஆவியை இழந்து அழுதிடும் பசுவின்*
*நோயினைத் தீர்க்கவே நீதியே புரிவாய்*
*மேதினி புகழ்ந்திடும் சோழர்கள் தலைவா*
*எம் துயர் துடைப்பாயோ நல்வகை புரிவாயோ*
*நீயே துணை மன்னவா.....*

*ஏழையர் வாழவும் நின்னருள் பெறவும்*
*செய்வாய் நீயே எந்தன் மன்னா நீயே*
*எனக்கு நீயே துணை மன்னவா.....*

எல்லாளன் - தாயே அப்படியே ஒரு புறாவின் உயிருக்காக
தன் உடலை அர்ப்பணித்தான் சிபி சக்கரவர்த்தி
அதே பரம்பரை பரம்பரையாக வாழையடி வாழை
யாக வந்தவன் தான் இந்த எல்லாள மன்னன்.
எனது ஆட்சியில் மகனாக இருந்தா லென்ன
மனைவியாக இருந்தாலென்ன, பசுவாய் இருந்தால்
என்ன, பறவையாய் இருந்தாலென்ன எல்லாம்
ஒரே நிலை நீதியின் முன் அனைத்தும் சமன்
அமைச்சரே நீங்கள் இன்று அங்கு சென்று

எல்லாளன் - **பாட்டு**
*அழைத்திடுவீர் மைந்தனை - அவன்*
*ஆவியைப் போக்கவே*
*தாரணி மீதிலே அழைத்திடுவீர் மைந்தனை*

*மன்னன் மகன் என்ற ஆணவத்தால்*
*கன்றினைக் கொன்றிட்டான்*
*தன்பிழையாள் எந்த உயிருக்கும்*
*நீதி செய்திடுவீர்*

*எனையில்லாததொரு மன்னன் இல்லையே*
*மண்ணில் மனுநீதி தன்னை செய்யவே*
*அழைத்திடுவீர் மைந்தனை.*

***(மகனை அழைத்து வரல்)***

எல்லாளன் - மகனே நீ நோற்று மாலை
ஏனோகன்றினையைக் கொன்றாய் நீ மகனே
வீணான பாவத்தை நீ செய்தாயே மகனே
பொங்கிடும் கோபத்தை நீ பாராய்நீ மகனே
வெம்பிடும் பசுவின்துயர் துடைப்பேன் நான் மகனே

மகன் - ஆமாம் தந்தையே எமது மணித்தேரிர் கானகத்திற்கு வேட்டை
ஆடச் சென்றிருந்தேன்

எல்லாளன் - நீ வேட்டையாடச் சென்றது எனக்குத் தெரியும்
ஆனால் உனது தேர்க்காலின் மாண்ட உயிர் வேட்டை

மகன் - போகும் வழியில் ஒரு பசுவின் கன்று எனது
தேர்க்காலில் விழுந்து இறந்து விட்டது.

எல்லாளன் - ஒரு பசுவின் கன்றாக இருக்கலாம் ஆனால் விலை மதிக்க முடியாத
உயிர் இன்று உனது வேடிக்கையினால் உயிர்நீத்திருக்கின்றது
அதுவம் இந்த எல்லாளனுடைய ஆட்சியில். அமைச்சரே அறங்கூறும்
அறிவாளரே இதற்கு என்ன செய்யலாம் என்று கூறுங்கள்.

அமைச்சர் - கூறுவதற்கு என்ன மன்னா இருக்கின்றது
இறந்தது ஒரு சாதாரண பசுவின் கன்றுதானே
அக்கன்றின் பெறுமதியாளவு வேண்டுமென்றால்
இன்னும் கொஞ்சம் கூட பொன் கொடுத்து
விட்டால் பிரச்சனை தீர்ந்து விடும்.

எல்லாளன் - (சிரிப்பு) மந்திரியாரின் மதிநுட்பம் மாண்பு
நிறைந்தது. மட்டுமல்ல மானிலம் பராட்டக்
கூடியது. அமைச்சரே மனுநீதி அப்படிக்
கூறவில்லை. உயிருக்கு உயிர் கன்றுக்கு
கன்று. கன்றை இழந்த பசு தனது கண்ணீரை
பூமி தாய்க்கு காணிக்கையாக கொடுத்தது போல
யானும் அழ வேண்டும். யானும் அத்துயரை
அனுபவிக்க வேண்டும் இல்லாவிட்டால்
எனது ஆட்சியில் நீதி செத்துவிடும்.

(கைதட்டல்) யாரங்கே
நேற்று மாலை பசுவின் கன்று இறந்த அதே
இடத்தல் என்மைந்தனை அழைத்துச் சென்று
தேர்காலில் ஏற்றிக் கொன்றுவிடுங்கள்.

மகன் - **பாடல்**
*அப்பா தருமராஜா அப்பா தருமராஜா*
*இந்த ஏழை முகம் பாருமப்பா*
*தருமராஜா*

எல்லாளன் - இச்சீ......

மகன் - *ஆவதொன்று அறியா இந்த*
*அவனியில் அடியேன் யானும்*
*ஆவலாய் தேரில் ஏறி*
*கானகம் செல்லும் போது*
*ஆவிளங் கன்று துள்ளி*
*அறியாது என் தேரில் மாய*
*ஆவியை போக்க தந்தை*
*அரசனும் பணித்திட்டானே*

*வீரத்தின் விளை நிலமே*
*ஈரத்தை துறந்து நீயும்*
*ஆரம் சேர் மைந்தன் தன்னை*
*பாரினில் இழந்து நாளும்*
*நேர்மையில் நீதியானாய்*
வாய்மை சேர் மன்னனாய்
தூய்மையின் சிகரம் நீயே
துணிவுடன் வாழ்வாய் நாளும்.

## காட்சி - 07

எல்லாளன் - *முருகவேள் ஐயனே குமரா*
*மூர்த்திகள் வேலுறை மெய்யாய் பொருதும்*
*ஈப்போரில் நான் வெல்ல உன்னருள்*
*பொழிவாயே முருகா....*

கெமுனு - வருக வருக எல்லாள மன்னரே வருக
ஈழத் திருநாட்டிலே சிங்கக் கொடி
ஜெகஜோதியாகப் பட்டொளி வீசிப் பறக்க
வேண்டும். தமிழரின் ஆட்சியை ஒழிக்க
வேண்டும் என்ற எனது நெடுநாளைய
ஆசை இன்றுதான் நிறைவேறப்போகிறது
இன்று தான் நிறை வேறப்போகின்றது.

எல்லாளன் - அடேய் இன வெறி பிடித்தவனே உனது
ஆசை அவ்வளவு எளிதில் நிறைவேற முடியா
தடா. கங்கை வென்றவன் கடாரம் வென்றவன்
இமயத்தில் புலிக்கொடியேற்றியவன். தமிழைப்
பழித்த ஆரிய மன்னர்களை வென்று அவர்கள்
தோளிலே கல் சுமத்தி கண்ணகிக்கு சிலை
எடுத்தவன். இந்த வீரத் தமிழன் பரம்பரையைச்
சேர்ந்தவன் தான் நான் அப்படிப்பட்டவனை
வெல்ல நீ கனவு காணாதே

கெமுனு - கனவல்ல தமிழ் மன்னரே நனவு
நீங்கள் அன்று படைதிரட்டி அணிவகுத்து
இந்த பௌத்தர்களின் புனித நகரைக்
கைப்பற்றினீர்கள். அது கிமு 3ம் நூற்றாணள்டு
மங்கி மறைந்து மண்ணோடு மண்ணாய் போய்
விட்டது. இது 6ம் நூற்றாண்டு இன்றே
தமிழர்களின் ஆட்சி அஸ்தமிக்கப் போகி
ன்றது. ஆரம்பமாகப் போகிறது சிங்கள
ஏகாதிபத்தியம். இம் எங்கே

எல்லாளன் - **பாட்டு**
*தமிழன் வென்றனன் என்று இமயத்தில்*
*கொடியேற்றி சிலை தூக்கச்*
*சிறை செய்யுமே சிந்திடு கல்லே*
*சுமத்தித் தன் புகழ் கொண்டனன்*

| | | |
|---|---|---|
| கெமுனு | - | *விஜயன் இன்னிலம் இன்று<br>அடைந்து தந்தனன் அன்று<br>விளங்கும் சிங்கள மல்லவா<br>தமிழனின் ஆட்சி இறங்கும்<br>என் விருப்பல்லாவா* |
| எல்லாளன் | - | *பாடுமே பாடலில் பரணி<br>பாடவே வாளதன் வீரம்<br>சீருறும் என் செயல் தன்னையே<br>நன் மாண்பையெல்லாம் கூறிடும்<br>இவ்வையகம் அல்லவா* |
| கெமுனு | - | *சோழியர் ஆழகை அன்று மாபுரி<br>அனுராதம் வென்றீர் நாளிது<br>உன் அரசில்லையே நீ<br>இல்லையென்றால் வீழ்ந்திடும்<br>வையகமல்லவா - விரைவில் வருவீர்* |
| எல்லாளன் | - | *மதியில் நினைவீர்* |
| கெமுனு | - | *சமரே புரிவோம்* |
| எல்லாளன் | - | *அறமே திகழ்வோம்* |
| கெமுனு | - | *நின்றரங்கில் இன்று போரிட* |
| எல்லாளன் | - | *உந்தனின் வீரம் நின்ரிரங்கும் பலர் ஓடுவார்<br>தமிழன் வென்றன்னஎன்று......* |
| கெமுனு | - | *உடலஞ்சும் செயல் துள்ளும் பலம்<br>கொள்ளும் திடம் வெல்லும் சமர் செய்து<br>பலம் காணுவோம்* |
| எல்லாளன் | - | *மனம் கொள்நின் உடம்பே உன்<br>பலம் கொள்ளா தனம் இன்று<br>கலந் தொன்றாய் சமராடுவோம்* |
| கெமுனு | - | *சமர் செய்து பலம் காணுவோம்<br>இன்றே வா* |
| எல்லாளன் | - | *நன்றே வா* |
| கெமுனு | - | *நீ வா* |
| எல்லாளன் | - | *வா* |
| எல்லாளன் | - | கவந்தீசன் மகனே கபட நாடகமாடாதே<br>எடு உன் வாளை. கலிங்கத்தின் பரணிபாடும்<br>புகழும் மங்காத மறத் தமிழனின் மாண்பினை<br>பத்துப் பாட்டுப் பறை சாற்றும் பாங்கினை |

சிலம்ப சீரும் சீற்றத்தை இன்றே பார்த்து
விடலாம். வெற்றி அல்லது வீர மரணம்.

கெமுனு - (சிரிப்பு) நானும் அதைத்தான் எதிர் பார்த்தேன்
நான் பிறந்ததின் பின் எனது ஈழநாட்டிற்கு லங்கா புரிக்கு
புதிய தோர் வாழ்வு மலர்ந்திருக்கின்றது. நீ
கூறிய காவிய வரலாறுகளெல்லாம் ஏடுகள்
பாடிடும் வெறும் கற்பனை வார்த்தைகள்
இதோ வீரமிகுந்த விஜயனின் வம்ச ஏறு. இன்று
உன் வீழ்ச்சி நூற்றுக்கு நூறு
இம் இதோ

எல்லாளன் - *தோளை நிமிர்த்தி வாளை எடுத்து*
*தொட்டெறி வேல் விடுவேன்*
*கொட்டிட இரத்தம் ஓடிடதத்தும்*
*உன்னிலை நாட்டிடுவேன்*
*உன்னிலை நாட்டிடுவேன்*

கெமுனு - *காளைத் தனத்தில் வாளைச் சுழற்றி*
*கற்சிதமாய் முடிப்பேன்*
*சுற்றி என் சேனை நாற்றிசை எங்கும்*
*நற்புகழ் நாட்டிடுவேன்*

எல்லாளன் - *யானை அடக்கி சேனை ஒடுக்கி*
*மற்சமர் ஈட்டிடுவேன்*
*அச்சமுடன் நீ அல்லல் உற்ரோட*
*இச்சமரை முடிப்பேன்*

கெமுனு - *சீருடன் ஆட்சி நாட்டினில் ஏற்றி*
*சிம்மக் கொடி விடுவேன்*
*வெற்றி என்பக்கம் தோல்வி உன்பக்கம்*
*தன்னிலை நாட்டிடுவேன்*

எல்லாளன் - *திரும்பிச் செல்*


கெமுனு - *திரும்பிச் செல்*

***(வாள் விழுதல்) தாள நடை மட்டும்***

எல்லாளன் - கெமுனு நீ வென்றுவிட்டாயடா
நான் உனது தந்தையை எனது அரசியல்
ஆசானாகவே மதித்தேன் உன் இனத்தவரை
எனது தமிழ் இனத்தவரை விட சீரோடும்
சிறப்போடும் பாதுகாத்தேன். அமுதம் என்று
சொன்ன நீயோ இன்று ஆலாகால விஷமாக
மாறிவிட்டாய்

கெமுனு - புறநாநூறு பேசிய ஈழத்தமிழா எடு உன் வாளை

| | | |
|---|---|---|
| எல்லாளன் | - | ஆ என் தமிழ் தாயே ஈழத்தில் இனி உன் நிலை என்ன விதமாக மாறப்போகிறதோ. |
| ஆண் | - | கெமுனு நில்! நில்! நில்!! |
| பெண் | - | நில் நில் நில் |
| ஆண் | - | வீரனே எங்கே போகின்றாய் |
| பெண் | - | கொலை வெறிபிடித்து எங்கேயப்பா போகின்றாய் |
| கெமுனு | - | யார்? யார் நீ? எங்கிருந்து பேசுகின்றாய். என்னை விட்டு விடு எனக்கு அமைதி வேண்டும் |
| ஆண் | - | அமைதி ஹ ஹஹ அமைதி அதை எங்கே தேடுகின்றாய் |
| பெண் | - | உன் இதயத்தில் கைவைத்துப் பார் - அங்கே அமைதி இருக்கின்றதா? |
| ஆண் | - | உன் மனச்சான்றைத் தொட்டுப்பார் - அது பேசும். கொன்று விட்டாயடா தமிழனை மகாவலியாறு செங்குருதியாக ஓடுகிறது பாரப்பா |
| கெமுனு | - | ஆமாம் கொன்று விட்டேன் எல்லாள மன்னனை இல்லை சிங்களவர்களின் எதிரியைக் கொன்றுவிட்டேன் |
| ஆண் | - | அவன் எதிரியல்லவே நீதி தவறாதவன் நேர்மை பிறழாதவன். தமிழர்களையும் சிங்களவர்களையும் இரு கண்களாக போற்றியவன். அவனா உன் எதிரி |
| கெமுனு | - | ஆமாம் அவன் மாமன்னன் அவனை இந்த நாடு என்றும் மறக்கக் கூடாது! அவனுக்கு இவ் வழியாகப் போகின்ற எல்லோரும் வீர அஞ்சலி செய்ய வேண்டும். முதலில் நான் அஞ்சலி செய்கின்றேன்.<br><br>மாமன்னன் எல்லாளன் - வாழ்க<br>ஈழங்கண்ட சோழன் - வாழ்க |





# புரட்சித் துறவி

(மரபுவழி நாடகம்)

# காட்சி - 01

*(யூதேயாவின் மன்னன் ஏரோது, மனைவி ஏரோதியாள், அமைச்சர் ஆகியோர் சபைக்கு வருதல்)*

வரவு கவி - மதுவினில் மயங்கி நாளும் மங்கையோடுப் பாடி
இதந்தரும் இன்பம் கண்டு எழில் நயங்கொண்டு வாழ்ந்து
மமதை வெறுத்துப்பாரில் மமதையின் உருவங்கொண்டு
சதமென்ன வாழ்ந்த மன்னன் சடுதியல் வருகின்றாரே
(தீர்மானம்)

ஆடற்தரு - நாடுகள் புகழ நானிலம் மகிழ
யூதேயாவின் மன்னன் ஏரோது ராஜன்
எழிற்சபைதன்னில் - பீடுடன் வருகின்றார்
தா தக தாவென திகு திகு திகு திகுவென
தரணியில் வருகின்றார்
தகுர்த்தாம் திமிர்த்தாம் தளங்கு தோமென
தரணியில் வருகின்றார் - நாடுகள்

பாட்டு
தரு - *தாந்தன்ன தாந்தன்ன தாந்தன்ன தாந்தன்ன தனதானா*
*தாந்தன்ன தாந்தன்ன தாந்தன்ன தாந்தன்ன தனதானா*

ஏரோது - வேதம் நிறைந்தொளிர் யூதேயா நாடிது
ஏதுங்குறைகளிங்குண்டோ? துயர்
மேவியே மானிடர் வாடிடப் பாதகர்
தீதுகள் செய்வதுமுண்டோ

வசனம் - அமைச்சரே நமது நாட்டு சீராளர் மலிந்த நாடு
சிறு மதியோர் ஒழிந்த நாடு. பல்குழுவும்
பாழ் செய்யும் உட்பகையும் இங்குண்டோ
அஞ்சாமல் கூறும்

அமைச்சர் - வேந்தே அப்படியொன்றும் நமது நாட்டில் இல்லை ஆனால்.....

ஏரோது - என்ன ஆனால் கூறவந்ததைக் கூறும்
பீடிகை தேவையில்லை

அமைச்சர் - மன்னா நமது நாட்டில்

பாட்டு *நமது நாட்டினில் பகைமையொன்றில்லை*
*பாழும் மடமையுமில்லை - இங்கு*
*புதிய எண்ணங்கள் - புதுமை வண்ணங்கள்*
*புரட்சிக் கீதங்கள் பாரும்*
*தாந்தன்னா..............*

ஏரோதியாள் - மன்னா நான் கூறுகிறேன் கேளுங்கள் அருளப்பன்
என்று ஒரு துறவி ஆனால் அவன் புரட்சிப்
பித்துக்கொண்டு அலைகின்றான். உண்மை என்கின்றான்.
சமுதாயம் என்கின்றான் நன்மை என்கின்றான் தீமை என்கின்றான்
யூதேயாவின் மன்னன் உங்களையே தன் சுட்டு விரலால் சுட்டிக்
காட்டி அண்ணன் மனைவியை நீங்கள் அபகரித்து
விட்டீர்கள் என்றல்லாவா கூறுகின்றான்.

ஏரோது - என்ன சொன்னான் அந்த துறவி

ஏரோதியாள் - அண்ணன் மனைவியை அடிமையாகினான்
எண்ணத்தில் இதைக் கொள்வீர் - நாளும்
கிண்ண மதுவுடன் வண்ண மாதர்கள்
தன்னில் வாழ்கின்றான் பாரும்
தாந்தன்ன..........

மன்னன் - அப்படியா சொன்னான் அந்தக் கயவன்
அவனா அந்தத் துறவி? இதற்கு என்ன செய்வான்
என் மனம்குழம்பிய குட்டையாகத் தவிக்கின்றதே
எறிபட்ட கண்ணாடிச் சுக்கு நூறாக உடைந்து
சின்னாபின்னமாகி விட்டதே அமைச்சரே
நான் என்ன செய்வேன். என்ன செய்வேன்

பாட்டு - *என்ன செய்வேன் ஏது செய்வேன்*
*எந்தன் நாட்டில் இக் கொடிய*
*புண்மையாளன் செய்யும் வேலை பாரும்*
*(தரு)*

ஏரோதியாள் - மன்னவா இதற்கா பயப்படுகிறீர்கள் விளம்புங்கள்
சேவகரிடம் விலங்குகள் அவன் கையைக் கொஞ்சட்டும்
இழுத்து வாருங்கள் அவனை இங்குச் சரியான பாடம்
நான் புகட்டுகிறேன் மன்னா

பாட்டு - *பொன்னொளிக்கும் முடிபுனைந்து*
*மன்னவனே நீருங்கேளும்*
*புன்மையாளன் தன்னைத்*
*கைதியாக்கும்*

மன்னார் - அமைச்சரே இன்றே சென்று அந்த அருளப்பனை
அவன் எங்கிருந்தாலும் அவன் கைகளில் விலங்கிட்டு
உடனே அழைத்து....

ஏரோதியாள் - ஹ....ஹ..... இல்லை அந்தக் காட்டு மிராண்டியை
இங்கே இழுத்து வாருங்கள்

அமைச்சர் - மன்னா! “இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பா ரிலானுங் கெடும்” மன்னா!
அதையும் சற்றுச் சிந்தியுங்கள். ஆத்திரம்
கண்களை இருட்டி கபோதியாக்கி விடும்.

பாட்டு - *இடித்துரைப்பார் இல்லா மன்னன்*
*கெடுப்பாரின்றிக் கெட்டே போவான்*
*பிடித்து வரச் செல்கின்றேன்*
*நான் கேளும்*
*தானா தன.....*

***(அமைச்சர் செல்லுதல்)***

எரோதியாள் - மன்னா! இந்தாருங்கள் திராட்சை ரசம் அருந்துங்கள்
அருளப்பன்! அவனை ஒரு புறம் ஒதுக்கிடுவோம்
வாழ்வது சிலநாள் அதில் வாழப்போவது
நீங்களும் நானும் வானம்பாடி போலப்
பறந்து திரிவோம் வாருங்கள்

மன்னன் - ஏரோதியாள் மக்கள் மடையர்கள் மட்டுமல்ல
அவர்கள் மாட்டு மந்தைகள். வாழ்க்கையைச்
சுமப்பது அவர்கள் வாழ்க்கையைச் சுவைப்பது
நாங்கள். இருப்பதோ திராட்சை ரசம் முடிவு விரசம் நடப்பது சரசம்
ஹிஹஹி

பாட்டு - *எனது காதலி இனிய நாயகி*
*உனது அழகினில் மயங்கினேன்*
*மதுவின் சுவையினில் மனது பொங்கியே - 2*
*புதிய சுகத்தினை நாடினேன்*

ஏரோதியாள் - மன்னா,
*எனது காதலா இனிய நாயகா*
*மதனும் ரதியும் போல் ஆகினோம்*
*அரும்பு தேன் உண்ணும் சுரும்பு இனம் போல*
*கரும்பு நீயென நாடினேன்*

மன்னன் - ஏரோதியாள் நீ எனக்கு வீணை
*மீட்டும் வீணை நீ மேவும் விரலும் நான்*
*பாட்டுப் பாடிட ஓடிவா*
*காட்டில் எறித்திடும் நிலவாய் ஆகாமல்*
*வீட்டு றோஜா போல் சூடவா*

ஏரோதியாள் - மன்னா
*இனிய தமிழும் நீ ஒளிரும் கவிதை நீ*
*புலவர் வியந்திட்ட பொருளும் நீ*
*மலரும் தீயினால் இதயம் வாடினேன்*
*குளிரும் தன்மையாய் வந்திடு - இனிய*

## காட்சி - 02

***(அருளப்பன் இரண்டு தொழிலாளர்கள்)***

வரவுகவி - *அருள்மிகு வாக்கும் அன்பும்*
*அவனியில் கொண்ட அன்பன்*
*மருள் நிறை உலகைக் காக்க*
*மனதினில் உரமுங் கொண்டு*
*பொருள்நிறை மாதர் வாழும்*
*பொல்லாத உலகை நாடி*
*இருளினை நீக்கும் ஒளிபோல்*
*இனிதாக வந்திட்டாரே*

தரு - தன்னன தானானா

ஆடற்தரு - *வெட்டுக்கிளி தேனும் விருந்தாக*
*வீறுடன் உண்ட ஞானி*
*பட்டுடல் வாடித் தோன்ற - புவிதனில்*
*பாங்காக வந்திட்டாரே*
*தன்னனா தானானா தந்தனா.....*

(தீர்மானம்)

வசனம் - உன்னையே நீ எண்ணிப்பார். நான் நான்
நான் என்னும் மமதை கொண்டு அலையாதே
அறிவால் அயலவரை அளந்திடாதே மாறாக
அன்பால் அளந்திடு. ஆணவத்திற்கு அடிமையாகாதே
மாறாக அன்பிற்கு அடிமையாகு. அறத்தைப் போற்று
நீங்கள் பலிப்பீடத்திற்கு அழைத்துச் செல்லப்படும்
ஆட்டுக்குட்டிகள் அல்ல புலிக்குட்டிகள்.
எனவே சாவிற்குப் பயப்படாது நிமிர்ந்து செல்லுங்கள்
சாவு கேவலம் உங்கள் உயிரைத்தான் பறிக்கும்
ஊனுடலைத்தான் அழிக்கும் அதனால் ஆத்மாவை
ஒன்றுமே செய்திட முடியாது

தொழிலாளர்1 - போதகரே நீங்கள் இசையாசா

அருளப்பன் - இல்லை

தொழிலாளர் 2 - இல்லையென்றால் நீங்கள் எலியாசா

அருளப்பன் - இல்லை. இல்லை இல்லவேயில்லை

தொழிலாளர் 1 - அப்படியென்றால் நீர் யார்

அருளப்பன் - நான் யாரா? கூறுகின்றேன் கேளுங்கள்

பாட்டு - *எந்தனையே யாரென்று நீர்*
*ஏளனமே செய்கின்றீர்*
*தந்திடுவேன் யான் விடையும்*
*தரணியோர் கேட்கவே*
*சந்ததமும் ஆபிரகாம்*
*தந்தையெனக் கூறுவீர்*
*சிந்தனையில் நீர் தெளிவு இன்றி*
*இங்கே வாழ்கின்றீர்*
*(தந்தனத்தோம்........)*

(தீர்மானம்)

தொழிலாளர் 1
வசனம் - போதகரே அப்படியென்றால்!
பாட்டு - *வாழ்வினிலே தூய்மை கொண்டு*
*வாழ வழி கூறுவீர்*
*ஏழைகளின் வாழ்வில் இன்னல் நீங்க*
*வகை சொல்லுவீர்*

*தாழ்வு கொண்டு பாழும் நோயால்*
*மாழும் எம்மைப் பார்த்தே நீர்*
*ஆளும் வர்க்கம் கொத்தடிமை*
*கொள்ளும் விந்தை பாருமே.*

தொழிலாளர் 2 - குருவே ஏன் எங்களை விரியன் பாம்பின் குட்டிகளே
என்று பழித்துரைக்கின்றீர்?
*விரியன் பாம்பின் குட்டியென்றே*
*வீணே எம்மைச் சாடுவீர்*
*அரிய வாழ்வு தன்னைக் காண*
*உரிய வகை சொல்லுவீர்*
*எரியும் தீயில் வீழ்த்தியெம்மை*
*ஏற்றம் காணச் செய்குவீர்*
*பரிவுடன் வாழ்ந்திடவே*
*பாங்காய் செம்மை கூறுவீர்*
*தந்தனத்தோம்....*

## காட்சி - 03

***(தந்தனத்தோம் தான தானாதன என்று தருப்படிக்கும் போது பரிசேயரும் சதுசேயரும் கூத்தாடிக் கொண்டு வருதல்)***

பரிசேயன் கவி - வீறுடன் பேசுகின்ற போது கேள் மனிதா நீயும்
யாரெனக் கூறிடுவாய் யாம் அதை அறிந்து நன்றே

சதுசேயன் - ஏறு கொள் அரசன் ஆணை ஏற்று நீ நடந்து பூவில்
மாறு கொள் வழியைத் தேடு மாய்ந்திடாய் உண்மையை ஈதே

பரிசேயன் - யார் நீ? என்ன துணிவைக் கொண்டு இப்படி
அறிவு மொழி பேசுகின்றாய்? உனக்கு இந்தத்
தத்துவத்தை அளித்தவர்கள் யார்? சொல்

சதுசேயன் - நாங்கள் ஆபிரகாமின் வழி வந்தவர்கள் ஆபிரகாம்
தான் எங்கள் தந்தை. மோயீசன் சட்டத்தைவரிக்கு
வரி எழுதிற்கு எழுத்துப்பிரலாது பிசையாது
அப்படியே பின்பற்றுகிறவர்கள். நீ நேற்றுப் பெய்த
மழைக்கு இன்று முளைத்த காளான். நீயார்? யார்
என்பதை உடனே கூறு. எங்களை அனுப்பினவர்களுக்கு
நாங்கள் விடை கூற வேண்டாமோ

அருளப்பன் - விரியன் பாம்புக் குட்டிகளே

***(இருவரும் கோபித்தல்)***

அருளப்பன் - வரப்போகும் அழியாத தண்டனைக்குத் தப்பித்துக்
கொள்ள உங்களுக்கு வழிகாட்டியவர்கள் யார்?
களஞ்சியங்களில் முறங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன
மணிகளைப் பிரித்து எடுத்துவிட்டு பதர்களை அவியாத
நெருப்பில் சுட்டெரிப்போம். மரங்களின் அடிகளில்
கோடரிகள் சாத்தப்பட்டிருக்கின்றன. கனிகொடாத

மரங்கள் வெட்டி வீழ்த்தப்படும். பிறர்மனை நோக்காத
பேராண்மையைக் கடைப்பிடியுங்கள்
உங்களரசன் ஏராது அண்ணன் மனைவியைக்
கவர்ந்து விட்டான். அது அதர்மம் - அக்கிரமம்
ஆட்சியமைத்து விடுவதல்ல அமைக்கப்படுவது. மக்கள்
கொதித்தால் கொதித்தெழுந்தால் புரட்சியோங்கும்
புரட்சியோங்கினால் உங்களாட்சி நீங்கும்

வரவு

பரிசேயன் - போதகரே நீர் என்ன பிதற்றுகிறீர்?

அருளப்பன் - பிதற்றவில்லை உண்மையைக் கூறுகிறேன்

சதுசேயன் - எது உண்மை

அருளப்பன் - இதுதான் உண்மை

பாட்டு - *விண்ணகம் மண்ணகம் அழியுங்கடலும் தன்மதியாதவனும் - அன்று*
*ஏழு நல் நாளிலே என்னருந் தந்தைதான் அன்புடனே படைத்தார்*
*இன்று ஈனமதி கொண்டு ஏளனம் செய்கின்றீர்*
*என்ன நான் சொல்லிடுவேன் உங்கள் கல்லறை உள்ளத்தை*
*சில்லறைப் புத்தியை மாற்றிடும் சீக்கிரமே - நாளும்*

பரிசேயன் - போதகரே,
*மோயீசன் தன்வழி வந்தவர்கள் நாங்கள் மோசமே நீர் புகன்றீர் - அந்த*
*ஆபிரகாம் எங்கள் தந்தையிலும் தந்தை அன்புடன் ஏற்றுக் கொள்வீர்*
*இந்தப் புவியில் மானிடர் தம்மையே மாற்றவே புண்மை நெறி*
*யுறைத்தீர் - சொந்த*
*வாழ்வினில் இன்பங்கள் கண்டுமே வாழ்வீரே*
*சோதனை ஏதுக்கைய்யா - நாளும்*

சதுசேயன் - குருவே
*வெள்ளையடித்திட்ட கல்லறை என்றுமே வேதனை ஏன் மொழிந்தீர் - அந்த*
*கொள்ளையர் என்றுமே நொள்ளை மொழிகளில் கேலிகள்*
*நீரும் செய்தீர் - நல்ல*
*உள்ளங்கள் தம்மையே பள்ளத்தில் வீழ்ந்திடப் பாதகம்*
*செய்யலாமோ - எங்கள்*
*அண்ணலின் ஆட்சியைக் கண்ணில்லா மாந்தர் போல்*
*திண்ணமாய் நீ வெறுத்தீர் ஏனோ*
*தன்னன்ன.........*

(தீர்மானம்)

***(அருளப்பரைக் கைது செய்வதற்கு அமைச்சர் வருகை)***

வரவுகவி - அண்ணலின் ஆட்சிதன்னை அவனியில் இழித்துரைத்து
மண்ணில் மாந்தர் வாழ்வை மாற்றிட முயற்சி செய்த
விண்ணகத்தூதன் காட்டில் வாழ்ந்திட்ட ஞானிதன்னை
திண்ணமாய் இழுத்து மீள மண்ணில் வந்திட்டாரே

ஆடற்தரு - தானத் தந்தன தானத்தந்தன தானத்தந்தன தானினா
தானத் தந்தன தானத்தந்தன தானத்தந்தன தானினா

எங்கள் மன்னன் வாழ்வு தன்னை இழித்துரைத்த ஞானியை - 2
பங்கமாகப் பிடித்திழுத்துப் பாழும் விலங்கைப் பூட்டவே

அமைச்சர்
பாட்டு 1 - *உண்மைதனைத்தான் புகன்றீர்*
*ஊரினையே மாற்றவே நீர்*
*நன்மை நிறை நாயகனைப் பாரினில்*
*கன்ம வினைதான் நிறைந்து காதகர்கள்தான் மலிந்து*
*நிர்மலமாய்க் கையில் காப்புப் போடவே*
*தந்தனோம்.......*

2 - *பொய்மை நிறை வாழ்க்கையோடு*
*உண்மை ஒன்று சேருமோ சொல்*
*வன்மை சேரும் மன்னவன் முன் வந்திடு*
*நல்லிதயங் கொண்டவர்கள் நாளும் நாட்டில் உண்டோ சொல்லும்*
*கொள்கையில்லாக் கூற்றுவர்கள் பாருமே*
*தந்தனத்தோம்...........*

(தீர்மானம்)
(தரு முடிகின்றது)

அமைச்சர் - துறவியே உம்மைக் கைது செய்து இழுத்து
வரும்படி ஏரோது மன்னன் ஆணை. எங்கே
உனது கையை நீட்டு நடசீக்கிரம்

அருளப்பன் - துறவிக்கு வேந்தன் துரும்பு - தூக்குமேடை
பஞ்சு மெத்தை. பாசக்கயிறு பூமாலை - துப்பாகி
வேட்டு - இனிய பூபாளராகம். நீர் அழைக்கு
முன் நானே வரவிருந்தேன். இனிய விருந்தாளியாக
இன்று ஒரு அருளப்பன் இறக்கலாம். ஆனால்
நாளை ஓராயிரம் அருளப்பன் பிறப்பார்கள். உங்களைக்
கேள்விக் கணையால் துளைப்பார்கள் உங்களை
கொடுங்கோலை ஒழிப்பார்கள்.

அமைச்சர் - துறவியே பிதற்றாதே நடசீக்கிரம் (பிடித்துத் தள்ளுதல்)

பாட்டு - *தந்தையே எந்தன் உயிரினும் உயிரே நீ*
*உடன்துணை வருவாயே - நாயகா*
*முன்னால் ஆதித்தந்தையர் செய்திட்ட*
*பொல்லா வினை தீர்க்கப் புவியினில் பிறந்தாயே*
*இந்நாள் இந்தக் கொடுமையைப் பாராயோ*
*என்னையுன் பங்கையர் திருப்பாதம் சேர்ப்பாயே தந்தையே*

அமைச்சர் - ஹ்ஹ்ஹ்

## காட்சி - 04

*(ஏரோது மன்னன் சபை - புறட்சித் துறவி விசாரணை அருளப்பர் நடுவே விலங்கோடு நின்றார் சுற்றிவர மன்னவர் - ஏரோதியாள் - அமைச்சர் - பரிசேயர் - சதுசேயர்)*

ஏரோது - இவர்கள் உம்மீது சுமத்துவது

அருளப்பன் - பொய்க் குற்றம்

ஏரோதியாள் - பொய் இல்லை உண்மை

அருளப்பன் - உண்மையில்லை பொய்

ஏரோதியாள் - மன்னனைப்

அருளப்பன் - பழித்தேன்

ஏரோது - மனைவியை

அருளப்பன் - இழித்தேன்

பரிசேயன் - மக்களை

அருளப்பன் - விழுமின்! விழுமின்! என விளித்தேன்

ஏரோது - உம்மோடு பேசுவது

அருளப்பன் - தெரியும் சிறு துரும்பு

சதுசேயன் - பாம்பின் குட்டிகள்

அருளப்பன் - நீங்கள்

பரிசேயன் - வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகள்

அருளப்பன் - நீங்கள்

ஏரோதியாள் - நீ.... நீ குற்றவாளி

அருளப்பன் - உன் கையை நன்கு பார். ஒரு விரல்தான்
என்னைச் சுட்டுகின்றது. மற்ற நான்கும் உன்னையே
குற்றவாளி என்கின்றது. பார்க்கவில்லையா?

ஏரோதியாள் - என்னையா குற்றவாளி என்கின்றாய் மண்டைக்கனம் பிடித்தவனே

ஏரோது - போதும் - போதும் பொறுத்ததுபோதும்.

பாட்டு - *எப்படியடா பொறுப்பேனோ*
*கொடிய செயல் எப்படியடா பொறுப்பேனோ*
*எப்படியடா பொறுப்பேனோ*

*இப்படியும் வந்ததுண்டோ*
*பங்கமுறும்படி இங்கிவன் வாழ்வினை*
*செய்திடுவேன் புவி மெச்சிடவே புகழ - எப்படியடா*

கொச்சம் மன்னன் - *பார்தன்னில் இன்னும் வேண்டுமோ சான்று*
*பகர்ந்ததைப் பாங்குடன் கேட்பீர்*
*ஊர்தன்னில் இவனும் உன் மத்தமாக*
*உளறிய கதைபல கேளும்*
*நேர்தன்னில் நீதி வாழ்ந்திட நாளும்*
*நீசனைச் சிறைதன்னில் அடைத்தே*
*பார்தனில் இனிதே களிப்புடன் வாழ*
*கனிவுடன் சென்றே நீர் வருவீர்*

மன்னன் - அமைச்சரே இவனை இழுத்துச் சென்று சிறையிலடையும்

## காட்சி - 05

***(மன்னனின் பிறந்ததின விழா - மன்னன் - அமைச்சர் - ஏரோதியாள் - யூபித்)***

ஏரோதியா - மன்னா இன்று உங்கள் பிறந்த நாள்

ஏரோது - தெரியும் நன்றாகத் தெரியும் அதை மறப்பேனா

ஏரோதியாள் - இதோ மது அருந்துங்கள். மதுவில் மாந்திக்களியுங்கள் மன்னா

ஏரோது - என்ன மகாராணி

ஏரோதியாள் - நானா மகாராணி - உங்களது வேடிக்கை எனக்கு வேதனை

ஏரோது - இல்லை ஏரோதியாள். வேடிக்கையில்லை உண்மை
எனது எதிர்கால பட்டத்து மகிஷி நீதான்
எனது சாம்ராஜ்யத்தின் மகாராணி நீதான்

ஏரோதியாள் - அவன் அந்தத்துறவி அந்தத் துன்மார்க்கன் உயிரோடு இருக்கு
மட்டும் ஏதாவது உளறிக் கொண்டேயிருப்பான்
நினைத்தாலே உடம்பு நடுங்குகின்றது

ஏரோது - அதற்கு அவனை என்னதான் செய்யச் சொல்கின்றாய்

ஏரோதியாள் - கதையை முடித்துவிட வேண்டியதுதான். அது இனித்தொடராது.
முடிந்த கதையாகவே இருக்கும். அரைத்தரிப்பு
இருக்காது. மாறாக முற்றுப்புள்ளிதான் இருக்கும்.

ஏரோது - பைத்தியக்காரி, பைத்தியக்காரி உண்மை எப்போதும்
கசப்பானது. அவனது உயிருக்கு ஏதாவது நடந்தால்
அதன்பிறகு ஊரே திரண்டுவிடும். ஊர் திரண்டால்
நாடு எதிர்த்தால் - நமது அரசு வலிமை குன்றிவிடும்
மங்கி மடிந்து மண்ணோடு மண்ணாகிப் போய்விடும்.

ஏரோதியாள் - அப்படியென்றால் அவனை என்னதான் செய்யப் போகின்றீர்கள்?

ஏரோது - காலம் அதற்குப் பதில் சொல்லட்டும். காலகதியில்
அவன் திருந்திடுவான். மறப்போம் - மன்னிப்போம்
இதுவே நமது தாரக மந்திரம்

அமைச்சர் - மன்னா இதுவரையும் கருத்தினில் சிறந்திருந்தீர்கள்
இப்பொழுது உங்கள் கண்களைக் கவர ஓர்
அற்புத நடனம்

ஏரோது - யாரவள் ஓ! சலோமியா உடனே வரச்சொல்

***(யூடித் சபையாருக்கு வணக்கம் செய்துவிட்டு நடனமாடுதல்)***

*அற்புத நடனம் ஆடி மகிழ்விப்பேன் - இச்சபையோர்தன்னை*
*அற்புத நடனம் ஆடி மகிழ்விப்பேன்*
*அற்புத நடனம் ஆடி மகிழ்ந்து*
*பற்பல வகையில் பாடிக்களித்து*

*பொற்புறு வண்ணம் புவியோர் யாரும்*
*ஒரு மத்தள மொழிகக்கிட புவி மெச்சிட*
*நர் உச்சிட களி துச்சிட அரசுக்கனிதாக*
*களிதுள்ளியே வெறி கொண்டிட மயில் போலவே பாரும்*
*எழில் கொஞ்சிட இமை விஞ்சிட இசை துஞ்சிடப் பாரில்*

மன்னன் - சபாஷ்! அற்புதம். அற்புதம் உனது நடனத்திற்கு
நாங்கள் எல்லாம் அடிமைகள். உனது நத்தன
மிடும் கால் விரல்களுக்கு ஈடாக எந்தச் சாம்
ராஜ்யமுமே இருக்கமுடியாது. கேள் நீ விரும்பியதைக்
கேள். ஊர் வேண்டுமா? அல்லது இந்தப்
பார் வேண்டுமா? வைடூரியம், கோமேதகம், பவளம், முத்து
எதுவேண்டுமென்றாலும் கேள். இன்றே
தருகின்றேன். இப்பொழுது தருகின்றேன். கேள்
கேள் சலோமி கேள்

யூடித் - கொஞ்சம் பொறுங்கள் அம்மாவிடம் கேட்டு வருகின்றேன்

யூடித் - அம்மா எனது ஆட்டத்திற்கு மன்னன் பரிசு
ஒன்று அளிக்கப் போகின்றார். எதைக்
கேட்பது என்று கூறுங்கள் அம்மா...
பீதாம்பரம் நவரெத்தினமாலை அல்லது பொன்மாலை அல்லது பட்டு
வேண்டுமா? கூறுங்கள்
எதை வேண்டுமானாலும் கூறுங்கள்

ஏரோதியாள் - கள்ளத்துறவியே ஹ்ஹ்ஹா இன்றோடு
உன் வாழ்வு அஸ்தமித்து விடும். என்னை அவமானப்படுத்தி
என் வாழ்வுதனை உருக்குலைக்க
நினைத்தாயே இன்று பார். இன்றோடு உன்
கதைமுடிந்து விடும். சலோமி சிறையிலிருக்கும்
அருளப்பன் தலை அதுதான் வேண்டுமென கேள்

யூடித் - அந்தத் தலை. அது உனக்கு ஏனம்மா?
அதையெடுத்து நீ என்னம்மா செய்யப் போகின்றாய்...

ஏரோதியாள் - சலோமி நான் சொல்வதைக் கேள். எனக்கு
அதுதான் வேண்டுமென்று பிடிவாதமாகக்
கேள் போ.... போ... சீக்கிரம்போ

***(மன்னனிடம் மீண்டும் செல்கின்றாள்)***

ஏரோது - சலோமி என்னம்மா வேண்டும் உனக்கு

யூடித் - மன்னா! மன்னா சிறையிலிருக்கும் அந்த அருளப்பனின்
தலை வேண்டும்.

ஏரோது - சலோமி மகளே! அது வேண்டாம் மகளே! அது
அநியாயம். அக்ரமம். அந்த ஒன்றுமறியாத
உத்தமனுடைய உயிரை அநியாயமாகப்
பறிக்க எண்ணாதே அந்தப் பழியும் பாவமும்
நம்மைச் சும்மாவிடாது. அது பச்சைத் தனமான துரோகம்

பாட்டு - *என்னருமைப் புத்திரியே*
*கண்மணியே கேளு - அந்த*
*உத்தமனின் உயிர்தன்னை*
*யாம் பறித்தல் நன்றோ*
*நன்ன.........*

ஏரோது - அம்மா சலோமி உன்முடிவை மாற்றவே முடியாதா
நீ என்ன நெஞ்சிலே ஈரமில்லாத அரக்கியா
ஐயகோ ஆழந்தெரியாமல் காலைவிட்டுவிட்டு
சேற்றினிலே புதைந்து விட்ட மத்தகமாக
அவதிப்படுகின்றேனே. சலோமி அது உனக்கு
வேண்டாமம்மா வேண்டாம்.

யூடித் - நீங்கள் நேர்மையாக ஆட்சி புரிவதென்றால்
வாக்கு மாறவே கூடாது.

பாட்டு - *சின்னவனாய் மாறிவிட்டேன்*
*சீரழிந்து போனேன் - இந்தக்*
*கன்னி சொன்ன வார்த்தையினால்*
*காலமெல்லாம் அழுவேன்*

ஏரோது - யார் அங்கே?
***இருவர் வருதல்***
சிறையிலிருக்கும் அருளப்பனின் தலையைக் கொய்து
ஒரு தட்டில் வைத்து இந்த சலோமியிடம் கொடுங்கள்
***(தலையோடு யூடித் வருதல்)*** (நீதியின் சாந்தி ஒளி அணைந்ததம்மா)

கவி - (சமாதானத்தின் வழியே அனைந்ததம்மா)


*காப்பிலங்கிய கன்னிமரிசுதன் கர்த்தன் யேசுவை நித்தமும் போற்றியே*
*தார்க்கிலங்கிய கானவன் காதையை*
*தரணியில் எடுத்தோதிட நாளுமே*
*ஊர்க்கிலங்கிய மண்டபம் தன்னில் வாழ்*
*உன்னத நல் கலைஞர்கள் யாருமே*
*நோர்க்கிலங்கிய நேய மகனாராம்*
*சகாய அன்னையின் தாழ்ப் பணிந்திடுக........*

***- சுபம் -***

முல்லைக்கு தேர் ஈந்த வள்ளல்

# பாரி வள்ளல்

சரித்திர நாடகம்



# காட்சி - 01

*இடம்: பாரி மன்னன் அரண்மனை (பாண்டியத்தூதுவனும், பாரியும்)*

**முன் கதை (ஒலி பெருக்கியில்)**

கடையேழு வள்ளல் களில் தலையான வள்ளலாக காலமெல்லாம் போற்றப்படுபவன் பாரி. முல்லைக் கொடிக்கு தேரையளித்து தமிழன் சரித்திரத்திலேயே கொடை மடத்திற்கு கொடு முடியாகத் திகழ்ந்தவன். முந்நூறு ஊர்களையுடைய பறம்பு மலையை ராஜதானியாகக் கொண்டு ஆண்ட அப்பெரு மன்னன். மாரி வெட்கும்படி வாரி வழங்கியவன். அப்படிப்பட்ட மன்னனிடம்தான் அன்று மதுரை வேந்தன் பாண்டியன் யாசித்தான். பாணிடியன் என்னத்தைக் கேட்டான்? பொன்னையா? பொருளையா? கண்ணையா? அல்லது பாரியின் மண்ணையா? இல்லை இல்லை. பாரி பெற்று வளர்த்த செல்வமாம் அங்கவையைக் காணிக்கையாக கேட்டான். கண்ணின் கருமணியென வளர்த்த மகள் அங்கவையைக் கடிமணம் செய்ய விரும்பி தூது அனுப்பினான் பாண்டியன். திகைத்தான் பாரி. செய்வதறியாது துடித்தான் அன்று அந்தப்பாரியின் அரச சபையிலே....

பாரி - தூதுவனே வேறு என்னத்தைக் கேட்டாலும் கொடுத்திருப்பேனே! மலையளவு பொன் வேண்டுமா? அல்லது மாணிக்கப் பொருள் வேண்டுமா? போர்புரிய புதுப்படைகள் வேண்டுமா? எனது இரு கண்தான் வேண்டுமா? அல்லது எனது கோட்டை பறப்பு மலையைத்தான் பரிசாக கொடுக்கவா? அங்கவை எனது மகள்தான் அதை நான் ஆணித் தரமாக ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால் எனது அழகு திரு உருவத்தின் அழியாத சுந்தரத்தைப் பறித்து கிழப்புலியாம் பாண்டியனுக்கு பரிசாகக் கொடுத்து சரித்திரத்திலே மாறாத தண்டமிழர் வாழ்விலே அழியாத களங்கத்தை என்னால் ஏற்படுத்த முடியாது. முடியவே முடியாது.

தூதுவன் - பாரி மன்னா! கேட்பவர் யாவர்க்கும் வரையாது வழங்கும் வள்ளலே உன்னை நாடி வந்தவர்கள் இல்லையென்று வெறுங்கையராய் திரும்பிச் சென்றது கிடையாது. உனது அன்பு மகளைத்தான் பாண்டியன் காணிக்கையாக யாசிக்கின்றான். உயர்ந்தவற்றைக் கொடுப்பது தானே பரிசு. கேட்பவனோ வேறு யாருமல்ல மதுராபுரி மன்னன். பாடல் பெற்ற கூடல் நகரை தலைநகராகக் கொண்டவன். சங்கத் தமிழ் வளர்த்த சிங்கத் திருமகன் நீ உனது மகள் அங்கவையைத் தரமறுத்தால்?

பாரி - ஆ.. ஷா... கா... கா... கா...(சிரிப்பு) என்ன நடக்கும் என்று எனக்கு நன்றாகத் தெரியும் படையைத்திரட்டி வந்து தொடையைத்தட்டி நிற்பான் பாண்டியன். அமைதியிலே ஆழ்ந்து உறங்கும் பறம்பு மலையில் இனி மங்கையரின் சிலம்பொலி ஒழிந்து போர் முரசு ஒலிக்கும். இது தானே நடக்கும். எனவே நீ போகலாம். பாண்டியனிடம் பாரி கூறியதையும் கூறலாம் செங்குருதி சிந்தச் செருமுனையில் சந்திப்போம் என வேங்கை போல் வீறு கொண்ட பாரி என பாண்டியனிடம் கூறு.

தூது - நன்றி மன்னா. நன்றி நாளை சந்திப்போம் போர்முனையில்.

பாட்டு - நித்தியானந்த நிர்மல - ஓம் எனச் சிவனே

## காட்சி - 02

*(மன்னன் தேவி)*

பாரி - செரமுனைக்கு சென்று பாண்டியன் செருக்கடக்க விடைதா தேவி.
*(பாரியின் மனைவி பாரிக்குத் திலகமிட்டு அனுப்புதல்)*

தேவி - ஜெய் - பராசக்தி வென்று வாருங்கள். செருமுனையைக் கண்டு வாருங்கள். தாங்கள் அள்ளி அள்ளி வழங்கிய அருட்கொடை யெல்லாம் அங்கு உங்களுக்கு வேலாகட்டும். வீரனுக்கு வெஞ்சமர்தான் வெண்ணிலாச் சோறு. போர் புரிவதுதான் புதுவிளையாட்டு. பாரி மன்னன் கொடையில் தான் சிறந்தவன் என இதுவரையில் பறப்பு மலை பறை சாற்றியது. இனி அது வீரத்தின் விளைநிலம் என வெற்றிமுரசு கொட்டட்டும்.

பாரி - தேவி. வேளைவந்தால் வீரனுக்கு போரும் ஒரு கொடைதான். வெற்றி மகள் வாகைமாலையை யாசிக்கிறாள் கொடுப்பது எனது கடன் அல்லவா? பறம்பிலே முல்லை மணக்கிறது ஒருபுறம். பாண்டியனை வென்றுவா வென்றுவா வென வெற்றித் தேவி அழைக்கிறாள் மறுபுறம்.

தேவி - முல்லை என்றவுடன் உங்கள் முகமெல்லாம் முத்தாக மாறுகிறது அத்தான். முல்லை போலச் சிரித்து சிரித்து எதிரியைச் சாய்த்து வெற்றி வாகைசூடி வீடு திரும்புங்கள்.

பாரி - வருகிறேன் தேவி. பகையை விரும்பாதவன் இந்தப் பாரி மன்னன். அகிலம் முழுவதுமே அமைதிக்காக அரும்பாடுபடும் பொழுது யான் மட்டுமா போர்பசி பிடித்துப் புலம்புகிறேன். பாண்டியன் எதைக் கேட்டாலும் கொடுத்திருப்பேன். ஆனால் அங்கவை எனக்கு மகளே ஒழிய அவளது மனத்திற்கு நான் மன்னனல்ல. விருப்பமில்லாதவளை தட்டிப்பிடுங்கி பாண்டியனுக்கு காணிக்கை கொடுக்க எனக்கு என்ன உரிமை இருக்கிறது. போர் என்று புதுப்பரணி கொட்டுகிறான் அந்தப் பாண்டியன். பறம்பு மலை காணும் முதல் போர் இது. வரலாற்றிலே ஒரு புது முத்திரை பதிக்கிறேன். வருகிறேன்.

## காட்சி - 03

*(போருக்குப் புறப்படல்)*

*(போருக்குச் செல்லுகிறான் பாரி. போகும் வழியில் ஓர் அழகான முல்லைக் கொடியைக் கண்டு மனங்கசிதல்.)*

பாரி - நிறுத்து தேரை. (கொடியைக் கையில் எடுத்து) சேனைத்தலைவா பார்த்தாயா. இந்தப் பசுங்கொடியை பற்றிப்படர ஒரு உற்ற துணையின்றி ஊர்ந்து படரும் முல்லைக் கொடி ஆகா! இயற்கையின் படைப்பிலேதான் எத்தனை மென்மை எவ்வளவு நளினம்.

சேனைத்தலை - மன்னவா! என்ன இது போருக்குச் செல்லும் வேளை வீரர்கள் பறப்புமலையைச் சுற்றி பாம்புபோல் சென்று கொண்டிருக்கிறார்கள். அந்த மீனவன் பாண்டியனோ மிடுக்காக துடுக்குப் பேசி வேறு கொக்கரிக்கிறான். நீங்கள் என்ன வென்றால் மனதை பச்சைக் கொடியிடம் பறிகொடுத்து இச்சை மொழி பேசுகிறீர்கள். பாசத்திற்கும் நேசத்திற்கும் ஒரு காலம் வேண்டாமா. கொடியை அகற்றிவிட்டு புறப்படுங்கள் அரசே.

பாரி - முல்லைத்தேவதை முத்துமுத்தாய்ச் சிரிக்கிறாள். முழு நிலவாய்த்தகிக்கும் இந்த மோகனக் கொடியை அகற்றி விட்டா போர் பயணம்? என் அன்பே ஆருயிரே (வேலைத் தரையில் குத்தி) இதோ உனக்கு ஒரு கொழுகொம்பு கிடைத்து விட்டது ஆரத்தழுவி அழகாகப் படர்ந்து சென்று வா செரு முனைக்கு வென்றுவா பாண்டியனை என்று விடைகொடு. (பாரி செல்லல்)

பின்னணி - போர் போர் போர்
முந்நூறு ஊர்களைக் கொண்ட பறப்பு மலையில் போர். கரிகள் மாண்டன. பரிகள் சாய்ந்தன. வீரர்கள் வெள்ளம் போல் வீழ்ந்திறந்தனர். மலையைச் சுற்றி நின்ற மதுரை வீரர்கள் தோத்து மண் அடிபட ஓடுகின்றார். ஆனால் மதுரை வேந்தன் பாண்டியன் தப்பி விட்டான்.

## காட்சி - 04

சேனாதிபதி - என்ன அவமானம் இத்தனை வீரர்கள் இருந்தும் பாண்டியனைப் பிடிக்காவிட்டால் என்ன பயன்.

பாரி - வெற்றி முரசு முழங்குகின்றதே அது ஒன்றே போதாதா? மன்னனைப் பற்றி யான் கவலைப் படவில்லை. அவன் மமதையை அடக்கியது ஒன்றே போதும் இதோ இருக்கிறது அவன் மணித்தேர் இது மட்டுமே எனக்கு எல்லையில்லா இன்பத்தை அளிக்கிறது.

## காட்சி - 05

பாரி - சேனைத்தலைவா! (பாண்டிய மன்னன் மணித்தேரை பார்த்து) அதோ என் அருமை முல்லைக்கொடி தன் வெண்முத்து மலர்களால் வருக வருக என என்னை அழைப்பதை பார்த்தீர்களா.

அமைச்சர் - கற்பனை கரைபுரண்டு ஓடுகிறது. காற்றிலே அசைந்தாடும் இம்முல்லைக்கொடி உங்களை வரவேற்பது போலவா தெரிகிறது? மன்னவா வீணான கற்பனை.

பாரி - சேனைத்தலைவா அன்று நான் போருக்கு புறப்படும் போது படரக் கொழுகொம்பற்றுத் தவித்த இந்தப் பச்சைக் கொடிக்கு எனது வேலைக் கொழுகொம்பாகக் கொடுத்தேன். அப்பொழுது இந்த இச்சை மொழியாள் என்ன கூறினாள் தெரியுமா உமக்கு?

அமைச்சர் - அப்படி என்னதான் கூறியது இந்த முல்லைக் கொடி. மன்னவா எனக்கு எதுவும் புரியவில்லை.

பாரி - உமக்கு அது புரியாத புதிர்தான் என்னிடத்தில் இந்த முல்லைக் கொடியாள் மானசீகமாக என்ன கூறினாள் தெரியுமா? பாரி மன்னா! நீ சென்றுவா அந்த பாண்டிய மன்னனை வென்றுவா. வரும் பொழுது என் கரங்கள் பற்றி படர்ந்து உனது புகழ் மனம் பரப்ப பாண்டிய மன்னனின் மணித்தேரை கொண்டு வா. மன்னா கொண்டுவா என கூறியது. அமைச்சரே எனது இச்சைக்கு உகந்த பச்சைக்கொடியாளே உனது ஆசை நிறைவேறிற்று இதோ பாண்டியனின் மணித்தேர் ஆசையுடன் அதன் மேல் பற்றிப்படர்ந்து சுற்றி விரிந்து நறுமணம் கமழ்வாய். நான் போய்வரட்டுமா முல்லைக் கொடியாளே.

இழுத்துவாருங்கள் இம் மணித்தேரை

# காட்சி - 06

*(வேர்த்து வெலவெலத்து ஓடி வருகிறார் புலவர் கபிலர்)*

கபிலர் - நீர் தான் பாரி மன்னனோ

பாரி - தாங்கள் யாரோ! ஏன் உங்கள் முகம் சிவந்திருக்கிறது. கண்கள் கனன்று கண்ணீரைச் சிந்தியிருக்கிறது. தங்களைப் போன்றவர்கள் சினம் கொள்ளுமளவுக்கு அப்படி என்ன பிழை செய்தேன் யான்.

கபிலர் - தமிழை வென்றது தான் நீ செய்த பிழை

பாரி - ஹஹஹ அப்படி யான் ஒரு புலவனும் அல்ல எனக்குகொரு புலமையும் கிடையாது.

கபிலர் - நான் மதுரை வேந்தன் பாண்டியனைக் குறிப்பிடுகிறேன்.

பாரி - பாண்டியன் வெறும் மன்னன் மட்டுமே அவன் தமிழ் அல்ல

கபிலர் - இல்லை மன்னா இல்லை. மதுரையில் தமிழ் வளர்த்த மா மன்னன் பாண்டியன். இயல், இசை, நாடகமாம். முத்தமிழுக்காக முழுமூச்சாய் உழைத்தவன். கூடல் நகரத்தில் சங்கத்தமிழனை அரசு கட்டிலேற்றி அக மகிழ்ந்தவன். அரும்புலவர்களின் கவிதையால் அருள்மழை பொழிகின்றவன். அன்னை மீனாட்சியின் அடியொற்றி வாழ்பவன்.

பாரி - அந்தப் பாண்டியனிலும் மேலாக இந்தப்பாரி வளர்ப்பான் தமிழை

கபிலர் - மறுப்பதற்கில்லை. ஆனால் இரப்பவர் கேட்டால் மறுகணமே தான மளித்துவிடுவாய்

பாரி - உண்மை. ஆனால் தானம் அளிக்கும் போதும் நிதானம் இழக்க மாட்டேன். பாண்டியன் என் மகளைத் தானமாகக் கேட்டான். மறுத்தேன். போர் மூண்டது. இன்று பாண்டியன் எனக்கு அடிமை. பாண்டிய நாடு இப்போது பாரியின் நாடு என்றாலும் பாவலர்களையும் நாவலர்களையும் மதிக்க பாரி என்றுமே தவறியதில்லை. தாங்கள் யார் என்று அறியாமல் தங்களோடு சொற்போர் புரிகிறேனே ஐயா. உண்மையைக் கூறுங்கள் தாங்கள் யார்.

கபிலர் - கபிலன்
(பாரி கபிலர் காலடியில் வீழ்கிறார்)

பாரி - தமிழே! கலைமகளின் திருஉருவே கற்றோர் புகழும் பாவலரே தாங்கள் என்னைச் சோதிக்கலாமா

கபிலர் - எழுக பாரி!!! எழுக! பாண்டியன்தான் குற்றவாளி. அதனை அறியாது அவன் பொருட்டு யான் தூது வந்ததே பிழை.

பாரி - தூது வந்தீர்களா. உங்கள் தூது வெற்றி பெறட்டும்.

கபிலர் - மன்னா! யான் வந்தது வெறும் தூதல்ல பாண்டியன் இழந்த பொருளை மீண்டும் யாசிக்கும் தூது. யான் கொடுத்த வாக்கை எப்படியாவது காப்பாற்றவேண்டும். தமிழ்சங்கத்தின் மீதே ஆணையிட்டுக் கேட்டுவிட்டான் பாண்டியன்.

பாரி - புரிகிறது புலவரே! நன்றாகப் புரிகிறது. ஆண்ட மதுரையை மீண்டும் கேட்கிறான் பாண்டின். இதோ அளித்தேன் இதுவரையில் என்னிடம் ஆதரவற்றவர்கள் அநாதைகள் ஆகியோர்கள்தான் யாசித்துப் பரிசில் பெற்றார்கள். இன்று என்னிடம் வந்திருப்பதோ தமிழ். மறுக்க முடியுமா என்னால்.

கபிலர் - என்ன அரசே புதிர் போடுகிறீர்கள்

பாரி - பாண்டியன் உடமையில் ஒன்றை ஏற்கனவே தானம் அளித்து விட்டேன் புலவரே.

கபிலர் - வள்ளல் பெருந்தகையே வாழி நீ... அந்த ஒன்றை என்ன வென்று யான் அறியலாமா

பாரி - வாருங்கள் காட்டுகின்றேன்

## காட்சி - 07

*(முல்லைக் கொடி படர்ந்திருக்கும் தேரைக்காட்டுதல்)*

பாரி - பார்த்தீர்களா கபிலரே.

கபிலர் - ஆமாம் பாண்டியனின் மணித்தேரைச் சுற்றி முல்லைக் கொடிப்பந்தல் அமைத்திருக்கிறது.

பாரி - பாண்டியனின் மணித்தேர் தான் இது. நான் படைதிரட்டி வரும் போது படரக் கொழுகொம்பின்றி பரிதவித்துக் கிடந்தது இப்பச்சைக் கொடி. உடனே என் வேலைச் சாற்றி விடை பெற்றேன். அப்போது இந்த முல்லைக்கொடி என்ன கேட்டது தெரியுமா?

கபிலர் - அப்படியென்னதான் கேட்டது என்கிறீர்கள்?

பாரி - பாரி மன்னா! பாண்டியனை நீ வென்றாயானால் அவனது மணித்தேரை எனக்கு பந்தலாய் போடுவாயா என்றது? நானும் வாக்குகொடுத்தேன்.

கபிலர் - ஒரு வேளை நீ போரில் தோற்றிருந்தால்

பாரி - என் பிணத்தை இம்முல்லைக் கொடி சுற்றித் தழுவி இருக்கும்

கபிலர் - வள்ளல் பெருமானே கடை ஏழு வள்ளல்களில் தலையானவன் நீயே. உலகில் முல்லை சிரிக்கும் வரை உன் பேர் விளங்கும். உன்புகழ் ஓங்கும். முல்லைபோல் நாற்புறமும் மணம் வீசும்.

- முற்றும் -

கதிர்வேலுக் கெதிர் வேலு இல்லையென்றே சொல்லும் திருத்தணிகை கந்தனே போற்றி.
கந்தன் அருள் சந்ததமாய் எழும் படையைக் காக்கவே விந்தை மிகு முருகனே போற்றி.
வீரமுடன் வெற்றி கொள்ள வீறுடனே புறப்படும் எம் நாற்படையை காத்திடுவாய் போற்றி.

வீரர்கள் வாழும் பாரியின் நாட்டை வென்றவர் கிடையாது
வேலும் வாளும் தங்கிய மறவர் வீழ்வதும் கிடையாது
எங்கள் பாரியின் நாடு. எங்கள் பாரியின் நாடு எங்கள் பாரியின் நாடு

முருகா! முன்னைப்பழம் பொருளிலும் மூத்த நல் முதல்வனே!
கதிர்மலைக் கந்தா! வாழும் வேலுமுடைய வீரனே
அருளாட்சி, அன்பாட்சி ஓங்குகின்ற என் பறம்பு நாட்டிலே
வாய்மை வளம்பெற வேண்டும். அக்கிரமம் அராட்சகம், அநீதி அகன்று
சைவமும் தமிழும் பாங்கே இணைய வேண்டும்.
இங்கு இன மத பேதமின்றி 'யாதும் ஊரே யாவரும் கேளீர்' என்ற
புறநானூற்றின் இலட்சியம் மலர்ந்திட அருள்புரிவாய் அப்பனே!

பார் ஏழு வள்ளல்களில் பேர் கொண்ட வள்ளலே நீ (2)
தேர்தனை முல்லைக்கு ஈர்ந்திட்ட செயலினாலே
பாரினில் உந்தன் புகழ் பரற்றுமே புகழ் மணக்கும் (2)
பாவலர் உள்ளவரை பாரியே நீடு வாழ்வாய்

# “வா மகனே வா”

(வானொலி இசை உரை நாடகச் சரித்திரம்)



# காட்சி - 01

ஆரம்ப உரை - அலைகடல் அமைதியில் ஆழ்ந்து அலைக்கரங்கள் ஆழித்தாயின் அன்புக்கரங்களில் ஆனந்தமாக உறங்கும் மாலை வேளை. திங்களின் உதயத்தை வரவேற்க கரம் கூப்பும் நீலவானம் செம்பவளவாய் திறந்து முத்துச்சிரிப்புதிர்த்து மோகனமாய்த்தவித்திருக்கும் மங்கிய மாலை வேளை. பச்சைப் புளுக்களும் பவள வாய் புட்களும் வட்ட நிலாவின் வருகைக்கு ஆலோலம் பாடும் அழகான ஜெனசரேத் கடல் மருங்கு.

அங்குதான் அவனியை இரட்சிக்க ஆன்ம வாஞ்சை கொண்டு மனித உருவெடுத்த மாபரன் யேசு, மனிதர்களை புனிதராக்க மாறாத பாசத்துடன், அருட்கரம் நீட்டினார். அருளாளர்களை தேடி அலைந்து திரிந்தார் ஜெனசரேத்து ஏரிக்கு, அறுவடையின் கடவுள் அருட் போதர்களாம் சீமோன் இராயப்பர், அவரது நண்பர்கள், யாகப்பர், அருளப்பர் ஆகியோருக்கு தமது அன்பு வலை வீசிய முதலிடம் இதுதான். தமது இரட்சணியமாம் இலட்சியப்பாதைக்கு காலடி எடுத்து வைப்பதற்கு முஸ்தீப்பு செய்யும் முத்துக்களை பொறுக்கி எடுப்பதற்கு முதன் முதலில் ஜெனசரேத் ஏரிக்கு வருகிறார். அங்கே அந்த மூவரும் தங்கள் உலுத்துப்போன ஒசீவள்ளத்திள் உழைப்பிற்காக அன்றைய பயணத்தைத் தொடங்குகிறார்கள்

***அங்கு இராயப்பர் - தமது அருமை நண்பர்களை நோக்கி***

சீமோன் இரா - இயாகப்பா, அருளப்பா மோசேஸ் சீக்கிரமாக ஓடியாங்க. ரொம்ப நேரமாப் போச்சு. மற்ற எல்லாரும் போயிட்டாங்க. நாமதான் ரொம்பவும் பிந்திட்டம். உம் சீக்கிரமா படகைத் தள்ளுங்க.

*உரை* *(அவசரத்துடனும் ஆர்வத்துடனும் கரையில் இருக்கும் படகை சீமோனும், இயாகப்பரும், அருளப்பரும் ஏரிக்குள் தள்ளுகின்றனர். படகைத் தள்ளும்போது மீனவர்கள் தங்களுக்கே உரிய பாணியில் பாடும் பாடலை அவர்களும் இசைக்கின்றனர்.)*

ஏலே... ஏலோ.... ஏலோ.... ஏலோ....
ஏலே.... ஏலோ.... ஏலோ..... ஏலோ....

தொகையரா - பார்த்திட்டு ஓடுதடா ஆ... ஆ... தம்பி மீன்களெல்லாம்
எரித்திட்டு ஓடுதடா ........... அடடடடா

1. ஜெனசரேத்து ஏரியில - லேலங்கடி லேலோ
ஜென்மமெல்லாம் உழைக்கிறோமே - லேலங்கடிலேலோ

2. திரள் திரளாய் மீன்களெல்லாம் லேலங்கடிலேலோ
திணறியே ஓடுதய்யா லேலங்கடிலேலோ

3. வட்ட வட்டப்பாறையிலே லேலங்கடிலேலோ
வலைவீசப் போகிறோமே லேலங்கடிலேலோ

4. வள்ளத்தை வளைத்து வாடா லேலங்கடிலேலோ
வலைக்குள்ளே வாறார்பாரு லேலங்கடிலேலோ

5. ஊக்கமாய் உழைத்திடுவோம் லேலங்கடிலேலோ
ஊதியம் கிடைத்திடுமே லேலங்கடிலேலோ

தொகையறா - பொழுது அடைந்தது பூமியிலே.......... தம்பீ
தொழுது இறைவனைத் துதித்திடுவோம்
ஏலத்தண்டு இராக நாதா
ஏலத்தண்டு இராக நாதா
ஓவலம்மா இராக நாதா
ஓவலம்மா இராக நாதா

1. என்ன சொல்லி இராக நாதா இழுத்திடுவோம் இராக நாதா
இடுப்பு நோகும் இராக நாதா துடுப்பும் ஓடும் இராக நாதா

2. மலை செறிந்த இராக நாதா கலிலேயாவே இராக நாதா
மழை பொழியும் இராக நாதா நிலம் செழிக்கும் இராக நாதா

3. மச்சம் சேரும் இராக நாதா மனம் மலரும் இராக நாதா
அச்சம் அகலும் இராக நாதா அமைதி நிலவும் இராக நாதா

4. ஏரிநீரும் இராக நாதா எழுந்திடுதே இராக நாதா
ஓரம் பார்த்து இராக நாதா படகை செலுத்து இராக நாதா

5. அலை எழுந்து இராக நாதா நிலை கெடுமே இராக நாதா
ஆண்டவரின் இராக நாதா துணைவருமே இராக நாதா

தொகையறா - பொழுது புலருது பூங்கா வனத்திலே....... ஆத்தாளம்
வலைதளரும் கயல்புரளாதோ..... ஏலே

1. மனதிலே ஏலோ பயம் அகலும் - ஏலோ
மச்சங்களும் ஏலோ கரைபுரளும் - ஏலோ

2. சிங்கார ஏலோ ஏரியிலே - ஏலோ
பாங்காக ஏலோ படகைவிடு - ஏலோ

3. பறவைகள் ஏலோ பறக்குதடா - ஏலோ
பார்ப்பதற்கு ஏலோ பரவசமே - ஏலோ

4. துடிக்குது ஏலோ சுறாமீனும் - ஏலோ
கடிக்குது ஏலோ கயல்தானும் - ஏலோ

5. இறைவனின் ஏலோ துணையிருக்க - ஏலோ
மறை அன்பில் ஏலோ நிலைத்திருக்க - ஏலோ

*உரை* *(தங்கள் வலைகளை கடலிலே வீசியபின் துள்ளித்திரியும் கெள்ளல்களின் துடுக்கடக்கி அள்ளி கரைசேரும் நோக்குடன் ஆவலுடன் வலையை முடுக்குகின்றனர். சீமோனும் அவரின் நண்பர்களும்.)*

இயாகப்பர் - அண்ணாச்சி! வலையை சீக்கிரம் முடுக்குங்க. அந்தப் பக்கமாய் சீக்கிரம் தூக்குங்க. மீனெல்லாம் பாயப் போது.

சீமோன் - அருளப்பா ஓடியா இங்காலைப்பக்கமா சீக்கிரம் தூக்கு. அதோ ஒரு சேரிமீன் வலையிலே மாட்டிக்கிட்டு துடிக்கிது.

| | | |
|---|---|---|
| *உரை* | | *(ஆழ்கடலிள் மச்சம் அளப்பரிய விதமாக அகப்படும் என்ற பூரண நம்பிக்கையில் ஆர்வத்துடன் வலையை வீசிய சீமோன் இராணப்பரின் நண்பர்களுக்கு பெரும் ஏமாற்றம் காத்திருக்கின்றது என்பதை அவர்கள் எப்படி அறிவார்கள். ஏமாற்றமடைந்த இராயப்பர், யாப்பரையும் அருளப்பரையும் விளித்து)* |
| இராயப்பர் | - | என்னப்பா யாகப்பு அருளப்பா ஏனப்பா உங்கட மொகம் ரொம்ப வாட்டமாயிருக்கு இரவு பூராவும் கண்விழித்து வலைவீசியும் நம்மட கறிப்பாட்டுக்குக்கூட ஆகலையே. அப்படியென்று கவலைப்படுகிறீங்களா (விரக்தியாக சிரித்து) என்னப்பா செய்வது. எல்லாம் அவன் செயல். நாம முயற்ச்சித்தோம் ஆனால் நமக்குக்கிட்டியது இவ்வளவுதான். |
| யாகப்பர் | - | அண்ணாச்சி, சும்மா கவலைபட்டு என்னங்க செய்யிறது. எவருக்கும் அளந்ததுதான் கிடைக்கும். கவலையை விடுங்க. நாளைக்குக்கண்டிப்பா ஏரிக்கு அந்தப்பக்கமா வலையை வீசிப்பார்ப்போம். ராத்திரியெல்லாம் மீன் புழக்கம் அந்தப்பக்கம்தான் ஜாஸ்தியா இருந்தமாதிரி தோன்றிச்சுது. |
| அருளப்பர் | - | சரி சரி எழுந்திருங்க வலையை உதறி உலர்த்தி விட்டு ஏதாவது ஓட்டை ஒடிசல்களை சரிப்படுத்துவோம். சும்மா கவலைப்பட்டு என்னங்க ஆகப்போது. இண்ணைக்கு அம்பிடலைன்னா நளைக்குகிடைக்காமலா போகும். உம் எழுந்திருங்க தண்ணில அலசிக்காயப்போடுவோம். |
| *உரை* | | *(நண்பர்கள் மூவரும் தமக்குள்ளே ஒருவருக்கொருவர் ஆறுதல் சொல்லிக் கொண்டு தங்கள் வலைகளை நீரில் கழுவி வெயிலில் உலத்துகிறார்கள்)* |

***காட்சி மாற்றம்***

# காட்சி - 02

| | | |
|---|---|---|
| *உரை* | | *(அலைகள் புரண்டோடும் ஜெனசரேத் ஏரிக்கரை. மீனவர்கள் அங்கு மிங்கும் இருவர் மூவராக கூடியிருந்து தங்கள் வலைகளில் உள்ள கிழிசல்களை சரிபார்க்கிறார்கள். இராயப்பரும் அப்படியே மற்ற இருவருடன் நிழல் பாங்கான ஓரத்திலிருந்து தங்கள் வலைகளை சரி செய்கிறார்கள். அப்போது ஏரியின் கரையோரமாக தூரத்தில் ஜனக்கும்பல் ஒன்று வந்து கொண்டிருக்கிறது. இக்காட்சியை அருளப்பர் முதலில் கண்ணோக்குகிறார்.)* |
| அருளப்பர் | - | அண்ணாச்சி அண்ணாச்சி அதோ பாருங்க ஜனக்கும்பல் ஒன்று வேகமாய் இங்காலப் பக்கந்தான் வந்து கொண்டிருக்கு. என்னத்திற்காக இவங்க இங்காலப் பக்கம் வாறாங்க. |
| யாகப்பர் | - | ஆமாண்டா தம்பி ஜனங்க ஜாஸ்தியாகத்தான் வாறாப்போலத்தோணுது. அடடே ஒரு வேளை.... கப்பர்நாவும் ஊரில இருந்து வியாபாரத்திற்காக வாறவங்களாகவும் இருக்கலாம். எப்படித் தான் இருந்தாலும் இவ்வளவு தொகையாகவா வருவாங்க. இது ஏதோ கூட்டம் நடத்தப் போற ஆட்களைப் போலல்லோ தெரியுது. |
| இராயப்பர் | - | தம்பீங்களா அட ஜனக்கும்பல் வந்தா நமக்கென்னப்பா யாராவது வந்து என்னத் தையாவது செய்துவிட்டு போகட்டுக்கும். நீங்கபோய் வேலையை கவனியுங்க. அதுசரி அந்த ஜனக்கும்பல்ல அந்தநடுவிலயாரோ புதுசா ஒரு மனுஷன் வாறாரு அவர்யாரு? அவரைச் சூழ்ந்து கொண்டுதான ஜனங்களெல்லாம் வாறாங்க. |

அருளப்பர் - என்ன அண்ணாச்சி அந்த நடுவில வாற மனுஷனை இதுக்குள்ளவா மறந்திட்டீங்க. அவர்தான் அண்ணாச்சி அண்ணைக்கு உங்க மாமியாரு காய்ச்சலா கிடந்த போது அந்த வியாதியை குணப்படுத்தின போதகரு.

இராயப்பர் - அடடே ஆமா அவரப் போலத்தான் தோணுது. அந்த மனுஷன் மகா பெரிய தீர்க்க தரிசியாச்சேப்பா. இப்பதான் புரியுது இந்த ஜனக்கும்பல்லா ஏன் அவரைச் சூழ்ந்து கொண்டு வருதின்று.

யாகப்பர் - ஆமாண்ண. இந்த ஜனங்களெல்லாம் அவரின்ற போதனையைக் கேக்கிறதற்கும் அவர் செய்கிற புதுமைகளை பார்க்கிறதற்கும்..........

அருளப்பர் - தங்கட நோய்களை தீர்க்கிறதற்கும் பேய்களை வெருட்டுவிக்கிற்குந்தான வாறாங்க.

இராயப்பர் - ஆமாண்டா தம்பிங்களா சரியாச் சொல்லிட்டீங்க. ஆமா அவரு நம்மளத்தான நோக்கி வாறாப்போலதோணுது.

யாகப்பர் - ஆமாங்க கண்டிப்பா அவரு நம்ம பக்கந்தாவாறாரு.

அருளப்பர் - (மெதுவாக) அண்ணாச்சி அதோ பாருங்க நம்ம படகிலதான் ஏறுறாரு. அதோ பாருங்க ஏறி உட்காந்திட்டாரு.

இராயப்பர் - அடடே ஆமாண்டா தம்பி. நம்ம படகிலதான் ஏறியிருக்காரு. வாங்க வாங்க நாமளும் அவருக்கிட்ட போவம்.

*உரை* *(எம் பெருமான் கிறிஸ்து இரட்சகர் படகில் இருந்து கொண்டே கரையில் சூழநின்ற ஜனக்கும்பலைப் பார்த்து தமது திருவாய் மலர்ந்தருளுகிறார். அவரின் கனிமொழிகள் ஜனங்களின் மனதில் ஆழமாய்ப்பதிந்து செவிகளிலே தெய்வீக கீதமாக ஒலிக்கிறது. சகலரும் அவருடைய வாயிலிருந்து புறப்படும் ஒவ்வொரு வார்த்தையையும் ஆவலுடன் கேட்கிறார்கள்.)*

கீதம் - சர்வேசுரனின் சுதன்நாமே
சர்வவல்லமையும் எமதாமே
அனைத்தையும் ஆண்டு அசைப்பவர் நாமே
ஆதிபரனின் அடிவருவோமே - (சர்வேசுரனின்)

*உரை* *(ஆண்டவருடைய ஆவியானவர் என் மேலிருக்கிறார். ஆதலால் அவர் என்னை அபிஷேகம் பண்ணினார்)*

கீதம் - பாவம் பொறுத்தலின் பரன்நாமே
பாவிகளை மீட்கும் மனுமகன்நாமே
நீதிமான்களை மீட்பதற்கல்லவே
பாவிகளை நான் தேடி வந்தேனே (சர்வேசுரனின்)

*உரை* *(தரித்திரருக்கு நற்செய்தியை பிரசங்கிக்கவும் இருதயம் நொறுங்கினவர்களை குணப்படுத்தவும் அனுப்பினார்)*

கீதம் - விசுவசித்தால் நீங்கள் விண்ணடைவீர்
விசுவசியாதவர் புண்அடைவீர்
மனுமகன் எனக்கு மண்ணுலகினிலே
மகிமைப்பிரதாபமும் அருளப் பெற்றோமே - (சர்வேசுரனின்)

உரை *(சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும் குருடருக்கு பார்வையை அளிக்கவும் என்னை அனுப்பினார்)*

கீதம் - இறைவாக்கினரின் இறைவனும் நாமே
மறைபோதகத்தின் ஒளியும் நாமே
ஆதிபிதாக்களின் கடவுளும் நாமே
அநாதி பிதாவின் சுதனும் நாமே - (சர்வேசுரனின்)

உரை *(மனமுடைந்தவர்களை சுயாதீனமாய் அனுப்பிவிடவும் இறைவனுக்கு பிரியமான வருஷத்தையும் பிரதிபலன் நாளைப் பிரசங்கிக்கவும் என்னை அனுப்பினார்)*

கீதம் - சர்வேசுரனின் சுதன் நாமே
சர்வ வல்லமையும் எமதாமே
அனைத்தையும் ஆண்டு அசைப்பவர் நாமே
ஆதிபரனின் அடிவருவோமே - (சர்வேசுரனின்)

உரை *(கிறிஸ்து இரட்சகரின் போதனையை செவிமடுத்த மக்களுக்கிடையே இவர் யார்? இவர் எப்படிப்பட்டவர்? இவர் தான் உண்மையான மெசியாவா? அல்லது இறைவாக்கினர்களின் ஒருவரா? என்ற வினாக்கள் பல எழுகின்றன)*

ஒருவர் - தம்பி இந்த மனுஷன் எவ்வளவு அழகாக பேசுகிறார் பார்த்தியா? இவரு ஒரு மகான்போல தோணுது. இவர் பேச்சு எவ்வளவு கனிவாகவும் இனிமையாகவும் உண்மையாகவும் இருக்கு பார்த்தியா?

2ம் ஆள் - ஆமாங்க இவர்தான் உண்மையான மெசியாபோலத் தோணுது. பேய்களை வெருட்டுறாரு. நோய்களை குணமாக்குறாரு. நேற்றெல்லாம் பாருங்க ஒரு பேய்பிடித்த மனுஷன் இவர் குணமாக்கினபோது. அவன் ரொம்ப உரத்த சத்தமாய் நீரே சர்வேசுரனின் குமாரன் அப்படின்னு கத்திக் கொண்டு ஓடினான் பாருங்க நீங்க அதைக் கவனிக்கிலைங்களா.

ஒருவர் - ஆமாந்தம்பி நான் கவனிச்சுக்கிட்டுத்தான் இருந்தன் இவர்தான் உண்மையான மெசியா. இவதான் நம்முடைய இரட்சகரு.

2ம் ஆள் - அதில் என்னங்க சந்தேகம். உண்மையான மெசியா இவர்தாங்க. உண்மையான இரட்சகரும் இவர்தாங்க.
***(எல்லோரும் ஒருமித்து கூக்குரலிடுகின்றனர்)***

*(காட்சி மாற்றம்)*

## காட்சி - 03

உரை *(தன்னைச் சூழநின்ற ஜனங்களுக்கு இறைவனின் பரிசுத்த நற்செய்தியை எடுத்தியம்பியயேசு பெருமான்தானே உண்மையான இறைமகன் என்பதை எடுத்துக்காட்ட விருப்பம் கொண்டவராய் ஆழ்கடலிலே படகை செலுத்தும்படி சீமோன் இராயப்பரை விளிக்கிறார்)*

யேசு - சீமோன் உன்னுடைய படகை ஆழத்திலே தள்ளிக்கொண்டுபோ

இராயப்பர் - அப்படியே போதகரே. ஜனக்கும்பலும் தங்களை நெருக்கிக்கொண்டேவாறாங்க. படகையும் மொய்த்து விடுவாங்கபோலிருக்கிறது. யாகப்பா, தம்பி அருளப்பா படகில துடுப்பை மாட்டுங்க. நல்ல ஆழத்திற்குக் கொண்டு போவோம்.

அலை ஓசை

உரை *(எம்பிரானின் வேண்டுதலுக்கிணங்க இராயப்பரும் அருளப்பரும் இயாகப்பரும் தங்கள் படகை ஜெனசரேத் ஏரியின் ஆழமான பகுதிக்குச் செலுத்துகின்றனர். நேரமோ காலை வேளை கதிரவனின் பொன்னிறக்கதிர்கள் நீர்த்திவலைகளில் வர்ண ஜாலங்காட்டுகிறது. பட்சி ஜாலங்கள் ஏரியின் பலபக்கமும் பறக்கின்றன. பல அற்புதங்களையும் புமைகளையும் போதனைகளையும் செய்த இறைமகன் தமது படகிலே வருகிறார் என்ற அக்களிப்பினால் சீமோன் இராயப்பரின் கைகள் துடுப்பைவேகமாக கூட்டுகின்றன. (தண்ணீர் ஒலி) ஆனந்த மிகுதியினால் இசையுடன் ஒலி எழும்புகிறது.)*

பாடல் - ஏலே ஏலே ஏலே ஏலே கப்பல்
ஏலே ஏலே ஏலே ஏலே கப்பல்
போகுது பாருமே போதகர் தமைஏற்றி
வேகமாய் ஓடுதய்யா ஆ........ ஆ....
ஏலே லே ஐலசா ஏலேலே ஐலசா ஏலேலே ஐலசா

1. செங்கதிரோன் செறி ந்த வெங்கதிர்வீசி
மங்கலமாய் மனதில் மகிழ்வூட்டி
எங்கணும் பறந்தோடும் பறவைகள் பாருமையா
யூதேயா நாட்டினிலே ஏ....... ஏ........ ஏ..........

2. முத்துக்கடல் முழுவதும் வலைவீச
மொத்தக் கயல் துடித்திடவளைந்திங்கு
எத்தனை விதமான சித்திர மச்சங்கள்
அத்தனை ஓடுதய்யா ஆ........ ஆ........ ஆ......

3. வானமோங்க வளர்ந்திட்ட தருக்களும்
மோனநிலைகலைந்திட்ட குருகளும்
வீணே இங்கு நாளைக்களித்திடும்மக்களும்
நாணியோடும் நதி ஏலே......

4. மேதினியை மீட்டிடும் மெசியாவை
பார்தனிலே பார்த்திடதுடித்திடும்
ஏர்நிறை வளங்களும் எங்கணும் நிறைந்திடும்
பாங்கான நாடிதுவே ஏலே.......

கிறிஸ்து - சீமோன் உன் படகின் வேகத்தை சற்றுக்குறையப்பா நாங்கள் கரையிலிருந்து சற்றுத் தொலைவிற்கே வந்துவிட்டோம்.

இராயப்பர் - ஆகட்டுங்க. தம்பி அருளப்பா சுக்கானை மடக்கி துடுப்புகளை எல்லாம் கழட்டு

கிறிஸ்து - சீமோன் உன் வலைகளைத் தூக்கி இதோ இந்த இடத்திலே வீசு உங்களுக்கு போதியளவு மச்சம் கிடைக்கும்

இராயப்பர் - (சிரிப்பு) போதகரே நாங்களெல்லாம் இராத்திரி பூராவும் இந்த ஏரியை அலசிவிட்டோம். இன்றைய மீன்பிடி எங்கடப்பாட்டுக்குக்கூட பத்தாதுங்க சும்மா வீணா வலையை வீசி என்ன பிரயோசனம்.

| | | |
|---|---|---|
| யாகப்பர் | - | ஆமாங்க போதகரே அண்ணாச்சி சொல்றது சரிதாங்க. இரவுபூராவும் வீணாக கண்விழிச்சு கஷ்டப்பட்டதாங்க மிச்சம். பொழைப்பும் கம்மிதானுங்க மீண்டும் ஏங்க கஷ்டப்படனும் |
| கிறிஸ்துநாதர் | - | சீமோன் கவலைப்படாதே நான் சொல்கிறேன். நீங்கள் உங்கள் வலைகளை இதே இடததில் வீசுங்க. |
| அருளப்பர் | - | என்னங்க அண்ணாச்சி இன்னுமா சந்தேகங்கொள்றீங்க நம்ம போதகர்தான் சொல்றாரு. நாம வலையை வீசுவோம் எழுந்திருங்க. |
| இராயப்பர் | - | ஆமாந்தம்பிகளா வலையை வீசுவம் எழுந்திருங்க. யாகப்பா நீ அங்காலப்பக்கம்போ அருளப்பா இந்தப் பக்கம் நில்லு. |
| *உரை* | | *(இறை மகனின் வேண்டுதலுக்கிணங்க அவர்கள் வலையை வீசினார்கள் தேவ குமாரனின் அருள் அவர்களுக்கு இருந்தது. அவர்கள் வலைகள் கிழிந்து போகும் அளவுக்கு மச்சங்களால் நிறைந்தது. ஆச்சரியத்தினால் தம்பித்தே விட்டார்கள்)* |
| யாகப்பர் | - | (உரத்த சத்தமாய்க்கூவி) அண்ணாச்சி ஓடியாங்க. ஓடியாங்க. நம்ம வலைகளெல்லாம் கிழிஞ்சுபோகுது ஐயோ எம்பிட்டு மீன் பார்தீங்களா இங்கால வந்து பாருங்க எல்லாம் சேரியும் செப்பலியும், வாளையும், சிறையாவுமுங்க வலையை தூக்கவே முடியல்லீங்க. |
| அருளப்பர் | - | அண்ணாச்சி அதோ மோசேஸ் ஓடியா ஓடியா சீக்சிரமா ஓடியா.<br>(மோசேசும் கூட்டாளிகளும் தமது படகில் வந்து இராயப்பருக்கு உதவி செய்கிறர்கள்) |
| மோசேஸ் | - | அண்ணாச்சி என்னங்க இது இவ்வளவு மீனையும் எங்க இருந்துங்க பிடிச்சிங்க அடேங்கப்பா, எவ்வளவு மீன். |
| இராயப்பர் | - | மோசேஸ் அது அப்புறம் பேசிக்கலாம். முதல்ல மீன்களையெல்லாம் படகில கொட்டு. அடேயப்பா படகும் நிரம்பிப்போச்சுதே. என்னங்க செய்யறது. |
| அருளப்பர் | - | அண்ணாச்சி நம்ம படகும் நிரம்பிற்றுங்க. எவ்வளவு பெரிய அதிசயம் பார்த்திங்களா. |
| உரை | | *(இராயப்பர் முகங்குப்புற கிறிஸ்துவின் பாதங்களில் விழுந்து மனங்கசிந்து சொல்லுகிறார்)* |
| இராயப்பர் | - | ஆண்டவரே நான் பாவியான மனுஷனுங்க. என்னை விட்டு அகன்று விடுங்க. இவ்வளவு பெரிய நன்மைகளை எனக்கு நீங்க செய்ய நான் அருகதையற்றவனுங்க. ஆண்டவரே என்னை விட்டு அகன்றுவிடும். |
| அருளப்பர், யாக | - | ஆண்டவரே நாங்கள் என்ன கைமாறுதங்களுக்குச் செய்யப்போகிறோம். நாங்களெல்லாம் மீன்பிடிக்கிறவங்க. பாவிகள் எங்களைவிட்டு அகன்றுவிடும் ஆண்டவரே. |
| கிறிஸ்துநாதர் | - | சீமோன்! மகனே வா "வா மகனே வா" இத்தனை நாட்களாக நீ மீன்களைப் பிடிக்கிறவனாயிருந்தாய் ஆனால் இன்றுமுதல் நீ மனிதர்களை பிடிப்பாய்" |
| *உரை* | | *(இந்த வாரத்தையைக் கேட்ட மாத்திரத்தே சீமோனும் மற்றவர்களும் இறைவனின் திருப்பாதத்தில் விழுந்து)* |

கீதம் - வாராயோ இறைவா எமக்கருள்
தாராயோ நின் திருக்கர ஆசியை - வாரா

1. திருமறைபோதக சிந்தனை பாரினில்
அருள்மழை பொழிந்திட அவனியில் வளர்ந்திட - தாராயோ

2. பாதம் தினமும் பணிந்து நாம் சேவிக்க
மாதம் தினமும் மறையன்பை பொழிந்திட
ஆதவனே நின் அருட்கதிர் ஒளிர்ந்திட
மாதவனே எம் மனதினை ஆட்கொண்டாய் - தாரா

கிறிஸ்து - சீமோன், யாகப்பா, அருளப்பா எழுந்திருங்கள். என்னைப்பின் தொடருங்கள் உங்கள் விசுவாசம் உங்களை இரட்சித்தது.


இராயப்பர் - போதகரே இதோ இந்த நிமிஷமே நாங்கள் சகலத்தையும் துறந்து உங்கள் பின்னாலேயே வருகிறோம்.

*உரை* *(ஆண்டவனின் அழைப்பை அகமகிழ்வுடன் ஏற்றுக்கொண்ட அருளப்பர், யாகப்பர் இராயப்பர் மூவரும் தங்கள் உடமைகள் யாவற்றையும் அப்படியே விட்டுவிட்டு இறைவனின் திருப்பணித் தொண்டை பூவுலகில் பரப்பிட புறப்பட்டுச் செல்கின்றனர். அங்கு குழுமியிருக்கும் ஜனக்கும்பலின் மனதிலே இத் தெய்வீக அழைப்பின் மகிமை ஆழமாகப் பதிகிறது.)*

முடிவுரை - இறைவா எங்கும் நிறைந்திருப்பவனே சத்திய சொரூபியே தயைக்கடலே எமது பணியில் உனைக்காண அருள்புரிவாய். ஆயகலைக்கெல்லாம் ஆரம்பம் நீரே. கலை மூலம் இறை உணர்வு மக்களிடம் பரவ அருள்கூர்வாய் ஆண்டவனே. ஆத்மீக வாழ்வு மலர்ந்து அன்பரசு அவனியிலே ஆட்சி செய்து சத்திய பூக்காடாக சமதர்மம் பூத்துக் குலுங்கி அன்பு, அஹிம்சை, அருள்வாழ்வு எங்கும் ஓங்குவதாக உன்னத இறைபணியை மண்ணுலகில் எடுத்தியம்பும் அருளாளர்கள் விண்மீனைப் போன்றும் கடல் மண்போன்றும் பரவ நின்கருணை விழி திறந்து அருள்மழை பொழிந்திடுவாய் ஆண்டவனே ஆமென்.

# விவசாயம்

(கதாப்பிரசங்கம்)



திமிகிட திமிகிட பாக்யமே தஞ்சம்
திமிகிட திமிகிட பாக்யமே தஞ்சம்
வருவாய் கலைமகளே அன்பாக தருவாய் நினதருளே (2)

1ம் ஆள் - ஓகோ! கீரத்தனா ஆரம்பத்திலே இங்கு குழுமியிருக்கும் பிரமுகர்களுக்கும், இரசிகப் பெருமக்களுக்கும் எங்கள் அன்புகனிந்த வணக்கம்........ (தமிகிட)

2ம் ஆள் - அண்ண இண்ணைக்கு, இவ்வளவு பெரிய ஜனக்கும்பல் வந்திருக்கிறதே, என்னத்துக்கு, ஏதுக்கு, எப்படியெண்டே புரியலையே

1ம் ஆள் - தம்பி உனக்குப் புரியலையா. எங்கட முருங்கன் வட்டார பாடசாலைகளின் நலன் கருதி ஒரு சிறு நிதி திரட்டுமுகமாக எங்க வட்டாரக்கலைக்குழுவினர் ஒரு கலைவிழா நடத்துறாங்க. அதற்கு ஆதரவளிக்கவந்திருக்கிறவங்கதான் இந்த இரசிகப்பெருமக்கள்.

2ம் ஆள் - ஓகோ! அப்படியா, நம்ம மக்களுக்கு கல்விமுன்னேற்றத்தில அவ்வளவு அக்கறையிருக்கு பார்த்தீங்களோ?

1ம் ஆள் - ஆமாண்டா தம்பி, நம்ம பிள்ளைகளின்ர கல்வி வளர்ச்சிக்கு எமது கல்வி அதிகாரிகள் எடுக்கிற ஊக்கத்திலே நம்ம பெற்றோரும் ஒத்துழைக்கத்தானே வேணும்.

2ம் ஆள் - உண்மை, உண்மை. ஆனால் இண்ணைக்கு நம் மன்னார் மாவட்டத்தில் பொருளாதார வளம் குன்றியிருக்கிறதினாலேதான் எமது பாடசாலைகளும் தரம்குன்றிப் போயிருக்கு.

1ம் ஆள் - உண்மைதாண்டா தம்பி, இருந்தாலும், முத்துக்குளிப்பதிலே முதலிடம் பெற்ற நம்ம மன்னார் மாவட்டத்தின் ஒரு பகுதியான இந்த முசலிப்பிரிவு விவசாயத்திலே குன்றிப் போகல அதனாலதான்
*நாட்டிற்கு நலம் பெறவே நல்ல தொரு தொழிலும் வேண்டும்*
*வீடெங்கும் விளங்கிடவே விசவாசயத்தொழிலும் சிறந்ததடா*
*ஊக்கமும் உயர்வும் கிடைக்குமடா*
*உண்மையும் நன்மையும் விளங்குமடா*
*நாட்டினில் நல்வளம் ஓங்கும்*

1ம் ஆள் - இப்படியாகத்தானே, விவசாயம் ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு பெரும் ஊற்றுப் போன்றது என்பத உணர்ந்துதான் நம்மமுசலி மக்கள் விவசாயத் துறையில ஈடுபடுறாங்க இருந்தாலும் சரியான (முறையான) முறையில செய்கிறதேயில்லை

2ம் ஆள் - அண்ணே விவசாயத்த சரியான முறையில செய்ததில்ல அப்படீன்னு சொன்னீங்களே, இந்த விவசாயத் தொழிலுக்கு மிகமிக முக்கியமாக வேண்டியது தண்ணீர் தானுங்களே. அது நம்ம பகுதியில கிடைக்கலையே, நல்ல குளந்தானும் இங்க இல்லையே

1ம் ஆள் - அட வியூகப் பெருமாளே நம்ம மன்னாரில தான Giants tank அதாவது கட்டுக்கரைக்குளம் இருக்கேப்பா அதுமட்டுமா இங்க எங்கபார்த்தாலும் ஒரே குளமாகத்தானே இருக்கு

2ம் ஆள் - என்னண்ணே, குளங்களா அப்படி என்ன குளங்கள்தான் இருக்கு சொல்லுங்க பார்ப்போம்.

1ம் ஆள் - தம்பி.......
குளங்கள் தம்பி குளங்கள்
பல பல பெயரில் பக்குவமான பெரிய சிறிய பல குளங்கள்
சுண்டிக்குளம், நளவன் குளம், முருங்கன் குளம், சிறுக்குளம்,
புரண்ட வெளிக்குளங்கள்,
வண்ணாகுளம், இசங்ககுளம், கோவங்குளம் பாசிக்குளம்,
மணற்குளம், அச்சங்குளம் - குளங்கள்
சாம்பன் குளம், வேப்பங்குளம், கள்ளிக்குளம் நல்ல முள்ளிக்குளம்
மணியன் குளம் பணிக்கர் புளியங்குளம் - அதுமட்டும்மா
நறுவிலிக்குளம்

2ம் ஆள் - ஆகா..... அதுக்கப்புறம்

1ம் ஆள் - அட சொல்றன் கேளுப்பா
வஞ்சியன்குளம்
உயிலங்குளம் சிறுநாவற்குளம்
வெறிக்கன் குளம், நாவற்குளம், கொல்லன் குளம்
நொச்சிக்குளம் ஞானி ஆலங்குளம்

2ம் ஆள் - அண்ணாச்சி 25 ஆச்சி

பெரிய ஆலங்குளம், துப்பாசி ஆலங்குளம்
பெரிய கங்கன் குளம்
குஞ்சிக்குளம், கோட்டைக்குளம், காத்தான்குளம்
வெள்ளாங்குளம், கண்டல்குளம் மினுக்கன் குளம்
இலந்தவான்குளம் உயிர்த்தராயன் குளம்

1ம் ஆள் - தம்பி கடைசியாக ஒரேயொரு குளந்தான் பாக்கி

2ம் ஆள் - அது என்ன குளங்கண்ணே

1ம் ஆள் - அதுவா, சொல்லவேபயமாயிருக்கப்பா, அதுதான் பேய்க்குளம்

2ம் ஆள் - ஐயையோ பேய்குளமா.............

1ம் ஆள் - இப்படியாகத்தானே நம்ம மன்னார் மாவட்டத்திலே 40க்கும் மேற்பட்ட குளங்கள் இருக்குது (யாராவது இங்க இருக்கிற இரசிகப் பெருமக்கள்ற ஊரும் ஒருகுளமெண்டா சொல்ல மறந்ததிற்காக மன்னிச்சிடுங்க) ஆகவே இப்ப சொல்லு தம்பி தண்ணீருக்கு என்ன பஞ்சம்

2ம் ஆள் - ஆ மாண்ண - வெறுந்தண்ணி இருந்தா மட்டும் போதுமா........
விவசாயம் செய்றதுக்கு நல்ல காணியும் இருக்கணுமில்ல..........

1ம் ஆள் - ஆமாண்டா தம்பி.......... அதுக்குத் தான் நம்ப அரசாங்கம் சொல்லுவது
*காடுகள் வெட்டிகழனிகளாக்கிடும்*
*பீடுயர் பெற்றிடும் சிங்கங்களே*
*நாடு செழித்திட வீடு கொழித்திட*
*ஏடு புகழ்ந்திட வாழுங்களே*

காட்டை அழித்து, கழனியாக்கி, நிலத்தை உழுது பண்படுத்தி விவசாயத்தை செய் அப்படீன்னு நமது சர்க்கார் ADVISE பண்ணுதப்பா

2ம் ஆள் - சரி சரி நீங்க சொல்றமாதிரி, நீர் இருக்கு, நில மிருக்கு இதுஇரண்டுமிருந்தா போதுமா

1ம் ஆள் - வேறு என்னதான் வேணும்

2ம் ஆள் - அந்த இலட்சுமி தேவியுடைய கடாட்சம் வேண்டுமே

1ம் ஆள் - அடடா நீ பணத்தைப்பற்றிப் பேசுறியா......... அதுக்குத்தானே நம்ம சர்க்காரு வழி செய்திருக்கிருங்க LOAN கொடுக்கிறாங்களே நீ கேள்விப்பட்டதில்லையா

2ம் ஆள் - என்னங்க Loan ஆனா, இந்த நைலோன், கொர்லோன் அப்படீன்னு சொல்றாங்களே அதுவா....

1ம் ஆள் - அது இல்லேப்பா.... இது கடன் அரசாங்கம் நம்ம கமக்காரருக்கு விவசாயக்கடன் அப்படீன்னு கடன் கொடுக்குது. காடு வெட்ட, உழ, வேலி அடைக்க, அப்புறம் நாற்று நட, மருந்து அடிக்க, உரம் வீச இப்படீன்னு கடன் தரும்போது நாம நம்ம அரசாங்கத்தை

*கமத்தொழில் பெருக கமக்காரர் உயர*
*கடன்தந்து உதவும் நல்லரசே*
*உழவுக்கும், விளைவுக்கும் நிரந்தரமாக*
*ஊக்கமளிக்கும் எமதரசே............ (கமத்தொழில்)*

*முதலில் காடு வெட்ட பின்பு*
*கழனிகளாக்கி விதைவிதைக்க*
*உரமும் மருந்தும்வீச நல்ல*
*ஊக்கமும் ஆதரவும் தந்திடுவீரே (கமத்தொழில்)*

*குளங்கள் நீரால் நிரம்ப உயர்*
*வரம்புகள் ஆக்கி அளித்திடுவார்*
*வளமாய் வாய்க்கால் ஆக்கித் தரும்*
*வானுயிர் பயிரை வளர்த்திடுவாரே (கமத்தொழில்)*

2ம் நாள் - சரி பணமும் கிடைச்சிட்டு இருந்தாலும் நம்ம நாட்டில எப்படித்தான் நிலத்தை பண்டுத்தினாலும் நல்ல பலனைக் கொடுக்குதில்லையே அதுக்கு என்னண்ணே செய்யறது.

1ம் நாள் - தம்பி அதுக்குத்தான் நல்ல சிறந்த வர்க்க நெல்லினத்தை விதைக்கணும், பக்குவமாகக் கண்காணிக்கணும். அப்புறம் நல்ல பயனை நிச்சயமாகப் பெறலாம்.

2ம் நாள் - நல் இன நெல்லு அப்படி என்னதான் இருக்கு

1ம் நாள் - அடதம்பி நெல்லினங்கட பேரைக் கேட்டாலே ரொம்பசுவையாக இருக்கும் தெரியுமா

2ம் நாள் - அப்படீங்களா - கொஞ்சம் சொல்லுங்கபாப்போம்

*கேளு கேளு நல்லாக் கேளு*
*கேட்டபின்பு விதைச்சுப் பாரு*
*ஊட்டந்தரும் நெல்லு இனங்கள் - தம்பி*
*நாட்டமோடு சொல்லுங் கதைகள் - கேளு*

*முருங்கைக்காயின் இனத்தைப் பாரு*
*முறுவலிக்கும் விதத்தைப்பாரு*
*பச்சைப் பெருமாள் பசுமைபாரு - ஐயா மாரே*
*இச்சை தரும் சம்பா பாரு - (கேளு)*

*குறுவையினத்தின் குறும்புபாரு*
*குமரிபோன்ற நொறுங்கன்பாரு*
*சிரிக்கவைக்கும் சீனட்டிபாரு - ஐயா மாரே.....*
*சீற்றங் கொள்ளும் மணல்வாரி பாரு - (கேளு)*

*இளங்கலயன் இனத்தைப் பாரு*
*பனங்களியன் பசுமைபாரு*
*பாள செறி வீறுபாரு - ஐயா மாரே*
*கொக்கும் வெள்ளை அலகைப்பாரு......... (கேளு)*

*மொட்டைக்கறுப்பன் முளியைப்பாரு*
*வட்டுப்பித்தன் வயிற்றைப்பாரு*
*பொக்காளி வாயைப் பாரு.......... ஐயாசாமி*
*ஏகோததிரன் எழிலைப்பாரு........... (கேளு)*

இப்படியாகத்தானே இன்னும் எத்தனையோ பலரக பெயருடைய சிறந்த இனங்கள் இருக்கு ஆனா இப்ப என்னடான்னா
BG 34 - 6, BG 34 - 11, BG 34- 11, BG 11-11 இப்படி ஓரினம்
IR - 8, IR 262 - அப்படி ஓரினம்
MI - 273, LD - 66 - இது இன்னொரு இனம்
இதுவும் ஒரு இனந்தான்
மற்றது பினியூலோட் இப்படி பல்ல உடைக்கிற பேர்களோ இந்த நெல்லினங்களெல்லாமா நம்ம மக்கடவாய்க்குள்ள போய் அப்படியே parts parts சா வெளியில தள்ளுது தெரியுமோ.

2ம் நாள் - உண்மை, உண்மை முற்றிலும் உண்மைங்க சரி நல்லரக நெல்லும் வந்திட்டு, ஆனா அண்ண எனக்கு இன்னும் ஒரு சின்ன டவுட்டு

1ம் நாள் - நாசமாய்ப் போக இன்னுமா உனக்கு டவுட்டு அவுட்டு வெளியால கொட்டு

2ம் நாள் - அண்ணாச்சி எவ்வளவுதான் பந்தோபஸ்தாக நம்ம மக்கள் கட்டிக்காத்து பயிர வளர்த்தாலும் இந்த இயற்கை சதி செய்து போடுதே. ஒண்ணு மழை இல்லமபோடுது அதத்தான் குளத்தில இருக்கிற நீரால சமாளித்தாலும் இந்த நோய் வந்துல்லா பாழ்படுத்திடுது இந்த நாசமாப்போன நோய்க்கு ஒரு நோய்வரக்கூடாதா

1ம் ஆள் - தம்பி நீ சொல்றதும் சரிதான். விஞ்ஞானம் வானளாவ வளர்ந் திருக்கிற இந்தக் காலத்திலே கேவலம் இந்த நோய்களுக்கு மருந்தில்லாமலா போயிடும் இந்தாங்கோ நெல்லினங்களுக்கு வாற நோய்களத் தெரியுமா

2ம் ஆள் - சொல்லுங் கண்ணாச்சி

*சந்துகுத்தி நோய்களே - தம்பி*
*சந்துக்குத்தி நோய்களே.....*
*சர்வமும் நாசமாய் சகலமும் மோசமாய்*
*சனியனாய் பீடித்துள்ள முனயனாய் முடித்திடும் (சந்து....)*

*எரிபந்தம் இலைச்சுருள் பால்வெடியன்*
*அடிஅழுகல், செந்தண்டு, வெண்தண்டு*
*அத்தனை நோய்களும் மெத்தவே மோசமாய்*
*அழகிய பயிரினை அழுகவே செய்திடும் (சந்து...)*

இப்படியான நோய்களால் பாதிக்கப்படும் பயிர்களுக்கு விமோசனமளிப்பதற்காகத்தான் எமது சர்க்கார் என்ன செய்திருக்காங்க தெரியுமா

2ம் ஆள் - அப்படி என்னண்ணை செய்திருக்காங்க

*என்றெக்சு என்கின்ற மருந்தினால் - இந்த*
*எரிபந்தம் இலைச்சுருள் தீருமே - தீருமே*
*எக்காடெக்ஸ் தெளித்தால் போதுமே*
*இந்த சத்துக் குத்திகளும் ஓடுமே........ தனதன்ன.......*

*பொல்லாத போலிடோலும் போதுமே - ஏதும்*
*சொல்லாமல் நோய்களும் தீருமே - தீருமே*
*சுமத்தியோன் பனித்தியோன், பொலித்தியோன்*
*இவை சுணக்காமல் தீர்த்திடும் நோய்களை*

2ம் ஆள் - அண்ணாச்சி பயிர்களை நாசமாக்கும் நோய்களைத் தீர்க்கும் இந்த மருந்துகள் பயிருக்கு உயிரையும் நம்ம உயிருக்கு உலையையும் வைக்கிறதே. அண்ணாச்சி இன்னும் ஒரு சின்ன டவுட்டு

1ம் ஆள் - அடே யார்றா இவன் சும்மா டவுட்டு கிவுட்டுண்டு கேட்டுத்தொலை

2ம் ஆள் - அண்ணாச்சி நாம் ரொனிக் அது இது குடிச்சி கொழுத்து பூரிப்பா இருக்கிறாப்போல இந்த பயிர் பச்சைகளும் செழிப்பாகவர ஏதாவது Tonic தேவதானே அண்ணே

1ம் ஆள் - Correct சரியான கேள்வியை கேட்டுப் புட்டே
*தம்பி கேட்பாயே நல்ல செய்தி கேட்பாயே*
*நாளும் பலன் பார்ப்பாயே*

2ம் ஆள் - *என்னத்தைக் கேட்பேன் நான்*
*எவ்விதம் கேட்பேன் நான்*

1ம் ஆள் - *யூரியா உரத்தினால் உயர்ந்திடுமே*
*உள்ளபலன் தந்திடுமே - பயிர்*
*பொட்டாசும் போஸ்பேற்றும்*
*சல்பேற்றும் கலவையும்*

2ம் ஆள் - அண்ணாச்சி விவசாயத்தை எப்படி சிறப்பா செய்யணும் நம்ம சர்க்காரு அதுக்கு எவ்விதம் உதவி செய்யும் அப்படீன்னு நல்லா விளக்கமா சொல்லிப்பிட்டீங்க - நான் நாளையில இருந்து ஏதாவது ஒரு காணித் துண்டைப்பிடிச்சி வெள்ளாமைதான் செய்யப்போறேன்

1ம் ஆள் - *ஆமாண்டா தம்பி*
*மேழி பிடிக்கும் கை*
*வேல்வேந்தர் நோக்குங்கை*
*ஆழிதரித்தே அருளுங்கை*
*காராளர் கை - யல்லவா*

2ம் ஆள் - உழவுக்கும் தொழிலுக்கும வந்தனை செய்வோம் ஆகவே இங்கு கூடியிருக்கும் இரசிகப் பெருமக்களுக்கும்

1ம் ஆள் - பொறுமையாக இருந்து கேட்டவர்களுக்கும்

2ம் ஆள் - எங்களுக்கு இந்த சந்தர்பத்தை அளித்த கலைக்குழுவினருக்கும் வங்காலை பெ. ஆ. ச. வணக்கம்

*அனைவருக்கும் வந்தனமே.... இங்கு*
*அனைவருக்கும் வந்தனமே*

*அனைவர்க்கும் வந்தனம்*
*மகிழ்வுடன் கூறியே*
*கலைதனில் மகிழ்வுறும்*
*நிலைதனைப்போற்றியே (அனைவருக்கும்)*

---

# மீன்பிடி கூட்டுறவு தினம்

**(வில்லுப்பாட்டு)**



*தந்தனத்தம் என்று சொல்லியே - வில்லில்பாட*
*வரம் தந்தருள வேண்டும் அன்னையே*
*வரம் எமக்குத் தந்தருள வேண்டும் அன்னையே*
*தந்தனத்தோம் தானதன்னா........... தந்தனத்தம் தானாதன்னா...........*

1. *வளைதிரை பொங்கி வான் புகழ் கூறி*
   *கரை செழித்தோங்கிடவே.... எந்நாளும் தந்தனத்தம்*

2. *மீனவர் சூழ்ந்த மாண்புறு மன்னார்*
   *தான் புகழ் ஓங்கிடவே எந்நாளும்..... தந்தனத்தம்*

1ம் ஆள் - பெரியோர்களே!

2ம் ஆள் - இந்த மீன்பிடி கூட்டுறவுத் தினத்திலே இங்கு கூடியிருக்கும் இரசிகப் பெருமக்களே

1ம் ஆள் - நாங்க இங்கு வந்திருக்கும் விஷயம் என்னடாண்டா

2ம் ஆள் - அண்ண முதல்ல சப்ஜஹ்றுக்கு வாங்கண்ணா

1ம் ஆள் - இவன் யார்றா முந்திரிக் கொட்டை மாதிரி மூக்க நீட்டிண்டு சப்ஜஹ்றுக்கு வராம ஒப்ஜஹ்றுக்காவரப்போறன், தம்பி முன்னொரு காலத்தில முத்துக்குளிப்பதில் முதலிடம் பெற்றது நமது மன்னார் மாவட்டம்

2ம் ஆள் - ஆமாமண்ண அப்படியே History யை ஆராய்ந்தால் முத்துக்குளிப்பதில் மட்டுமல்ல அண்ணாச்சி மீன்பிடிப்பதிலும் முதலிடம் பெற்றதும் நமது மன்னார் மாவட்டந்தான்

1ம் ஆள் - ஆமாந்தம்பி சோறுடைத்து சோழநாடு என்று கம்பர் கூறியதுபோல மீனுடைத்து மன்னார் அப்படியெண்ணு எந்தவித சந்தேகமுமின்றி கூறலாந்தம்பி அதனாலதான்

*பல்லவி*

*முதன்முதலாக அலைகடல் மீது வலையை விரித்தது நம்நாடு*
*முத்துக்குளிப்பதில் முதலிடம் வகித்து முந்தியிருப்பதும் மன்னாரு*

*சரணம்*

1. *மன்னார் மச்சந்தன்னில் மக்கள் மகிழ்வு கொள்வதும் எதற்காக தம்பி*
   *மாண்புறு வகையில் அதையே இந்த மாநிலம் முழுதும் மதித்து போற்றுமே*

2. *தலை நகர்தனிலே இன்றும் ஒருதனியிடம் பெறுவதும் நம் கருவாடு*
   *தன்னிகரற்று விளங்க அதை தகுந்தமுறையிலே பதனிடுவோமே*

1ம் ஆள் - இப்படியாகத்தானே எமது இலங்கைத் தீவில எக்கத்திக்கில போனாலும் அங்கேயெல்லாம், மன்னார் மீன், மன்னார் கருவாடு, மன்னார் மீன், மன்னார் கருவாடு என்பதுதான் பேச்சு

2ம் ஆள் - ஆமாண்ண நான்கூட முந்தி கொழும்பில work பண்ணும்போது அங்க உள்ள பெரிய பெரிய உத்தியோகத்தரெல்லாம், தம்பி மன்னார் கருவாடு கொண்டுவா தம்பி, கொண்டுவா தம்பி அப்படின்னு கெஞ்சுவாங்கண்ண

1ம் ஆள் - பார்த்தியா நான் சொன்னன் மன்னார் கருவாடு எண்டா மவுசு கூடப்பா இப்படியாத்தானே முத்துக்குளிப்பதிலும், மீன் பிடிப்பதிலும் முதலிடம் வகுத்த நம்ம மன்னார் மாநிலத்தில.......... இப்பத்தம்பி, ஐயகோ சொல்லவே நாக்கு குளறதுப்பா, நெஞ்சு வலிக்குது....

2ம் ஆள் - அண்ணாச்சி, அண்ணாச்சி என்னண்ண திடீரென்று... இப்ப என்ன அப்படி நடந்திருச்சி, சொல்லிப்போட்டு அழுங்கண்ண....

1ம் ஆள் - தம்பி.... இப்ப மன்னார் மீன்ற மவுசும் போச்சிது. மன்னார் கருவாட்டிற பவுசும் போச்சிது அப்பா....

2ம் ஆள் - அப்படி என்னதான் நடந்திடுச் செண்டு சொல்லுங்களேன்

1ம் ஆள் - தம்பி சொல்றன் கேளப்பா....

*தொகையறா*
*பட்டாசு வந்ததடா.... ஆ ஆ ஆ*
*டைனமைற் பட்டாசு வந்ததடா........... ஆ ஆ ஆ*
*மன்னார் மாநிலத்தை பாழ்படுத்தி மக்கள் தன்னைக் கீழ்படுத்தி ஆ ஆ ஆ*
*வளமாக வாழ்வதற்கே...... வகையேது மில்லையடா*
*இல்லையடா இல்லையடா........... ஆ ஆ*

*தம்பி..... ஐந்து ஆறு இணைப்பு சேர்ந்தால் ஆழி பொங்குமடா*
*தம்பி ஆழி பொங்குமடா தம்பி ஆழி பொங்குமடா*
*ஐந்து பத்து ஆயிரங்கள் அழிந்து போகுமடா தம்பி*
*அழந்து போகுமடா தம்பி அழிந்து போகுமடா..... (தில்லாலங்கடி)*

*தம்பி கரையை நாடி வந்த மச்சம் கலைந்துபோயிடுமே - தம்பி*
*கலைந்து போயிடுமே தம்பி கலைந்துபோயிடுமே*
*கையில் லஞ்சம் கொடுத்துவிட்டால் கொடுமை*
*நீங்கிடுமா தம்பி கொடுமை நீங்கிடுமா.... (தில்லாலங்கடி)*

1ம் ஆள் - கேட்டிய தம்பி இந்தக் கொடுமையை டைனமைற் என்று சொல்ற பட்டாசால நம்ம மானிலத்தில மீனே படுகிறதில்ல. ஏழை மீனவர் பாடெல்லாம் பசியும் பட்டினியும் தான்.....

2ம் ஆள் - மெய்தான் அண்ணாச்சி நான்கூட நம்ம மாவட்டத்தில டைனமைற் விளையாட்டு வெகுமும்முரமா நடக்குதுண்ணு கொழும்பில கேள்விப்பட்டண்ண.... ஆமா இந்தக் கொடுமையை ஒழித்துக்கட்ட ஒருவழியும் இல்லையா? அண்ண

1ம் ஆள் - ஏன் தம்பி இல்ல, நம்மட மீன்பிடி இலாகா உத்தியோகத்தரெல்லாம் தங்களால் இயன்ற அளவு முயற்சி செய்கிறாங்க. ஆனாலுந்தம்பி தனி மரம் தோப்பாகாது பாரு, அதனால இந்த மீன்பிடி இலாக்காவோட இராணுவத்தினரும், பொலீஸ் படையினரும் கூட்டுச் சேர்ந்து இந்தப் பட்டாசு காரங்களுக்கு நல்ல பாடம் கற்பித்தால்தான் நம்ம மானிலத்தில மீன்பிடி வளரும், வளம் பெறும்....

2ம் ஆள் - அண்ணாச்சி.... பட்டாசுகாரங்கட கொடுமையால ஒரு தனி தொழிலாளி எவ்வளவு கஷ்டப்படுறான் தெரியுமா!

1ம் ஆள் - ஆமாதம்பி, அவன்தன்ற துயரத்தையெல்லாம் கடவுளிடத்தில சொல்றதைக் கேட்கப் போறியா

2ம் ஆள் - சொல்லுங்கண்ண.....

ஆற்றிலே தூண்டிபோட்டு
அதில ரெண்டு மீன்பிடித்து
அரைவயிற்றுக் கஞ்சிக்காகும் கடவுளே
குடும்பம் ஆலா பறக்குதடா கடவுளே
கொஞ்சம் கண்ணைத் திறந்து பாரும் கடவுளே.....

கட்டுமரங்கட்டிக் கொண்டு
கயிறுவலை ஏற்றிக்கொண்டு
கஷ்டப்படுகிறேனே கடவுளே
கொஞ்சம் கண்ணைத் திறந்து பாரும் கடவுளே
குடும்பம் ஆலாப்பறக்குதடாகடவுளே........

2ம் ஆள் - தனி மனிதன் தன் தொழிலாலபடுகிற கஷ்டத்தை ரொம்ப அழகா சொல்லிப்பிட்டீங்க.... அண்ண இப்ப நீங்களே பாருங்க காற்று எவ்வளவு உக்கிரமாக வீசுது - இப்படியே தொடர்ந்து 6 மாதம் அடிச்சா, அரசாங்கத்தில இருந்து loan அதாவது கடனாக இயந்திர படகுகள் வாங்கியிருக்கிறவங்கபாடு என்ன ஆகும்... அவங்கள் எல்லாம் மாதா மாதம் காசு கட்ட முடியுமோ... எப்படி கட்டுவாங்க...

1ம் ஆள் - தம்பி, சரியான கேள்வியை நீ முறையான இடத்தில கேட்டுப்போட்ட இருந்தாலும் இந்தக் கேள்விக்கு நான் எப்படித் தம்பி பதில் கொல்றது. நான் என்ன Fisheries inspector ஆ or Director ஆனாலும் இங்க இருக்கிற நம்ம தொரமார்தான் இதற்குத்தகுந்த பதிலளிக்கணும்.....

2ம் ஆள் - அண்ண, இது மக்கள் அரசாங்கம் மதிப்பிற்குரிய பெண்மணி கௌரவ ஹமாவோ அம்மையார் அவர்கள் நம்மபோன்ற சாதாரண மக்கட வார்த்தைக்கு நிட்சயமாக மதிப்பளிப்பாங்க, சரியண்ண அம்மாக்கிட்ட நீங்க என்ன கேக்கிறீங்க....

1ம் ஆள் - தம்பி, ஏழைகளின் துயரை நீக்குவதுதான் மக்கள் அரசின் முக்கிய நோக்கம் அதனால எங்கள் பெண் அரசியின் பெருமையைகாக்க இங்கு குழுமியிருக்கும் மீன்பிடி இலாகாப் பெரியார் தாங்கள் எங்குறைகளை மீன்பிடி அமைச்சரிடம் எடுத்தியம்பி எம்மன்னார் மாவட்டத்தில் இயந்திரப் படகுகள் out motors traveller கள் பல தந்துதவுமாறும் இவைகளை மீன்பிடி கூட்டுறவுச்சங்கங்களுக்கு முன் உரிமை அளிக்க வேண்டுமென்றும் அன்புடன் பணிக்கின்றேன்.

2ம் ஆள் - அண்ணாச்சி இந்த உதவியை ஐயா எங்களுக்கு தந்தாரண்டால் படகுச் சொந்தக்காரங்களெல்லாம் சந்தோஷமாக ஆடிப்பாடி...

*தரைமேல் பிறக்கவைச்சான் - எங்களை*
*தண்ணீரில் பிழைக்கவைத்தான்*
*கரைமேல் இருக்க வைத்தான் - எங்களை*
*களிப்பினில் மூழ்கவைத்தான்.... தரை*

*கட்டிய மனைவி தொட்டில்பிள்ளை*
*உறவைக் கொடுத்தவன் அங்கே*
*அலைகடல் மேலே அலையாய் அலைந்து*
*உயிரைக்கொடுப்பவன் இங்கே*
*வெள்ளி நிலாவே விளக்காய் எரியும்*
*கடல்தான் எங்கள் வீடு*
*முடிந்தால் முடியும், தொடர்ந்தால் தொடரும்*
*இதுதான் எங்கள் வாழ்க்கை... தரை*

1ம் ஆள் - இப்படியாகத்தானே.... சத்தோஷங்கொண்டாடும் மீனவ நண்பர்கள் எம்மானிலத்தில் பல்கி பெருக வேண்டுந்தம்பி.....

எனவே இந்த வில்லுப்பாட்டை பொறுமையோடு கேட்டு இரசித்த உதவி மீன்பிடிஇலாக அத்தியட்சகர் ஐயா அவர்களுக்கும், எங்கள் சுவுது ஐய, பிலிப்பு ஐயா, இன்னும் நீக்கலாஸ், எலியாஸ் ஐயா மாருக்கும் மேலும்
இந்த பொன்னான சந்தர்ப்பத்தை எங்களுக்களித்த வங்காலை புனித ஆனாள் மீன்பிடி கூட்டுறவுச் சங்கத்தலைவர் திருவாளர் M. A. சொய்சா அவர்களுக்கும், வங்காலை வளர்கலை மன்றத்தின் அன்பு கனிந்த வணக்கம்..........

# சாவை வென்ற சத்தியவான்

கதாகாலாட்சேபம்



| | | |
|---|---|---|
| ஒருவர் வாசித்தல் | - | "கர்த்தர் உயிர்த்தெழுந்தருளின திருநாளில் வாசிக்கிற சுவிசேஷம் சுவிசேஷ லூக்கா 24ம் அதிகாரத்தில் எழுதிவைத்தல் பிரகாரம் - அந்தக் காலத்திலே"<br><br>தமிகிட திமிகிட பாக்யமே தஞ்சம்<br>தமிகிட திமிகிட பாக்யமே தஞ்சம்<br>தமிகிட திமிகிட பாக்யமே தஞ்சம்<br>வருவாய் கலைமகளே அன்பாக தருவாய் நினதருளே...... |
| தலைவர் | - | ஹலோ கீர்த்தனா ஆரம்பத்திலே இங்கு கூடியிருக்கிற சகல ரசிகப் பெருமக்களுக்கு எமது அல்லேலூயா வாழ்த்துக்கள் உரித்தாகுக... அதாகப்பட்டது இண்ணைக்கு Two thousand years ago<br>இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு ஜெருசலேம் பட்டணத்திலே வாரத்தின் முதல் நாளாகிய ஞாயிற்றுக்கிழமை Early Morning கிழக்கு வெளுத்திருக்கிற வேளையிலே....... |
| 2ம் ஆள் | - | அண்ண சஸ்பென்ஸ் வைக்காம பட்டெண்ணு செல்லுங்க என்ன நடந்தது |
| தலைவர் | - | தம்பி! மரியமதலேனாள், யாகப்பருடைய தாயர் மரியம்மாள், சலோமையம்மாள், இன்னும் சில பக்தியுள்ள ஸ்திரிகள், தாங்கள் வாங்கி வைத்திருந்த Goya scent, Audiclone, மரிக்கொழுந்து, சந்தணம் முதலிய வாசனைத்திரவியங்களை எடுத்துக் கொண்டு கர்த்தரை அடக்கம் பண்ணியிருந்த கல்லறைக்கு சென்றார்கள். அங்கே அவர்கள் பட்டென்று நின்றார்கள் - கண்டார்கள் |
| 2ம் ஆள் | - | என்னத்தைக் கண்டார்கள் |
| தலைவர் | - | கல்லறை வெறுமையாய் இருப்பதைக் கண்டார்கள். அடைத்துவைத்திருந்த கல் புரட்டப்பட்டிருப்பதைக் கண்டார்கள். எம் பிரானின் உடல் காணவில்லையே என்பதைக் கண்டார்கள். ஐயகோ எம் கர்த்தராகிய யேசு எங்கே - what happend to him? where has he gone? என்ன நடந்தது, ஏது நடந்தது எங்கு போனாரோ என அங்கலாய்த்துக் கொண்டிருக்கும் போது - திடீரென்று ஒரு காற்று வீசிற்று - கண்ணைப் பறிக்கிற ஒளி, பிரகாசம் - சரசர வென்ற ஓர் சத்தம் |
| 2ம் ஆள் | - | அண்ண எனக்குப் பயமா இருக்கு |
| முதல்வர் | - | Don't be afraid - பயப்படாதீர்கள் என்ற குரலைக் கேட்டுத்திடுக்குற்று திரும்பிப்பார்த்தார்கள். அங்கே ஒரு தேவதூதன் இருப்பதைக் கண்டார்கள். அவர் இவர்களைப்பார்த்து..... நீங்கள் யாரைத் தேடுகிறீர்கள், நீங்கள் தேடிவந்தவர்........<br><br>உயிர்த்தெழுந்தாரடா.............. எம்பிரான்<br>உயிர்த்தெழுந்தாரடா.............<br>அவர் சாவை வென்ற சத்தியவானாய் மூவுலகை ஆள்வதற்கு<br>மனிதரின் பாசத்தினால்........ அவர்<br>ஆவிதன்னை போக்கினாரே போக்கினாரே............<br>அல்லேலூயா - அல்லேலூயா அல்லேலூயா - புவியில்<br>அல்லேலூயா - புவியில் அல்லேலூயாவே<br>அவனிதன்னை மீட்டார் யேசு அல்லேலூயாவே - புவியில் அல்லேலூயாவே<br>போட்டகல்லைப் புரட்டி இன்று புவியில் வந்தாரே<br>யேசு புவியில் வந்தாரே - யேசு புவியில் வந்தாரே<br>கேட்ட யூதர் ஓடி டவே - உயிர்தெழுந்தாரே<br>யேசு உயிர்தெழுந்தாரே.......... அல்லேலூயா......... |

தலைவர் - யேசுபிரான் உயிர்தெழுந்தார். அவர் இங்கு இல்லை இதை மற்றவர்களுக்கும் கூறுங்கள் என தேவதூதன் சொன்னதுந்தான் அவர்கள் ஆண்டவருடைய வார்த்தையை Think பண்ணினார்கள். உடனே ஓடோடியும் வந்து மற்ற 11 அப்போஸ்தலர்களுக்கும் கூறினார்கள்.

2ம் நபர் - அண்ணாச்சி பார்த்தது பொம்மனாட்டிகளில்லையோ? செக்கன்ட்டிலே ஊர் முழுக்க கதைபரவியிருக்கும். எந்தவிஷயத்தையும் கெதியாகப் பரப்ப வேண்டுமென்றால் ரேடியோ தேவலை. ரெலிவிஷன் தேவல. ஒரு பொம்பிளையிட்ட சொன்னா போதும்.

தலைவர் - தம்பி - come to the point இந்த நன்றி கெட்ட அப்போஸ்தலர்கள் அவ்வளவு இலகுவாக நம்பினதாகத் தெரியல்ல. ராயப்பர் உடனே ஓடிச்சென்று கல்லறைக்குள் குனிந்து பார்த்தார். அங்கே ஆண்டவரை மூடியிருந்த பரிவட்டங்கள் கழற்றி வைக்கப்பட்டிருப்பதைப்பார்த்தார். இப்படியிருக்கிற வேளையில, இரண்டு சீடர்கள், ஜெருசலேமிலிருந்து 7மைல் தூரமுள்ள

2ம் நபர் - அதாவது வங்காலையிலிருந்து மன்னாருக்குப் போகிற தூரமெண்டு சொல்லுங்க

தலைவர் - ஆமாதம்பி. எம்மாவு என்று சொல்லப்படுகின்ற கிராமத்திற்கு பொடி நடையாப் போறாங்க. அவர்கள் அப்படிப்போய்க்கொண்டிருக்கும்போது நடந்து முடிந்த கிறீஸ்து நாதரின் கதையை கதைத்துக்கொண்டு போனாங்க. அப்போது எம்பெருமான் யேசுநாதரும் தோட்டக்காரன் மாதிரி மாறுவேடத்தில

2ம் நபர் - சினிமாவிலே எம்.ஜி.ஆர் சிவாஜி போடுவாங்களே அதேமாதிரியா

தலைவர் - உனக்கெப்போதும் இந்தக்காலத்துப் பசங்களைப்போல சினிமாப்பைத்தியந்தான். அவர்தான் கடவுளாச்சே, நினைச்சமாதிரி வேஷம் போடுவார். தோட்டக்காரன் மாதிரி இவர்களுடன் போய்க்கொண்டிருக்கிற வேளையிலே இவர்களுடைய கதையைக் கேட்டு நீங்க துக்கமாயிருக்கிறீர்களே. (வாட் இஸ்த கோஸ்) அதாவது என்ன காரணம்

2ம் நபர் - அட இவன் யார்ரா இவன். என்னப்பா நீ என்ன ஊருக்குப் புதுசா? நீ இவ்வளவு நாளும் ஜெருசலேமல இல்லாம எங்கே தொலைஞ்சி போயிருந்தா?

தலைவர் - யோவ் யேசு நசரேனுவாகி கிறீஸ்துவை யூதர்கள் கொன்று இன்றுடன் மூன்று நாளாய் போச்சு. அட கொண்டாலும் கொன்றாங்க இன்னைக்கு அப்புண்ணியவானுடைய உடலைக்கூட காணவில்லையப்பா. இது தானப்பா இன்று ஊர் முழுக்க லேற்றரஸ் விசயம். பத்திரிகையில் எல்லாம் கொட்டை எழுத்தில் போட்டிருக்காங்க

2ம் நபர் - அப்ப தோட்டக்கார வேஷத்தில் இருந்த எம்பெருமான் ஒன்று கதைக்கலையா?

தலைவர் - ஏன்கதைக்கல ஏசு நசரேனு அப்படி என்னப்பா செய்தாரு அவரு எப்படி செத்தாரு?
பாதக யூதராலே பாடுகள் பட்டார் - பரன்
பாவிகள் மீட்புக்காக உயிரைவிட்டார் (2)
ஆதாமேவை செய்த வினைகள் - ஆண்டவனின்
ஆவிதனைக் கொண்டு போச்சுது
மூன்று பத்து வெள்ளிக்காசு - முத்தமிட்டுக் காட்டினானே
மூவுலகையாளும் வேந்தன் - சாவுலகைக் கண்டிட்டாரே (தான தானா)

தலைவர் - ஏன்யா அவரும் சொன்னாரு நீங்கள் தீக்கதருசிகள் எழுதியவற்றையும் பேசினவற்றையும் நன்றாக வாசிக்கவில்லையா? எல்லாரும் தம்மைப் பற்றி எழுதியிருக்கிறவற்றையெல்லாம் வடிவா எக்ஸ்பிலன் பண்ணினாரு. இப்படிக் கதைச்சுக் கொண்டு போகையிலே ஆதவனும் கடலுக்குள் வீழ்ந்திட்டான். இருட்டுபட்டும் போய்விட்டது. ஆண்டவர் இவர்களைவிட்டு நைசாகக் களரப்பார்த்தார்.

2ம் நபர் - இந்த இரண்டு பேரும் யேசுநாதரைக் கூட்டிக்கொண்டு ஒரு வீட்டில் தங்கியிருந்தபொழுது அவர் அப்பத்தைபிட்டு ஆசீர்வதித்து அவர்களுக்கு கொடுத்தார்.

தலைவர் - அப்பதான் அவங்க முழிச்சிப் பார்த்தாங்க. உடனே அவர்களுடைய ஊணக்கண் மறைந்து ஞானக்கண் தெரிந்தது. இவ்வளவு நேரம் தம்மோடு கதைச்சுக்கொண்டு வந்தது யேசுபிரான் என்று அவர்கள் உணர்ந்து சந்தோஷப்பட்டு

மனிதர் செய்த பாவத்தாலே இறந்துயிர்த்த எம்பிரான்
மாயைதனை வென்றவர் நீரே வா- வா - பாரில் வா
ஈடில்லா நீதியே நீ எங்களின் கதியே நீ
பாடுகள் பட்டு நீர் எம் கறை தீர்தீரே (மனிதர்)
சிந்தனை விருந்தே நீ - ஜீவிய ஊற்றே நீ
விந்தைகள் புரிந்தாய் நாம் அறிந்தோமய்யா
மந்திரமில்லையே மாயங்களில்லையே
சுந்தரக்கடவுளின் சுதனே நீவா
மானிடர் வளிநீயே - சந்திரன் ஒளிநீயே
ஈடில்லா உனையே எம்மனம் நாடுதே (மனிதர்)

தலைவர் - இப்படியாகத்தானே யேசுநாதர் சமாதானம் சுறிவிட்டு மாயமாய் மறைந்துவிட்டார். அவர்கள் அங்கிருந்து ஓட்டமும் நடையுமாக ஜெருசலேமுக்கு வந்தார்கள். ஜெருசலேமில் 11 அப்போஸ்தலர்களும் ஒன்றாகக் கூடியிருந்தார்கள். கர்த்தர் மெய்யாகவே உயிர்த்துவிட்டாரென்றும், சீமோனுக்கு காட்சி கொடுத்திருக்கிறார் என்றும் இவர்கள் கூறினார்கள். இவர்கள் தாங்கள் கண்ணாரக் கண்ட கதையையும் கூறினார்கள்.

2ம் நபர் - இப்படி ஜெருசலேம் எங்கும் ஒரே யேசு உயிர்த்த கதையாகத்தானிருந்தது

தலைவர் - இப்படியிருக்க கதவு பூட்டியிருக்கும் பொழுது எங்கும் ஒரே அமைதியாக இருந்தது. திடீரென்று கர்த்தர் தோன்றினார். உங்களுக்குச் சமாதானம் என்று கூறினார். அப்போஸ்தலர்கள் கிறீஸ்துவினுடைய ஆத்துமம் என்று நினைச்சி ஆளையாள் கட்டிப்பிடித்தார்கள்.

2ம் நபர் - உடனே அவர் விசுவாசமாற்றவர்களே பயப்படாதீங்க நான்தான் யேசு என்றார்

தலைவர் - அப்படி உங்களுக்கு இன்னமும் சந்தேகமிருந்தா என் கைகளையும் கால்களையும் பாருங்க அது மட்டுமல்ல ஏதாவது உணவிருந்தால் தாருங்கள் என்றுகூறி அவர்களிடமே உணவு சாப்பிட்டார். ஆனா இந்த வேளையில் திதீம் என்பவரான தொம்மையப் போஸ்தலர் அங்கிருக்கவில்லை. அவர் வந்தவுடன் அவரிடம் இந்தச் சம்பவங்களைக்கூற அவர் நம்பவில்லை.

2ம் நபர் - அப்படியெண்டா ஆண்டவர் தொம்மையப்பருக்கு பிரத்தியேகமாகக் காட்சி கொடுத்தாரோ

தலைவர் - சேச்சே மீண்டும் எட்டு நாளைக்குப்பிறகு அப்போஸ்தலர்களோடு தோமையார் இருக்கும் பொழுது ஆண்டவர் அவரிடம் தோன்றினார். அப்பொழுதும் இந்தத் தோமையார் நம்பவில்லை உடனே எம்பிரான் துக்கப்பட்டு

ஆகாது - இது உணக்காகாது ஆண்டவனுக் கேற்காது
சொன்னது காணாதோ இன்னமும் தேவையோ (2) (ஆகாது)
விலாவினிலே உனது கை வைத்திடுவாய் உண்மைதனைக் கண்டிடுவாய்
(2) (சொன்னது)
காணாமல் விசுவாசம் கொள்வாயே கண்டு நீயும் நம்பாயோ (2) (சொன்னது)
எந்தன் போதனை உன் செவியில் ஏறாதோ உண்மைதனை உணராயோ
(2) (சொன்னது)

தலைவர் - இப்படியாகத்தானே ஆண்டவருடைய விலாவில் கைவைத்துப் பார்த்து உரத்த சத்தமாய் கூப்பிட்டு என் ஆண்டவனே என்தேவனே என்று அழைத்தார். இந்த விதமாக forty days நாற்பது நாள் அப்போஸ்தலர்களுடன் கழித்துவிட்டு

வானோரின் தெய்வமே - தானாக சென்றாரே தேனான தெய்வீக யேசுவே
கருமேகத்தைக் கிழித்தெழுந்த கதிரவன் போல் வானகம் சென்றாரே - சென்றாரே
மகிழ்வாய் ஜெகமே - எங்கள் தேவாதி தேவன் எழுந்தார்
எங்கள் தேவாதி தேவன் எழுந்தார்
வம்பரும் தும்பரும் கண்டு நடுங்கிட - தங்க ஒளி இனி வீச
கையில் கொடி பறந்திட (மகிழ்வே)
அலைகடல் ஆர்ப்பரித் தெழுந்துமை வாழ்த்தி - அனைத்துலகமும்
உம் மகிமையை ஏற்றி
மனமும் மாறியே - மறை தனினில் சேர்ந்து -
மமதைக்குணமும் இனி மாற்றிடுவோமோ (மகிழ்வே)

தலைவர் - இப்படியாகத்தானே யேசு பரலோகத்துக்குப் போய்விட்டார். எங்களது கதாகாலட்சேபவம் முடிந்துவிட்டது.

2ம் நபர் - இதை இவ்வளவு பொறுமையோடே கேட்ட ரசிகப் பெருமக்களுக்கும்

தலைவர் - இச்சந்தர்ப்பத்தை எமக்களித்த திரு இருதய வாலிப மன்றத்தினருக்கும் - வண ஞானத்தந்தை அவர்களுக்கும் வங்காலை வளர்களை மன்றத்தின் அன்பு கனித்த வணக்கம்

அனைவர்க்கும் வந்தனமே
அனைவர்க்கும் வந்தனமே - அழகுடன் சொல்லியே
கலைதனில் மெருகுடன் - கதை தன்னைப் பாடியே

# வளர்கலை மன்ற கலைஞர்களின் விபரம்

1. அமரர். தொ. மக்சிமஸ் லெம்பேட்
2. அமரர். அ. அதிரியான் சோசை
3. அமரர். அந்தோனி மொறாய்ஸ்
4. அமரர். சூ. ஆனந்தம் மார்க்
5. அமரர். அ. சேகரன் குரூஸ்
6. அமரர். றோ. யூலியஸ் றெவ்வல்
7. அமரர். ம. நிக்கோதேமுஸ் றெவ்வல்
8. அமரர். யு. ஜேந்தி சோசை
9. அமரர். அன்னப்பு சோசை
10. அமரர். அப்பையா மாஸ்ரர்
11. அமரர். உபில்பிறட் மாஸ்ரர்
12. அமரர். சென் ஜோன் குரூஸ் மாஸ்ரர்
13. லூ. கிறிஸ்தோப்பர் லெம்பேட் (எல். சி)
14. ஆ. பீற்றர் கூஞ்ஞ
15. லா. பாக்கிராஜா லெம்பேட்
16. லா. அந்தோனி லெம்பேட்
17. யு. கில்லறி சோசை
18. லூ. வின்சன் லெம்பேட்
19. அ. ஜேசுதாசன் சோசை
20. அ. கிறிஸ்ரி பீரிஸ்
21. ம. சந்திரா டலிமா
22. றோ. அந்தோனி றெவ்வல்
23. ஆ. பங்கிராஸ் சோசை
24. அ. லெபோண் சோசை
25. ம. வென்சஸ்லாஸ் பீரிஸ்
26. அ. அன்ரன் குரூஸ்
27. ப. எமில் சோசை
28. யோ. றெவ்வாயேல் குலாஸ்
29. அ. மேரி ஜோசப் பீரிஸ்
30. அ. மேரி பிரான்சிஸ் பீரிஸ்
31. லா. பேனாட் லெம்பேட்
32. அ. செல்வம் சோசை
33. ம. லீனஸ் றெவ்வல்
34. லா. செல்வநாதன் லெம்பேட்
35. அ. தயாபரன் குரூஸ்
36. செ. றெஜினோல்ட் குலாஸ்
37. அ. றெனால்ட் பீரிஸ்
38. டோ. யூட் குலாஸ்
39. ம. பிறின்சிலி டயஸ்
40. யோ. சகாயம் மொறாய்ஸ்
41. அ. பற்றிமா சோசை
42. இ. சாந்தி குரூஸ்
43. அ. கிறிஸ்ரின் சோசை
44. க. றோஸ்லீமா கூஞ்ஞ

